# பாலிய ஈர்ப்பும் திருமணமும்

(கிறிஸ்தவ நடைமுறை)




சகரியா பூணன்

# பாலிய ஈர்ப்பும் திருமணமும்

சகரியா பூணன்

“தேவன் மனுஷனை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்.....
ஒருவருக்கொருவர் ஏற்ற துணையை
தேவன் உண்டாக்குகிறார்” (ஆதி.1:27; 2:18).

**Sex Love & Marriage - Tamil**
**Zac Poonen**

© Zac Poonen, 1971

tamil.cfcindia.com

7 9 11 13 12 10 8 6

Paperback ISBN : 978-81-939898-9-0

"Scripture Quotations are from The Holy Bible, BSI-Tamil O.V
Published by: The Bible Society India.
Used by Permission. All rights reserved".

**This book has been copyrighted to prevent misuse.**

**No part of this work may be reproduced or transmitted in any form or by any means - for example, electronic or mechanical, including photocopying and recording without the prior written permission of the publisher.**

For further details please contact:

Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149
Karnataka
India
email: cfc@cfcindia.com

## *மங்கள வாழ்விற்குள் . . .*


1. ‘பாலியம்’ சீரழியாதிருக்க கவனம்! . . . . . . . . . . . . . . . . . . . . 7
2. ‘எதிர்பாலரின் ஈர்ப்பில்’ அபாயம்....கவனம்! . . . . . . . . . . . . . . . 26
3. காதல் ‘காம ஈர்ப்பு’ அல்ல, தெய்வ அன்பே வசீகரம்! . . . . . . 36
4. ‘இருவர் ஒருவராகும்’ பாக்கியம்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 48
5. உங்களை முழுமைப்படுத்தும் வாழ்கைத்துணை! . . . . . . . . . . 63
6. வாலிப பெண்களுக்கு மட்டும்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 105
7. நெருங்கி வரும் திருமணம்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 122
8. தம்பதியரின் பேரானந்த பயணம்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . 131

தூய்மையான,
தேவ சித்தத்தின்படியான திருமணம் . . .
“பரலோகத்தை உங்கள் இல்லத்தில்”
கொண்டுவருமல்லவோ!
இதுபோன்ற தெய்வீக திருமண
ஆயத்தத்திற்கு “ஒரு பலிபீடம்”
உங்களுக்கென இருந்திட வேண்டும்!
உங்கள் “சுய விருப்பங்கள்”
முற்றிலும் அந்த பலிபீடத்தில்,
தேவன் முன்பு வைக்கப்படட்டும்!
“அர்ப்பணிக்கப்பட்ட ஈசாக்கை”
தேவன் தருவார், அல்லது
“புறக்கணிக்கப்பட்ட இஸ்மவேலை”
உங்களிடமிருந்து அகற்றிப் போடுவார்!!
எதுவாயிருந்தாலும்,
தேவனுடைய கரத்தினால் நடத்தப்பட்டு,
தேவனுடைய கரத்திலிருந்து பெற்றிடும்
“மங்களகரமான . . .
ஆசீர்வதிக்கப்பட்ட திருமணம்!”
அனைத்து உத்தம கிறிஸ்தவ
வாலிப செல்வங்களுக்கும் உரித்தாகுக!!

## 'பாலியம்' சீரழியாதிருக்க கவனம்!

1

சிருஷ்டிக்கப்பட்ட உணர்வுகளில் "பாலிய உணர்வுதான்" அதிக சக்தி வாய்ந்த உணர்வு ஆகும்! அதை வெடிகுண்டு சக்திக்குகூட ஒப்பிடலாம். ஆகிலும், தேவன் அருளின இந்த ஆச்சரியமான ஈவில் மிகுந்த ஆசீர்வாதமும் அடங்கியிருக்கிறது.... அதேசமயம், இந்த ஈவை தவறாய் பயன்படுத்தி விட்டாலோ அழிவின் பிரளையமே ஏற்பட்டுவிடும் என்பதில் சந்தேகம் இல்லை!

இந்த பாலிய உணர்ச்சியும், அதற்குரிய விருப்பமும் ஆண், பெண் ஆகிய இருபாலரிடத்திலும் உண்டு. எல்லோரிடத்திலும் இந்த உணர்ச்சியானது ஒரே விதமாய் வலிமை கொண்டு இல்லாவிட்டாலும், மனுவர்க்கம் முழுவதையும் இந்த உணர்ச்சியானது ஆற்றல்மிக்க சக்தியாகவே ஆட்கொண்டிருக்கிறது. இதன் வலிமை, வாலிப பருவம் தொடங்கி, அதையடுத்து சுமார் 30-வருடங்கள் வரை இருபாலரையும் பலமாய் ஆட்கொண்டுள்ளது. **பாலிய உணர்ச்சிகளை நல்வழியில் பயன்படுத்தி, தேவனுக்கு மகிமை செலுத்திட முடியும்!** அல்லது இதே உணர்ச்சிகளை தீமைக்கு உட்படுத்தி, பிசாசின் ஊழியத்திற்கும் பயன்படுத்திட முடியும்! ஒரு வெடிகுண்டில் எந்த தவறும் இல்லை! அதை எப்படி.... என்ன நோக்கத்திற்காய் பயன்படுத்துகிறோம்? என்பதைப் பொறுத்தே அதன் தன்மை அடங்கியுள்ளது! ஆம், "காமம்" என்று அழைக்கப்படும் பாலிய உணர்ச்சி ஒரு வெடிகுண்டின் பயன்பாட்டிற்கு ஒப்பாகவே இருக்கிறது. இந்த பாலிய உணர்ச்சிகளை தேவன் அருளின ஈவாக ஏற்றுக்கொண்டு, அதை, அவருடைய ஆளுகையில் ஒருவன் ஞானமாய் பயன்படுத்தினால், அவனுடைய வாழ்வின் உயர்ந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு



ஏற்றதாய் அமைந்துவிடும்! அதே சமயம், இந்த உணர்ச்சியை தவறாக பயன்படுத்தினால் அது அவனை இழிவான தாழ்விடத்திற்கும் கொண்டு சென்றுவிடும் என்பதும் உறுதி. ஒரு முதுமொழி கூறுவதற்கு ஒப்பாய் "பாலிய உணர்ச்சி ஓர் ஆச்சரியமான ஊழியன்! ஆனால், ஒரு கொடூரமான எஜமான்!".

உணவின்மீது விருப்பம்! உறங்குவதற்கும் விருப்பம்! அதுபோலவே **பாலிய விருப்பமும் ஓர் நியாயமான விருப்பமேயாகும்.** இந்த விருப்பங்களை தேவனே சிருஷ்டித்திருக்கிறபடியால், அந்த விருப்பங்களை நியாய பூர்வமாய் திருப்தி செய்வதற்குரிய ஏதுகரங்களையும் தேவன் நியமனம் செய்து வைத்துள்ளார்.

**தாறுமாறான கண்ணோட்டங்கள்:**

தேவன் சிருஷ்டித்த இந்த "காம உணர்வுகள்" புனிதமும், தூய்மையு மானதே ஆகும். மனிதன் பாவத்தில் விழுவதற்கு முன்பாகவே பாலிய உணர்வுகள் சிருஷ்டிக்கப்பட்டதாகும்! "மிகவும் நல்லது" என தேவன் சிருஷ்டித்த பூர்வ உலகில் இருந்ததுமாயிருக்கிறது! இதிலிருந்து, இதன் புனிதத்தன்மையை நாம் விளங்கிகொள்ளமுடிகிறது.

> **ஆனால், மனுஷனுடைய வீழ்ச்சிக்குப் பிறகோ, பாலிய உணர்வுகளை குறித்த அவனது கண்ணோட்டம் தாறுமாறாக சீர்குலைந்து, மனுஷன் பாலிய இச்சைகளுக்கு ஓர் அடிமையாய் மாறி விட்டான்.**

எப்படியெனில், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தவுடன், அவர்கள் தங்கள் காம உணர்வுகளால் பொங்கி, தங்கள் உறுப்புகளின் நிர்வாணத்திற்காக வெட்கமடைந்து, தங்கள் சரீரங்களை மூடி மறைத்துக் கொள்ள வகைதேடினார்கள்! இன்றும், இந்த வீழ்ச்சியின் துயரத்தை நாம் வாழும் இவ்வுலகத்தில் அறுவடைசெய்து கொண்டு தான் இருக்கிறோம். இதன் விளைவாய், மனிதனுக்கு ஆசீர்வாதமாய் இருந்திடவேண்டிய பாலிய உணர்வுகள், இப்போது அவனை அழுத்தும் ஓர் கொடிய சுமையாய் மாறிவிட்டது!

தேவனால் அருளப்பட்ட இந்த பங்கானது மனுஷனால் தாறு மாறாக பயன்படுத்தப்பட்டபடியால் "காமம்" (பாலிய உணர்வுகள்) ஓர் அசுத்தமான அர்த்தமுள்ளதாய் மாறிவிட்டது. திரைப்படங்கள், வியாபார விளம்பரங்கள், புத்தகசாலைகளில் குவிந்துகிடக்கும் ஒழுக்கமற்ற புத்தகங்கள் ஆகிய அனைத்தும், ஓர் தாறுமாறான கருத்தையே கொண்டுவந்து புகுத்தி விட்டன. ஆனால் தேவனுடைய நோக்கத்திலோ இந்த 'காம உணர்வானது' தூய்மை நிறைந்ததும், வசீகரம் கொண்டதாகவுமே நிலை நிற்கிறது.

இன்று நம் சிந்தைகள் பாலிய உணர்வைக் குறித்து எவ்வளவாய் கெட்டுப் போய்விட்டது என்பதை நிரூப்பிப்பதற்கு ஏராளமான

*நிருபணங்கள் உள்ளன. C.S.லூயிஸ் என்பவர் எழுதிய ‘கிறிஸ்தவ உத்தம பண்புகள்’ என்ற புத்தகத்தில்: “ஓர் களியாட்டு மண்டபத்தில், ஓர் அழகிய பெண், தான் உடுத்தியிருக்கும் ஆடைகளை.... ஒவ்வொன்றாய் கழற்றி, தன்னை நிர்வாணப்படுத்தும் நிகழ்ச்சியை நடத்துகிறாள்!” என அறிவிக்கப்பட்டால், அதைக் கண்டு களித்திட அந்த அரங்கமே நிரம்பி வழிந்திடக்கூடும்! இவ்விதம், தாறுமாறாக்கப்பட்ட ‘பாலுணர்வு விருப்பத்தை’ நீங்கள் விளங்கிக் கொள்ள மற்றொரு உவமானத்தையும் கேளுங்கள்: நீங்கள் ஒரு புதிய தேசத்திற்கு வந்து, அங்குள்ள களியாட்டு மண்டபத்தின் மேடையில் “ஓர் பரவச நிகழ்ச்சி” நடத்துகிறீர்கள். அந்த நிகழ்ச்சி என்னவெனில், ஓர் மூடிய பெரிய தாம்பாளத்துடன் பிரவேசித்த நீங்கள், அந்த தாம்பாளத்தின் மூடியை கொஞ்சங் கொஞ்சமாய் அகற்றி,* **உள்ளே என்ன இருக்கிறது** *என்பதை எல்லோரும் காணும்படி செய்து விட்டீர்கள்! அந்த தாம்பாளத்திலிருந்த மட்டன் ரோஸ்ட்டையும், சிக்கன் பிரியாணியையும் கண்டு ஜனங்கள் ஆரவாரத்தோடு கரங்களைத் தட்டி மகிழ்ந்தார்கள்! சொல்லுங்கள், இவ்வித ஜனங்களைக் குறித்து நீங்கள் என்ன எண்ணுவீர்கள்? “***உணவை பற்றிய பசி உணர்வில்** *இந்த நாட்டுமக்களுக்கு புத்தி தடுமாறிவிட்டது போலும்!” என்றுதானே எண்ணுவீர்கள்! அதுபோலவே, தன் ஆடையை ஒவ்வொன்றாய் கழற்றும் அந்த களியாட்டு அரங்கிற்கு வேறொரு உலகத்திலிருந்து வந்த ஒருவன் “இது என்ன? காம உணர்வைக் குறித்த விஷயத்தில் இந்த நாட்டு மக்களுக்கு புத்திதடுமாறிவிட்டது போலும்!” என எண்ணக்கூடுமல்லவா?.... என, இவ்வாறு காம உணர்வைக் குறித்த மக்களின் தாறுமாறான போங்கை விளக்கினார்.*

*மாறுபாடான இந்த உலகத்தில் தேவனுக்கென “ஓர் ஒளியா யிருந்து” பிரகாசித்திடவே ஒரு கிறிஸ்தவன் அழைக்கப்பட்டிருக் கிறான். ஆகவே இந்த உலகம் பாலிய உணர்வுகளை இழிவாக கண்டு, அதை வெறும் உடற்கூற்று கவர்ச்சியாகவும் இன்பம் தரும் வாய்க் காலாகவும் காண்பதற்கு எதிராக நாம் எதிர்த்து நிற்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.*

*பாலிய உணர்வுகளை பாவமாகவும், வெட்கத்திற்குரியதாகவும் நாம் காணாதிருக்க, தேவ ஆவியானவர் நம் மனதை புதிதாக்கி, தேவன் காணும் விதமாகவே நாமும் கண்டிடச் செய்வாராக! ஆம், பாலிய உணர்வுகளை* **புனிதம் நிறைந்ததாகவும்** *வசீகரத்திற்குரியதாகவுமே தேவன் காண்கிறார்!*

*இன்றுள்ள மார்க்கத்திலும், தத்துவபோதனைகளிலும், பாலிய உணர்வானது மாறுபாடான கண்ணோட்டத்தோடு காணப்பட்டு, “இந்த மனுவுடல் பொல்லாதது! இதை சீக்கிரம் களைந்து போட வேண்டும்” என்றே கருதுகிறார்கள். அல்லது, இதற்கு நேர்மாறாக,*

*தங்கள் சரீரத்தையே சுற்றிவந்து பூஜித்து, அதன் விருப்பங்கள் ஒவ்வொன்றையும் யாதொரு 'வெட்கமேதுமின்றி' நிறைவேற்றி வைக்கிறார்கள்!*

*ஆவி, ஆத்துமா, சரீரமென தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நம் உடற்கூற்றில் சரீரத்தின் முக்கியத்தன்மை குறைவானதாய் இருந்தாலும், "சரீரமும் தேவனுடைய நன்மையான பங்காகவே" சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தேவனுடைய திட்டத்தில், சரீரத்திற்கு ஓர் நிச்சயமான நோக்கமிருக்கிறது. சரீரம் பரிசுத்தாவியானவர் தங்கும் ஆலயமாக இருக்கிறபடியால், ஒருவன் தன் சரீரத்தைக் கொண்டும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என வேதாகமம் போதிக்கிறது (1கொரி. 6:13-20). எனவேதான், தேவனுக்கு நம்மை ஜீவபலியாக தந்து ஆராதனை செய்திடும் செயலாக, நம் சரீரங்களை அவருக்கு முன் ஒப்பு கொடுக்க வேண்டும் என ரோமர்12:1-ம் வசனம் நமக்கு புத்தி சொல்லுகிறது.*

*ஒட்டு மொத்தமாய், தன்னுடைய சரீரமே பாவத்திற்கு மூலகாரணம் என எண்ணுகிறவர்களுக்கு மார்டின் லூத்தர் கீழ்கண்டவாறு சவாலிட்டு கூறினார்: "ஆண்டவராகிய இயேசுவுக்கும், இந்த பூமியில் ஒரு சரீரமிருந்தது! ஆனால் அந்த சரீரத்துக்குள் பாவம் பிரவேசிக்கவில்லை! பிசாசிற்கோ சரீரமேதுமில்லை.... ஆனால் அவனோ பாவத்தால் நிறைந்திருந்தான்!" பார்த்தீர்களா,* **பாவத்தின் வேர் சரீரத்தில் காணப்படவில்லை. அது, மனுஷனுடைய இருதயத்திலேயே வேர் விடுகிறது!** *பாவத்திலிருந்து அடைந்திடும் விடுதலை, சரீரத்தையும் அதின் ஆசைகளையும் புறக்கணிப்பதால் அல்ல... மாறாக இருதயத்தின் மாற்றத்தினால் விளைந்திடும் செயலாயிருக்கிறது. ஆகவே, சிலர் ஜெபிப்பதைப் போல் "ஓ தேவனே! என்னுடைய பாலிய விருப்பங்களை என்னை விட்டு அகற்றிவிடும்!" என ஒருபோதும் ஜெபித்திடக் கூடாது. அவ்வித ஜெபம், நம்முடைய வயதிற்கு வரும் 'புருஷ-பருவத்தை' நிந்தனை செய்து, சரீரமாகிய தேவனுடைய ஆலயத்தின் ஒரு பகுதியை அழிப்பதற்கு சமமாகும். நாம் புருஷராயிருந்து ஜெயித்து வாழவே தேவன் விரும்புகிறார். அடுப்பில் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பு நலம் தான், அதை நாம் அழித்திட தேவையில்லை! அதற்கு பதிலாக, அந்த நெருப்பு வீட்டையே கொளுத்திவிடாதிருக்க நாம் கவனமாயிருக்க வேண்டும், அவ்வளவுதான்!*

*நமது பாலிய பகுதியில், ஒரு நோக்கத்தோடுதான் நாம் சோதிக்கபட தேவன் அனுமதித்திருக்கிறார்! இந்த நோக்கம், அந்த நாளில் ஏதேன் தோட்டத்தில் ஆதாம் சோதிக்கப்படுவதற்கு தேவன் அனுமதித்த நோக்கத்திற்கு சமமானதாகும்.*

***ஆதாம் கள்ளம் இல்லா களங்கமற்றவனாகவே இருந்தான்.... ஆனால் தேவனோ அவன் பரிசுத்தமாயிருக்குபடியே விரும்பினார்! பரிசுத்தமென்பது களங்கமற்ற தன்மையைவிட பன்மடங்கு உயர்ந்ததாகும்!***

தேவன் வகுத்து கொடுத்த நெறியை, ஆதாம் தெரிந்து கொண்டு, சோதனையை ஜெயித்திருந்தால் மாத்திரமே அவன் பரிசுத்தவனாய் மாறியிருக்க முடியும்! இதே நிலைதான் இன்று நமக்கும் தரப்பட்டிருக்கிறது!

**அசுத்த சிந்தைகள்**

ஒவ்வொரு வாலிப இளைஞனும், வெகு சீக்கிரத்தில் அசுத்த நினைவுகளின் தாக்குதலால் சோதிக்கப்படுகிறான். பொதுவாக, பாலியத்திற்கான தூண்டுதல் ஸ்திரீகளை விட ஆண்களிடமே அதிக வலிமை கொண்டதாய் இருக்கிறது. ஆகவே, ஒரு வாலிப ஸ்திரீக்கு அசுத்த சிந்தை ஏற்படுதல் தாமதித்து.... ஒரு வாலிப இளைஞனுக்கோ இந்த தாக்குதல் முதலில் சம்பவிக்கிறது. “**அசுத்த சிந்தையே**” மனுஷனுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும் தீமைகளில் முதல் தீமையாய் மாற்கு 7:21-ல் இயேசு குறிப்பிட்டார். மனந்திரும்பாத எல்லா மனுஷருடைய இருதயங்களும் பொல்லாததாய் இருக்கிற படியால், இருதய யோசனையைக் குறித்து இயேசு குறிப்பிடும் விளக்கம் அனைவருக்கும் உண்மையானதாகவே இருக்கிறது. விபச்சார ஈடுபாடு கொண்ட மனிதனுடைய மனதை ‘அசுத்த சிந்தைகள்’ பாழ்கடிப்பதைப் போலவே.... ஒழுக்க நெறியில் வளர்ந்து வந்த ஒருவனுடைய மனதையும் இந்த அசுத்த சிந்தைகள் பாழ்கடிக்கச் செய்கிறது! ஒழுக்க நெறியில் வாழ்ந்த இவனுக்கு “சமுதாயத்தின் அச்சம்” இருந்தபடியாலும், காம சந்தர்ப்பங்கள் இல்லாதபடியாலும் ‘அந்த மனிதனைப் போல்’ விபச்சாரம் செய்யவில்லை, அவ்வளவுதான்.

சோதனைக்கும், பாவத்திற்கும் இடையிலான வேறுபாட்டை அறிந்து கொள்ள வேண்டியது நமக்கு அவசியமாகும். இயேசுவும்கூட “நம்மைப் போலவே எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார் (எபி.4:15). ஆகிலும், ஒரு முறைகூட அந்த சோதனைகளுக்கு “**தன் மனதளவில் கூட**” இணங்காதபடியால், அவர் ஒருபோதும் பாவம் செய்யவில்லை.

**நாம் இந்த பூமியில் வாழும் கடைசிநாள் வரை சோதிக்கப்படுவோம். ஆனால், நாம் பாவம் செய்திடத் தேவையில்லை. பாலிய இச்சைகள், நம் மனதில் கலந்துவிட அனுமதிக்கும்போது மாத்திரமே நாம் பாவம் செய்கிறோம் (யாக்.1:15).**

இவ்வாறு நம்முடைய மனதில் தெறித்து விழும் “பாலிய தூண்டுதலுக்கு” நாம் இணங்க மறுத்துவிட்டால், நாம் பாவம் செய்திட வில்லை! பல வருடங்களுக்கு முன்பாக வாழ்ந்த “தூயவான் சபையினர்” கூறும்போது “பறவைகள் என் தலைக்குமேல் பறப்பதை என்னால் தடுக்க இயலாது! ஆனால் என் தலையில் அமர்ந்து கூடுகட்டிக் கொள்வதை நான் நிச்சயம் தடை செய்திட முடியும்!” என்றனர். ஒரு காம சிந்தை எனக்குள் தோன்றி, அது என் சிந்தையில் கலந்து நான்

களிகூரும் 'அந்த கண நேரத்தில்' தலையில் கூடுகட்ட அனுமதித்து விட்டேன்! அல்லது, நான் பாவம் செய்து விட்டேன்!

காம சிந்தைக்குள் சென்றுவிட்ட ஒருவனை, அந்த சிந்தை அவனை தனக்கு அடிமையாக்கி கொள்ளும் காலங்கள் அதிகரிக்க அதிகரிக்க, அந்த சிந்தையிலிருந்து மீட்கப்படுவதும் அதிக கடினமாய் மாறுகின்றது. எவ்வளவு துரிதமாய் நாம் மீட்கப்பட வாஞ்சிக்கிறோமோ, அவ்வளவு துரிதமாய் இலகுவில் நாம் விடுவிக்கப்படுவோம். தீமையான பாலிய சிந்தைகளை நாம் ஜெயித்திட வேண்டுமென்றால் 1) நாம் தோல்வியை நேர்மையாய் அறிக்கை செய்வதும் 2) விடுதலை பெற்றிட மெய்யான ஆர்வம் கொண்டிருப்பதும் 3) கிறிஸ்துவோடு நாம் மரித்த அந்த சத்தியத்தின் பங்கை ஏற்றுக்கொள்ளும்போதும் 4) நம் சரீரங்களையும் சிந்தைகளையும் ஆண்டவருக்கு முற்றிலுமாய் ஒப்புக்கொடுக்கும்போது அசுத்த காமசிந்தைகளை நாம் ஜெயித்திட முடியும்! (ரோமர் 6:1-14).

இவ்வாறு நாம் தொடர்ச்சியான ஜெய வாழ்விற்குள் வாழ வேண்டுமென்றால் "**ஆவியில் நடக்கிறவர்களாய்**" தேவன் நம்மை சிட்சித்து நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பு அவருக்கு நாம் தரவேண்டும் (கலா.5:16-19). இயேசு கற்றுக் கொடுக்கிறபடி, தீய புத்தகங்களை படிப் பதற்கும் அவைகளைக் காண்பதற்கும் நம் கண்களைப் பிடுங்கி எறியவும் பாலிய சிந்தைகளைத் தூண்டும் சேதிகளை கேட்க விரும்பும் நம் காது களை வெட்டி எறிவதற்கும்.... நாம் தவறிவிட்டால், நம் சிந்தைகளை கற்பின் ஒழுக்கத்திற்கு கொண்டுவர நம்மால் ஒருபோதும் முடியாது! இதுவே, இயேசு கற்பித்த போதனையின் சாரமாகும் (மத் 5:28-30). இந்தப் பாலிய சிந்தையிலிருந்து நாம் விடுதலை பெற வேண்டு மென்றால், **நம்முடைய சரீரத்தை இயேசு கூறிய விதமாய் சிட்சித்து ஒடுக்குவது மிகுந்த அவசியமாகும்!** மிக வலிமையான பரிசுத்தவான்கள் கூறிய அறிக்கையில் "தங்கள் மனதில் தோன்றிய பாலிய ஈர்ப்பு சோதனை களுக்கு எதிராய் ஓர்-தொடர் யுத்தம் தாங்கள் செய்ய வேண்டி யிருந்ததை" கூறியிருக்கிறார்கள். குறிப்பாய், தங்கள் சரீரங்களை வெகு கடினமாய் சிட்சிக்க வேண்டியிருந்ததை அவர்கள் கூறியிருக்கிறார்கள்!

யோபு திருமணமாகி 10-பிள்ளைகளை உடையவராய் இருந்தார். ஆகிலும் அசுத்த பாலிய சிந்தையிலிருந்து தான் விடுபடுவதற்கு 'தன் கண்களை' கட்டுப்படுத்த வேண்டும் என்பதை அறிந்திருந்தார். எனவேதான் "எந்த ஒரு கன்னிப்பெண்ணையும் பாலிய இச்சையோடு பார்க்காதிருக்க என் **கண்களோடு உடன்படிக்கை** பண்ணினேன்!" எனக் கூறினார்(யோபு 31:1). எல்லா புருஷர்களுக்கும் அபாயமான சோதனைகள் கண்களின் வழியாகவே தாக்குகின்றன. மிகுந்த கவனம் கொள்ளாதபட்சத்தில், ஒரே ஒரு அசுத்த சிந்தையானாலும் அல்லது ஒரே ஒரு அசுத்த படங்களானாலும்.... நம் கண்களின் கதவைத் தாண்டி

*மனதிற்குள் செல்ல அனுமதித்து விட்டால், அந்த மனதில் விழுந்து விட்ட பிம்பத்தை அகற்றுவது வெகு கடினமானதாகும்!*

ஓர் கட்டுப்பாடான வாழ்க்கையை விரும்பும் நீங்கள், படுக்கையை விட்டு எழுந்தவுடன் அல்லது இரவு படுக்கைக்கு போகும் முன் ஒவ்வொரு காலையும், ஒவ்வொரு இரவும் **தினசரி தியானத்தில்** தேவனை நெருங்கிச் சேர வேண்டும். காலையில் படுக்கையை விட்டு எழுந்த பிறகும், தொடர்ந்து படுக்கையில் புரண்டு கொண்டிருந்தால், நம்முடைய சிந்தையின் கதவை “தீய எண்ணங்கள் உள்ளே போகும்படி” திறந்து விட்டவர்களாய் இருப்போம்.

**நம்முடைய மனதானது தேவனுடைய வார்த்தையினால் தினசரி நிறைந்திருக்கச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வது, தீய சிந்தையிலிருந்து நம்மை காத்துக் கொள்வதற்கு ஓர் பாதுகாப்பான வழிமுறையாகும்!**

*இதை தாவீது எடுத்துக்கூறும்போது “நான் உம்முடைய வார்த்தைகளை சிந்தித்து, அவைகளை என் இருதயத்தில் பத்திரப்படுத்தி வைத்தேன்! அவைகள் என்னை பாவத்திற்கு விலக்கி காக்கின்றன” எனக் கூறினார் (சங்கீதம் 119:11).*

மேலும் நமது பரிசுத்த வேதாகமம் “*நீங்கள் தேவனுடைய அங்கீகாரத்திற்கு மதிப்பு கொடுப்பவர்களாய் இருந்தால், உங்கள் மனதை பரிசுத்தமுள்ளவைகள் எவைகளோ, சரியானவைகள் எவைகளோ, தூய்மையானவைகள் எவைகளோ, எது நேர்த்தியானதோ அல்லது எது நன்மையானதோ.... அவைகளில் உங்கள் மனதை பதித்து வையுங்கள்*” எனக் கூறுகிறது (பிலி.4:8-JB மொழிபெயர்ப்பு). இந்தியாவிற்கு வருகை தந்த **ஹென்றி மார்டின்** என்ற சிறந்த மிஷனரி, தான் வெளியிட்ட ஒரு பத்திரிக்கையில் “*எனக்கு எப்போதெல்லாம் அசுத்த சிந்தையின் போராட்டம் வருகின்றதோ, அப்போதெல்லாம் மேலே குறிப்பிட்ட பிலிப்பியர் 4:8-ம் வசனத்திற்கு கீழ்ப்படிந்து அதை எனக்குள் ஊசி ஏற்றுவதுபோல் செலுத்தி விடுவேன்*” என எழுதினார். மேலும், **ஒரு பெண்ணைக் குறித்து தன் மனதில் பாலிய சிந்தைகள் தோன்றும்போதெல்லாம்,** உடனே அவர் ஜெபிக்க தொடங்கி “*கர்த்தாவே இந்தப் பெண் தன் இருதயத்திலும் மனதிலும் சுத்தமுள்ளவளாய் இருக்க அனுக்கிரகம் செய்தருளும்! இந்தப் பெண் பரிசுத்தாவியானவர் தங்கும் ஆலயமாய் திகழவும், உமது பணிக்கும் உமது மகிமைக்கும் அர்ப்பணித்தவளாய் வாழ உதவி செய்தருளும்!*” என்றே ஜெபம் ஏறெடுப்பார். *இவ்விதமாய், அவர் அந்தப் பெண்ணிற்காக அவர் ஜெபித்த பின்பு, அந்தப் பெண்ணைக் குறித்த யாதொரு அசுத்த சிந்தை கொள்ளும்படியான துணிவு அவருக்கு ஏற்பட்டதில்லை! சிந்தையின் தூய்மையை காப்பதற்கு, இந்த தேவமனிதர் கடைபிடித்த முறை மிக அற்புதமானதாகும்!*

இன்றைய கற்பு ஒழுக்கத் தரம் உலகமெங்கும் தரம் குறைந்த நிலையில் இருப்பதால், அசுந்த சிந்தைகளிலிருந்து முற்றிலும் விடுதலை பெறுவது கடினம்! என சிலர் சொல்லக்கூடும். ஆனால், இந்தப் பாலியத்து தீமைகள் நமது 21-ம் நூற்றாண்டிற்கு புதிதானதொன்றல்ல! முதலாம் நூற்றாண்டு கொரிந்து பட்டணத்தில் கற்பு ஒழுக்கக் கேடும், வேசித்தன தாராள மனப்போங்கும் நிறைந்து கிடந்தது! ஆகிலும் அங்கிருந்த கிறிஸ்தவர்கள், தங்கள் சிந்தைகளைச் சிறைப்படுத்தி, அவைகளை கிறிஸ்துவின் கீழ்ப்படிதலுக்குள் கொண்டுவந்து வாழ்ந்திட தேவ ஆவியானவர் அவர்களை எச்சரித்தார் (2 கொரி.10:15). இன்றும் அவ்வாறே செய்யும்படி தேவ ஆவியானவர் நமக்கு கூறுகிறார். ஜீவனுக்குள் நடத்தும் பாதை இடுக்கமும், கடினமாயும் தோன்றலாம்! ஆனால், அவ்வழியில் நாம் நடந்து சென்றிட பரிசுத்தாவியானவர் நம்மைப் பெலப்படுத்த வல்லவராயிருக்கிறார்!

இவ்வித கற்பு ஒழுக்க வாழ்க்கை வாழும் பொருட்டு, நம்முடைய 'எதிர்பாலரோடு விரோதம்' கொண்டிருக்கும் மனப்பான்மையை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என நாம் ஒருபோதும் எண்ணிவிடக் கூடாது. அவ்வாறு நாம் இங்கு பொருள்படுத்தவே இல்லை! நம் எதிர் பாலரோடு கொண்டிருக்கும் ஈர்ப்புத்தன்மையையும் பாவமாக கருதிவிடக் கூடாது. அது, இயற்கை வரம்பிற்கு உட்பட்டதேயாகும்! தேவனுடைய சௌந்தரியமான படைப்பில் "வசீகரமான முகமும்" அடங்கியிருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது! ஆகிலும் வீழ்ச்சி யடைந்த சிருஷ்டிகளாகிய நாம், கவனமாய் இருக்கவில்லையென்றால் .... அழகுள்ள தோற்றம், பின்பு நம்மை இச்சைக்குள் இழுத்து செல்வதை நாம் காண முடியும்.

**ஆகவே எதிர்பாலரின் வசீகரம், அவர்கள் பட்சத்தில் தூய்மையாய் இருந்தாலும்.... நமக்கோ, அசுத்த சிந்தையாய் மாறிவிட முடியும்!**

**கெய்த்மில்லர்** என்ற பரிசுத்தவான் "மறுமுறை தொடுதல்" என்ற புத்தகத்தில் கீழ்காணும் விதமாய் கூறியிருக்கின்றார்: "முழு அர்ப்பண முள்ள கிறிஸ்தவனாய் மாறியவன், எதிர்பாலரின் வசீகரத்தை அறிந்து கொள்ள முடியாதபடி, அதற்கு தூர விலகி நிற்பான் என கருதி விட கூடாது. எதிர்பாலரின் வசீகரத்தை அறிந்து கொள்ளும் உணர்வு பாவமல்ல! அவ்வித உணர்வு உங்களுக்கு இல்லையென்றால், உங்களுக்கு ஆவிக்குரிய தற்பரிசோதனை வேண்டுமென்று நான் கூற மாட்டேன். ஆனால் எதிர்பாலரின் வசீகர ரூபத்தை நீங்கள் அறிந்து கொள்ள முடியாதவராய் இருந்தால், உங்களுக்கு "சரீர, வைத்திய சோதனை" வேண்டுமென்றே கூறுவேன். இதை உங்கள் மீது கொண்ட கரிசனை மிகுந்த அக்கறையோடுதான் கூறுகிறேன்! ஆகவே "வசீகரத்தை உணர்வது" பாவமல்ல! இன்னமும் வலியுறுத்தி கூற

வேண்டுமென்றால் “பாவம் செய்யத் தூண்டப்படுதலின் உணர்வு” நம் கிறிஸ்தவ குணாதிசயத்தில் வளர்ச்சியடைவதற்கு மிக அவசியமான உணர்வு என்றே கூறுவேன். உதாரணமாய் ஒரு குருடன் தனக்கு முன் உள்ள மேஜையில் இருக்கும் தங்கத்தை திருடவில்லை என்பதற்காக, அவனை நேர்மையாளன் எனக் கூறிட இயலாது. ஆனால் அந்த தங்கத்தைக் கண்ட ஒரு மனிதன், அதை எடுத்துக் கொள்ளும் ஆர்வத்தால் உந்தப்பட்டு “திருடக் கூடாது!” என்ற பண்பை தெரிந்து கொள்வதில்தான் அவனுக்குள் ஆவிக்குரிய தன்மை வளர்ச்சி அடைகின்றது. ஆனால் தங்கத்தையோ வசீகரத்தையோ கண்ட ஒருவன், தன் உணர்வை தவறான செயலுக்கு பயன்படுத்துவதுதான் குற்ற முள்ளதாய் இருக்கிறது” எனக் கூறினார்.

ஆகவே, நமக்குள் இருக்கும் பரிசுத்தாவியானவரின் சத்தத்திற்கு உடனடியாக கீழ்ப்படிவதில்தான் நம்முடைய பாதுகாப்பு அடங்கியிருக் கிறது. அவரே நம்மை உணர்த்தி, நம் கண்களையோ நம் சிந்தை களையோ வேறு திசைக்குத் திருப்பும்படி கட்டளை கொடுக்கிறார். எனவே நாம் அவ்வப்போது ஜெபிக்க வேண்டிய முக்கியமான ஜெபம் என்னவெனில் “ஆண்டவரே என்னால் மேற்கொள்ள முடியாத சோதனைகளை சந்தித்திட என்னை நடத்திட வேண்டாம்” என்பதே யாகும். இந்த ஜெபத்தை மெய்பக்தியோடு ஜெபித்த அனேக வாலிபர்கள் ஜெயம் பெற்று வாழ்ந்திருக்கிறார்கள்.

**சுயபுணர்ச்சி பாவம்**

மனம்போன போக்கிலெல்லாம் தன் சிந்தையை அலையவிடும் ஒருவன், தன் சரீர பாலிய இச்சைகளை ஒழுக்கக் கேடான முறையில் பூர்த்தி செய்யத் துணிந்திடுவான். இதுபோன்ற இழிநிலை ஓர் மெய் கிறிஸ்தவனுக்கு நிகழ்ந்திட கூடாது. இதைக் குறித்து அப்போஸ்தல னாகிய பவுல் கூறும்போது “பந்தைய நிகழ்ச்சிக்கு வரும் போட்டி யாளர்கள் கடுமையான பயிற்சி எடுத்தே வருவார்கள். இவ்வித கஷ்டமான பயிற்சியை, வாடிப்போகும் கிரீடத்திற்காகவே செய்கி றார்கள். ஆனால் நமது பந்தயமோ என்றென்றும் வாடாத ஓர் நித்திய கிரீடத்திற்காகவே இருக்கிறது. ஆகவே, இந்த பந்தயத்தில் உறுதியான தீர்மானத்தோடே ஓடுகிறேன். ஓர் நிழல்-போரிட அல்ல.... நான் மெய்யாகவே போரிடுகிறேன்! **நல்ல எஜமானாய் இருந்து என் சரீரத்தை அடக்கி ஆளுகின்றேன்.** மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற நான் கூட தகுதியிழந்து போக முடியும் என்ற அபாயத்தையும் நான் உணர்ந்திருக் கிறேன்” எனக் கூறினார் (1 கொரி.9:25-27 -JBமொழிபெயர்ப்பு). அவர் மேலும் கூறும் போது “**ஒவ்வொருவனும் தன் சரீரத்தை அடக்கியாள கற்றுக் கொள்ள வேண்டும்.** அவனவன் தன் தன் சரீர பாண்டத்தை பரிசுத்தமாயும் மரியாதைக்குரியதாயும்.... தேவனை அறியாத அஞ்ஞானிகள் செய்வது

*போல் சரீரத்தை மோக இச்சைக்கு உட்படுத்தும் அவயவமாய் கையாண்டிடாமலும் இருத்தல் வேண்டும்" எனக் கூறினார் (1தெச.4:4,5 - JB மொழி பெயர்ப்பு).*

*"தூய வேதமும், பாலியத்து இன்றைய கோட்பாடுகளும்" என்ற புத்தகத்தை எழுதிய C.G.ஸ்கோரர் கூறும்போது "அப்போஸ்தலனாகிய பவுல் 1தெசலோனிக்கேயேர் 4:4,5 வசனங்களைக் கூறியபோது, வேறொரு விஷயத்தைக் குறித்தும் அறிவுறுத்துவதை நாம் காண்கிறோம்! அதுதான், தனிமையில் ஒருவன் ஒளிப்பிடத்தில் செய்திடும்* **சுயபுணர்ச்சி பாவம்.** *ஆகிலும், புதிய ஏற்பாடு ஒரு மனுஷனுடைய வாழ்வில் உள்ள அந்தரங்கங்களை அலசிப் பார்க்க எத்தனம் எடுப்பதில்லை. இன்றைய நாகரீக மனோ தத்துவங்கள் அவ்வித முயற்சியை மேற்கொள்கிறது. ஆனால், கிறிஸ்துவோ அல்லது அவரது அப்போஸ்தலர்களோ அவ்வாறு செய்திட துணிந்தது இல்லை. ஆகிலும் சுய - இன்பம் பூர்த்தி செய்யும் விருப்பம்,* **தேவன் நம் சரீரத்தின் மீது கொண்டிருக்கும் அதிகாரத்தை** *மீறும் செயலே ஆகும்! இது 'பாலிய இன்பமே' வாழ்க்கையின் விருப்பமாய் கொண்டு வாழும் ஓர் கொடிய சுயநலம் ஆகும். ஒரு வாலிபனோ அல்லது வாலிப ஸ்திரீயோ தன் சொந்த இச்சைகளை ஆண்டு கொள்ளும் எஜமானாய் இல்லாமல் அதற்கு ஓர் அடிமையாய் மாறும் கொடுமை! பொதுவாக, பாலிய உறவு சிந்தைகள், ஆவிக்குரிய தீர்க்கமான பார்வையையும் வல்லமையையும் அழித்துவிடும்! சரீர உணர்ச்சிகள் நம் ஜீவியத்தை ஆண்டுகொள்ளும் பட்சத்தில் ஆவியானவர் நம்மைவிட்டு விலகிவிடுவார்! மனோ தத்துவப்படி பார்த்தாலும் 'இதுபோன்ற பாவங்கள்' ஓர் முதிர்ச்சியற்ற குணாதிசயம் அல்லது ஒருவன் சுயத்தின் வலைக்குள் சிக்கிக்கொண்ட நிலையாகும்.... இவ்வித* **சுய – இன்பங்கள்** *கண்டிப்பாய் ஜெயிக்கப்பட வேண்டும். இதுபோன்ற வேசித்தன செயல்கள், வேறு ஒரு நபரை பாதிக்காதபடியால் மிக மோசமான பாவமாக கருதப்படாமல் இருக்கக்கூடும்!*

**ஆனால், இதுபோன்ற செயலில் ஈடுபடுகிறவன், ஓர் அசுத்த உத்வேகத்திற்கு உடன்பட்டபடியால், தன் சரீர உணர்ச்சிகளை ஆண்டுகொள்வதற்கு தகுதியற்றவன் என்பதையே நிரூபிக்கிறான்!**

*இவனது இழிசெயல், அவனையே இழிவுபடுத்துகிறபடியால் 'ஒப்பற்ற கிறிஸ்தவன்' என்ற சாட்சிக்குப் பெரும் பங்கத்தை 'தானே' வரவழைத்துக் கொள்கிறான்! இதற்குரிய நல்ல விடையானது, அவருடைய சித்தத்திற்குள்தான் அடங்கியிருக்கிறது! ஒரு பொது - அறிவு உணர்வுகூட "இவ்வித பாலிய தூண்டுதல், கண்டிப்பாய் எதிர்க்கப்பட்டு, ஆரம்ப நிலையிலேயே ஜெயிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்திருக்கும்!" என்றார்.*

சுய - புணர்ச்சி யாதொரு வியாதிக்கு நம்மை இழுத்துச் செல்லா விட்டாலும், அது கண்டிப்பாய் ஒருவனை மனச்சோர்வுக்குள்ளும், குற்ற உணர்வுக்குள்ளும் நடத்தி விடும்! மேலும், அவனது ஆள்தன்மையின் வலிமையிலும் பெலவீனமடைந்து.... முடிவில் அவன் தனது ஆவிக்குரிய ஊக்கத்தை இழந்து, தேவனோடு கொண்ட தனது உறவிலும் துண்டிக்கப்படுகிறான். இவ்வித சுய - இன்ப பழக்கத்திற்கு அதிகமாய் ஈடுபட்ட ஒருவன், தன் திருமண வாழ்வில் உள்ள பாலிய உறவில் பிரச்சனைக்குரியவனாய் மாறுவான்!

**ஆகவே, சுய-புணர்ச்சியை கொடிய பாவம் என்றே கூறவேண்டும்! ஏனெனில், “தேவன் தந்த பாலிய வரத்தை” இவன் இழிவாய் துர்பிரயோகம் செய்து விட்டான்! இந்த பாவத்திற்காக அவன் கண்டிப்பாய் மனந்திரும்பி அதை விட்டுவிடவும் வேண்டும்.**

பொதுவாய், நல்ல கிறிஸ்தவ வாலிபர்கள்கூட தங்கள் உலக நண்பர்களிடமிருந்து, பாலியத்தைக் குறித்த “கோணலும் மாறுபாடான” தகவல்களைக் கேட்டு அறிந்து கொள்கிறார்கள். இதனிமித்தமே, இந்த கேடான தீய பழக்கத்திற்கு எளிதில் பலியாகி விடுகிறார்கள். இந்த பழக்கத்தில் ஒருமுறை ஈடுபட்டால் கூட.... மீண்டும் அதைச் செய்வதற்குரிய உந்துதல் இருந்து கொண்டே இருக்கும். இவ்வாறு, வலிமையாய் சிறைப்பட்டுப்போன ஒருவனை **கிறிஸ்து மாத்திரமே** விடுதலை செய்திட முடியும்.

உலக நண்பர்கள் கூறும்போது, நம் ‘தசை நார்கள்’ அப்பியாசப் படுத்தப்படா விட்டால், உபயோகமற்றதாய் போய் விடும். அதைப் போலவே, பாலிய உறுப்புகளை அப்பியாசப்படுத்தாமல் இருந்து விட்டால், அது உபயோகமற்றதாய் போய் விடும் எனக் கூறுகிறார்கள்! இது முற்றிலும் தவறான ஓர் கருத்தாகும். மருத்துவ நிபுணர்கள் இதை மறுத்து, பாலிய உறுப்புகள் அப்பியாசப்படுத்தப்படாததால், அதனுடைய செயல்திறன் குறையவோ அல்லது கெட்டுப் போவதோ இல்லை! என்றே கூறுகின்றனர். ஒருவன், பாலியத்தின் தூண்டுதலை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதினிமித்தம், அவனது மனநிலைக்கும் யாதொரு தீங்கும் ஏற்படாது. ஆகவே பாலியத்து காம விருப்பங்களை கட்டுப்படுத்திடும் ஒருவனுக்கு, மனநிலை பாதிப்பிற்குரிய யாதொரு அபாயமும் ஏற்படுவதில்லை. இதற்கு மாறாக, ஒருவன் பாலியத்து விருப்பங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தால், அவனது மன வலிமை இன்னும் அதிகமாய் திடப்படும்! அவனது மனம், விழிப்புள்ள தெளிந்த புத்தியுள்ளதாய் இருக்கும்!

**ஒருவன், தன் ஜீவகாலமெல்லாம் தன் பாலியத்து உறுப்பை ‘ஒருமுறைகூட பயன்படுத்தாமல்’ இருந்தாலும், அவனது மனமும் சரீரமும் வலிமை கொண்டதாகவே இருக்கும்!**

இரவில் தூங்கும்போது, தானாகவே ஏற்படும் “விந்து வெளியேறுவதைக் குறித்து” சில வாலிபர்கள் கவலைப்படுகிறார்கள். அதிக அளவில் உள்ளதை வெளியேற்றுவது, சரீரத்தின் இயற்கையான செயல்பாடே ஆகும்! இதை விபரீதமாகவோ அல்லது கவலைக்குரிய ஒன்றாகவோ எண்ணிட அவசியமேயில்லை.

**வாலிபர்கள் ஒவ்வொருவரும், தங்கள் திருமணத்திற்கு முன்பே தங்களின் காம வேட்கையை கட்டுப்படுத்தி வாழ அறிந்து கொள்ள வேண்டும்.**

ஏனெனில், திருமணத்திற்கு பிறகுதான் “**சுயகட்டுப்பாடு**” ஒருவனுக்கு அதிக தேவையாய் இருக்கிறது. ஆகவேதான் திருமணத்திற்குப் பிறகு, பாலிய உறவில் ஓர் ஒழுங்கை கடைப்பிடிக்க வேண்டியதாயிருக்கிறது. திருமணத்தை, கட்டுபாடில்லாத பாலிய உறவிற்கு பெற்ற ‘லைசன்ஸாக’ எண்ணிவிடவும் கூடாது. ஒருவன் சுயகட்டுப்பாட்டை தன் திருமணத்திற்கு முன்பே கற்றுக்கொள்ளாத பட்சத்தில், திருமணத்திற்குப் பிறகு கற்றுக் கொள்வது கடினமேயாகும்!

இந்த தீய பழக்கத்திற்கு அடிமைப்பட்டு சிக்கியவர்கள், இதிலிருந்து எப்படி விடுபடுவதென கவலை கொண்டிருக்கக் கூடும். விடுதலையின் ஒரே வழியாய் இருப்பதெல்லாம், கிறிஸ்துவின் மரணத்திலும் அவரின் உயிர்த்தெழுதலிலும் நம்மை மெய்யாகவே இணைத்துக் கொள்வதில்தான், **இந்த பாவச்சங்கிலி முறிந்து விழும்!** இவ்விதமாய் நாம் பெற்ற வெற்றி, நம்மில் நிலைத்து தங்குவதற்கு, நம் முழுமையும் **பரிசுத்தாவியின் அபிஷேகத்தால்** நிரப்பப்பட வேண்டியது அவசியமாகும்.

மேலும், நம் ஜீவியத்தின் அன்றாட காரியங்களில் ‘சுறுசுறுப்பாய் இருக்கும்படி’ நம்மை தயார் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு, ஏதாவது ஒரு செயல்பாட்டில் நம்முடைய மனதும், நம்முடைய சரீரமும் ‘நாள் முழுவதும் ஈடுபாடு கொண்டிருக்க’ நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

**சும்மாவே இருந்து கொண்டு, யாதொரு அலுவலுமில்லாத சரீரமே “மிக எளிதில் மோகத்திற்கு” பலியாகிறது! கடின உழைப்பு கொண்ட ஒருவனுக்கு ‘இந்த பகுதியில்’ அதிக பிரச்சனை ஏற்படுவதில்லை!**

தன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்டுதான், ஆதாம் தன்னுடைய உணவை பெற வேண்டும் என தேவன் கூறினார் (ஆதி.3:19). ஆகவே, மனுஷன் கடினமாய் உழைக்க வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாயிருக்கிறது. ஆனால் இன்றோ, நேரத்தை மிச்சப்படுத்தும்படியான அநேக கண்டுபிடிப்புகளை விஞ்ஞானம் வழங்கியிருக்கிறது. இன்றைய நாகரீக இளைஞனுடைய கையில் அதிகமான நேரம் ‘வேலையின்றி’ கிடக்கின்றது.... இங்குதான், அந்த

நேரங்களை பிசாசானவன் வஞ்சகமாய் தனக்கென பயன்படுத்த பார்க்கிறான்! நேரத்தை மிச்சப்படுத்தும் உபகரணங்களை பயன்படுத்த வேண்டாமென நாம் இங்கு கூறவில்லை! அவைகளை தாராளமாய் பயன்படுத்தலாம். ஆனால், நமக்கு கிடைத்த உபரி நேரங்களை ஆக்கப்பூர்வமான செயல்களுக்கு பயன்படுத்தவே நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

நம் சரீர சக்தியை நான்கு விதத்தில் செலவிடலாம். 1) சரீர உழைப்பு 2)சிந்தனையில் சுறுசுறுப்பு 3)பரவசமான செயல்பாடுகள் 4)பாலியத்திற் குரிய உறவு! **முதல் மூன்று விதத்தில்** நம் சரீர சக்தியை செலவிடாத பட்சத்தில்.... நான்காவது விதத்தில் நம் சக்தியை விரயமாக்கிட பெரும் அழுத்தம் நமக்குள் ஏற்பட்டுவிடும். ஆனால் இந்த இழிவான பாலியத்து ஈடுபாடு, முதல் மூன்று விதத்தில் சரீர சக்தியை செலவு செய்வதை விட மிக மோசமாய் ஒருவனின் நரம்பு மண்டலத்தையும், சரீர பெலனையும் ஆக்கபூர்வ தன்மையிலிருந்து இழந்து போகச் செய்கிறது.

சில வாலிபர்கள், மற்ற வாலிபர்களைப்போல் பாலியத் தூண்டுதலின் அழுத்தம் இல்லாமல், அதில் மந்த உணர்வு கொண்டவர் களாய் இருக்கின்றனர். இச்சமயத்தில், பாலிய விருப்பத்தின் அழுத்தம் அதிகமாய் கொண்டவர்கள், தங்களை மோசமானவர்களாய் எண்ணி விடக் கூடாது. அதற்கு மாறாக, இவ்வித நிலை அவர்களுக்குள் காணப்படும் "**ஆக்கபூர்வ சக்திக்குரிய**" அறிகுறியே ஆகும். தங்களுக்குள் இருக்கும் இந்த சக்தியை நலமான வழிகளில் இவர்கள் பயன்படுத்திட முடியும். வாலிபர்களாகிய நீங்கள், பாலிய போராட்டத்திலே விழுந்து கிடக்க தேவன் விரும்பவில்லை. சிந்தையின் மூலமோ அல்லது நமது செயலின் மூலமோ பாலிய உறவுக்கு நம்மைத் தூண்டும் சரீர சக்திகளை தேவனை மகிமைப்படுத்தும் வழிக்கு நடந்திடவும், நம் சக வாலிபர் களுக்கு உதவி புரிவதற்கும் பயன்படுத்தலாம்!

ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவ இளைஞனும், தன் சரீரத்தை அனுதினமும் ஈடுபாடான பயிற்சிக்கு பழக்கியிருக்க வேண்டும். தன்னுடைய மீதமான நேரங்களை, ஆழ்ந்த வேதாகம ஆராய்ச்சிக்கும் ஜெபத்திற்கும் ஒப்புக்கொடுத்து, தன் மனதை ஆவிக்குரிய பயிற்சிக்குள் ஈடுபடுத்தி, **வீண் சம்பாஷணைக்கு** விலகி நிற்க வேண்டும். இவ்வாறு, அந்த நாளின் கடைசிக்குள் வரும்போது, திறனான பல காரியங்களை அவன் செய்து முடித்தது மாத்திரமல்லாமல்.... ஆக்கபூர்வ பணியின் ஈடு பாட்டில் சுறுசுறுப்பாய் இருந்தபடியால், படுக்கையில் படுத்தவுடன் நித்திரைஅடைந்து விடுவான்! அவனது இரவு படுக்கை, காமசிந்தை களால் தாக்கப்படாமலும், சுயபுணர்ச்சி தூண்டுதலை எளிதில் புறக் கணித்தவனாய், நிம்மதியான நித்திரையில் தான் ஆழ்ந்திருப்பதை அவன் அறிந்து கொள்வான். வேதாகமம் கூறுகிறபடி "சுறுசுறுப்பாய் கடின

*பணியாற்றியவன் நிம்மதியாய் தூங்குவான்!"என்றே வாசிக்கிறோம் (பிரசங்கி 5:12-* Living Bible *மொழி பெயர்ப்பு).*

*நம்முடைய உணவுப் பழக்கம் மற்றும் தூக்கத்தை ஓர் ஒழுங்கு முறைக்குள் வைத்துக் கொண்டால், பாலிய உணர்வு தூண்டுதலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது சுலபமாயிருக்கும். உணவு, உறக்கம் ஆகிய இந்த இரண்டு பகுதிகள் கட்டுப்பாடே இல்லாது இருப்பவர்கள், மிக எளிதில் பாலியத் தூண்டுதல்களுக்கு பலியாகி விடுவார்கள்.* **ருசிக்கு ஏற்ப பெருந்தீனி உண்பதற்கும், பாலிய உணர்வு தூண்டுதலுக்கும் மெய்யாகவே ஒரு தொடர்பு இருக்கிறது.** *ஆதியிலிருந்த சோதோம் நகரில் பாலிய காமத்திற்குரிய பாவங்கள் பெருகியிருந்ததற்கு காரணம், அவர்களுக்கு இருந்த ஏராளமான உணவும், உல்லாச சொகுசும், சோம்பேறித்தனமுமே காரணமாகும்! (எசே.16:49). இந்த சுய-புணர்ச்சி பாவத்தினால் தோற்கடிக்கப்பட்டவர்கள், தங்கள் உணவுப்பழக்கத்தை ஒழுங்கு செய்து,* **உபவாச ஜெபத்தோடு தங்கள் ஆண்டவருடைய முகத்தை தேடினால்,** *வெகு சீக்கிரத்தில் இந்த பழக்கத்தி லிருந்து விடுதலை பெற்றுவிடுவார்கள்!*

*எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் தொடர்ச்சியாக கர்த்தருடைய பிரசன்னத்தைப் பழகிக் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்! கர்த்தர் எப்போதும் நம்மோடிருக்கிறார் என்றும், அவர் நம்மை கவனித்து கொண்டிருக்கிறார் என்றும், எப்போதும் உணர்வுடையவர்களாய் இருக்கவேண்டும். இன்னொரு விசுவாசி நம்மை கவனித்து கொண்டிருந் தால், சுய-புணர்ச்சியில் ஈடுபடமாட்டோம். அவ்வாறிருக்க,* **நம்மை கவனிக்கும் தேவனுக்கல்லவா** *நாம் அதிகம் பயந்திருக்க வேண்டும்!*

*இத்தனை முயற்சிகளுக்கு பின்பும், இந்த சோதனை உங்களை தொற்றிக் கொள்வதை உங்களால் உதறிட முடியவில்லையென்றால், நீங்கள் தனியாக இல்லாமல்.... யாராவது ஒருவரோடு சேர்ந்திருக்க நாடுங்கள். குறிப்பாக, அவர் ஒரு விசுவாசியாக இருப்பது நலம்! ஜெயத்தின் பாதையில், இதுவும் உங்களுக்கு துணை செய்யும்!*

**விபச்சாரம்**

*ஒரு புருஷனும் ஒரு ஸ்திரீயும் சேர்ந்திருக்கும் பாலிய உறவில், அந்த இருவரும் 'ஒரே மாம்சமாய்' மாறுகிறார்கள். இதை வேதாகமம் குறிப்பிட்டு "ஒரு வேசியோடு சேரும் ஒருவன், அவளோடு ஒரே சரீரமாகிறான் என்பதை அறியீர்களா? எழுதப்பட்டபடியே இருவர் ஒரே மாம்சமாய் மாறுகின்றார்கள்" எனக் கூறுகின்றது (1கொரி.6:16). பழைய ஏற்பாட்டில் ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் ஏற்படும் பாலிய உணர்வை* **"ஒருவரையொருவர் அறிதல்"** *எனக் கூறப்பட்டிருக் கிறது. ஆகவே பாலிய உணர்வு என்பது, வெறும் சரீரத்திற்குரியது*

*அல்ல! அந்த உறவை, அவ்வளவு எளிதில் மறந்திட இயலாது! ஏனெனில், ‘அது’ இருவரை “ஒரே மாம்சமாய்” மாற்றுகிறது. காரியம் இப்படியாக இருப்பதினால்தான், பாலிய உறவின் தாறுமாறுகளுக்கு நடத்திச் செல்லும் பாதைக்கு அநேக தடைகளை, தேவன் உண்டு பண்ணி வைத்திருக்கிறார். குறைந்தபட்சம்,* **எய்ட்ஸ் மற்றும் சிஃபிலஸ் ஆகிய கொடிய நோய்களை** *அநேகர் அறிந்திருக்கிறார்கள். “தடை மீறி வேறொருவர் சரீரத்தோடு இணைபவர்களை தேவனே நியாயம் தீர்ப்பார்!” (எபி.13:4 - JB மொழி பெயர்ப்பு) என்றே வேதம் எச்சரிக்கிறது.*

*இன்றைய இளம் வாலிபர்கள், எவ்வித பொறுப்பும் ஏற்றுக் கொள்ளாமல் இன்பத்தை அனுபவித்திட எத்தணிக்கிறார்கள். ஆகவே தான், திருமண வாழ்வு என்ற உத்தம பொறுப்பை விட்டு விட்டு, பாலிய இன்பத்தை மாத்திரம் அனுபவித்திட சோதிக்கப்படுகிறார்கள்!*

**இவ்வாறு பெண் இனத்தை இழிவுபடுத்த துடிக்கிறவர்கள், தேவனிடமிருந்து கொடிய நியாயத்தீர்ப்பை அடைவது நிச்சயம்!**

*இன்றுள்ள மாறுபாடான உலக நண்பர்கள் “உன் ஆண்மையை பாலிய உறவின்மூலம் நிரூபி!” என்றே சவால் விட்டு கூப்பிடுவதுண்டு! அவ்வாறு ‘பாலுறவு தொடர்புக்கு ஒரு பெண்’ அவனுக்கு இல்லையென்றால்..... பகடி செய்தும் தூண்டுகிறார்கள். ஓர் சீரிய ஆண்மை பாலிய உறவிலா அடங்கியிருக்கிறது? அல்லவே அல்ல!* **அவனது சுய-கட்டுபாட்டின் தீரத்தில்தான்** *மெய்யான சீரிய ஆண்மை ஜொலிக்கிறது!*

*தன் இச்சையை கட்டுப்படுத்த தவறி ‘பாலிய வீழ்ச்சியடைந்த’ தாவீதின் மாதிரியை வேதம் நமக்கு முன் வைக்கிறது. அவன் வீழ்ச்சியடைந்த சூழ்நிலைகளை சற்று கவனித்துப் பாருங்கள். இந்த நிகழ்வை 2 சாமுவேல் 11:1,2 வசனங்கள் விவரிக்கிறது. வெம்போர் நடந்து கொண்டிருந்த வேளையில், இந்த தாவீது தன் வீட்டில் சோம்பலாய் படுத்துக் கிடந்தான்! தன் கடமையை அசட்டை செய்த இவனிடம் சோம்பலும், சுகபோகமும் உள்ளே வந்து பற்றிக் கொண்டது. இந்த சீர்கெட்ட நிலையில்தான் “பத்சேபாளை” பார்த்தான். இவன், தன் கண்களைக் கண்டித்து கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவனோ உற்று நோக்கிப் பார்த்து, பாவ மோசத்தில் விழுந்தான்!*

*மோசமாய் வீழ்ச்சியடைந்த சிம்சோனைக் குறித்தும் வேதாகமம் நியாயாதிபதிகள் 16 & 14 அதிகாரங்களில் கூறுகிறது. இந்த சிம்சோன், தன் பாலிய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி அடக்காதபடியால், மிக எளிதில் வீழ்ச்சியடைந்தான்! ஒரு வசீகரமான பெண்ணைக் கண்ட மாத்திரத்தில், தான் நசரேயத்துவ அழைப்பைப் பெற்ற “தேவனுடைய ஊழியன்” என்பதையே மறந்து விட்டான்! இதன் விளைவாய் தன் முழு ஊழியத்தையும் இழந்தான்.* **இதே வண்ணமாய், வீழ்ச்சியடைந்து தங்கள் ஊழியத்தை இழந்தவர்கள் ஏராளம், ஏராளம்!**

*இதற்கு நேர்மாறாக வாழ்ந்து நிரூபித்த யோசேப்பை பாருங்கள். இவன், தாவீதைப் போன்ற ஐசுவரியமோ அல்லது ஆடம்பரமோ கொண்டவன் அல்ல! சிம்சோனைப்போல தேவனுடைய கனமான ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவனும் அல்ல! ஆகிலும், எளியவனாய் வாழ்ந்த இந்த வாலிபன் பாலிய இச்சையை முற்றிலுமாய் ஜெயித்து விட்டான். இவனது ஒப்பற்ற சாட்சியை விளங்கச் செய்யும் ஆதியாகமம் 39-ம் அதிகாரத்தை ஒவ்வொரு இளைஞனும் வாசித்து ஓர் நல்ல பாடத்தை படித்துக் கொள்ள வேண்டும். அந்த அதிகாரத்தின் 7-ம் வசனத்தில், ஓர் கொடிய சோதனை யோசேப்பிற்கு திடீரென்று சம்பவித்தது. அந்த சம்பவம் நடக்குமென்ற எச்சரிப்பு ஏதுமில்லாமலே சம்பவித்து விட்டது! இவ்வாறாகவே நமக்கும் கொடிய சோதனைகள் சம்பவித்திட முடியும். இதற்கெல்லாம் முன்கூட்டியே நாம் தயார் நிலையில் இல்லையென்றால், கண்டிப்பாய் வீழ்ச்சியடைந்து விடுவோம்!*

**இந்த யோசேப்பு தன் அந்தரங்க ஜீவியத்தில் இச்சையான சிந்தைகளுக்குத் தன்னை உட்படுத்தி வாழ்ந்திருந்தால், அந்த நேரத்தில் ஏற்பட்ட சோதனை வலையில் மிக இலகுவில் விழுந்திருப்பான்.**

*ஆனால், இந்த நல்ல யோசேப்போ தேவனுடைய சமூகத்தில் பழகி வாழ்ந்து வந்தவன். அவனுடைய கனவுகளிலும் தேவனையே பார்த்து தரிசித்தவன்! ஆகவேதான், அந்த கொடிய சோதனை வந்தபோது, வேறு யார் இருக்கிறார்கள் என்பதை விட* **"தேவன் தன்னோடு இருப்பது"** *அவனுக்கு அவ்வளவு ஊர்ஜிதமாய் இருந்தது. இந்த ஒப்பற்ற வாழ்விற்குப் பதிலாக, ஒரு வாலிபனுக்குரிய கவர்ச்சியில் நாட்டம் கொண்டு, ஓர் ஆழமற்ற போலியாக வாழ்ந்திருந்தால், அந்த கடினமான சோதனையில் மிக எளிதில் சிக்கியிருப்பான்!*

*யோசேப்பு பாவத்தில் வீழ்ச்சியடையாமல் பாதுகாத்த* **அவனது உத்தம தெய்வபயத்தை** *சற்றே தியானியுங்கள். அது, தன்னை யாரும் பார்த்து விடுவார்களோ என்ற இழிவான பயமல்ல! அல்லது தனக்கு தண்டனை கிடைத்துவிடுமோ, என்ற கோழை பயமும் அல்ல! (வச.9). ஆனால் இவ்வித கீழ்த்தரமான பயத்தின் அடிப்படையில் தான் திரளான ஜனங்கள் இன்று பாவம் செய்யாதிருக்கிறார்கள்.... இது ஒரு பரிதாப நிலை அன்றோ! இந்த உத்தம யோசேப்பு தேவனோடு கொண்டிருந்த உறவு, இன்றைய கிறிஸ்தவ இளைஞர்களைப்போல் மேலோட்டமாய் இல்லாமல், தேவனிடம் ஓர் ஆழமான உறவு கொண்டிருந்தான்!*

*போத்திபார் மனைவி திரும்பத் திரும்ப பாவத்திற்கு அழைத்த அழைப்பை, யோசேப்பு மறுத்தது ஒரு ஆணித்தரமான செயலாய் இருந்தது (வச 10). சோதனையின் முதல் கட்டத்திலேயே "இல்லை!" என கூறி மறுத்தபடியால், இரண்டாம் முறை "இல்லை!" எனக் கூறுவதற்கும்.... மூன்றாம் முறை "இல்லை!" எனக் கூறுவதற்கும் அவனுக்கு*

எளிதாயிருந்தது. ஓர் பாமாலையின் அடிகள் கூறுவது போல்:

**சோதனைக்கு இணங்கிடாதீர்!**

**இணங்குவது பாவமன்றோ**

**ஜெயித்து வாழ கவனம்.... மிக கவனம்!**

**இந்த ஜெயமே, மற்றொரு ஜெயத்திற்கு கை கொடுக்கும்!**

போத்திபார் மனைவியின் சமூகத்தை அடியோடு தவிர்த்திட யோசேப்பு நாடினான் என்றே ஆதியாகமம் 39:10 மகிழ்வுடன் கூறுகின்றது. யோசேப்பு கடைபிடித்த பாதுகாப்பு எச்சரிக்கையை நாமும் கடைப்பிடிக்க வேண்டும்! ஆம், "சோதனையின் காட்சிக்கு" தூர விலகி நின்ற அவனது உத்தமம்!

**எதிர்பாலரோடு பழக நேரும் யாதொரு சந்தர்ப்பத்திலும், மிக கவனம் கொண்டிருத்தல் வேண்டும் என "யோசேப்பின் மாதிரி" நம் யாவருக்கும் எச்சரிப்பின் புத்திமதியை கூறுகின்றது.**

வசீகரமான பெண்கள் இருக்குமிடத்தில்தான் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என எண்ணி ஏமாந்துவிடக் கூடாது. ஏனெனில் வசீகரம் இல்லாத பெண்களிடமிருந்தும் இந்த அபாயம் துரிதமாய் நம்மை தாக்கி விட முடியும். அது ஏனென்றால், தங்களின் வசீகர குறைவை இந்த பெண்கள் அறிந்திருக்கிறபடியால், தங்களை அழகுப்படுத்த முயற்சிப்பது மாத்திரமல்ல, வாலிபர்கள் தங்கள் சரீரத்தை தொடுவதற்குகூட ஓர் தீய - சுயாதீன போக்கை கடைபிடிப்பார்கள்!

வேதம் கூறும் எச்சரிப்பை கேளுங்கள் "எதிர்பாலரின் தாராளமான பழக்கத்திற்கு, கொள்ளை நோயை கண்டதுபோல் விலகி ஓடுங்கள்! வேறு எந்த பாவமும் சரீரத்திற்கு வெளியே நடப்பதுதான். ஆனால் வேசித்தன பாவமோ உங்கள் சொந்த சரீரத்திற்குள் நடப்பதாகும். உங்கள் சரீரம் "பரிசுத்தாவியானவர் தங்கி வாழும் ஆலயமென்பதை" மறந்தீர்களோ? உங்கள் சரீரம் தேவன் ஈவாய் தந்த அவருடைய வரம் அல்லவோ! உங்கள் சரீரம், உங்களுக்கு சொந்தமானதல்ல என நீங்கள் அறிய வேண்டுமல்லவா? தேவன் உங்களை எவ்வளவு பெரிய விலை கொடுத்து வாங்கி விட்டார்! உங்கள் சரீரத்தின் மூலமாய் தேவனுக்கே மகிமையை கொண்டு வந்து சேருங்கள்!" (1கொரி.6:18-20 JB மொழி பெயர்ப்பு).

மேலும் "எந்த வாலிபனுக்கும் ஏற்படுகிற, பாலியத்து தீமையான யாதொரு **சிந்தைகளுக்கும்**, விலகி ஓடுங்கள்!" எனவும் வாசிக்கிறோம் (2 தீமோ.2:22 Living Bible மொழி பெயர்ப்பு).

மேற்கண்ட வேத வாக்கியத்திற்கு புகழ்ச்சியாகவே யோசேப்பு நடந்து கொண்டான். பொய்யாய் தூஷிக்கப்பட்டதோ அல்லது கடும் சிறைவாசகத்திற்கு தள்ளப்பட்டதோ, யோசேப்பிற்கு ஒரு

*பொருட்டல்ல ....* **இச்சைக்கு இணங்கி விடக்கூடாது என்பது ஒன்றே** *அவனுக்கு காரியமாய் இருந்தது! இந்த உத்தம யோசேப்பை தேவன் கனம் பண்ணியதில் எந்த ஆச்சரியமுமில்லை! இந்த முக்கியமான பகுதியில் ஏற்படும் தோல்விதான், இன்று அநேகம் இளைஞர்களை தேவன் கனப்படுத்த முடியாததற்கு காரணமாயிருக்கிறது!*

**ஓருபால் உறவு**

*ஒரே பாலினத்தினர், தங்களுக்குள் வைத்திருக்கும் பாலிய ஈர்ப்பின் செயலையே ஒருபால் உறவு என குறிப்பிடப்படுகிறது. லோத்தின் நாட்களில் இந்த ஒரு பாவத்திற்காக, அவன் வாழ்ந்த சோதோம் கொமோரா பட்டணத்தை தேவன் நியாயம் தீர்த்தார். லேவி.18:22-ம் வசனத்திலும் 1கொரி.6:9,10-ம் வசனங்களிலும் இவ்வித உறவை தேவன் அருவருத்து, வெகுவாய் கண்டித்துள்ளார். இதுபோன்ற ஒருபால் உறவில் ஈடுபடுகிறவர்கள் "தங்கள் சொந்த சரீரத்திலும், தன் ஆள்தன்மை யிலும் அருவருப்பான சரீர ரோகங்கள் உள்ளவர்கள்" என்றே சுட்டிக் காட்டுகிறது (ரோமர்.1:26,27-JBமொழிபெயர்ப்பு). "ஒருபால் உறவு செய்பவர்களுக்கு, இரக்கமற்ற மரண தண்டனை தரப்பட வேண்டும்!" என பழைய ஏற்பாட்டு பிரமாணம் தெரிவிக்கிறது (லேவி.20:13).*

*ஒரு பக்தியுள்ள விசுவாசி, ஒருபால் உறவிற்கு யாதொரு வகையிலும் ஈடுபாடு கொண்டிருத்தல் கூடாது என்பது மாத்திர மல்லாமல், தன் சொந்த பாலினத்தினரிடத்தில், இயற்கைக்கு அப்பாற்பட்ட எவ்வித ஈர்ப்பும் ஏற்படுவதிலிருந்து விலகியிருக்கவும் வேண்டும்! மேலும், இவ்வித தீய எண்ணத்திற்குரிய செயல்பாடு களோடு தந்திரமாய் நெருங்குபவர்களை இனங்கண்டு, பகிரங்கமாய் எதிர்த்தும் நிற்க வேண்டும்! நீங்கள் ஏற்கனவே இந்த கொடிய பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்தால், அந்த வலையிலிருந்து விடுவிக்கும்படி தேவனுடைய முகத்தை தேடுங்கள். நல்ல ஆரோக்கியமான சுபாவமாய் எதிர்பாலரோடு கொண்ட உறவை மாத்திரமே தேவன் உங்களுக்கு அருளும்படி ஜெபியுங்கள். நீங்களாகவே இந்த வலையிலிருந்து விடுபட முடியாத பட்சத்தில், ஆவிக்குரிய சகோதரர்களின் ஜெப உதவிகளை நாடுங்கள்!*

**'எப்படியாகிலும்' சத்துருவை ஜெயித்திடுங்கள்!**

*நம் நாட்களில் பாலியத்திற்குரிய சோதனைகள் பல்வேறு தரப்பில் மண்டிக் கிடப்பதை காண்கிறோம். வேதம் கூறுகிறபடி, பிசாசானவன் பட்சிக்க வகைதேடும்* **கர்ஜிக்கும் சிங்கமாய்** *நம்மைச் சுற்றி வருகிறான்! அப்படியில்லையென்றால், நம்மை விழச்செய்யும்படி* **தந்திரமான சர்ப்பமாய்** *நம்மை அணுகுகிறான் என வேதம் விவரிக்கிறது.*

**வாலிபர்களை "பாலியத்து ஈர்ப்பை வைத்து" வெகு எளிதில் தனது கண்ணி**

**வலையில் பிடித்து.... அவர்களின் ஜீவியத்தை முற்றிலும் அழித்து விடலாம் என பிசாசு அறிந்திருக்கிறான்.**

*நாம் எந்த அளவிற்கு சுய - கட்டுப்பாடுடனும் விழிப்புடனும் இருக்கிறோமோ, அந்த அளவிற்கே நாம் பாதுகாக்கப்பட முடியும். ஒரு முதுமொழி கூறுவதுபோல் “சுதந்திரமாய் வாழ்வதற்குரிய விலைக் கிரயம், அடிமைப்படாதிருக்கும் விழிப்புணர்வில் தான் இருக்கிறது” என்பது, மெய்யான கூற்றே ஆகும்.*

*எதிரியின் கண்ணியிலிருந்து நம்மைக் காத்து இரட்சிப்பதற்காகவே ஆணித்தரமான தேவனுடைய வார்த்தை நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அனேக எச்சரிப்புகளை தேவன் தனது வசனங்களில் தந்துள்ளார். குறிப்பாக,* **நீதிமொழிகள் புத்தகம்** *நமக்கு அதிக புத்திமதிகளை வழங்கி யிருக்கிறது. ஆகவேதான் ஒவ்வொரு இளைஞனும் நீதிமொழிகள் புத்தகத்தை கண்டிப்பாய் ‘அடிக்கடி’ வாசிக்க வேண்டியது அவசிய மாகும். மாதத்தில் 30-நாட்கள் இருப்பதுபோல், ஒரு அதிகாரத்தை அந்தந்த தேதியின்படி வாசிக்கும் சிறந்த பழக்கத்தை சில விசுவாசிகள் கைக்கொண்டு வருகிறார்கள். சத்துரு நெருங்கி வருவதை, இந்த புத்தகம் முன் கூட்டியே நம்மை எச்சரித்து உதவி செய்கிறது!*

*உங்கள் வாலிபத்தில் ஜெயித்து வாழ தீர்மானித்து விட்டீர்களா? அப்படியானால் “ஒரு போர்க்களத்தை” நீங்கள் சந்தித்தே தீர வேண்டும். அந்த போர்களத்தில், ஒருபோதும் பின்வாங்கிடக் கூடாது. நீங்கள் ஏற்கனவே வீழ்ச்சியடைந்தவர்களாய் இருந்தால், அந்தப் பாவங்களை தேவனிடத்தில் அறிக்கை செய்து விடுங்கள். நமது கடந்த கால தவறான செய்கைகளையும், அசுத்தமான சிந்தைகளையும் முற்றிலுமாய் கழுவு வதற்கு தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார். இவ்வித பாவங்களின் ஆழத்தில் விழுந்து, அதில் ஊறிப்போனவர்களாய் இருந்தால்.... உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும் அதே நேரத்தில், கடந்த பாவங்களின் விளைவுகளையும் அனுபவித்து வாழும் நிலை ஏற்படக்கூடும்! அந்தள விற்கு நீங்கள் மோசமாய் வீழ்ச்சியடையாதவர்களாய் இருந்தால், இனி அதில் விழாதபடி கவனமாய் இருக்கக்கடவீர்கள்! ஏனெனில், நிற்கிறேன் என்று எண்ணுகிறவனுக்கு, விழுவதற்கான வாய்ப்பு அதிகமாய் இருக்கிறது! (1கொரி.10:12).*

*நம்மை எப்போதும் வெற்றி சிறக்கும் வாழ்விற்குள் நடத்திடவே தேவன் விரும்புகிறார்! (2கொரி.2:14). அவ்வாறே நம் ஜீவியத்தையும் தேவன் நடத்துவார், என அவரை உறுதியுடன் விசுவாசிப்போமாக!*

## ‘எதிர்பாலரின் ஈர்ப்பில்’ அபாயம்... கவனம்!

2

எதிர்பாலரின் பழக்கத்தையும் நட்பையும், அவர்களைக் குறித்த ரசனையையும் நாடும் ‘ஒருவித விருப்பம்’ நம் எல்லோருக்குள்ளும் இருக்கிறது. நம்முடைய சொந்த பாலினரிடத்தில் கவர்ச்சி ஏற்படுத்துவதை விட, எதிர்பாலரிடத்தில் ஏதாகிலும் ஒரு **கவர்ச்சியை உண்டாக்கவே** நாம் நாடுகிறோம்! இவ்வித கவர்ச்சிக்கும் யாதொரு செயலை, நம் சொந்த பாலினத்தவர் மட்டுப் படுத்தினால் அதைக்குறித்து ஒரு பொருட்டாய் எண்ண மாட்டோம்.... ஆனால், எதிர்பாலர் மட்டுப்படுத்தினால், பெருமளவில் ஏமாற்றத்திற்குள்ளாகி விடுவோம்! இதுபோன்ற உணர்வு தனக்கு இல்லையென்று ஒருவன் கூறினால், 1) அவன் ஒருபால் உறவு கொண்டவனாய் இருப்பான் அல்லது 2) மாய்மால பொய்யனாய் இருப்பான்!

பொதுவாக எல்லா மனிதர்களிடமும் 12 முதல் 14-வயது வரையில் தொடங்கும் **‘பூப்புநிலை’ பருவத்தில்,** எதிர் பாலரிடம் கொண்டிடும் மனநிலையில் பெரியதொரு மாற்றம் தொடங்குகிறது. பொதுவாக, இந்த பருவம் அடைவதற்கு முன்பாக, பையன்கள் பையனோடுதான் இருக்க விரும்புவார்கள்! பெண் பிள்ளைகள் பெண் பிள்ளைகளோடுதான் இருக்க விரும்புவார்கள்! ஆனால் பூப்பருவம் அடைந்த நிலையில், அவரவர் எதிர் பாலரிடம் ‘ஒருவித கவர்ச்சி’ தொடங்க ஆரம்பிக்கிறது. இவ்வித மாற்றத்தை அந்தந்த பாலினத்தார் தைரியமாய் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்! ஆயினும், இவர்களை வசீகரித்த எதிர்பாலரின் கவர்ச்சியானது, அற்ப காரியங் களிலிலேயே வெளிப்படத் துவங்கிவிடும். அது, தன் ஆடை அணிவதில் எடுத்துக்கொள்ளும் அதிக



நேரமாகவோ, தன் முக-பாவ தோற்றத்தைக் குறித்த அக்கறையாகவோ அல்லது எதிர்பாலருக்கு முன்பாக தங்களுக்குள்ளிருந்து, தானாகவே வந்து நிற்கும் நளின - நெளிவான மாற்றங்களாகவோ இருக்கும்! இதுபோன்ற நிகழ்வுகள் இயற்கையானதும், தவிர்க்க முடியாததும் ஆகும். இவைகளை பாவமென்று சொல்லிடவும் இயலாது!

**பூப்புநிலையில், இவ்வித கவர்ச்சி மாற்றத்தை சிருஷ்டிகராகிய தேவனே செய்திருக்கிறபடியால், நம் எதிர்பாலரோடு இயற்கையான ஒரு சினேகம் கொண்டிடவும் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.**

இவ்வித சினேக விருப்பங்களை 'அடக்கி கொள்ள வேண்டும்' என தேவன் எதிர்பார்ப்பதில்லை. ஆகிலும் இதுபோன்ற விருப்பங்களை **நமது கட்டுப்பாட்டிற்குள்** வைத்திருக்கவே தேவன் அறிவுறுத்துகிறார்! அது, ஒழுக்கத்தின் வரையறையைத் தாண்டி சென்றுவிடாதபடி நாம் காத்துக்கொள்ள வேண்டும்! ஆகவே கட்டுப்பாட்டை மீறிய **காம சினேகம் ஆபத்தானது** என்பதில் சந்தேகமேயில்லை. எதிர்பாலரிடம் **பொதுவான** சினேக மனப்பான்மை என்பதில் தவறில்லை. **"யாரோ ஒருவர் மீது கொண்டிடும் சினேகம்" ஆபத்து நிறைந்ததாகும்....** இருப்பினும் இவ்வித ஆபத்து நிலையை மனதில் வைத்துக் கொண்டு, எதிர்பாலரை விட்டு விலகி ஓடுவதும் ஆரோக்கியமான செயல் அல்ல!

சிலர் தங்களை உயர்ந்த ஆவிக்குரியவர்களாக எண்ணிக் கொண்டு, தேவையான விஷயங்களைக்கூட எதிர்பாலரிடம் பேசுவதை தவிர்த்துக் கொள்கிறார்கள். இது ஒன்றும் ஆவிக்குரிய சுபாவம் அல்ல! மாறாக, 'இயற்கைக்கு அப்பாற்பட்ட' சுபாவம் என்றே கூற வேண்டும். எதிர் பாலரோடு கொண்டிருக்கும் இயல்பான சினேக மனப்பான்மையை ஆவிக்குரிய தன்மைக்குரியது அல்ல என எண்ணுவது.... திருமணம் ஆவதைப் பார்க்கிலும் தனியாய் இருப்பதே அதிக பாக்கியமானது என போதிக்கும் கொள்கை வேதாந்தமே ஆகும். வேதபூர்வமாய் இராத எந்த போதனையும் 'மறைவான பாவங்களுக்கே' நம்மை நடத்தும்! அநேக பக்த குருஜிக்கள் வேசித்தன குற்றத்திற்குள் விழுந்த செயல், இதற்கு ஆதாரமாயிருக்கிறது. இருபாலரோடும் பொதுவான சினேகம் வைத்திருப்பவர்களைக் காட்டிலும், தங்கள் ஒருபாலரோடு மாத்திரமே பழகுவோம் என வாழ்ந்தவர்களே அதிக தீமை கொண்டவர்களாய் இருக்கிறார்கள்!

இவ்வாறு மேலே தரப்பட்ட செய்தியானது, தங்கள் எதிர் பாலரோடு ஒழுக்கக் கட்டுப்பாடற்ற செயலுக்கு தாராள சுதந்திரம் தந்து விட்டதாக தவறாய் எண்ணி விடாதீர்கள். அவ்வாறு நீங்கள் எண்ணுவது, அடுத்த கோடிக்கு நம்மை இழுத்துச் சென்று **விதிமுறை இல்லாத கற்பு சீரழிவிற்கு** நம்மை நடத்திவிடும். நாம் முயற்சித்துக் கூற

விரும்புவது எல்லாம் "ஓர் ஆரோக்கியமான சமநிலையை" நாம் பெற்றிருக்க வேண்டும் என்பதேயாகும். பண்டிதர் ஹெர்பர்ட் கிரே எழுதிய 'தேவனுடைய உறவில் புருஷர்களும் ஸ்திரீகளும்' என்ற புத்தகத்தில் கூறும்போது "திருமண உறவு என்ற புனிதத்தை சீர் குலைக்காமல், ஆண்களும் பெண்களும் சகஜ உறவோடு பேசி வாழ்வது வளமான மகிழ்ச்சிக்குரியதே ஆகும்! மனுக்குலத்தை இருபாலராக பிரித்த தேவசெயல் போற்றுதற்குரிய செயலென்று நாம் கூறவேண்டும்! ஒரு சில பகிரங்க வித்தியாசப்படுத்தும் செயல்களைத் தவிர, மற்ற அனைத்து பகுதிகளிலும் சிறந்த நட்பு உள்ளத்தோடு ஒருவருக்கொருவர் உதவுவதும் ஊக்கமளிப்பதும், அவர்களின் ஜீவியத்தை சிறப்பான தாகவே மாற்றும்" எனக் கூறினார்.

**பண்பான நட்பு வேண்டும்**

பாலிய ஸ்திரீகளை 'சகோதரிகளாக' பாவித்து, சகல கற்போடும் நடக்க வேண்டும் என வேதம் புத்தி சொல்லுகிறது (1தீமோ.5:2). அதாவது, உங்கள் சொந்த சகோதரியை, வேறுபாலர்கள் எப்படி நடத்த நீங்கள் விரும்புவீர்களோ அவ்விதமே, ஓர் வாலிப சகோதரியிடம் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். இந்தக் கோட்பாட்டின்படி நாம் நடப்பதே, கற்பு ஒழுக்கத்தின் பாதுகாப்பான வழி ஆகும்.

இருபாலருமே, ஒருவருக்கொருவர் கனத்தோடும் கண்ணியத் தோடும் நடக்க கற்றுக்கொள்ள வேண்டும். அதே வேளையில், விலகி நிற்கவும், கட்டுப்பாட்டின் உணர்வோடும் நடந்துகொள்ள வேண்டும். தனிப்பட்ட ரீதியில் பழகுவதும் அல்லது துருவி ஆராய முயல்வதும் அல்லது எதிர்பாலரோடு வெகு சகஜமாய் கும்மாளமிடுவதும்.... ஆகிய வைகள் ஒருபோதும் காணப்படவே கூடாது. தெளிந்த புத்தியோடு கூடிய நல்ல கட்டுப்பாட்டை பாதுகாத்துக் கொள்வது ஞானமுள்ள செயல் ஆகும். இதனிமித்தமாய், **சுவராசியமான உணர்வை இழப்பதும் கூடாது!** மற்ற சமயங்களை விட, நம் எதிர்பாலரோடு அதிக நேரம் பேசி நிற்பதற்கே நாம் சோதிக்கப்படுவோம் என்பதை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.... இவ்வாறு ஈர்க்கப்படுவதே அபாயம் நிறைந்ததாகும்!

எதிர்பாலருக்கிடையிலான நட்பு, எவ்வித எச்சரிப்பின் தடையும் இல்லாமல் வெகு விரைவில் வளர்ந்து விடும்! அந்த வாலிபனோ, தொடர்ச்சியாக தன் திறமைகளையே காட்ட விரும்பும் அதே நேரத்தில், அந்த வாலிபப் பெண்ணோ தன் அழகையெல்லாம் அவனுக்கு காட்ட விரும்புவாள்! இச்சமயங்களில்தான், தவறான உள்நோக்கத்தோடு நட்பைத் தேடுவதற்கு விரும்புவார்கள்! எதிர்பாலராகிய நீங்கள் மிகுந்த கவனமாய் இருக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவ வாலிபன், ஒரு வாலிப

பெண்ணிடம் காணும் பெலவீனத்தை பயன்படுத்தி “அவளை அவன் உண்மையாக விரும்பாத பட்சத்தில்” .... அவளை விரும்புவதுபோல் காண்பித்து, அவளது வாலிபத்தை கொள்ளையிட ஒருபோதும் முயற்சிக்க கூடாது!

**வெற்று வார்த்தைகளில் கூட “ஏதோ அர்த்தத்தை” பற்றிக் கொள்வது அநேக பெண்களிடம் காணும் பழக்கமாகும்! இந்த உண்மையை எல்லா இளைஞர்களும் மறவாதிருக்க வேண்டும்!**

ஆகவே, கடிதங்கள் எழுதுவதையோ, பொதுவாக வீட்டிற்கு வர அழைப்பு விடுப்பதையோ முற்றிலுமாய் தவிர்த்து விட வேண்டும். இவையனைத்திலும் ‘ஓர் தவறான அர்த்தத்தை’ பெண்கள் பிடித்துக் கொள்வார்கள்! இதனிமித்தமே, சில ஆவிக்குரிய காரியங்களைக்கூட கடிதமாய் எழுதுவதை தவிர்த்திட வேண்டும். மேலும், திருமணமாகாத எதிர்பாலரிடம் ஆலோசனை கேட்பதோ அல்லது தனிப்பட்ட உதவி கேட்பதோ அல்லது ஆவிக்குரிய விஷயங்களைப் பரிமாறி கொள் வதற்கோ, அவர்களை அணுகுவது ஞானமற்ற செயல் ஆகும்!

இவ்வாறு நாம் குறிப்பிடும்போது, வாழ்க்கைத் துணையை தேடும் சமயத்தில், ஒரு எதிர்பாலரை வாழ்க்கை துணையாக மனதில் கருதிட முடியாது என நாம் குறிப்பிடவில்லை! ஆனால், ஒரு மாணவ பருவத்தில் தன் எதிர்பாலரோடு வைத்திடும் எவ்வித தனிப்பட்ட நட்பும் ஞானமற்ற செயல் என்பதை நிச்சயமாய் அறிந்து கொள்ள வேண்டும்!

**ஒரு மாணவன் தன் பாலிய மன எழுச்சிகளை ஐஸ்-பெட்டியில் பாதுகாப்பாய் வைப்பது போல் வைத்துவிட்டு, தன் பாடங்களில் மாத்திரமே அதிக கவனம் செலுத்த வேண்டும். ஒரு வாலிபன், தன் முழு படிப்பையும் முடிக்கும் வரை திருமணத்திற்கு சிந்தை வைத்திடக் கூடாது!**

அல்லது ஒரு வாலிபன் குறைந்தபட்சம் 25-வயது முடியும் வரை, ஒரு வாலிப ஸ்திரீ குறைந்தபட்சம் 20-வயது முடியும் வரை திருமணத்தைக் குறித்து யாதொரு சிந்தையும் வைத்திடக் கூடாது. தங்கள் படிப்பின் அல்லது வேலையின் உபரியான நேரத்தை, முழு கவனம் செலுத்தி “கர்த்தருடைய பணிக்கு மாத்திரமே” தங்களை ஒப்புவித்திட வேண்டும். திருமணத்தோடு சேர்ந்து, தவிர்க்க முடியாத பொறுப்பு களும் சேர்ந்து வருகிறபடியால், திருமணத்திற்கு முன்பு தன் நேரத்தை பயன்படுத்தி ஊழியம் செய்ததுபோல்.... திருமணத்திற்குப் பிறகு ஊழியம் செய்வது கடினம். இந்த புத்திமதி என்னவெனில், ஒரு மனைவியை தேடுவதற்கும் அல்லது ஒரு கணவனை தேடுவதற்கும் தங்கள் மனதை வைத்து, வாலிபர்கள் அதிக நேரத்தை வீணாக்கிப் போடுகிறார்கள்.

**திருமண வாழ்வில் ஈடுபட்டவனைவிட, எதிர்பாலரின் தனிப்பட்ட நபரோடு ஆரோக்கியமற்ற நட்பிற்காக தங்கள் நேரத்தை பாழடித்தவர்கள் ஏராளம்!**

திருமணத்திற்கு சற்று பொறுத்து, தமாதிப்பதற்குரிய ஒரு நல்ல காரணம் என்னவென்றால், வாலிபர்களுக்கு **மனதளவிலான நிதானமான முதிர்ச்சி,** நாம் ஏற்கனவே குறிப்பிட்ட **வயது வரம்பிற்குப் பிறகுதான்** ஏற்பட முடியும்! அந்த முதிர்ச்சி நிலையில்தான், ஒருவன் தன் வாழ்க்கை துணையை ஞானமாய் தேட முடியும். இது குறித்து அதிக விளக்கத்தை 5-வது அத்தியாயத்தில் நாம் அதிகமாய் காணலாம்.

ஆகவே எதிர்பாலரோடு கொண்டிடும் இயல்பான சினேகம், **ஒருபோதும் நெருங்கி நிற்பதாய் இருத்தல் கூடாது!** குறைந்தபட்சம் திருமணத்திற்கு பேசி முடிக்கும் தருவாய் வரைக்கும், நெருங்கிய உறவு இருக்கக் கூடாது! வாலிப பெண்களைவிட வாலிப பையன்கள்தான், எதிர்பாலரோடு கொண்ட பழக்கத்தில் மிகுந்த கவனமும்.... ஒருவருக் கொருவர் நேர்மையாகவும் நடத்தல் வேண்டும். இருபாலரிடமும், 'அவர்களின் உள்ளான நோக்கம்' மிகுந்த நேர்மையாய் இருக்க வேண்டும். ஆனால், இவ்வித ஒழுக்க நெறியிலிருந்து தவறியபடியால், அநேகருடைய வாழ்க்கையில் மன அழுத்தங்களும், மனச்சோர்வுகளும் ஏற்பட்டு, தடுமாற்றம் அடைந்திருக்கிறார்கள்! இவ்வித நிலை மாணவ பருவத்திலிருந்தவர்களுக்கு ஏற்பட்டு, பரீட்சையில் தோல்வி அடைந்து .... தங்கள் கிறிஸ்தவ சாட்சியை கூட இழந்திருக்கிறார்கள். இவ்வித பரிதாப நிலைக்கு முதல் காரணம் ஆண்மகன்தான் என்றாலும்.... தன் வசீகர தன்மையால் இடைவிடாத ஈர்ப்பை உண்டு பண்ணிய பொறுப்பு, 'அந்தப்பெண்ணிற்கும்' உரியதாகும். ஆகவே இருபாலருமே இவ்விஷயத்தில் மிகுந்த கவனம் கொண்டிருக்க வேண்டும்.

**வாலிப இளைஞர்கள், பெண்ணின் திருமண வாழ்வின் எதிர்காலத்தை மிக எளிதில் பாழாக்கிவிட முடியும் என்பதை உணர்ந்திருக்க வேண்டும்!**

அது எப்படியெனில், அந்த வாலிப பெண்ணிடம் மிக நெருங்கிப் பழகுவதும் அல்லது அந்தப் பெண்ணை, தான் திருமணம் செய்யப் போவதைப் போன்ற தோற்றத்தை பிறருக்கு ஏற்படுத்தி விட்டு.... 'உண்மையில் அந்த நோக்கம் இல்லாமல்' திருமணத்திற்கு விலகிச் செல்லும்போது.... அந்தப் பெண்ணின் வாழ்வில் சீரழிவை கொண்டு வரமுடியும்! இப்படியெல்லாம் நடந்து கொள்ளும் 'ஒரு வாலிப பையனுக்கு' யாதொரு சேதமும் அவன் எதிர்காலத்திற்கு அல்லது அவன் சாட்சிக்கு ஏற்படாது! ஆனால், இவ்வித நிலைக்கு பலியான அந்தப் பெண்.... அவள் பட்சத்தில் யாதொரு பிழை இல்லாத போதும், மற்றவர்களால் இழிவாகவே கருதப்படுவாள்! இதுபோன்ற தீதான நடக்கைகள் எந்த ஒரு கிறிஸ்தவ இளைஞனிடமும் காணப்படவே கூடாது. இத்தகைய செயலுக்கு ஒரு இளைஞனே முதல் காரணமாய் இருக்கிறபடியால்.... மேற்கூறிய யாதொரு தகாத செயலும் நடை பெறுவதை தடுப்பதற்குரிய முக்கிய பொறுப்பு இந்த வாலிப

இளைஞனையே சார்ந்ததாகும்!

**பிறருடைய வாழ்க்கையை பணயமாய் வைத்து விளையாடும் தீமை நம்மில் ஒருவருக்கும் சம்பவிக்க கூடாது. இக்கொடிய தீமை செய்ய துணிந்தவர்களை, தேவன் வெகு கடுமையாய் தண்டித்து நியாயம் தீர்ப்பார்!**

வாலிபர்கள், யாரோ ஒரு எதிர்பாலரிடம் "இரகசியமாய் பிரியம் வைத்து" அதை யாருக்கும் சொல்லாமலே இருக்கக் கூடும். அவர்களுக்குள்ளான பிரியம் நாளுக்குநாள் வளர்ந்து, அது இன்னமும் மறைவாகவே இருந்திடக் கூடும். ஆனால் "அவ்வித பிரியத்திற்குரிய ஒருவர்" வேறொருவரை திருமணம் செய்யும்போது, அந்த மற்றொருவருக்கு பெருத்த ஏமாற்றத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தி விட முடியும். காரியம் இவ்வாறாய் இருக்கிறபடியால், உங்கள் எண்ணங்களில் பிரதிபலித்த இதுபோன்ற 'பிரியத்தை' உங்கள் பெற்றோர்களிடமோ அல்லது ஒரு ஞானமுள்ள விசுவாசியிடமோ, இது குறித்து முன்கூட்டியேகூறி, அவர்களின் ஆலோசனையையும் உதவியையும் பெற்றுக் கொள்வது நல்லது!

**திருமணத்திற்கு முன்பாகவே நெருங்கிப் பழகுதல் கூடாது**

திருமணத்திற்கு முன்பாக எதிர்பாலர்கள் நெருங்கிப் பழகி உறவாடுதல், நம் இந்திய தேசத்திலும் பெருகிவிட்டபடியால், அது குறித்து சில எச்சரிப்பின் வார்த்தைகளை கேட்பது நல்லது. திருமணத்திற்கு முன்பாக அந்த எதிர்பாலர்கள் "எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாய் சென்று பழகுவதை" ஆங்கிலத்தில் DATING எனக் கூறுகிறார்கள். இதற்கு அடுத்தபடியாக, அந்தப் பையனும் அந்தப் பெண்ணும் தனிமை இடத்திற்குச் சென்று 'பாலுறவைத் தவிர' சரீர மோகத்தின் கொஞ்சுதலுக்கு, ஆங்கிலத்தில் PETTING எனக் கூறுகிறார்கள்!

**நம் இந்திய தேசத்தில், ஒரு விசுவாசி தன் சாட்சியை காத்துக் கொண்டு தேவனுக்கு பயனுள்ள ஊழியம் செய்ய விரும்புகிறவனாய் இருந்தால், ஒரு எதிர்பாலரோடு "எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாய் சென்று பழகுவது" - DATING இருத்தல் கூடாது. அதுபோன்ற எதிர்பாலர், திருமணத்திற்கு முன் குறிக்கப்பட்டவராய் இருந்தாலும் கூடாது!**

இவ்வித சாட்சி நிலைக்கு, எவ்வித தராதரத்தையும் ஒரு பொருட்டாய் வைத்திட இயலாது. திருமணத்திற்கு முன் குறிக்கப்பட்ட எதிர்பாலரோடு, யாதொரு இடத்திற்கும் தனிமையில் செல்லுவதை கண்டிப்பாய் தவிர்க்க வேண்டும். **அதுவும் மாலை மயங்கிய அந்தி நேரத்தில்** இதுபோன்ற செயல் முற்றிலும் தடை செய்யப்பட வேண்டும். நமது இந்திய பண்பாட்டிற்கு உட்பட்ட யாராயிருந்தாலும் இதற்குரிய காரணத்தை மிக எளிதில் விளங்கி கொள்வார்கள். துர்பேச்சிற்கும் இடம் தரும் யாதொரு காரணத்திற்கும் இடம் கொடாதிருக்க, ஒரு விசுவாசி

மிகுந்த கவனம் கொண்டிருக்க வேண்டும்!

"பாரம்பரிய கட்டிலிருந்தும், தங்களைச் சூழ்ந்திருக்கும் கலாச்சார கட்டிலிருந்தும் கிறிஸ்து நம்மை விடுதலை செய்திருக்கிறாரே" என சிலர் கூறலாம். இந்த கூற்று உண்மைதான்! ஆனால் இவ்வாறு கிறிஸ்து நம்மை விடுவித்ததற்கு ஒரே காரணம் "தேவனுடைய வார்த்தைக்கு" நாம் கீழ்ப்படிய வேண்டுமென்பதே ஆகும்! வேதாகமமோ, திருமணத்திற்கு முன்பாக நெருங்கி பழகும் DATING என அழைக்கப்படும் அருவருக்கத் தக்க செயலில் ஈடுபட **ஒருவருக்கும் அனுமதி தரவில்லை!**

இவ்வித அருவருப்பான நெருங்கி பழகும் செயலைக் குறித்து, வேதாகமம் முற்றிலுமாய் மௌனம் சாதிக்கிறது. எப்போதெல்லாம் தேவனுடைய வார்த்தைக்கும், மனுஷர்களுடைய பாரம்பரியங் களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் நாம் **தேவனுடைய வார்த்தைக்கு மாத்திரமே** நிச்சயமாய் கீழ்ப்படிய வேண்டும். வெளிப்படையான வேதவாக்கியத்தைத் தவிர, மற்ற எல்லா விஷயங்களுக்கும், நமக்கு வழங்கப்பட்ட சுயாதீனம் "தரம் கெட்ட மாம்சத்தின் இச்சைகளுக்கு வாய்ப்பு தருவதாக அமைந்திடா திருப்பதற்கு" நாம் உறுதியாய் நிற்க வேண்டும் (கலா.5:13-JB மொழி பெயர்ப்பு). இதுபோன்ற தள்ளாடும் நேரங்களில் ரோமர் 14:16-ம் வசனத்தின் விதிமுறை நம்மை ஆண்டு கொள்ள வேண்டும். அது என்ன வெனில்" உங்களுக்கு நன்மையாய் தோன்றுகின்ற ஒரு காரியம், யாரோ சிலருக்கு தீமையான செயலாய் இருக்கும்படியான நிலை ஏற்பட இடம் கொடாதிருங்கள்!" (JB மொழிபெயர்ப்பு). இதே வசனத்தை Living Bible மொழிபெயர்ப்பு கூறும்போது....

> **"நீங்கள் செய்வது நன்மையானது என நீங்கள் அறிந்திருந்தாலும், அது உங்களுக்கு எதிரான குறை சொல்லை தோற்றுவிப்பதாயிருந்தால், அதைச் செய்யாதிருங்கள்!" என கூறுகிறது.**

திருமணத்திற்கு முன்பாக எதிர்பாலரோடு நெருங்கி பழகும் இந்த செயலை, 1கொரிந்தியர் 8-ம் அதிகாரத்தின் பின்னணியில் வைத்துப் பார்த்து நீங்கள் வாசித்தால், அவ்வசனங்களை கீழ்கண்டவாறு வாசித்திட முடியும்: "திருமணத்திற்கு முன்பாக ஒரு பெண்ணோடு அல்லது ஒரு பையனோடு நெருங்கி பழகும் விஷயத்தில், **எங்களுக்கு மாத்திரமே சரியானபடி தெரியும்** என எளிதாய் சிந்தித்து கொள்ள முடியும். ஆனால், இதுபோன்ற அறிவுதான் ஒருவனை **இறுமாப்பு அடையச் செய்கிறது!** தெய்வீக அன்போ தேவனைப்போலவே பிரதிபலிக்கச் செய்கிறது. தனக்கு எல்லாம் தெரியும் என எண்ணுகிற ஒருவன், தன்னுடைய அறிவீனத்தையே காட்டுகிறான்! ஆனால் தேவனை மெய்யாய் நேசிக்கும் ஒருவன் மாத்திரமே, தேவனுடைய சிநேகத்திற்

*குரியவனாய் இருப்பான். ஆகவே, இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? திருமணத்திற்கு முன்பு நெருங்கி பழகலாமா? கூடாதா? நம்முடைய நோக்கம் களங்கமற்றதாய் இருக்கும் பட்சத்தில், எதிர்பாலரோடு திறந்தவெளியில் நடந்து செல்வதோ அல்லது பொதுவான உணவு சாலையில் அமர்ந்து சாப்பிடுவதோ பாவமானது அல்ல என நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், இந்திய தேசத்தில் இவ்வாறு பழகுவதை பெரும்பாலான மக்கள் சரி என கூற மாட்டார்கள்!* **இவ்வித பழக்கம் தவறு** *என்றே கூறுவார்கள்! நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவது, நெருங்கிப் பழகுவதை வைத்தோ, நெருங்கி பழகாமல் இருப்பதை வைத்தோ சார்ந்தது அல்ல. ஆனால், இந்த சுயாதீனமான நெருங்கி பழகுதல், வேறொரு மெய் கிறிஸ்தவனையோ அல்லது சத்தியத்தை நாடி வந்து கொண்டிருக்கும் ஒரு இந்து சகோதரனுக்கோ இடறல் உண்டாக்காமல் இருக்க மிகுந்த கவனம் கொண்டிருக்க வேண்டும்!*

**இவ்வாறு நெருங்கிப் பழகுவதை தவறு என எண்ணியிருக்கும் இவர்கள், ஒரு பெண்ணோடு அல்லது வாலிப பையனோடு நீங்கள் வெளியில் நடந்து செல்வதைக் கண்டால், உங்களது கிறிஸ்தவ சாட்சியின் மீது வைத்திருந்த மதிப்பை இழந்து விடுவார்கள்!**

*அல்லது, அந்த சகோதரன் உங்களைப் போன்ற ஆவிக்குரிய பெலன் அற்றவராய் இருந்தால், அவரும் இதுபோன்ற எதிர்பாலரோடு நெருங்கிப் பழகும் பழக்கத்தில் ஈடுபட்டு, பாவத்தில் விழுந்து விடுவார்! இவ்வாறு நடந்தால், உங்கள் சகோதரனின் ஆவிக்குரிய வீழ்ச்சிக்கு நீங்களே பொறுப்பாளி! என்பதை அறியுங்கள். உங்களது மறைமுகமான இந்த செயலால் ஒருவர் தூண்டப்பட்டு, பாவத்தில் விழுந்து விட்டால், நீங்க கிறிஸ்துவுக்கு விரோதமாய் பாவம் செய்துவிட்டீர்கள் என்பதை அறியுங்கள். ஆகவேதான், என்னுடைய சகோதரன் கெட்டுப்போய் தடுமாறுவதற்கு வகை செய்யும் “திருமணத்திற்கு முன்பாக எதிர் பாலரோடு நெருங்கிப் பழகும் பழக்கத்தை ஒரு போதும் ஈடுபட மாட்டேன் என்ற தீர்மானத்தையே நான் மேலாய் கருதுகிறேன்” என இந்த 1கொரி. 8-ம் அதிகாரம் நமக்கு விவரித்து புத்தி சொல்லுகிறது.*

**இதற்கு மாறாக, திருமணத்திற்கு முன்பு தொடர்ச்சியாக நெருங்கி பழகுகிறவர்களுக்கு, தங்களின் சரீர மோகத்தை கட்டுப்படுத்துவது மிக கடினமாகவே இருக்கும்!**

*முதலாவது ‘கைக்கோர்த்துக் கொள்ள’ ஆரம்பித்து, படிப்படியாக ஒருவருக்கொருவர் ‘முத்தம் செய்யத்’ தொடங்கி.... ‘ஒட்டி உறவாடுவதில்’ வளர்ந்து விடும். காம தொடர்புக்குரிய தூண்டுதல் ஒரு பெண்ணிடம் இருப்பதை விட, ஒரு பையனிடமே அதிக வலிமை*

கொண்டதாய் இருக்கும். ஏனெனில் காம ஆசை ஒரு ஆணிடமே வலிமையாய் இருக்கிறது. காமம் எளிதில் தூண்டப்பட ஆண்களே பலியாகிறார்கள்! அவ்வித எழுச்சிக்கு அவர்கள் தூண்டப்பட்டு விட்டால், அதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது மகா கடினம் என அறியுங்கள்!

இவ்வாறெல்லாம் தொட்டு உறவாடி பழகியவர்கள், அதை விட்டு விலகுவது முடியாத செயலாகவே இருக்கும்! இந்தப் பழக்கம், அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போதெல்லாம் ஒன்றிலிருந்து மற்றொரு செய்கைக்கு நடத்தும்! கடந்த கால செய்கையை விட, வேறொரு பரவசத்திற்குள் பிரவேசிக்க ஆசை தூண்டப்படும்! ஆனால் இவ்வித ஒவ்வொரு, காம உணர்வின் பழக்கத்திலும் கொஞ்ச கொஞ்சமாய் **ஒரு கொடிய அதிருப்தியும் வரத் தொடங்கும்** என்பதை அறியுங்கள்!

தழுவி உறவாட நாடும் பழக்கம், ஒரு நபரின் ஆள்த்தன்மையையே பாதித்து விடும்! இதுபோன்ற பழக்கத்தில் சிக்கி கொண்டவர்கள் கொடிய விளைவுகளை சந்திக்க வேண்டியதாயிருக்கும்! திருமண வாழ்வின் துவக்கத்தில், தொட்டு உறவாடும் நெருக்கம் இயற்கையான செயலே ஆகும்! ஆனால் திருமணத்திற்கு முன்பாக வைத்துக் கொள்ளும் இந்தப்பழக்கம் பாவசெயலே ஆகும்! அது மதீயினமும் ஆகும்! தொட்டு உறவாடுதல் 'தூய்மையான பாலிய உறவின்' தரத்தை குறைத்து, அதை இழிவான செயலாய் மாற்றிவிடும். இதன் விளைவாய், பாலிய உறவு போராட்டங்களும், மனத்தளர்ச்சியும், நரம்பு மண்டல விரைப்புகளும் ஏற்பட்டு... முடிவில், ஆரம்பத்தில் அன்பு வாசம் செய்தது போன்று தோன்றிய இடத்தில் கோபமும் வெறுப்பும் ஆட்கொண்டு விடும்! கலங்கிய இந்த மன எழுச்சியின் அலை, துரிதமாய் தீய உடலுறவுக்குள் நடத்தி விடும்! காதலராய் இருந்த இவர்கள், ஒருவரையொருவர் சந்திக்க முடியவில்லையென்றால், தங்கள் நரம்பின் விரைப்புகளை தளரச் செய்வதற்கு பாவச்செயலான சுய-புணர்ச்சிக்கும் அவர்களை நடத்தி விடும். இத்தகைய செயலில் தொடர்பவர்கள், திருமண வாழ்வின் பாலிய உறவில் பெரும் சங்கடத்திற்கு உள்ளாவார்கள். இவ்வாறு சீரழிந்த நிலையில் "**குற்ற உணர்வுகளும், கொடிய ஏமாற்றமும்**" அவர்கள் மனதில் நிரந்தரமாய் தங்கிவிடும்! இதுபோன்ற நிலைக்கு, ஒரு வாலிபன் அல்லது ஒரு வாலிப ஸ்திரீ பலியாவது நியாயம்தானா?

வாலிபனுக்கும், வாலிப ஸ்திரீக்கும் இடையில் உண்டான நட்புறவு பெரும்பாலும் வெகுசீக்கிரத்தில் முறிந்து போவதுண்டு. இதுபோன்ற நிலையில் 'தொட்டு உறவாடுதல் நடந்திருக்குமென்றால்' அந்த வாலிப பெண், **தான் உபயோகப்படுத்தப்பட்ட கறையுள்ளவள்** என்ற பாதிப்பு உணர்வை பெற்று விடுவாள்!

**ஆகவே தற்காலிகமாய் ஏற்பட்டுவிட்ட ஒரு நட்பில், எந்த ஒரு வாலிப பையனும்.... அவளின் சரீரத்தை தொட முயற்சிப்பதை அறியும்போது, அந்தப் பெண், உடனடியாக அதற்கு தடை போட வேண்டும்!**

*இதுவரை நீங்கள் வாசித்த சத்தியத்திலிருந்து, திருமணத்திற்கு முன்பாக பழகுவதில் ஆரம்பிக்கும் ஒருவன், தொடுதலுக்குள் நடத்தப் பட்டு.... அந்த தொடுதல் பழக்கம், பல்வேறு பிரச்சனைகளை நிச்சயம் கொண்டு வந்து தரும்! என அறிந்து கொண்டீர்கள். யாரெல்லாம் தங்கள் ஜீவியத்தில் தேவனை மகிமைப்படுத்தி வாழ நாடுகிறார்களோ, அவர்களுக்கு.... திருமணத்திற்கு முன்பு பழகுதல் சரிதானா? என்ற கேள்விக்கே இடமில்லை. உங்களைச் சுற்றியுள்ள சில விசுவாசிகள் இவ்வாறு ‘திருமணத்திற்கு முன்பு பழகுதல்’ முறையை கையாண் டிருந்தால், அந்த ‘தவறான மாதிரி’ உங்களை ஆளுகைச் செய்திட விட்டுவிடக் கூடாது! அவ்வித மாதிரிகளைக் கண்டு பரவசமும், பொறாமையும் அடைந்து விடாதீர்கள்! ஏனெனில், அவர்களுடைய திருமண வாழ்வின் பிற்கால வாழ்க்கை வேதனையும், குமச்சலும் நிறைந்ததாகவே இருக்கும்! நீங்கள் தேவனை கனம் செய்து, அவர் தமது வசனத்தில் பொதித்து வைத்த நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தால், யாதொரு மனதுயரத்திற்கும் அவசியமற்ற ஓர் சிறந்த வாழ்க்கையை இம்மையிலும் நித்தியத்திலும் வாழ்ந்து சுகிப்பீர்கள்! இது நிச்சயம்.*

## காதல் 'காம ஈர்ப்பு' அல்ல, தெய்வ அன்பே வசீகரம்!

# 3

பரிசுத்த வேதாகமம் "அன்பு" (Love) என்ற பதத்தை பக்தி நிறைந்த வசீகர பதமாய் உயர்த்திக் காண்பிக்கிறது. இந்த தெய்வீக வசீகரத்தின் உண்மை தாற்பரியத்தை எண்ணற்றோர் அறியவில்லை. இதற்கு போலியாக, இன்றைய 20-ம் நூற்றாண்டு வழங்கியிருக்கும் களியாட்டு குதூகலமும், காதல் ஓவியங்களும் "தெய்வ வசனங்களின் போதகங்களை" கீழே தள்ளிவிட்டு 'காதல் என்ற' அழுக்கு நுரைகளைப் பொங்க வைத்திருக்கிறது! அந்தோ, **"தெய்வீகமான அன்பின்"** இனிய சாரத்தை, இன்றைய அநேக தம்பதியர்கள் இழந்து தவிப்பது பரிதாபம்!

இவ்வாறு, இன்றைய எண்ணற்ற தம்பதியர் இந்த தெய்வீக அன்பை புரிந்து கொள்ளாதபடியால், அவர்களின் திருமண வாழ்க்கை பெரும் தோல்வி கண்டு 'சிதறி சின்னாபின்னமாகிப்' போனது. மிகுந்த நெருக்கமாய் ஓர் எதிர்பாலரைக் கண்டுவிட்டபடியால், பொங்கி எழுந்த உணர்ச்சி நுரைகளை "உண்மை அன்பு" என எண்ணி விட்டார்கள்! இந்த அடிப்படையில் நுழைந்துவிட்ட இவர்கள், "திருமணத்திற்குப் பிறகு தான்" தாங்கள் எண்ணியிருந்த 'காதல்' உண்மையான அன்பு இல்லையென்றும்... அது வெறும் "கிளுகிளுப்பை உண்டாக்கிய போதையான மயக்கம்" என்பதை கண்டறிந்து திகைத்து திணறுகிறார்கள். ஆகவே, காம எழுச்சியை ஏற்படுத்திய **காதலுக்கு குருட்டுக் கண்** என்றால், இந்த குருட்டுக் கண்ணிற்கு "திருமணமே" குருட்டுக் கண்ணை திறக்க வைக்கும் திறவுகோலாய் இருக்கிறது!



### எது மெய்யான அன்பு?

வேதம் போதிக்கும் 'அன்பை' நாம் சரியாகப் புரிந்து கொள்ளா விட்டால், இன்றைய பல கோடி

இளைஞர்களும், இளம் தம்பதிகளும் தத்தளிக்கும் "தோல்வியின் பாதையில்" நாமும் செல்ல நேர்ந்திடும்! புதிய ஏற்பாடு மூல ஆதாரமாய் எழுதப்பட்ட கிரேக்க பாஷையில் "அன்பு" என்ற பதத்திற்கு 1) அகாபே (Agape) என்றும் 2) ஃபில்லியா (Philia) என்றும் 3) ஸ்டார்ஜ் (Storge) என்றும் 4) ஈராஸ் (Eras) என்றும், நான்கு பதங்களை சுட்டிக் காட்டுகிறது. இவைகளில் "ஸ்டார்ஜ்" என்ற பதமானது, பெற்றோர்கள் பிள்ளைகள் மீது கொண்ட அன்பையும், பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடம் கொண்ட அன்பையும் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் இங்கு நாம் இருபாலருக்குரிய அன்பை பேசுகிறபடியால், இந்த "ஸ்டார்ஜ்" அன்பை விவரித்துக் கூறாமல் மீதமுள்ள மூன்று அன்பைத் தெளிவாய் காண முற்படுவோம்.

**அகாபே என்பது *மனுஷருடைய ஆவியில்* தங்கும் அன்பின் தரத்திற்கும், பில்லியா என்பது *மனுஷனுடைய ஆத்துமத்தில்* தங்கும் அன்பின் தரத்திற்கும், ஈராஸ் என்பது *சரீரத்திற்குரிய* அன்பின் தரத்திற்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறது!**

மிகவும் தாழ்ந்த தரத்திற்குரிய 'ஈராஸ்' என்ற பதம், 'உடல் ஆசைக்குரிய' காம அன்பைக் குறிக்கிறது. இவ்வித காம அன்பை "வேட்கை மிகுந்த, அடக்கிக் கொள்ள முடியாத ஆசை" என்றும், இதனுடைய நோக்கமெல்லாம் ஒருவர் இன்னொருவருடைய உடலுறவுக்கு உந்தப்படுவதுமே பிரதானமாய் இருக்கிறது.

அடுத்ததாக உள்ள 'பில்லியா' என்ற பதம், மனுஷர்கள் பொதுவாக மதிக்கும் அன்பையும், சிநேகத்தையும் குறிக்கிறது. அதை நலமான தாகவும் குறிப்பிடுகிறது. பிரதானமாய், திருமணத்தில் ஒருவரின் ஆத்துமா இன்னொருவரின் ஆத்துமாவோடு கலந்திருப்பதைக் குறிப்பிடுகிறது. இந்த அன்பு, புத்திக்கூர்மையின் சமநிலையையும், ஒரு மித்த மன எழுச்சியையும் சார்ந்ததாய் இருக்கிறது. அதாவது, முதலாவது குறிப்பிடப்பட்ட 'உடலுறவுக்குரிய' காம அன்பு இது இல்லை. இருந்த போதும், **இந்த அன்பு இன்னமும் 'சுயத்தை மையமாகக் கொண்டதே' ஆகும்.** "நான் இவருடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறேன்! இவருக்கு நான் நன்மை செய்கிறேன்! இவருடைய தேவைக்கு நான் பாதுகாவலாய் இருக்கிறேன்!" என்ற சுயநல திருப்தியே இந்த அன்பிற்குரியதாகும்.

மூன்றாவது பதமாய் வரும் 'அகாபே' என்ற வார்த்தை மிக உயர்ந்த தரத்திற்குரிய அன்பைக் குறித்து கூறுகிறது! இந்த அன்பே பரிசுத்த ஆவியானவர் மூலமாய் நமக்கு அருளப்படும் **'தெய்வ அன்பு'** ஆகும். (ரோமர் 5:5). இந்த வசனம், திருமணத்தில் ஒருவருக்கொருவர் ஒரே ஆவியாய் இணைந்துவிட்ட ஐக்கியத்தையே குறிக்கிறது. ஆம், இதுவே தன்னையே கொடுத்திடும் கல்வாரி சிலுவையின் தியாக அன்பாகும்!

வில்லியம் பார்க்லே என்ற புத்தக ஆசிரியர் தான் எழுதிய "புதிய

ஏற்பாட்டின் தரம் வேண்டும்" என்ற புத்தகத்தில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்: "அகாபே அன்பானது, வென்றிட இயலாத தயாளமும் சொல்லொண்ணா நற்குணமும் நிறைந்ததாகும். அது வெறும் உணர்ச்சி அலைகள் அல்ல! தன் மன அளவில் உறுதியான உணர்த்துதலோடு, வாழ்க்கைக்குரிய தீர்மானங்களை வெளிப்படுத்துவதாய் இருக்கிறது. மன உறுதியுடன் காரிய சித்தி செய்வதும், ஜெய வாழ்வை பெற்றுக் கொள்வதுமாய் இருக்கிறது. இந்த அன்பை பெற்றுக் கொள்ள 'அகாபே அன்பு' தனக்குள்ள யாவையும் இழந்திட ஆயத்தமாய் இருக்கிறது. தன் முழு ஆள்த்துவத்தையும் இந்த அன்பு ஆட்கொள்கிறது. இந்த அகாபே அன்பை 'ஒரு மனிதனால்' பெற்றுக் கொள்ள இயலாது! 'ஆவியானவரே' அவனை ஆட்கொண்டு, அவனுடைய இருதயத்தில் **தேவனுடைய அன்பை** ஊற்றினால் மாத்திரமே அது சாத்தியமாகும்" எனக் கூறினார்.

ஒரு கிரேக்க சாஸ்திர புத்தகம், இந்த அகாபே அன்பை விவரிக்கும் போது "அன்பு செலுத்த வேண்டி, ஒருவரை தீர்மானித்த பிறகு, சுயத்தை-மறுத்தே, மெய்யான மன உருக்கத்தோடு **உறுதியுடன் அன்புகூரும்!** அந்த அன்பு, நிறைவானதும் உயர்ந்த தரமும் கொண்டதாய் இருக்கிறது. இந்த அன்பு தேவனிடமிருந்து புறப்பட்டு வந்ததாய் இருக்கிறபடியாலும், மனப்பூர்வமாய் அன்புகூருகிறபடியாலும், அவர்களின் உள்ளமும்.... உதடுகளின் வார்த்தைகளும் மாறாத தயவுள்ளதாகவே எப்போதும் இருக்கும்!" எனக் கூறுகிறது.

பெயர்ச் சொல்லின்படி "அகாபே" என்பதற்கு அர்த்தம் : "மதிப்பு தருவதும், அக்கறை காட்டுவதும், அகமகிழ்ந்து காணப்படுவதும், உத்தமமுமாய் இருப்பதே ஆகும்".

**இந்த விளக்கத்தின்படி, கணவன்-மனைவியினிடத்தில் இருக்க வேண்டிய அன்பானது, ஒருவரையொருவர் விலைமதிப்பில்லாதவராய், ஒருவருக் கொருவர் அக்கறை கொண்டு, ஒருவரிலொருவர் அகமகிழ்ந்து, ஒருவருக் கொருவர் உத்தமமாய் வாழ்வதுமேயாகும்!**

ஆனால், வேதாகமம் தரும் அகாபே அன்பின் விளக்கமோ, "பொறுமை இழக்க தாமதமாயும், கட்டுவதற்கு ஏதுவான வாய்ப்பையும் கொண்டிருக்கும்! இந்த அன்பு, தனக்காக ஏதும் வைத்துக் கொள்ளாது! இந்த அன்பு பிறரை கவர்ச்சிக்க முனைந்து நிற்காது! அல்லது தன்னை முக்கியப்படுத்த முயற்சி ஏதும் தேடாது! இந்த அன்பின் நற்குணம், சுய இலாபத்தைத் தேடி ஓடாது! மனம் புண்படாது! பிறரின் தீமையை தன் கணக்கில் வைத்திருக்காது! பிறரின் தீய குணத்தையே சிந்தித்துக் கொண்டிராது! சத்தியத்தில் நிலைநிற்கும்! நல்ல மனிதர்களிடம் அக மகிழ்ந்து இருக்கும்! எல்லையில்லா சகிப்புத் தன்மையையும், முடிவில்லா விசுவாசமும், மங்கிடாத நம்பிக்கையும் கொண்டதாய் இருக்கும்... ஆம், கடைசி முடிவின் எல்லை வரைக்கும் நம்பும்!

*காரியத்தின் கடைத்தொகையாக இந்த அன்பை விவரித்துக் கூற வேண்டுமென் றால், எது அழிந்து வீழ்ந்தாலும், இந்த தெய்வ அன்பே என்றென்றும், நிலைத்து நின்றிடும்!" (1கொரி.13:4-8.* JB *மொழி பெயர்ப்பு).*

*இந்த அகாபே அன்பைக் குறித்த மற்றொரு அருமையான விளக்கம்:"சந்தேகத்திற்கு துரிதமாய் இடம் தராது.... ஆனால் நம்புவதற்கே துரிதம் கொள்ளும்! ஆக்கினைதீர்த்திட இடம் தராது.... ஆனால் நியாயப்படுத்திடவே துரிதம் கொள்ளும்! பிறரை புண்படுத்த துரிதமாய் இடம் தராது.... ஆனால், பிறரை தற்காத்திடவே துரிதம் கொள்ளும்! பிறரை பகிரங்கப்படுத்த தாமதிக்கும்..... ஆனால், கேடகமாய் சூழ்ந்து காக்க துரிதம் கொள்ளும்! பிறரை சிறைப்படுத்த தாமதிக்கும்.... ஆனால் பிறரை பாராட்ட துரிதம் கொள்ளும்! பிறரிடம் கேட்டு வாங்க தாமதிக்கும்.... ஆனால், பிறருக்கு கொடுத்திட துரிதம் கொள்ளும்! பிறரை சினமடையச் செய்ய தாமதிக்கும்....ஆனால், சமாதானம் பண்ணிட துரிதம்கொள்ளும்! பிறருக்கு தடை விதிக்க தாமதிக்கும்.... ஆனால் உதவிட துரிதம் கொள்ளும்! பிறர் நிமித்தம் மனம் நோக தாமதிக்கும்.... ஆனால் பிறரை மன்னித்திட துரிதம் கொள்ளும்!" என நேர்த்தியாய் விளக்குகிறது.*

*ஒரு விசுவாசியின் திருமண வாழ்வில், மேலே குறிப்பிடப்பட்ட மூன்று அன்புகளுக்கும் இடமிருக்கத்தான் செய்கிறது. இருப்பினும், அந்த அன்பு ஒழுங்கான வரிசைப்படி* **முதலாவது அகாபே** *ஆகவும்,* **இரண்டாவது பில்லியாவாகவும், மூன்றாவது ஈராஸாகவும்** *இருந்திட வேண்டும். இந்த வரிசையை வேதாகமம் 1 தெச.5:23-ம் வசனத்தில் நேர்த்தியாய் போதிக்கிறது. அதன்படி, முதலாவது ‘ஆவி’ இரண்டாவது ‘ஆத்துமா’ மூன்றாவது ‘சரீரமாய்’ இருந்திட வேண்டும். இந்த வரிசையைத் தான் தேவன் மனுஷனை சிருஷ்டித்தபோது அவனில் நிலைப்படுத்தி யிருந்தார். அதுவே அவனில் நிலைத்திருக்கவும் வேண்டும்!*

*ஆனால் வீழ்ச்சியடைந்த மனுஷனில் இந்த வரிசை தலைகீழாக மாறிவிட்டது! ஆகவேதான், மனுஷனுடைய அன்பின் தாற்பரியமும் மாறுபாடாய் போனது.*

> **மாம்ச சிந்தையும், உடலுக்குரிய கவர்ச்சியும் கொண்டு, தன்னைப் போலவே மாம்சீக சிந்தையும், உடலுக்குரிய கவர்ச்சியும் கொண்ட மற்றொருவ ரிடத்தில் ஈர்க்கப்படுவதையே, இந்த உலகம் ‘அன்பு’ (காதல்) எனக் கூறிக்கொள்கிறது! ஆனால், ‘இந்த அன்பு’ பில்லியா மற்றும் ஈராஸ் உணர்வு களால் மாத்திரமே உருவானதாகும்!**

*அநேக சமயங்கள், இவர்கள் சொல்லிக் கொண்ட அன்பு (காதல்)* **வெறும் ஈராஸாகவே...** *அதாவது, வெறும் உடலுக்குரிய காம மயக்கமாகவே இருக்கிறது. இந்த கொடிய நெருப்பிற்கு எண்ணற்றோர்*

*பலியாவது பெரும் துயரமன்றோ! ஆம், தேவனுடைய பார்வையில் ‘அகாபே’ காணப்படாதபடியால் இவர்களின் காமமோகத்திற்கு ‘அன்பு’ என்ற உயர்ந்த தகுதியை தேவன் ஒருக்காலும் தருவதேயில்லை!*

*காரியம் இவ்வாறாய் இருப்பதால், ஒரு விசுவாசி காதலிக்கலாமா? என்ற கேள்வியும் எழும்புகிறது. பொதுவாக இந்த உலகம் தருகின்ற விளக்கம் ‘காதல் வலையில் விழுவதாகவே’ சித்தரிக்கிறது. ‘காதல்’ என இந்த உலகம் கருதுவது “தன்னால் எதிர்த்து நிற்கமுடியாத சக்தியாய், தன்னைத் திடீரென்று கைப்பற்றிக் கொண்டு, முழுமையும் தன்னை ஆட்டிப்படைக்கும் உந்துதல்!” என்பதேயாகும்.*

**ஒருவர் “இந்த காதல் வலையில் சிக்கிய பின்பு” தான் விரும்பிய நபரை திருமணம் செய்ய முடியவில்லை என்றால், காலமெல்லாம் துக்க சாகரத்தில் தன்னை மூழ்கடித்துக் கொள்கிறார்!**

*அல்லது, குறைந்த பட்சம் “இன்னொரு காதல் வலையில் சிக்கும் வரை” இந்த துக்க சாகரம் அந்த நபரில் தொடருகிறது! இவ்வாறு காதலில் தோல்வியடைந்த கருப்பொருளை மையமாக வைத்தே ஏராளமான “பாப் இசை” சினிமா பாடல்கள் தோன்றிவிட்டன. காதல் என்பதை, பில்லியா மற்றும் ஈராஸ் தரத்திற்கே இந்த உலகம் ஜனங்களை இழுத்துக்கொண்டபடியால், இவ்வித அவலம் ஏற்படுகிறது. ஒரு விசுவாசி, ஒருபோதும் இவ்வித அவலமான ‘காதல் வலைக்குள்’ சிக்கிவிடவே கூடாது!*

தேவனுடைய பிள்ளைகளுக்கு ‘அன்பு’ என்பது தெய்வீக உயர்ந்த அளவிலான **அகாபே தரத்தில்தான்** ஓங்கியிருக்க வேண்டும். அந்த தரத்தில் ‘ஆவிக்குரிய ஈர்ப்பே’ அடித்தளமாய் அமைய வேண்டும். ‘காதல்’ என உண்டாகுமென்றால் இவ்வித உயர்ந்த தரத்தில் மாத்திரமே அது அமைய வேண்டும். இதுபோன்ற நபர் பரிசுத்த ஆவியின் முழு ஆளுகைக்குள் அடங்கியிருந்தே ஜீவித்திட வேண்டும்! அதன் மூலமாய் தன் முழு உணர்ச்சி பிரவாகத்தையும் அடக்கி ஆள்பவராய் இருக்க வேண்டும்! கொந்தளிக்கும் உணர்ச்சிகள் அவனை இழுத்துக்கொண்டு ஓடிட அனுமதிக்கக் கூடாது. சுருக்கமாய் சொல்லவேண்டுமென்றால், ஒரு உத்தம கிறிஸ்தவன் தன் ஜீவியத்தின் மற்ற பகுதிகளில் ஆவியானவரால் எப்படி நடத்தப்படுகிறானோ, அந்தப்படியே ‘இந்த அன்பின்-காதல்’ விஷயத்திலும் நடத்தப்பட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே, உங்கள் வாழ்க்கைத்துணையை, தேவன் தெரிந்துகொண்ட நபரண்டைக்கு உங்களை நடத்த முடியும்! **இவ்வாறு, நீங்கள் வாழ்க்கைத் துணையாய் ஏற்றுக்கொண்ட அந்த ஒரு நபரிடம் மாத்திரமே மாறாத காதல் (தெய்வ அன்பு) கொள்வீர்களாக!**

ஆகவே நாம் எவ்வளவு உஷாராய் இருக்கவேண்டியிருக்கிறது என்பதைப் பார்த்தீர்களா? தெய்வ பயமற்ற ஒரு கிறிஸ்தவன், ஒரு

*நபரைக் காதலித்து, சில மாதங்களில் அல்லது சில வருடங்களில் தன் மனதை மாற்றிக் கொண்டு வேறு ஒரு நபரை காதலிப்பான்! இவ்வித கொடிய நிலைக்கு நீங்கள் ஒருபோதும் கைகோர்த்து விடாதீர்கள். ஒரு விசுவாசி 'நுரை போன்ற தன் உணர்ச்சியின் அடிப்படையில்' செயல்பட்டு விடவே கூடாது. மெய் அன்பு அவனுடைய ஆவியில் அடங்கியிருக்கும் சித்தத்தில் பிறக்கவேண்டுமே அல்லாமல், அவனுடைய உணர்ச்சி வசத்தில் அல்ல! இவ்வித பொங்கும் நுரைகள் கொடிய வஞ்சனைக்குரியது!*

**இந்த ஒப்பற்ற தெய்வீக அன்பின் வாழ்க்கை யாருக்கு சாத்தியமாகும்? ஆம், சிலுவை நம் வாழ்க்கையில் தொடர்ச்சியாய் கிரியை நடப்பித்தால் மாத்திரமே இந்த தெய்வீக அன்பு சாத்தியமாகும்!**

*இந்த சிலுவையே, நம் சுய ஆசை மோகங்களை அழித்து தேவனுடைய பரிபூரண சித்தத்தை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ள நம்மை நடத்துகிறது!*

*ஆகவே, காரியத்தின் கடைத்தொகையை, மற்ற அநேக விஷயங் களில் சத்திய வேதம் நமக்குக் கட்டளையிடுவதுபோலவே, இந்த காதல் விஷயத்திலும் நமக்குக் கட்டளையிடுகிறது! அதற்கே செவிகொடுத்து விடுங்கள்: இதோ அந்த கட்டளை "ஒருபோதும் இந்த உலகத்திற்கு ஒத்துப்போகாதிருங்கள்.... உங்களுடைய முழு மனமும் புதுப்பிக்கப் படுகிறதினால் இந்த உலகத்தின் புதிய அணுகுமுறைக்கும், புதிய அலங் கோலத்திற்கும் முற்றிலும் மறுத்து மாற்றம் அடைந்து மறுரூப மாகுங்கள்". அப்போது மாத்திரமே* **தேவனுக்கு எது நன்மை? தேவனுக்கு எது பிரியம்? தேவனுக்கு எது பரிபூரண சித்தம்?** *என்பதை நீங்களே நிரூபித்து பகுத்தறிந்துக் கொள்வீர்கள்! (ரோமர் 12:2).*

**காதல் மயக்கமா? தெய்வ அன்பா?**

*காதல் மயக்கத்திற்கும், மெய்யான தெய்வீக - அகாபே அன்பிற்கும் இடையில் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. "ஒரு நபரை நான் மெய்யாகவே அன்புகூர்ந்தேனா? அல்லது காதல் மயக்கம் என்னை ஆட் கொண்டதா?" என்ற இந்த கேள்விக்கு பதில் இருக்கத்தான் செய்கிறது. வெப்சர் ஆங்கில அகராதி "Infatuction" என்ற வார்த்தைக்கு தரும் விளக்கம் யாதெனில் "வரையறை மீறி கட்டுப்படுத்த இயலாத மோகம்" என விளக்கம் தருகிறது. இவ்வித காதல் மோகத்திற்கும் அகாபே அன்பிற்கும் இடையிலான வேறுபாடுகளை 2-கிறிஸ்தவ இளைஞர் களின் அனுபவத்தை வைத்து தெளிவடைய முடியும். பிரகாஷ் என்ற வாலிபன் ஒரு பெண்ணிடம்* **காதல் மோகம்** *மட்டுமே கொண்டிருந்தான். ஆனால், ரமேஷ் என்ற வாலிபனோ ஒரு பெண்ணை* **உண்மையான அகாபே அன்புடன்** *நேசித்தான். இதே எடுத்துக்காட்டை பெண்களுக்கும் சமமாய் நாம் கூறலாம்.*

**அந்த பிரகாஷ், காதல் மோகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு**

பிரகாஷ் ஒரு பெண்ணை கல்லூரியில் சந்தித்தான்! இந்த பெண் கவர்ச்சிமிக்கவளாயும், அவன் புன்னகைத்த போது பதிலுக்கு புன்னகை செய்பவளாய் இருந்தாள். அவளைப் பற்றிய விபரங்கள் இவனுக்கு அதிகம் தெரியாது. ஆகிலும் திடீரென்று ஒருநாள் "அவளிடம் தன் இருதயத்தைப் பறி கொடுத்ததாக" எண்ணினான். இதுபோன்ற நிலை, 'கண்டவுடன் காதலாய்' இருந்தது. இந்த பெண்ணின் சரீர அழகு, கவர்ச்சி, மற்றும் பிரகாஷைப் போன்றே ஒத்த ஆர்வங்கள்.... ஆகிய அனைத்தும் அவன் அவளிடம் காதல் கொள்ளச் செய்தது. நல்ல நேசத் திற்கு சரீர அழகும் ஒரு பங்கு உண்டு என்பது உண்மைதான். இந்தப் பெண்ணைப் பற்றி பிரகாஷிற்கு தெரிந்தது கொஞ்சமே ஆனாலும், அதுவே அவனை ஈர்த்து பிடித்துக் கொண்டது! அவன் அறிந்த சில குறிப்பிட்ட பகுதிகளை வானளாவ உயர்த்திப் பேசி, **அவள் ரூபத்தை தன் மனதில் பதித்துக் கொண்டான்!** தன்னைச் சுற்றியுள்ள எந்தப் பெண்ணும் 'இவளைப் போன்ற வடிவானவள் இல்லையென' கற்பனையில் ஆழ்ந்தான். என்னதான் அவளிடம் உள்ள குறைகள் வெளிப்படையாய் தோன்றினாலும், அவைகளைக் குறைகளாக காண்பதற்கு மறுத்து விட்டான். கனவு உலகில் தான் கட்டி வைத்த மாளிகையில், இந்தப் பெண்ணுடன் உலாவினான். இந்த உலகத்திலேயே மிகச் சிறந்த பெண்ணை தான் கண்டுபிடித்து விட்டதாக எண்ணினான். மெய்தான், காதல் மோகத்திற்கு கண் இல்லை! கட்டுக்கடங்காத வகையில் அவளிடம் ஈர்க்கப்பட்டான்! ஏதாகிலும் ஒரு காரணத்தை காண்பித்து அவளிடம் நெருங்கி வந்து பழகினான். **இனி, அவள் இன்றி நானில்லை** என்ற நிலைக்கு ஆளானான். அவனுக்கும் அவளுக்கும் இடையே உள்ள 'பொருத்தமற்ற வேறுபாடுகளை' யாரும் அவனிடம் விவாதிப்பதை புறக்கணித்தான்!

அவளை ஒரு பூரணகுணவதியாகக் கண்ட அவன், தானும் அவ்விதமே, அவளிடம் தன்னை பூரண மனுஷனாக காண்பிக்கத் துடித்து நின்றான். இது அவனை ஓர் செயற்கை மனிதனாய் மாற்றியது! அதுபோலவே, தன்னிடம் அவள் கண்ட கவர்ச்சியான அழகை, அவளிடம் காட்ட துடித்தான். தன்னை சுயநலமற்ற தியாக புருஷனைப் போலவும், தாழ்மை சொரூபியாகவும் தோற்றமளிக்க முயற்சித்தான். ஆனால், உள்ளத்தின் ஆழத்தில் அவனுடைய நோக்கங்கள் அனைத்தும் 'சுயநலமாகவே' இருந்தது. இவன் ஆதாரபூர்வமாய், சுயத்தையே மையமாக்கி வாழ்ந்து கொண்டிருந்தான்!

**இந்த பெண் மீது கொண்ட ஆசையினால் தூண்டப்பட்ட இவனது ஒரே விருப்பமெல்லாம் தனக்கு சந்தோஷம் கிட்ட வேண்டும் என்பதுதான். தான் சந்தோஷம் அடைந்திட இந்தப் பெண் தனக்கு வேண்டும் என்பதே அவனுக்கு இலக்காய் இருந்தது!**

*அவளை எவ்வாறு சந்தோஷமாய் வைத்திருக்கலாம் என இவன் சில சமயம் எண்ணியிருந்தாலும், தன் வாழ்க்கையில், தன்னைச் சுற்றியிருந்த மற்ற யாதொருவரைக்கூட சந்தோஷப்படுத்த வேண்டுமென இவன் எண்ணியதே இல்லை!*

*தன் கல்லூரியில் உள்ள வேறு ஒரு பையனிடம் அவள் பேசுவது கண்ட மாத்திரத்தில்,* **பொறாமை பொங்கிட சந்தேகமும்** *கொண்டான். இந்த காதல் போதையின் உச்சகட்டமாய், அவள் தன்னிடம் மாத்திரமே பேச வேண்டும் என எதிர்பார்த்து.... வேறு பெண்களிடம்கூட அவள் சிரித்துப் பேசக்கூடாது என்றும் எதிர்பார்த்தான். இவை அனைத்திற்கும் காரணம், பிரகாஷிடம் குடிகொண்டிருந்த “பாதுகாப்பற்ற உணர்வுகளே” ஆகும். பிரகாஷின் சிறு வயதிலிருந்தே பெற்றுவிட்ட அந்த உணர்வுகள், “தன்னை ஏற்றுக்கொள்பவர் யாரும் இல்லை! தன்னை அன்புகூருபவரும் யாரும் இல்லை!” என்ற நிலைக்கு அவனைத் தள்ளி விட்டது. இதன் விளைவாக, தன் சொந்த திறனில் நம்பிக்கை இழந்தவனாய், முடிவில்.... ஒரு பெண்ணின் அன்பைக் கூட தன்னால் பெற்றிட இயலாது என்ற நிலைக்கு அவனைத் தள்ளிவிட்டது! ஆகவேதான், ‘அவள் தனக்கே உத்தமமாய்’ இருக்க வேண்டும் என்று பீதி நிறைந்த எதிர்பார்ப்பும், அவள் அன்பிற்கு தான் தகுதியில்லாமல் போய் விடுவோமோ என்ற அச்சமும் அவனை ஆட்கொண்டு விட்டது!*

**அவளை திருமணம் செய்ய வேண்டுமென்ற அவசரமே அவனுக்குள் பெரிதாய் இருந்தது. ‘சரீரத்தில்’ ஒன்றாக இருக்க வேண்டுமென்ற விருப்பமே அந்த அவசரமாய் இருந்தது! தாமதத்தை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.**

*பொருளாதாரம், பெற்றோர்களின் மறுப்பு, கலாச்சார வித்தியாசங்கள் அவனது திருமணத்திற்குக் பெரும் தடையாய் வந்து நின்றன. ஆனால் பிரகாஷோ “தன் காதலுக்கு முன் இந்த தடைகள் எம்மாத்திரம்! இவையனைத்தையும் நான் மேற்கொள்வேன்” என திடமாய் கூறி அனைத்து இடையூறுகளுக்கும் தன் கண்களை மூடிக் கொண்டான். ஆனால் வேதமோ “ஞானமுள்ள மனுஷன் தனக்கு முன்னிருக்கும் தடைகளை ஏறிட்டு பார்க்கிறான். பேதையான மனுஷனோ குருடனைப் போல் நடந்து சென்று தீய விளைவுகளை சந்திக்கிறான்” (நீதி.22:3* Living *மொழி பெயர்ப்பு) எனக் கூறுகிறது. சிலர் பிரகாஷிடம் நெருங்கி புத்தி சொல்ல முயற்சித்த போது “காதலின் மோக மயக்கத்திலிருந்த அவனோ” அவைகளைக் கேட்பதற்கு மறுத்து விட்டான்! இதுபோன்ற காதல் மோக வலைக்குள் சிக்கியவர்களை ‘புத்திமதிகளை கேட்க வைப்பது’ மிகவும் கடினம்!*

*ஒருநாள் திடீரென்று பிரகாஷிற்கும் அந்தப் பெண்ணிற்கும் இடையே கருத்து வேறுபாடு முளைத்து விட்டது. இதனால் கோபம்*

*அடைந்த அவன், இதுவரை காணாத அவளுடைய பெலவீனங்களையெல்லாம் கண்டு.... அதை அவளிடம் சுட்டிக்காட்டி சொல்லி விட்டான். தன் பெருமைக்கு ஏற்பட்ட காயத்தினால் உலுக்கப்பட்ட பிரகாஷ், திடீரென்று இப்போது* **நிஜ உலகத்திற்குள் வந்து விட்டான்.** *அந்த பெண்ணிடம் ஆத்திரம் அடைந்த அவன், வெகு சீக்கிரத்தில் அவளை பகைக்கவும் தொடங்கினான். 2சாமுவேல் 13:1-17 வசனங்களில் கூறப்பட்ட அம்னோன் எவ்வாறு தாமாரை வெறுத்தானோ, அதுபோல் இவன் கதி ஆகிவிட்டது! இவ்வாறெல்லாம் நடந்தது குறித்து அவன் பாதிக்கப்பட்டது போல் தோன்றவில்லை! இந்த சூழ்நிலையில் 'அந்தப் பெண்ணின் உணர்வுகள்' எந்தளவிற்கு சிதைந்திற்கும் என்பதைக் குறித்த அக்கறையும் இவனிடம் ஏதுமில்லை! காரியம் இவ்வாறாக இருக்கையில், இவனோ வேறொரு பெண்ணின் மீது தன் கண்களை ரகசியமாய் பதித்தான்! இப்போது, இந்தப் பெண் அவனுக்கு இன்பமான கவர்ச்சியாகவும், நிறைவுள்ள பெண்ணாகவும் காணப்பட்டாள்!?*

**<u>இந்த ரமேஷோ, அகாபே – அன்பிற்கு ஒரு எடுத்துக்காட்டு</u>**

*இந்த ரமேஷ், ஒரு பெண்ணை தற்செயலாய் சந்திக்க நேர்ந்து, சில காலம் அவளிடம் பழகும் நிலை ஏற்பட்டது. படிப்படியான பழக்கத்தில் "இந்தப் பெண்ணை தேவன் எனக்காகத் தெரிந்தெடுத் துள்ளார்!" என்ற உறுதியான எண்ணம் ஏற்பட்டது. அவனைப் போலவே, அந்தப் பெண்ணும் தேவனை முதலாவதாக அன்பு கூர்ந்தாள்.* **இவர்கள் இருவரின் தேவ பக்தி ஆர்வங்களும் ஒரேபோன்று இருந்தது.** *பல்வேறு சமயங்களில் அவளுடைய நடவடிக்கைகளைக் கவனித்து, அவளைக் குறித்து தான் அறிய வேண்டிய அனேக விஷயங்களை அறிந்து கொண்டான். இப்போது, அவளைக் குறித்த* **மெய்யான அன்பு ரமேஷின் இருதயத்தில் மலர்ந்தது.** *இந்த அன்பு அவனை நிலைகுலையச் செய்திடும், காதல் வலையில் சிக்க வைத்த அன்பல்ல! மாறாக, மிகுந்த அமைதலோடு ஆரோக்கியமான வளர்ச்சியில் தானாக வளர்ந்த அகாபே - அன்பு!*

> **இவன் அவள் மீதுகொண்ட விருப்பத்திற்கு ஆதாரமாய் இருந்ததெல்லாம், அவளுடைய ஆவிக்குரிய தன்மையும் அவளுடைய பண்புள்ள வாழ்க்கையுமே ஆகும்!**

*சரீர அழகின் ஈர்ப்புக்கும் ஒரு பங்கு உண்டென்றாலும், அதற்கு குறைந்த மதிப்பே உள்ளது. இந்தப் பெண் அப்படியொன்றும் அழகுப் போட்டியில் பரிசுப் பெறத் தகுந்தவள் அல்ல. ஆனால் ரமேஷோ அவளை அழகுள்ளவளாய் கண்டான்! அவளுடைய முழு உண்மை நிலையையும் ரமேஷ் அறிந்திட முயற்சித்தான். ஒரு சில குணநலன்கள் மாத்திரமே கண்டு 'தடுமாறிவிட' அவன் இடம் தரவில்லை. வாழ்வின் நோக்கம் அல்லது அவளின் இலட்சியம் ஆகியவைகளையும் அறிந்து*

கொள்வது தவிர்க்க இயலாது! ஆம் 'உண்மையானது' எந்த ரூபத்தி லிருந்தும் காண்பதற்கு அஞ்சாது! அது தன்னையே ஏமாற்றிக் கொள்ளவும் செய்யாது! ஏனெனில், அகாபே அன்பு காதல் மோகத்தைப் போல் குருட்டாட்டம் கொண்டிருப்பதில்லை!

**ரமேஷின் நோக்கங்கள் சுய-நலமற்றதாகவே இருந்தது! அவள் மீது கொண்ட விருப்பம், கற்புள்ள தூய்மையாகவே இருந்தது!**

அவள் மீது அக்கறையும், மெய்யான கரிசனையும் கொண்டு தன்னைவிட அவளுடைய நலனையே அதிகம் தேடினான். தன்னுடைய 'சொந்த மகிழ்ச்சிக்காக' அவளை அவன் நாடவில்லை. அவனுடைய முதல் விருப்பமாய் இருந்ததெல்லாம், அவளோடு சேர்ந்து கர்த்தருக்குப் பிரியமாய் வாழ வேண்டும் என்பதுதான்! அவனது இரண்டாவது விருப்பமோ, தன்னிமித்தம் அவள் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்! என்பதுதான். ஒரு மெய்யான ஆசீர்வாதத்திற்குரிய வழி, எதை பெற முடியும்? என்பதல்ல.... எதை கொடுத்திட வேண்டும்? என்ற விருப்பத் திலேயே அடங்கியிருக்கிறது என அப்போஸ்தலர்.20:35-ம் வசனம் தெளிவாய் கூறுகிறது. ஆகவேதான் அவளுடைய நன்மைக்காக தனக்குரிய எதையும் தியாகம் செய்திட ஆயத்தமாயிருந்தான். அவளுக்குத் தன்னை அர்ப்பணித்து, அவளிடம் இருக்கும் நற்பண்புகளைக் கட்டியெழுப்ப விரும்பினான். தனக்குரிய யாதொரு சொந்த ஆதாயத்துக்காகவும் அவளைப் பயன்படுத்திட அவனுக்கு விருப்பம் இருக்கவில்லை!

ரமேஷ் அவளிடம் பழகும் நேரமெல்லாம், சுபாவம் உள்ள இயற்கையாகவே பழகினான். அவனது பழக்க வழக்கத்தில் யாதொரு செயற்கையும் தென்படவில்லை. அவன் அவ்வளவு பளிச்சென்று கபடு இல்லாத உண்மை கொண்டிருந்தான்!

இத்தனை விஷயங்கள் மத்தியிலும், அவனோ அவளையே சதா சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை. தன்னைச் சுற்றி உள்ளவர்களின் ஆவிக்குரிய தேவையையும், சரீர பிரகரமான தேவையையும் பூர்த்தி செய்வதற்கு உதவிடவே அதிக நேர சிந்தனை கொண்டவனாய் இருந்தான். எந்த சூழ்நிலையிலும், தன் ஆண்டவர் இயேசுவின்மீது கொண்டிருந்த அன்பையே **பிரதானமானதாய்** ரமேஷ் வைத்திருந்தான். இந்தப் பெண்ணின் மீது கொண்ட அன்பு **இரண்டாவதாகவே** இருந்தது! கர்த்தருடைய ஊழியம், அவனது ஜீவியத்தில் முதலிடம் வகித்தது. அவளைச் சந்திக்க வேண்டும் என்பதற்காக, ஒருமுறைகூட கர்த்தருடைய ஊழியத்தை அவன் அசட்டை செய்தது இல்லை. தன்னைப் போலவே **அவளும் கர்த்தரை தன் வாழ்வில் முதலாவதாக வைத்திருக்க வேண்டும்** என்ற விருப்பம் அவனை ஆட்கொண்டிருந்தது!

ரமேஷ் அவள்மீது முழு நம்பிக்கை வைத்திருந்தான். ஒரு பாதுகாப்பற்ற சந்தேக உணர்வுகள் அவனுக்கு ஏற்படவில்லை. யாதொன்றும் அவளிடம்

அவன் எதிர்பார்க்கவில்லை! யாதொன்றையும் அவன் பற்றிக் கொண்டிருக்கவில்லை! நியாயத்திற்குப் புறம்பாயும் அவன் இருந்தது இல்லை! துளியளவும் பொறாமையோ அல்லது சந்தேகப் பார்வையோ அவனிடத்தில் இல்லை! அன்பிற்கு தலை சிறந்த நிரூபணமாய் விளங்கிய அவனது சிறந்த குணாதிசயம் யாதெனில் **"அவளுடைய சுயாதீன விருப்பத்தை, அவளிடமிருந்து பறித்துக் கொள்ள அவன் முயற்சித்தது இல்லை!"** **தனக்கு விருப்பம் இல்லாத ஒன்றிற்கு மறுப்பு கூறி "இல்லை!"** எனக் கூறுவதற்கு, அத்தனை சுயாதீனத்தை அவளுக்கு அவன் வழங்கியிருந்தான்!

சில சந்தர்ப்பங்களில் நீண்ட நாட்கள் தூரமாய் செல்ல இருந்த காலத்தில், அவள்மீது கொண்ட அவனது அன்பு சற்றேனும் குறையவில்லை. தூரமாய் இருந்த நிலையில், ஆழமான அன்பே வேர் கொண்டது! பொருளாதார நெருக்கங்கள், இன்னும் பல தடைகளால் இவர்களின் திருமணம் தாமதிக்க நேர்ந்தது! இவ்வித நிலை, சற்று ஏமாற்றத்தை தருவதாய் இருந்தாலும், தேவன் அனுமதித்ததாகவே அவரிடமிருந்து ஏற்றுக்கொண்டான். மேலும் நல்லதொரு முடிவை மனதில் கொண்டே தேவன் இவைகளைச் செய்திருக்கிறார் என்றும் மன அமைதி கொண்டான். இதுபோன்ற தாமத நேரங்களில், பொறுமையுடன் காத்திருந்து, 'திருமணத்திற்கென்று தன்னை ஆயத்தம் செய்திட' அந்த நாட்களைப் பயன்படுத்தினான். சேர்ந்து வாழப்போகும் குடும்ப வாழ்க்கைக்கே "செல்லும் செலவை கணக்கிட்டு" தன்னை தயார் செய்து கொண்டான். இவ்வாறாக, காத்திருந்த இந்த நாட்கள், அவள் மீது கொண்ட ஆழமான அன்பை உறுதிப்படுத்துவதாகவே அமைந்தது. "தேவன்தான், அவளை எனக்குத் தரும்படி தெரிந்து கொண்டார்" என்ற உண்மை அவனுக்குள் வலுப்பெற்றது!

அவளுடைய ஒவ்வொரு விஷயத்திற்கும், அவன் ஒருமித்துப் போகவில்லை. ஆனால், அவன் பெற்றிருந்த **அவிந்து போகாத அன்பின் ஜீவாலையைக் கொண்டு** ஒருமித்துப் போக இயலாத அற்ப சில காரியங்களை 'ஏற்றுக்கொள்ள' பெலன் தந்தது! இவ்வித சூழ்நிலையானது, இருவரும் அவரவர் பெற்றிருந்த 'தனித்தன்மையை' வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாகவே கண்டான்.

இவ்வாறாக, ரமேஷ் அந்தப் பெண்ணின் மீது கொண்ட அன்பு நிரந்தரமானதாய் இருந்தது! இந்தப் பெண் தவிர, வேறொரு பெண்ணை நேசிக்கும்படி அவன் ஒருபோதும் சிந்திக்கக்கூட இல்லை!

## மெய்யான தெய்வ அன்பில் காணும் தெளிவான வித்தியாசங்கள்

மேற்கண்ட இரண்டு மாதிரிகளில் 1)"அன்பு என தவறாய் கணிக்கும்" **காதல் மோகத்திற்கும்** 2) வேதபூர்வமான **மெய்யான அன்பிற்கும்** உள்ள வித்தியாசங்களை நாம் தெளிவாய் காண முடிகிறது. பிரகாஷைப் போன்ற குணாதிசயங்களில் 'ஒரு சிலவற்றை மாத்திரம்' உடைய

வர்களாய் இருப்பவர்கள்.... என்னதான் இருந்தாலும், இன்னமும் அவர்கள் காதல் மோகத்திற்கு உட்பட்டவர்களே ஆவர். ஆம், ரமேஷிடம் நடந்த நிகழ்வுகள் அனைத்தும் "உத்தம அன்பிற்குரியவர்களின்" சித்திரமாகவே இருக்கிறது. இந்த ரமேஷைப் போலவே 'பூரண அன்பாய்' விளங்கிட, நம்மில் ஒருவராலும் முடியாது. ஆகிலும் பூரணத்தின் எல்லையை அடைவதே நமது இலக்காகும்! இந்த இலக்கைத் தவிர யாதொன்றும் குறைவாய் பெற்றிட நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்கவே கூடாது.

முதலாவது காதல் மோகத்திற்கு உட்பட்டு விட்டு, நாளாவட்டத்தில் 'உத்தம அன்பிற்கு' மாறி வளர்ந்திடவும் முடியும்! ஆகிலும் அந்த வளர்ச்சியை, உடனடியாக அகாபே அன்பாக ஏற்றுக்கொள்ள முடியாது! குறைந்தது.... அகாபே அன்பின் முக்கிய குணாதிசயங்களில் சிலவற்றையாவது வெளிப்படுத்த துவங்கினால் மாத்திரமே, அதை அகாபே அன்பாக ஏற்றுக்கொள்ள முடியும்!

வாலிபர், வாலிபபெண்கள், தவறாய் வழிநடத்தப்படுவதை தவிர்க்க வேண்டுமென்றால்.... காதல் மோகத்திற்கும், மெய்யான அன்பிற்கும் உள்ள வித்தியாசத்தைக் காண, நன்கு அறிந்தவர்களாய் இருக்க வேண்டும். **காதல் மோகம் அல்லது வேட்கை வெகு சீக்கிரத்தில் மங்கி மறைந்து விடும்!** அகாபே-அன்போ, திருமண வாழ்க்கை முடியும் மட்டும் நிலைத்திருக்கும். இந்த அன்பு, ஒவ்வொரு கடமையையும் 'ஆனந்தமாயும்' எந்த ஒரு பொறுப்பையும் 'மகிழ்ச்சியாயும்' மாற்றி விடும்!

## கடைசியாக ஒரு எச்சரிக்கை

சாலமோனின் உன்னதப்பாட்டு புத்தகத்தில் கூறப்பட்ட மூன்று எச்சரிக்கையின் வசனங்களை நம் இருதயத்தில் வைத்து வைப்போமாக. அந்த வசனங்கள் 2:7;3:5;8:4. ஆம், இழிவான காதல் மோகத்தை தூண்டி விட்டு எழுப்பாதீர்! அகாபே-அன்பு விழிக்கும் வரை, பொறுத்திருங்கள்! இதை வேறு விதமாய் சொல்ல வேண்டுமென்றால் "திருமணத்திற்குரிய மெய்-அன்பு தோன்றும் வரை தேவனுடைய நேரத்திற்கு காத்திருங்கள்! மிருகத்தனமான காதல் மோகத்திற்குள் பாய்ந்து, பலி ஆகாதிருங்கள்!"

Living மொழிபெயர்ப்பு நீதிமொழிகள் 4:23-ல் "எல்லாவற்றிற்கும் மேலாய் உங்கள் அன்பின் உணர்வுகளை **'தெய்வீகமானதாய்'** பாதுகாத்து வைத்திருங்கள்!" ஏனெனில், அதுவே உங்கள் திருமண வாழ்க்கைக்கு வாழ்வா? சாவா? என்ற நிலையை தோற்றுவிக்கும்!

## ‘இருவர் ஒருவராகும்’ பாக்கியம்!

4

பல்வேறு வகையில் ஒருவருக்கொருவர் வித்தியாசமாய் இருக்கும் கணவன் மனைவி.... ஆகிலும், அவர்களும் இணைந்து, இசைந்து வாழ்வதைக் காணும் காட்சி பரலோகத்தின் ஓர் அழகுள்ள காட்சியை விட மேலானதாக இருக்குமோ என வியக்கத் தோன்றுகிறது! இதுபோன்ற தம்பதியர் மூலமாகவே “**வேற்றுமையில் ஒற்றுமை**” என்ற சுகந்த வாசனையை நம் யாவருடைய திருமண வாழ்விலும் வெளிப்படுத்த தேவன் சித்தம் கொண்டிருக்கிறார்! இதுபோன்ற “ஒருமைப்பாட்டிற்கு” ஒரு இரகசியம் இருக்கக்கூடும் அல்லவா?

இதற்கு நேர்மாறாக, பல்லாயிரக்கணக்கான தம்பதியர்களை உற்றுப் பாருங்கள். திருமண வாழ்வில் பல வருடங்கள் கடந்து சென்ற பிறகும், இன்னும் அவர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாமல், ஒருமனம் அற்றவர்களாகவே வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலனவர்களுக்கு, வாய்ப்பு கிடைத்தால் போதும், மகிழ்ச்சியுடன் ‘பிரம்மச்சாரியம் சென்று’ தனித்து இருந்துவிட ஆசையாய் இருப்பார்கள்!



**மனுஷனுடைய சந்தோஷத்திற்காகவே தேவன் நியமித்த “திருமண வாழ்க்கை” அவர்களுக்கு சஞ்சலமும் ‘பூமியில் நரகமாயும்!’ மாறிவிட்டது!**

ஒரே வீட்டில் இவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்திருந்தாலும், இசைந்த உறவிற்கு பதிலாய் ‘தனி மனிதர்களாகவே’ வாழ்ந்து தவிக்கிறார்கள். “பிள்ளைகள் பிறந்து விட்டது, ஆகவே ஒன்றாய் இருப்போம்!” என்ற கதியே இவர்களது பரிதாப நிலையாய் இருக்கிறது. அல்லது, சமுதாயம் தங்கள் திருமண வாழ்வை பகடி செய்யும் என்பதற்காகவும், சேர்ந்து வாழ்ந்து

கொண்டிருக்கிறார்கள்.... இப்படியொரு,**வெற்றுக் கூடான பாசாங்கு வாழ்க்கையைத்தான்** வைத்திருக்கிறார்கள். இதுபோன்ற தம்பதியர்கள் அனைவருமே "தங்கள் திருமண வாழ்வை அன்பிலும் ஐக்கியத்திலும் தான்" ஆரம்பித்தார்கள்! அப்படியானால், இவர்களது வீழ்ச்சி எப்போது துவங்கியது?

திருமண வாழ்வு தொடர்பாக, **தேவனுடைய வார்த்தையின் போதகங்களை கைக்கொண்டு** வாழ்வதை அடிப்படையாகக் கொண்டே மகிழ்ச்சியுள்ள திருமண வாழ்விற்கும்... மகிழ்ச்சியற்ற திருமணத்திற்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது.

> **திருமணமாக இருக்கும் கிறிஸ்தவ வாலிபர்களே.... "தேவன் திருமண வாழ்வை காணும் விதமாய், உங்கள் மனதும் மறுரூபமாகி காணும் வரை" உங்களுக்கு வாழ்க்கைத் துணையை தேட துணிய வேண்டாம்! கண்டிப்பாய் வேண்டாம்!**

அப்படியானால், தேவன் திருமணத்தை நியமனம் செய்வதற்கு வைத்திருக்கும் வரைபடம் என்ன? திருமணத்தைக் குறித்த அவரது நோக்கம் என்ன? ஆதியில் நடந்த "முதலாவது திருமணத்தை" திரும்பிப் பார்த்து, அங்கு பதிவாகிய தேவனுடைய வார்த்தைகளை நாம் கவனித்து, அதன்படி நடப்பதே நல்லது!

## ஆதியில் நடந்தது என்ன?

உலக சரித்திரத்தில் நிகழ்ந்த முதல் திருமணத்தை, ஆதி.12:25-ம் வசனங்களில் தேவனே நடத்தி வைத்தார்! சுருக்கமாய் கூறப்பட்டிருக்கும் ஆதியாகமம் 1:27-ம் வசனத்தின் பின்னணியில் ஓர் படர்ந்த நிகழ்ச்சிகள் அடங்கியிருக்கின்றன!

ஆதியில் தேவன், மனிதனை தனியாகவே படைத்தார்! கடந்த ஆறு நாட்களில் அவர் படைத்த அனைத்தையும் 'நல்லது' என்றே கண்டார். அவைகளை தேவனே கண்டு "நல்லது" என மறுபடியும் மறுபடியுமாக கூறியதை ஆதி 1:4-26 வசனங்களில் காண்கிறோம். ஆனால் மனிதனை சிருஷ்டித்தவுடன் "அவன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல" எனக் கூறினார் (ஆதி.2:12). பார்த்தீர்களா, "**தனிமையை**" **தேவனுடைய கண்களே முதலாவது கண்டு.... அதை நல்லதல்ல!** எனக் கூறியுள்ளார். இப்போது, ஒரு யுவதியை ஆதாமுக்கு மனைவியாகவும் உதவியாகவும் இருக்கும்படி சிருஷ்டிக்கத் துவங்கினார். ஏவாளை சிருஷ்டித்து முடித்தவுடன், தேவன் தன் கண்களால் கண்ட அந்த காட்சியை "**மிகவும் நல்லது!**" என்ற சிறப்பான வாசகத்தைக் கூறி மகிழ்ந்தார் (ஆதி.1:31). அப்படியென்ன நல்லது நடந்து விட்டது? தேவனுடைய சிருஷ்டிப்பில் **'இருவர்' மணவாழ்வு தம்பதியராய் சேர்ந்து நின்றிருந்தார்கள்!** அதுவே, பரலோகத்தில் வியப்பான மாற்றமாய் இருந்தது!

**திருமண வாழ்வின் நோக்கம் - (1) நட்பான துணை**

ஆதியாகமம்.*2:18*-ம் வசனம் கூறுகிறபடி திருமண வாழ்வின் பிரதான நோக்கம் "**ஐக்கியமும், நட்பும் நிறைந்த துணையுமே ஆகும்**". இவ்வாறு, ஆதாமிற்கு தொடர்ச்சியான நட்புறவிற்குரிய துணையாகவே ஏவாள் சிருஷ்டிக்கப்பட்டாள். எல்லா வகையிலும் ஆதாமிற்கு நிறைவு செய்யும் பணியாக "ஏற்ற துணையாகவும், மேற்பார்க்கும் துணை யாகவும், இணக்கமுள்ள பொருத்தமான துணையாகவும்...." இருப்ப தற்கே அவனுக்கென சிருஷ்டிக்கப்பட்டாள்.

ஆதாம் ஏவாளாகிய இருவரும் **ஒருவருக்கொருவர் தேவையான வர்கள்** என்பதை, அவர்கள் தொடர்ச்சியாக அறிந்து வாழ தேவன் விரும்பினார். ஆகிலும், அவர்கள் "இருவரும் சேர்ந்து **தேவனுக்காக வாழ வேண்டும்**" என்பதும் தேவனுடைய நோக்கமாய் இருந்தது. இந்த உறவின் நறுமணத்தைப் பாருங்கள்.... ஆதாமின் பெலன் இல்லாமல் ஏவாள் யாதொன்றும் செய்திட முடியாது! அதுபோலவே, ஏவாளின் மென்மையான ஆதரவு இல்லாமல், ஆதாமும் யாதொன்றும் செய்திட இயலாது! இவர்கள் இருவருமே, **தேவனின்றி** யாதொன்றும் செய்திட இயலாது! ஆ, இதுவே இனிமையான நட்புறவின் நற்கந்தம்!

இவ்வித ஒப்பில்லா ஐக்கியத்தைக் கொண்டு, ஆவிக்குரிய ஜீவியத்தில் இவர்கள் வலிமை கொண்டவர்களாக மாற வேண்டு மென்பதே தேவனுடைய நோக்கமாய் இருக்கிறது. வேதம் நமக்கு நினைவூட்டுகிறபடி "ஒருவர் செய்திட வேண்டிய வேலையை இருவராய் சேர்ந்து செய்தால் இருமடங்கிற்கு மேலாய் செய்திட முடியும்! ஒருவர் வீழ்ச்சியடைந்தால் மற்றொருவர் தூக்கிவிட முடியும்! ஆனால், தனிமையில் ஒருவன் விழும்போது, அவன் சஞ்சலத்திற்கு உள்ளாவான்!.... தனியாய் நின்று கொண்டிருக்கும் ஒருவனைத் தாக்கி ஜெயிப்பது எளிது! இருவர் இணைந்து நின்று போரிட்டால், ஜெயம் அவர்களை கிட்டிச் சேரும்" என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும் (பிரசங்கி.*4:9-12* Living ).

மேற்கண்ட சத்தியத்தை நாம் தெளிவுபட காண, ஏதேன் தோட்ட நிகழ்ச்சி உதவுகிறது. அங்கு, ஆதாம் உடனிருந்த போது அல்ல.... அவனை விட்டு ஏவாள் தனியாய் இருக்கும்போதே சாத்தான், அவளை சோதித்திட தீர்மானித்தான்.

> **ஆதாமும் ஏவாளும் சேர்ந்தே இருந்திருந்தால், சாத்தானின் தாக்குதலை முறியடித்திருக்கலாம். ஆனால் தனித்தனியாய் நின்றபோது, இருவருமே பெலனற்றவர்கள்தான்!**

மேற்கண்ட வசனத்தின்படி அவர்கள் இணைந்திருக்கும் போது, மற்றொரு பலன் கூடுவதாக அல்ல.... 'பன்மடங்காகப்' பெருகி

*நிற்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவ தம்பதியினரும், தங்கள் ஜீவியத்தில் ஆவிக்குரிய பெலன் கொண்டு வாழவே தேவன் விரும்புகிறார். இவ்வாறு நட்புள்ள துணையாய் இல்லாமலும், 1பேதுரு 3:7 கூறுகிறபடி கிருபையை சுதந்தரிக்கும் கூட்டாளியாய் வாழாமலும் இருந்து விட்டால், அவர்கள் திருமண வாழ்வில் தேவன் கொண்டிருந்த பிரதான நோக்கம் சிதைவது மாத்திரமல்லாமல், சாத்தான் உள்ளே பிரவேசிப் பதற்குத் தங்கள் இல்லத்தின் வாசலை திறந்தும் விடுகிறார்கள்! எனவே, கணவனும் மனைவியும், தங்களின் ஒருவருக்கொருவர் உறவில், தேவன் நியமனம் செய்த தங்களுடைய பங்கை நன்கு அறிந்து, பொறுப்புடன் வாழ வேண்டும்!*

*ஆதாமின் ‘தலை எலும்பிலிருந்து’ ஏவாளை தேவன் எடுக்க வில்லை! அது ஏனென்றால், அவள் தன் புருஷனை ஆளுகை செய்திட தேவன் விரும்பவில்லை என்ற காரணமே ஆகும். அதேபோல, ஏவாளை ஆதாமின் பாதத்திலுள்ள எலும்பிலிருந்தும் எடுக்கவில்லை. அது ஏனென்றால், தன் புருஷனுக்கு அவள் அடிமையாக இருக்கக் கூடாது என்ற காரணமே ஆகும்.*

**பின் எதற்காக ஆதாமின் விலாவிலிருந்து தேவன் அவளை எடுத்தார்? அவள், தன் புருஷனுக்கு நல்ல தோழியும் துணையுமாய் இருக்கவே தேவன் விரும்பினார்.**

*மேலும் ஆதாமுடைய விலா எலும்பை, அவனுடைய இருதயத்திற்கு அருகிலிருந்தே தேவன் எடுத்தார். அதுஏனென்றால், ஏவாளைத் தன் இருதயத்திற்கு அருகில் வைத்து, ஆதாம் அவளை அன்புடன் பராமரித்து பாதுகாத்திடவே அவ்வாறு செய்தார்!*

*சிறந்த சத்தியங்களை உள்ளடக்கியே, இந்த நிகழ்ச்சிகள் யாவையும் தேவன் செய்திருந்தார். ஆதியாகமம் 2:21-ம் வசனத்தின்படி, ஆதாமின் விலா எலும்பை தேவன் எடுத்த பிறகு, அந்த இடத்தை சதையினால் மூடி விட்டார். விலா எலும்பு எடுக்கப்பட்ட அந்த இடம் காலி இடமாகவே இருந்ததை ஆதாம் அறிந்திருந்தான். அந்த வெற்றிடத்தை ஏவாள் மாத்திரமே நிரப்பிட முடியும். ஏனெனில், அவள்தான் அந்த விலாவிலிருந்து எடுக்கப்பட்டவள்! இன்றும்கூட, யூத போதகர்கள் கூறும்போது “தன் ஒரு விலா எலும்பு குறைந்தது அறிந்த மனிதன் தவிப்பிற்கு உள்ளாகிறான்! அதேபோல், ஒரு மனுஷி எங்கு இருந்து எடுக்கப்பட்டாளோ அந்த மனுஷனுடைய விலா அருகில் சேரும்வரை தவிப்படைகிறாள்!” என போதிக்கிறார்கள். இதுபோன்ற உறவைத்தான், கணவனிடமும் மனைவியிடமும் தேவன் விரும்புகிறார். இவ்வித ஐக்கியத்தின் மூலமாகவே, தேவனுடைய வல்லமை வெளிப்பட்டு அவருடைய நோக்கம் அவர்களிடம் நிறைவேறிட முடியும்!*

*கணவன் மனைவி உறவைக் குறித்து பேசும்போது, நம் ஆண்டவராகிய இயேசுவும், அப்போஸ்தலனாகிய பவுலும் இந்த ஆதியாகமம் 2-ம் அதிகாரத்தை குறிப்பிட்டே பேசியிருக்கிறார்கள். (மத்தேயு 19:3-9; எபே.5:22-33). ஆகவே கிறிஸ்தவ திருமணத்தைக் குறித்த மெய்யான அணுகுமுறைக்கு ஆதியாகம புத்தகத்தின் இந்த அதிகாரங்களின் போதனை மிக மிக முக்கியமாகும்.*

**திருமணத்தின் நோக்கம் - (2) குடும்பம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்**

*முதல் திருமணத்தில், புதிய தம்பதிகளாகிவிட்ட ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் கூறிய முதல் வார்த்தை என்னவெனில் "நீங்கள் பலுகிப் பெருகுங்கள்" என்ற வார்த்தை ஆகும்(ஆதி.1:28). இவ்வாறு பிள்ளைகளைப் பெற்றெடுத்து குடும்பம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதே திருமணத்தைப் பற்றி தேவன் வைத்திருந்த நியமனம் ஆகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே பாலிய உறவின் 'உந்து விசையை' தேவன் மனிதனுக்குள் சிருஷ்டித்திருந்தார்!*

*தேவனை தொழுதுகொள்ளும் இடமாகவும், அவருக்குப் பணி விடை செய்யும் இடமாகவும், இருப்பதை வலியுறுத்தியே வேதாகமம்* **குடும்பத்தை** *பிரதானமாய் சித்தரிக்கிறது. ஒரு குடும்பம் தேவனை தலைவராய் வைத்து, அவருக்கு கீழாய் ஒழுங்கு செய்யப்படும் வாழ்க் கையே தேவனுக்கு அதிக மகிமையை கொண்டு வந்து சேர்க்கும்! தேவன் நமக்குப் பிள்ளைகளை அருளுவது, நம்முடைய இருதயத்தை களிப்படையச் செய்வதற்கு மாத்திரமல்லாமல், அவர்களை கர்த்தருக்கேற்ற பயத்தில் வளர்த்து, அதன் மூலமாய், அவர்கள் சந்ததியில் உண்மையுள்ள சாட்சிகளாய் இருப்பதற்குமே ஆகும். இந்த அவரது நோக்கம், வேதாகமத்தில் திரும்பத்திரும்ப வலியுறுத்தப் பட்டிருக்கிறது (சங்கீதம் 78:5-7).*

*தேவனை மகிமைப்படுத்தும்படியான ஒரு குடும்பத்தை கட்டுவதும், அவருடைய உண்மைக்கும் அவருடைய அன்பான பராமரிப்பிற்கும் சாட்சியாய் விளங்குவதும், ஒவ்வொரு கிறிஸ்தவ தம்பதியினர் மீதும் விழுந்த அழைப்பு ஆகும்! ஒரு மனிதன் பிரசங்கிப்பதைவிட, கர்த்தருடைய வழியில் நடக்கும் அவர்களுடைய பிள்ளைகளே.... அவர்களது, பிரசங்கத்தின் வலிமையாய் இருக்கிறது! ஆபிரகாம் தன் பிள்ளைகளை தேவ பக்தியுள்ள வழியில் நடத்திய தற்காக, கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார் என்றும்! அவ்வாறு நடத்திடாத ஏலியை கர்த்தர் சபித்தார் என்றும்! நாம் காண்பது.... பிள்ளைகளின் வளர்ப்பிற்கு, தேவன் எவ்வளவு முக்கியத்துவம் தந்திருக் கிறார் என்பதை நாம் அறிய முடிகிறது! (ஆதி:18-19; 1சாமு.13:13,14).*

*இதே முக்கியத்துவம், புதிய ஏற்பாட்டிலும் போதிக்கப்படுகிறது.*

*எபேசு நிருபத்தில் "சபையின் மாபெரும் இரகசியமாய் இருப்பது, அது* **கிறிஸ்துவின் சரீரம்...**" *என முதல் மூன்று அதிகாரங்களில் விவரித்த பின்பு, இந்த சத்தியத்தின் நடைமுறை விளக்கத்தை ஒரு கிறிஸ்தவ குடும்பத்தின் உறவிலிருந்துதான் காணப்பட முடியும் என பவுல் தெளிவுபடுத்தினார். ஆம், கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், மற்றும் எஜமான் வேலைக்காரன் ஆகியோரின் சாட்சியில் புலப்பட வேண்டும் என விவரித்தார் (எபே.5:22; 6:9). இவ்வாறு, ஒரு குடும்பத்தை பிரதானமாய் வைத்து கூறினாரே அல்லாமல்.... ஒரு ஸ்தல சபையை பவுல் இங்கு குறிப்பிடாதது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்!*

**ஆம், தேவனுடைய பார்வையில் பிரதானமாய் விளங்குவதெல்லாம் "ஒரு கிறிஸ்தவ குடும்பத்தின் சாட்சிதான்!" என நேர்த்தியாய் சுட்டி காட்டப் பட்டிருக்கிறது. ஒரு குடும்பம் வலிமையாய் இருந்தால் மாத்திரமே, ஒரு ஸ்தல சபையும் வலிமையாய் இருந்திட முடியும்!**

*ஒரு கிறிஸ்தவ இல்லத்தில், ஆவிக்குரிய சிறந்த சூழ்நிலை இல்லாது போனால், அந்த ஸ்தல சபையும் நிச்சயமாய் வீழ்ச்சியடையும்!*

*காரியம் இவ்வாறாக இருப்பதனிமித்தமே, சாத்தானுடைய கடும் தாக்குதல்கள்* **முன்னணியில் இருக்கும் குடும்பத்தின் மீது ஏற்படும்** *என நாம் எதிர்பார்ப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. தேவன் அமைத்த முதலாவது குடும்பத்தில், குற்றம் சாட்டுதலையும், பொறாமையையும், பகை யையும், கொலையையும் சாத்தான் கொண்டு வந்தான்! (ஆதி.3:12;4:8). அந்த நாள் ஆதிமுதற்கொண்டு, இன்றுவரை ஒரு தேவபக்தியுள்ள குடும்பத்தைக் கூட சாத்தான் விட்டு வைத்ததில்லை! எனவேதான், எபேசு நிருபத்தில் ஒரு நல்ல கிறிஸ்தவ குடும்பத்தின் காரியங்களை கூறியபிறகு.... உடனடியாக, ஆவிக்குரிய யுத்தத்தின் பகுதியை எடுத்துக்காட்டுகிறது! (எபே.6:10-18). இதன் மூலம் நாம் எச்சரிக்கப்படுவது யாதெனில், ஒரு பக்தியுள்ள குடும்பத்தை நாம் கட்டுவதற்கு பிரயாசப்படும் ஒவ்வொரு முயற்சியையும் சாத்தான் கண்டிப்பாய் எதிர்த்து நிற்பான் என அறிவதே ஆகும்! ஆகிலும், சாத்தானின் ஒவ்வொரு கொடிய தாக்குதலையும் மேற்கொள்வதற்கென தேவன் நமக்கு "சர்வாயுதவர்க்கத்தையும்" தந்தருளியுள்ளார்! என்பதை நாம் மறந்திடலாகாது! இவ்வாறு உறுதியாக ஸ்தாபிக்கப்படும் ஒரு குடும்பமே தேவனை மகிமைப்படுத்தும்! என்பதும், இதுவே திருமண வாழ்வின் பிரதான நோக்கம் என்பதும், எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் தெளிவாகிறது!*

**திருமணத்தின் நோக்கம் - (3) பாலிய உறவு பூர்த்தி செய்யப்படுதல்**

*ஆதாமும் ஏவாளும் 'பலுகிப் பெருகும்படி' பெற்ற கட்டளை யானது, அவர்களது பாலியத்தின் விருப்பத்தை பூர்த்தி செய்வதற்கு*

தரப்பட்ட கட்டளையாகும். தேவனால் நியமனம் செய்யப்பட்ட திருமணத்தின் மூலமாய், ஆண்பால்! பெண்பால்! உறவின் பாலிய விருப்பங்கள் நிறைவேற்றம் அடைய வேண்டும் என்பதையும் தேவன் பொருள்படுத்தியிருந்தார். இது, திருமணத்தைக் குறித்து தேவன் கொண்டிருந்த மூன்றாவது நோக்கமாகும்.

இவ்வித பாலிய விருப்பத்தை நிறைவேற்றுதல், வெறும் உடல் உறவின் திருப்தியையும் இன்பத்தையும்விட மேலான தன்மை கொண்டதாகும். திருமணத்தில் உடலுறவின் இன்பமே பிரதானமாய் இருந்தால், மனுஷன் ஒரு மிருகத்தைக் காட்டிலும் மேலானவன் எனக் கூறிட இயலாது. அதே சமயம், சரீரத்திற்குரிய காம உணர்வும், வேதாகமத்தில் அலட்சியப்படுத்தப்படவில்லை. பாலியம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது என்பதையும்.... அது, தூய்மையும் பரிசுத்தம் நிறைந்தது எனவும் முதலாம் அதிகாரத்தில் ஏற்கனவே கண்டோம்.

**ஆனால், கணவன் மனைவியின் பாலியல் உறவானது, அவர்கள் இருவரும் தங்கள் உள்ளான ஜீவியத்தில் ஏற்கனவே காத்துக்கொண்ட ஐக்கியத் தையும்! உச்சக் கட்டமான நிலையில், தங்களின் ஆழ்ந்த உறவை வெளிப்படுத்தும் அடையாளமாகவும்! எப்போதும் இருக்க வேண்டும்.**

ஆம், பாலிய உறவு, கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் வைத்திருந்த அகாபே- அன்பின் வெளிப்படையான பிரதிபலிப்பாகவே இருந்திட வேண்டும். திருமண மஞ்சம், ஓர் பரிசுத்தமான பலிபீட மாகவே எப்போதும் இருந்திட வேண்டும்! ஆகவே, தங்களை தியாகம் செய்து ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதும், தங்கள் ஜீவியத்தின் அனைத்து பகுதிகளிலும் ஒருமித்து இருப்பதற்கும் - அச்சாரமாகவே "இந்த திருமண மஞ்ச - பலிபீடத்தில்" பால் உறவின் ஐக்கியம் கொள்கிறார்கள்!

**திருமணத்தில் விளைந்திடும் 'பால் உறவு அன்பை' வேதாகமம் போற்றி மகிமைப்படுத்துகிறது. திருமண வாழ்விற்குரிய காதல் உறவை சாலமோனின் உன்னதபாட்டின் புத்தகமும் மகிழ்ந்து கூறுகிறது!**

தன் மனைவியரிடம் பாலிய உறவில் களிகூர்ந்திருக்கவும் வேதம் ஊக்குவிக்கிறது (ஏசா.65:2). நேசமான காதலில், கணவனும் மனைவியும் திளைத்திருக்கவும் ஊக்குவிக்கிறது (நீதி.5:18,19; 1கொரி.7:5). இதில் யாதொன்றும் பாவம் என்பதே இல்லை! இது, பிழையற்ற நியாயபூர்வமான உரிமைக்குரியதே ஆகும். இன்று அனேகர், பாலியல் சம்பந்தமான சிந்தையை அசுத்த எண்ணங்களோடு சேர்த்து பார்க்கிறபடியால் "பரிசுத்தமுள்ள தேவன் இதுபோன்ற சிந்தைகளையெல்லாம் தனது வேதப்புத்தகத்தில் எப்படி எழுதி வைத்தார்?" என்றே வியக்கிறார்கள். இதற்கு வேதம் தரும் விடையோ

"தன் இருதயத்திலும் தன் மனசாட்சியிலும் சுத்தமுள்ளவர்களுக்கு, சகலமும் சுத்தமாய் இருக்கும்! அசுத்தம் உள்ளவர்களுக்கும், அவிசுவாசத்தால் கறைப்பட்டவர்களுக்கும், ஒன்றும் சுத்தமாயிராது! ஏனெனில், அவர்களுடைய புத்தியும் மனசாட்சியும் ஏற்கனவே அசுத்தமாயிருக்கிறது" என்றே பதிலுரைக்கிறது (தீத்து.1:15). பார்த்தீர்களா, ஒருவருடைய **மனதானது மனுஷீகத்தில்** வேர்கொண்டிருந்தால், அசுத்தமாகவே இவர்கள் காண்பார்கள்! ஒருவருடைய **மனதானது, பரிசுத்த ஆவியினால் புதுப்பிக்கப்பட்டால்** மாத்திரமே, "பாலிய உறவை" **தேவன் காண்கின்ற விதமாய்** நாம் கண்டிட முடியும். அப்போது மாத்திரமே "பாலிய உறவு.... திருமணத்தில் பூர்த்தி செய்யப்படுவது" பரிசுத்தமுள்ளதாயும் நியாயப்பூர்வமாயும் நாம் கண்டிட முடியும்.

பாவ உலகத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக, ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்த ஆதாமும் ஏவாளும் ஒருவருக்கொருவர் பால் உறவின் ஐக்கியத்தில் திருப்தியாய் வாழ்ந்தார்கள்! என்று பாவம் நுழைந்ததோ, 'அந்த பாவத்தை முன்னிட்டு' திருமணத்தை அவசியமான தேவையாய் வேதம் குறிப்பிடுகிறது. இதுபோன்ற நிலை, புருஷர்களுக்கே அதிக தொடர்புடையதாகும். ஏனெனில் திருமணம் ஆகாத ஒரு இளைஞனுக்கே, பாலியல் பாவத்தில் வீழ்ச்சியடைய அதிகமான வாய்ப்புள்ளது (1கொரி.7:2). தொடர்ச்சியாக பாலிய சிந்தையில் 'வேட்கை கொள்வதைவிட' அதுபோன்ற மனிதன் "**திருமணம் செய்து கொள்வது நல்லது**" என்றே வேதம் புத்தி சொல்லுகிறது. ஆகவே பாலியல் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கு, தேவனால் நியமிக்கப் பட்ட தூய்மையான நியமனம், திருமணமே ஆகும் (1கொரி.7:9).

**திருமண வாழ்வில் அடங்கியிருக்கும் தாற்பரியங்கள்**

திருமணத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவை.... "கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவாக" வேதாகமம் உருவகப் படுத்தி கூறுகிறது (எபேசியர்.5:22,23).

இந்த எபேசு நிருபத்தில், மனைவியர்கள் தங்கள் சொந்த புருஷர்களுக்கு கீழ்படிய வேண்டுமென புத்தி சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால், புருஷனானவன் தன் மனைவிக்கு தலையாய் இருக்கும்படியே தேவனால் நியமிக்கப்பட்டுள்ளான் எனவும் கூறுகிறது. அதுபோலவே மனைவியானவள் தங்கள் புருஷர்களுக்கு "எல்லாவற்றிலும்" கீழ்ப்படிய வேண்டும் எனக்கூறிவிட்டு... "சபை கிறிஸ்துவுக்கு கீழ்ப்பட்டிருக்கிறதுபோல" என மேற்கோள்காட்டி கூறுவதைப் பாருங்கள். இன்று, தங்கள் சொந்த புருஷர்களுக்கு **இத்தனை சீரான கீழ்ப்படிதல்** நம் நாட்களில் வாழும் பெண்களுக்கு சாத்தியமாய் தோன்றுவதில்லை! ஆனால், இவைகளை தேவனே கட்டளை

யிட்டுள்ளார் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். ஒரு நல்ல குடும்பத்திற்கு தேவன் நிலைநிறுத்திய இந்த கட்டளைக்கு எந்த வீடு இணங்க மறுக்கிறதோ, அங்கு கண்டிப்பாக தீய விளைவுகள் ஏதாகிலும் ஒரு ரூபத்தில் வந்து சேரும்!

**ஆகவே ஒரு விசுவாசியான கிறிஸ்தவ பெண், திருமண வாழ்விற்கு தேவன் நியமித்த கட்டளைகளுக்கு கீழ்ப்படிய மனதில்லாதவளாயிருந்தால், அது போன்றவர்கள் திருமணம் செய்யவே கூடாது!**

இவள், திருமணம் செய்து விட்டு தேவனுடைய கட்டளைக்கு தொடர்ச்சியான கீழ்ப்படியாமைக்குள் வாழ்வதைவிட, திருமணம் செய்யாதிருப்பதே இவளுக்கு நலம்!

மனைவியின் கீழ்ப்படிதலை வைத்து, ஒரு புருஷனானவன், தன் மனைவியிடம் என்ன வேண்டுமானாலும் கூறி அவளை கீழ்ப்படிய வைப்பதற்கு, தனக்கு தேவன் "லைசன்ஸ்" கொடுத்து விட்டதாக எண்ணாதிருக்கக்கடவன்! ஏனெனில், இந்த வசனம் தொடர்ந்து கூறுகையில் "கிறிஸ்து சபையை நேசித்து, அதற்காகத் தம்மையே ஒப்புக் கொடுத்தது போல" கணவனும் தன் மனைவியை நேசிக்க வேண்டும் என புத்திகூறுகிறது. இந்த வசனம் தெளிவாக கூறும் செய்தி என்னவெனில், **கணவன் சுயநலமற்ற–தியாக அன்பையே தன் மனைவியிடம் காட்ட வேண்டும்** எனவும், பொருட்களை வாங்கித் தந்தல்ல, மாறாக.... தன் மனைவியரின் நலனுக்கென "**தங்களையே தந்து**" ஒப்புக்கொடுக்க வேண்டும் என போதிக்கிறது! கிறிஸ்து, சபையை மாறாத அன்பினால் நேசிப்பது போல் கணவனும் தன் மனைவியை மாறாத அன்பினால் நேசித்திட வேண்டும். பதிலுக்கு அவன் அன்புகூரப்படாவிட்டாலும், அவளை மாறாத அன்புடன் நேசிக்க வேண்டும்! கிறிஸ்துவின் அன்பை சற்று தியானித்துப் பாருங்கள். தன் சீஷர்களின் பாதங்களை கழுவுவதற்கும், அவர்களுக்காக மரிப்பதற்கும், கிறிஸ்துவின் அன்பு நடத்திச் சென்றது! மேலும் இதே அதிகாரத்தில், கணவன் தன் சொந்த சரீரத்தை நேசிப்பது போலவே தன் மனைவியையும் பாரமரித்து பாதுகாக்க வேண்டும் எனவும் வாசிக்கிறோம்.

**இதுபோன்ற வேத வாக்கியங்களின் கட்டளைகளுக்கு ஒருவன் கீழ்ப்படிந்து நடக்க மனதில்லையென்றால்.... அதுபோன்றவன் திருமணம் செய்யா திருப்பதே அவனுக்கு நலம்!**

நாம் எபேசிய நிருபத்தில் கண்ட சத்தியங்கள் அனைத்தும் "ஒவ்வொரு கிறிஸ்தவ கணவனும் மனைவியும், கிறிஸ்துவையும் அவரது சபையையும் தங்களுடைய அளவிற்குப் பிரதிபலித்திட வேண்டும்" என்ற அவரது நோக்கத்தையே நமக்கு வெளிப்படுத்துகிறது. தம்பதியரின் இசைவான குடும்ப வாழ்க்கை "மேற்கண்ட தெய்வீக

உறவின் வசீகரத்தையே" வெளிப்படுத்துவதாய் இருக்க வேண்டும்.

எபேசியர் 5:18-ம் வசனத்தில், **நாம் பரிசுத்தாவியினால் நிறைந்திருக்க வேண்டுமென்ற** கட்டளை தரப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தை தொடர்ந்துதான், கணவன்-மனைவி உறவைக் குறித்து வாசிக்கிறோம். இதில் நாம் விளங்கி கொள்வது என்னவென்றால், "நம் குடும்பத்தில் கிறிஸ்துவைப் போன்ற சுபாவ பழக்கங்களை" நாம் பெற்றுக் கொள்ளும் பொருட்டே ஆவியானவரின் நிறைவு நமக்கு வழங்கப்படுகிறது. மேலும் நம் திருமண வாழ்வில், தேவனை மகிமைப்படுத்தி வாழவே, நாம் ஆவியினால் நிரப்பப்பட வேண்டியது அவசியமாகும்!

தனக்கு ஒரு வாழ்க்கைத் துணையை தேடுவதற்கு முன்பாக, ஒவ்வொரு கிறிஸ்தவனும் "மேலே குறிப்பிடப்பட்டது போன்ற ஒரு **நல்ல குடும்பத்தைக் கட்ட வேண்டும் என்ற விருப்பம்** தனக்குள் இருக்கிறதா?" என்ற கேள்வியை தனக்குள் கேட்டுப் பார்க்க வேண்டும். இதுபோன்ற வாஞ்சைகூட இல்லாத ஒருவன், தன் திருமணத்திற்கு தேவனுடைய வழிநடத்துதலை எங்ஙனம் எதிர்பார்த்திட முடியும்? மாறாக, உங்கள் திருமண வாழ்வின் நோக்கம்: மெய்யாகவே வேத வாக்கியங்களின்படி இருக்குமென்றால், உங்களைக் குறித்த தேவனுடைய பரிபூரண சித்தத்திற்குள் அவர் நடத்துவது மாத்திர மல்லாமல்.... அதுபோன்ற ஒரு நல்ல இல்லம் கட்டப்படுவதற்கு தேவையான பெலனையும் அளிப்பார்!

## அன்னகராக இருப்பதும் பாக்கியமே

வேதாகமம், திருமணத்தின் மகிமையைப் பேசுவதோடு நின்று விடாமல், திருமணம் செய்யாமல் அன்னகராய் இருப்பதில் உள்ள சிறப்புகளையும் எடுத்து கூறுகிறது! ஆகவே, வேதாகமத்தின் சம நிலைக்கு உட்பட, இதைக்குறித்தும் கூறவேண்டியது அவசியமாயிருக்கிறது.

அன்னகரைப் பற்றிய செய்தியை 1கொரிந்தியர் 7-ம் அதிகாரத்தில் பவுல் விவரித்துள்ளார். இந்த அதிகாரத்தையும், ஆண்டவர் இதைக் குறித்து பேசிய மத்தேயு.19:12-ம் வசனத்தையும் கோடிட்டு.... திருமணம் ஆகாமல், அன்னகராய் கர்த்தருக்கு ஊழியம் செய்வதே விரும்பத்தக்கது என்றும்...

> **திருமணமானவர்கள் ஊழியத்திற்கு அழைக்கப்படுவதைவிட, திருமணமாகாதவர்கள் ஊழியத்திற்கு அழைக்கப்படுவதே உயர்ந்த ஆவிக்குரிய அழைப்பாகும் எனவும் இன்று பொதுவான கருத்து வைத்திருக்கிறார்கள்!**

ஆனால், வேதப்புத்தகம் இதைக் குறித்து கூறுவதை நன்கு விளங்கிக் கொள்வதே சாலச் சிறந்தது ஆகும். 1 கொரிந்தியர் 7-ம் அதிகாரத்தை பவுல் எழுதிய போது, அந்த அதிகாரத்தின் நான்கு இடங்களில் சில குறிப்புகளை குறிப்பிட்டு, "இது குறித்து கர்த்தருடைய மனதை நான்

அறியேன், ஆகிலும் நான் கருதியதையே எழுதுகிறேன்" என கோடிட்டு கூறியுள்ளார் (வசனம்.6,12,25,40). பவுல் இந்த அதிகாரத்தில் தன்னைப் போலவே எல்லா கிறிஸ்தவ புருஷர்களும் திருமணம் செய்யாதிருக்க விருப்பம் கொண்டிருந்தாலும், "அவரவர்களுக்கு சொந்தமான குறிப்பிட்ட வரங்களை (திருமணம் செய்யாதிருக்கும் வரத்தை) தேவன் வழங்கியிருக்கிறார்" என்ற சத்தியத்தையும் பவுல் ஏற்று, ஒப்புக் கொண்டார் (வசனம்.7). **இந்தப் பகுதியை "வரம்" என பவுல் குறிப்பிடுவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.** அதாவது, இந்தப் பகுதியை ஒருவரும் தங்கள் திறமையைக் கொண்டு சாதிக்கும் பகுதியாக கூறாதபடி "வரம்" என்றே குறிப்பிட்டுள்ளார். இயேசுவும் அவ்வாறே மத்தேயு 19:11-ம் வசனத்தில் "வரம்" எனக் குறிப்பிட்டார். இயேசு கூரும்போது "எல்லோருமல்ல.... **சிலருக்கு** இவ்வாறு இருக்கும்படி அருளப் பட்டிருக்கிறது" என்றே கூறினார். எனவே திருமணம் செய்யாமல் தனித்திருக்க கூடிய திறனை தேவனிடத்தி லிருந்து மாத்திரமே ஒருவன் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை இயேசு தெளிவுபடுத்தினார் (மத்தேயு.19:12). திருமணம் செய்யாது இருப்பதில் யாதொரு விசேஷித்த தன்மையும் இல்லை. ஆகிலும், **அது சிலருக்கு மாத்திரமே தரப்பட்ட தேவனுடைய அழைப்பு** என்பதை நாம் தெளிவாய் காண்கிறோம். ஆகவே, இதுபோன்ற கட்டளை தேவனிடமிருந்து தனிப்பட்ட விதத்தில் உங்கள் இருதயத்தில் அவர் பிறப்பிக்காத பட்சத்தில், "நீங்கள் திருமணம் செய்ய வேண்டும்!" என்பதையே தேவன் உறுதி செய்வதாக அறிந்து கொள்ள வேண்டும்.

திருமணம் செய்யாமல் தனித்திருக்க சிந்திப்பவர்கள், அவ்வித வாழ்க்கையை தாங்கள் தெரிந்து கொள்வதற்குரிய காரண காரியங்களை சற்று நிதானித்து ஆராய வேண்டும். தாங்கள் திருமணம் ஆகாதிருப் பதற்கு தெரிந்து கொண்ட காரணங்கள் 1) தனித்திருக்க விரும்பும் சுயநலமா? 2) தன்னைக் குறித்து உயர்ந்த மனப்பான்மை கொண்டு, ஆண் இனத்தையோ அல்லது பெண் இனத்தையோ வெறுப்புடன் பார்க்கும் மனப்பான்மையா? 3) "என் விருப்பத்திற்கு ஏற்றபடி கிடைக்கவில்லை! நெருங்கி வந்தவர்களோ, என் விருப்பத்திற்குரிய வர்களாயும் இல்லை" போன்ற சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட விரக்தியோ? இவ்வாறெல்லாம் உங்கள் காரணங்கள் இருந்தால், நீங்கள் எடுத்த முடிவு தவறு! இதற்கு மாறாக, தடங்கல் ஏதும் இல்லாமல் அதிகமான சுதந்திரத்தோடு நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்திட விரும்பும் விருப்பமாய் இருந்தால்.... 'குறைந்தபட்சம்' இதுபோன்ற நோக்கத்தி லாவது தூய்மை உண்டு என கூறலாம். இருப்பினும், இவ்வித தனித்து வாழ்வதற்குரிய அழைப்பானது, தேவனிடத்திலிருந்து மாத்திரமே வரவேண்டும். இப்படித்தான் அப்போஸ்தலனாகிய பவுலும்

*அழைக்கப்பட்டிருந்தார் (1கொரி.7:32,33; 9:5).*

**திருமண உறவில்லாமல் தனித்து இருப்பதுதான் பரிசுத்த ஜீவியத்திற்கு கைகொடுக்கும்!.... என்ற எண்ணம் முற்றிலும் பிழையானதாகும்.** *திருமணமான ஒரு நபரைக் காட்டிலும் திருமணமாகாத ஒரு நபர் அதிகமான தேவ பணியில் ஈடுபட முடியும் என்பது உண்மைதான்! ஊழியத்தை தவிர, பரிசுத்த வாழ்விற்கு இது பொருந்தாது! ஏனோக்கை பாருங்கள்: "அவன் 300- வருஷம் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்து குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்" என வாசிக்கிறோமே (ஆதி.5:22). தேவனோடு சஞ்சரித்த அவனது செயல், அன்றாட வழக்கத்திற்குரியதாகவே இருந்தது! இவ்வாறு அவன் தேவனோடு இசைந்து நடந்த வாழ்க்கை, திருமணம் ஆனபிறகுதான் நடந்தது! அதுவும், தன் முதல் குமாரனை பெற்றபிறகுதான் நடந்தது! தேவனோடு சஞ்சரித்த அவனது வாழ்க்கை, திருமண வாழ்வில் தன் பிள்ளைகளோடு கொண்ட அவனது ஈடுபாட்டிற்கு இடையூறு ஏதும் ஏற்படுத்தவில்லை. அதேபோல, தன் குடும்பம் தன் பொறுப்பு ஆகிய யாதொன்றும், அவன் தேவனோடு இசைந்து நடப்பதற்கு இடையூறாய் இருக்கவில்லை!*

*எனவேதான் 'எல்லா விசுவாசிகளும்' திருமணம் இல்லாமலே அன்னகராய் வாழவேண்டுமென பவுல் பொருள்படுத்தவில்லை. இதை பவுல், தானே கூறியிருக்கிறார்: "திருமணம் செய்யாமல் இருப்பதை கிறிஸ்தவ வாழ்க்கையின் பிரமாணமாக பிரசங்கிப்பவர்கள்* **பிசாசின் உபதேசத்தை** *பறைசாற்றுகிறார்கள்" என இடித்துரைத்தார் (1தீமோ. 4:1-3). ஆகவே பவுல் 1 கொரி 7:25-28 வசனங்களில் கூறிய வாசகங்கள், அங்கு அவர் எடுத்துரைக்க வந்த பொருளோடு மாத்திரமே ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். A.N.ட்ரைடோன் என்ற பரிசுத்தவான் பவுலின் வாசகங்களை சற்று விரிவாக கீழ்கண்ட விதத்தில் கூறினார்: "திருமணம் ஆகாமல் இருப்பது நல்லது என்ற கருத்தை ஒரு பிரமாணமாய் நான் வைத்திட விரும்பவில்லை. ஆகிலும் நான் கூற வந்த அர்த்தத்தை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் வாழும் இந்த காலம் கிபி.55-ம் ஆண்டு ஆகும். நம்மைச் சூழ துன்பமும் உபத்திரவமும் நிறைந்துள்ளது. உபத்திரவம் செய்கிறவர்கள், தான் துன்புறுத்த விரும்புகிறவர்களை அடைந்திட முடியாத பட்சத்தில், அந்த குடும்பத்தில் உள்ள மற்றவர்களை உபத்திரவம் செய்வதினிமித்தம், மறைமுகமாய் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றுகிறார்கள். ஆகவே, மற்றவர்களைவிட திருமணமானவர்களுக்கே அதிகமான உபத்திரவமும் வேதனையும் சார்ந்திருக்கிறது! இந்த உபத்திரவங்களிலிருந்து உங்களைத் தப்பிக்கவே நான் விரும்புகிறேன். ஆகவே தான் 'இப்போது' திருமணம் வேண்டாம் என புத்தி சொல்லுகிறேன். அதே சமயத்தில், திருமணத்தை 'பாவமென' என்னால் சொல்ல இயலாது! நான் சொல்ல விரும்புவதெல்லாம்* **இந்த**

**காலத்தில் திருமணம் செய்வது** *'உபத்திரவத்தை விலை கொடுத்து வாங்கியது போலாகும்'. இந்த உபத்திரவத்திலிருந்து உங்களை விடுவித்து காக்கவே, இவைகளை உங்களுக்கு நான் எழுதினேன்" என A.N.ட்ரைடோன் நேர்த்தியாய் விவரித்துள்ளார். இன்றும்கூட, உபத்திரவங்களும், யுத்தங்களும் அல்லது இதற்கு இணையான நெருக்கங்களும் நிறைந்த நாட்களில் வாழும் விசுவாசிகளுக்கு பவுலின் இந்த அறிவுரை சாலவும் ஏற்புடையதாகும்!*

*நாம் சொல்ல விரும்பும் காரியம் யாதெனில், தேவன் நமக்கென நியமனம் செய்யாத யாதொன்றையும், நாமாக ஒருபோதும் முயற்சித்து பெறக்கூடாது! நாம் தனித்திருக்க வேண்டுமா? அல்லது திருமணம் செய்து வாழ வேண்டுமா? ஆகிய நம் ஒவ்வொருவருக்குரிய ஜீவியத்தை, தேவன் ஏற்கனவே நமக்கென திருவுளம் பற்றியிருக்கிறார். நமக்கிருக்கும் ஒரே கடமையெல்லாம், தேவனுடைய அந்த பரிபூரண சித்தத்தை அறிந்து, அதில் நடப்பது மாத்திரமே ஆகும்!*

**தேவனுடைய பரிபூரண சித்தம் அறிந்து கொள்வதற்கு, "என்னை திருமண மில்லாமல் தனியாய் இருப்பதற்கு அழைத்தாலும் நான் ஆயத்தம்!" என்ற மனப்பூர்வமான ஆயத்தத்தை நம் உள்ளத்தில் கொண்டிருக்க வேண்டும்.**

*இவ்வாறு ஏற்றுக்கொள்ளும் மனப்பூர்வமான ஆயத்தம் நம்மிடம் இல்லையென்றால் "எனக்கு திருமணமாகாதோ என்ற பீதியை!" நம் ஆண்டவருக்கு இணங்கி அவரிடம் ஒப்புக்கொடுக்காத பகுதியாகும். அவ்வித நிலையில், நாம் தேவனுடைய சித்தத்தை தொடர்ந்து அறிந்து வாழும் ஜீவியத்திற்கு, தேவனும் மறுத்து விடுவார்! மேலுமாய், பவுல் அப்போஸ்தலன் 1கொரிந்தியர் 7:29-36 வசனங்களில் கூறிய வாசகங்களை A.N.ட்ரைடோன் கீழ்கண்டவாறு தெளிவாய் விரிவாக்கம் செய்துள்ளார்: "கிறிஸ்தவ ஊழியத்திற்கும், சாட்சி பகர்ந்து வாழும் வாழ்க்கைக்கும், இப்பூமியில் நமக்கு கிடைக்கும் தருணம் சொற்ப காலமே ஆகும்! ஆகவேதான், இந்த உலகத்திற்கும், நம் சொந்த குடும்பத்திற்கும் எவ்வளவு பட்டும்படாமல் வாழ முடியுமோ, அந்த அளவே நாம் வாழ்ந்திட வேண்டும். ஏனெனில், இவையனைத்தும் தற்காலிகமானதாகும்.... ஆம், நித்திய மதிப்புடைய பணிகளே நமக்கு காத்திருக்கிறது! திருமணம் ஆகாதவர்கள் உணர்வதைவிட, திருமண மானவர்கள் "தங்கள் குடும்ப பொறுப்புகளை தவிர்க்க முடியாது இருப்பதை" அதிகம் உணர்வார்கள். உங்களுக்கு திருமணம் ஆகியிருந் தால், நீங்கள் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான கடமைகள் வீட்டில் காத்திருக்கும்! உங்களால், தடையேதும் இல்லாமல் தேவனுடைய ஊழியத்தில் கவனம் செலுத்துவது கடினம்! குடும்பத்தில் இவ்வாறாக நிலவும் வலிமையான காரணங்களின் நிமித்தம்,* **இளைஞனாகிய நீங்கள்**

**“திருமணத்தை தள்ளிப் போடுவதும்” நலமானது தான் (வசனம்.36).** திருமணம் ஆகாதவர்களுக்கு விசேஷித்த விதத்தில் அருளப்படும் ‘கிறிஸ்தவ ஊழியத்தின் சிலாக்கியத்தை’ சற்று மனதில் சிந்தித்துப் பாருங்கள்! திருமணம் இன்னமும் தாமதித்தால் நல்லதே என வருடங்களைத் தள்ளி போடுகிறவர்களாய் நீங்கள் இருந்தால் (வசனம்.36) **கர்த்தருடைய பணிக்கென மகத்தான ஊழியங்கள்** உங்களுக்காக காத்திருக்கும்! இவ்வாறெல்லாம் கூறி, உங்களுடைய சுயாதீனத்தை நான் பறிப்பதாக தயவு செய்து எண்ணிவிடாதீர்கள் (வசனம்.35). மாறாக, நீங்கள் ‘சிறந்ததை காணும்படி’ உதவுவதற்கே இவைகளைக் கூறுகிறேன். சூழ்நிலைகளோ அல்லது உங்கள் சுபாவ உணர்வுகளோ, உங்களை திருமணம் செய்யும்படி நடத்தினால், தாராளமாய் திருமணம் செய்யுங்கள்! திருமணம் “தேவன் அருளிய நன்மையான ஈவு!” (வசனம்.36) என A.N.ட்ரைடோன் அழகுபட விவரித்துள்ளார்.

> **இவ்வாறு, ஒருவன் திருமணம் ஆகாதிருப்பதற்குரிய அழைப்பு தேவனிடமிருந்து வரக்கூடிய ஈவு! என துவங்கிய பவுல்.... முடிவில், திருமணமும் தேவன் அருளிய ஈவு என்றே முடிக்கிறார்! இவ்வாறு, வெவ்வேறான இரு விஷயங்களில் கருத்து கூறுகையில், பவுல் சமநிலை கொண்டிருப்பதைப் பாருங்கள்!**

அன்னகர்களாய் இருப்பதைக் குறித்து ஆண்டவர் இயேசு பேசி முடித்தவுடனே, சிறு பிள்ளைகளைக் கையில் ஏந்தி ஆசீர்வதித்ததையும் பாருங்கள்! இவ்விதமாய், திருமணத்தையும் ஆண்டவர் மனம் ஒப்ப ஏற்றுக் கொண்டார்! என்பதைக் காண்பது மிக முக்கியம் ஆகும் (மத்.19:10,15). இதுவே வேதாகமம் நமக்கு வழங்கும் நேர்த்தியான சமநிலை!

## ஒரு மனுஷனை திருமணமே முழுமைப்படுத்துகிறது

தேவன் ஒரு மனிதனை “தனித்திருக்க அழைப்பது” வெகு அபூர்வமே ஆகும். இதை தேவனே குறிப்பிட்டு, ஒரு மனுஷன் திருமணத்திற்குப் பிறகுதான் முழுமைபெற்றதாக குறிப்பிட்டார்! ஆதி.2:18-ம் வசனம் “மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல. அவனுக்கு ஏற்ற துணையை உருவாக்கி, முழுமை பெறச் செய்வேன்” என்பதாக பெர்கிலி மொழிபெயர்ப்பு கூறுகிறது.

வேதப்புத்தகத்தின் ஆரம்பம், திருமணத்தில் துவங்கி (ஆதி.2:18-25) திருமணத்தில் முடிவடைவது தனிச்சிறப்பாகும்! (வெளி.19:7-9;21:2-10). மேலும் இயேசு செய்த முதல் அற்புதம் ஓர் திருமணத்தில்தான் நடந்தது என்பதைப் பாருங்கள்! (யோவான் 2:1-11). வாலிபத்தின் கற்பு ஒழுக்கம் தெய்வ பயத்துடன் பரிசுத்தமாய் காக்கப்பட்டு, முடிவில் பரிசுத்த விவாகம் கண்டடைவதே சீரிய கிறிஸ்தவ வாழ்க்கையாகும்!

*ஆகவே, விரிவாக்க மொழிபெயர்ப்பின்படி* "**திருமணம், கனமுள்ளதாய் நிறைவேறப்படட்டும்!** *திருமணம், சிறப்பான தகுதியாய் இருக்கட்டும்! திருமணம், விலையேறப்பெற்றதாய் இருக்கட்டும்! திருமணம் விலை மதிப்பில்லா, விசேஷித்த பிரியமுள்ளதாயும் இருக்கட்டும்!*" ***(எபி.13:4).***

5

உங்களுக்கு ஏற்றார்போல் உள்ள சிறந்த நபரிடம் 'தேவன் மாத்திரமே' நடத்திட முடியும்! அவருடைய சித்தத்திற்கு நீங்கள் செவிகொடுக்க விருப்பம் கொண்டவராயிருந்தால், உங்களை நடத்துவதற்கு தேவனும் அதிக ஆர்வம் கொண்டவராயிருக்கிறார்!

தன்னுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் தேவன் ஒரு தீர்மானம் வைத்திருக்கிறார் என்றே வேதாகமம் போதிக்கிறது (எபே.2:10). இந்த வசனம் உண்மையாய் இருக்கும் பட்சத்தில் "நீங்கள் திருமணம் செய்ய வேண்டுமா? வேண்டாமா? என்பதை தேவன் முன்கூட்டியே தீர்மானித்திருக்கிறார்" என்பதையும் நீங்கள் விசுவாசிக்காமல் இருக்கவே முடியாது! உங்கள் திருமணத்தை அவர் தீர்மானித் திருந்தால், **யாரை திருமணம் செய்ய வேண்டும்?** என்பதையும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் தீர்மானித்திருப்பார். ஆனால், தனக்கு கீழ்படியும்படி தேவன் ஒருவரையும் நிர்ப்பந்தம் செய்வதில்லை. ஆகவே, ஒருவன் தேவனுடைய திட்டத்தை தள்ளி அசட்டை செய்து விட்டு... தேவனுடைய சித்தத்திற்கு புறம்பான திருமணத்தை செய்வது, மிக எளிதே ஆகும்!



உங்கள் ஆத்துமத்துக்குரிய இரட்சிப்பின் முக்கியத்துவத்தை அடுத்து, மிக முக்கியமான அடுத்த தீர்மானம் "உங்கள் வாழ்க்கைத் துணையையே தெரிந்து கொள்ளும்" நிகழ்ச்சியே ஆகும். இவ்வித தேர்வில், நீங்கள் தவறு செய்வது எவ்விதத்திலும் சரியானதல்ல! ஏனெனில், **"இது உங்கள் வாழ்வின் ஒரு முறை தீர்மானம் ஆகும்!"** இந்த தீர்மானம் எடுத்த பிறகு, மீண்டும் அதை மாற்றிக் கொள்ள ஒருவராலும் கூடாது. ஓர் தவறான வேலையை நீங்கள்

தேர்வு செய்திருந்தால், அதை திருத்திக்கொள்ள இன்னமும் வாய்ப்பு இருக்கிறது. அதுபோலவே, வாழ்வின் பல்வேறு தீர்மானங்களை நீங்கள் திருத்தி அமைத்திட முடியும்!

**ஆனால், தேவ சித்தத்திற்கு புறம்பாக நீங்கள் திருமணம் செய்துவிட்டால், அந்தப் பிழையை ஒருபோதும் திருத்தி அமைக்க முடியாது!**

வேண்டுமானால், நீங்கள் முயற்சித்து, உங்கள் தவறான தேர்வின் நிலையில் ஓரளவு நன்மையை கொண்டுவர முடியும்! ஆகவே, திருமணத்தில் தேவனுடைய சித்தத்தை இழப்பது பெரும் துயரமான சம்பவமே ஆகும்!

தேவனுடைய நேரத்திற்கு காத்திராமலே! அவருடைய சித்தத்தை தேடாமலே! திருமணத்திற்கு துரிதம் கொண்ட எண்ணற்றோர் 'இன்று அமர்ந்து' மனந்திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்! இவர்களின் மாதிரி, வாலிப பிள்ளைகள் இப்பகுதியில் ஜாக்கிரதையாக நடந்து கொள் வதற்கு எச்சரிக்கையாய் அமையட்டும்!

தேவனுடைய சித்தத்திற்கு புறம்பே வெளியேறி திருமணம் செய்வதைக் காட்டிலும், திருமணம் செய்யாமல் தனித்து இருப்பதே ஒருவனுக்கு நலம்! ஒருவன் தேவனுடைய பரிபூரண சித்தத்தை தங்கள் திருமண வாழ்வில் இழந்த பிறகு, மெய்யாகவே மனந்திரும்பினால்... தேவன் தமது இரக்கத்தை முன்னிட்டு அவனை ஆசீர்வதிக்கக் கூடும். ஆகிலும், மெய்யான மகிழ்ச்சியும் ஆசீர்வாதமும் "**தேவனுடைய பரிபூரண சித்தத்தின் மையத்தில்**" இருப்பவனுக்கு மாத்திரமே உரியதாகும்.

**ஆதாமுக்கு ஒரு துணையை தேவன் தர விரும்பியபோது, 10 ஸ்திரீகளை உருவாக்கி, அதில் அவன் விரும்பிய ஒரு ஸ்திரீயை தேர்ந்தெடுக்க தேவன் வகை செய்யவில்லை! ஒரே ஒரு ஸ்திரீயை மாத்திரம் உருவாக்கி, அவளை ஆதாமிற்கு தந்தார்.**

இவ்விஷயத்தில் ஆதாமிற்கென எவ்வித தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு தரப்படவில்லை! இன்றும் அவர் மாறாதவராயிருந்து, கீழ்ப்படிதல் உள்ள தன் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் **ஒரே ஒரு நபரையே** தேவன் முன்குறித்து வைத்திருக்கிறார்! இந்த போதகங்களின் கருத்துக்களை நம்மால் முழுவதும் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கலாம். தேவனுடைய சர்வ வல்ல ஆளுகைத்துவத்தின் போதகத்தோடு, மனுஷனுக்கு வழங்கப்பட்ட "சுயாதீனமாய் தெரிந்து கொள்ளும்" உபதேசத்தையும் சேர்த்து வைத்து புரிந்து கொள்வது சற்று கடினமேயாகும்! இருப்பினும், இவ்வித போதகங்கள் **வேதவாக்கியங்கள்** என்பதை நாம் அறிவோமாக. அவருடைய தீர்மானத்தை நாம் ஏற்றுக்கொண்டால், தேவன் தெரிந்து கொண்ட நபர் மிகச் சிறந்தவராயும், அவரால் ஆயத்தம் செய்யப்பட்டவராயும்,

*எவ்வகையிலும் பிரியமான..... 'ஆதாமுக்கு ஏவாளைப் போல்' இருப்பதை நாம் கண்டுபிடிக்க முடியும்!*

*ஈசாக்கிற்கு பெண் கொள்ளச் சென்ற ஆபிரகாமின் ஊழியக்காரன் தேவனைப் பற்றிய இந்த உண்மைகளை நன்கு அறிந்தவனாய் இருந்தான். ஆகவேதான் அவன், "சிறந்த பெண்களிடத்தில் என்னை நடத்திச் செல்லும்! அவர்களில் ஒரு பெண்ணை ஈசாக்கிற்கு ஏற்ற துணையாய் நான் தேர்ந்தெடுப்பேன்!" என்று ஜெபிக்கவில்லை. அதற்கு பதிலாக "கர்த்தாவே 'நீர் ஏற்கனவே தெரிந்து கொண்டு' ஈசாக்கிற்கு மனைவியாக* **நியமித்த பெண்ணிடம்** *என்னை நடத்திச் செல்லும்!" என்றே ஜெபம் செய்தான்(ஆதி:24-14,44). இவனுடைய ஜெபத்திற்கு தேவன் பதில் அளித்தபோது* **"கர்த்தர் நடத்தினார்!" என மெய்யாகவே ஈசாக்கினால் சொல்ல முடிந்தது** *(ஆதி.24:27). இன்று 'கர்த்தர் நடத்தினார்' என்ற பக்தி வார்த்தையை போலியாக பயன்படுத்துவதைப் போல் கொண்டதல்ல இவனது வார்த்தைகள்! அவன் கூறியது நூற்றுக்கு நூறு உண்மையே ஆகும், போலி அல்ல! இவ்வாறாகவே, எல்லா கிறிஸ்தவ திருமணங் களும் "கர்த்தர், ஆம்.... கர்த்தர் மாத்திரமே எங்களை நடத்தினார்!" என இருக்குமென்றால், அது எத்தனை சீரும் சிறப்புமாய் இருக்கும்!*

**பெற்றோர்களின் தேர்வா? அவரவர் முயற்சித்த தேர்வா?**

*தான் தெரிந்து கொண்ட நபரிடம், நேரடியாகவோ அல்லது பெற்றோர்கள், நண்பர்கள் மூலமான மறைமுகமாகவோ தேவன் உங்களை நடத்த முடியும்!*

*வேதாகமத்தில், திருமணத்திற்கு தேவன் வழிநடத்திய ஒரே ஒரு நிகழ்ச்சி, நாம் மேற்கண்ட ஈசாக்கு-ரெபெக்காள் நிகழ்ச்சி மாத்திரமே ஆகும். இந்த திருமணத்தில், ஆபிரகாம் (ஈசாக்கின் அப்பா) ரெபெக்காளை பார்க்கவில்லை.... அவனது ஊழியக்காரனுக்கும் ரெபெக்காளைப் பற்றி யாதொன்றும் தெரியாது! அதேபோல, அந்த திருமணம், அந்தப் பையனும் அந்தப் பெண்ணும் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட திருமணமும் அல்ல! ஏனெனில், இதற்கு முன்பு ஈசாக்கும் ரெபெக்காளும் ஒருவரையொருவர் சந்தித்ததுகூட இல்லை! ஆகவே* **இந்த திருமணம், தேவனால் ஒழுங்கு செய்யப்பட்டது** *என்றே கூற வேண்டும்!*

*இந்த நிகழ்ச்சி நமக்குப் போதிக்கும் முக்கியமான உண்மை யாதெனில்.... 'எந்த வழிமுறைகளைக் கையாண்டு' தேவன் தன் இரு பிள்ளைகளையும் இணைத்தார் என்பது காரியமல்ல!* **மாறாக, தேவனே அவர்களை ஒருவருக்கொருவர் நடத்தினார்!** *ஆகவே, நமது பெற்றோர்கள் மூலம் நடத்தினாரா? நண்பர்கள் மூலம் நடத்தினாரா? அல்லது நாமாக நடத்தப்பட்டோமா? என்பதல்ல.... இங்கு முக்கியமாய் இருப்ப தெல்லாம், இவ்வாறு நடத்தப்பட்டு கண்டடைந்த நபர்* **"தேவன் எனக்கென தெரிந்து கொண்ட நபர்தானா?" என்பதே முக்கியமாகும்.**

**உங்கள் தேவை இன்னது என்பதில் தேவன் ஆர்வம் உள்ளவராயிருக்கிறார்**

*அநேக இளம் வாலிப விசுவாசிகள், இன்றைய கலாச்சாரம் மற்றும் ஜாதி போன்றவைகள்.... தங்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேடுவதற்கு தடையாக இருக்கிறது என மனம் புழுங்குகிறார்கள்! ஆனால், இந்த வாலிப உள்ளங்களுக்கு "அத்தனை பிரச்சனையையும் ஒன்று சேர்த்து குவித்தாலும்* **இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தேவனே பெரியவர்**" *என்பதை மறந்து விடுகிறார்கள்!*

*இன்னும் சிலருக்கு, தங்கள் வாழ்வின் பிரச்சனைகளுக்காக தேவன் எவ்வித ஆர்வமும் எடுத்துக் கொள்ளமாட்டார் என்ற இரகசியமான அச்சமும் மனதில் வைத்திருக்கிறார்கள். இதை அவர்கள் தங்கள் வார்த்தைகளில் கூறாவிட்டாலும், அவர்களது நடவடிக்கைகள் "அவர்களின் மனதை" வெட்ட வெளிச்சத்திற்குள் காட்டிக் கொடுத்து விடுகிறது!*

*இதுபோன்ற இளம் வாலிபர்களுக்கு நான் கூற விரும்பும் மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால் "தேவன் உங்களுக்காகவும், உங்களைக் குறித்த காரியங்களுக்காகவும் மிகுந்த கரிசனையாய் இருக்கிறார்!" என்ற செய்தியே ஆகும் (1பேதுரு.5:7).*

> **ஆதாமுடைய தேவையை உணர்ந்து, அவனுக்கு ஏவாளாகிய ஒரு ஸ்திரீயை கொண்டு வந்து நிறுத்தியது "தேவன்தான்" என்பதை மறந்து விடாதீர்கள் (ஆதி.2:18). பார்த்தீர்களா, இந்த ஆதாம் தேவனிடம் சென்று "தனக்கு ஒரு மனைவி வேண்டும்" என ஒரு முறைகூட கேட்கவில்லையே! ஆகிலும், தேவன் ஆதாமின் தேவையை அக்கறையுடன் விசாரித்து பூர்த்தி செய்தார்! அந்த நல்ல தேவன் உங்கள் தேவைகளையும் அறிந்து பூர்த்தி செய்வார்!**

*ஆகவே, தேவன் மீது நம்பிக்கையாய் இருந்து, அவரே உங்களை நடத்துவார் என பொறுமையுடன் காத்திருங்கள்!* **இளைப்பாறுதலற்ற பதற்றம்** *யாதொன்றும் உங்களுக்கு உதவிடாது! இந்த உண்மையை நேர்த்தியாய் சித்தரிக்கும் சம்பவமே, தேவன் ஆதாமை "நித்திரையில் இருக்க வைத்த" சம்பவமாகும். ஒரு இளைப்பாறுதலான நித்திரையில் இருந்த ஆதாமை எழுப்பியே, தேவன் ஏவாளை அவனுக்கு முன்பாய் கொண்டு வந்து நிறுத்தினார்! (ஆதி.2:21,22).* "**இளைப்பாறுதலுடன் இருப்பதையே**" *ஆதாமின் நித்திரை குறிப்பிடுகிறது. கர்த்தரை நம்பி இளைப்பாறுதலில் இருக்கவே தேவன் விரும்புகிறார்! எதுவரை? தேவன் உங்களுக்கு முன்பாக "உங்களுக்குரிய வாழ்க்கை துணையைக் கொண்டு வந்து நிறுத்தும் வரை!" இதுவே சத்தியமாய் இருந்தாலும், நாம் யாதொன்றும் செய்திடத் தேவையில்லை என பொருள்படுத்தக்கூடாது. இங்கு குறிப்பிடப்படும் 'இளைப்பாறுதல்' சரீரத்திற்குரிய வெளிப்புறமானது அல்ல! அது ஆவிக்குரிய உள்ளான இளைப்பாறுதல் ஆகும்!*

*இந்த இளைப்பாறுதலை நான் எப்படி பெற்றுக் கொள்ள முடியும்?*

*தேவனுடைய சித்தத்தை நாம் செய்தால் மாத்திரமே, இந்த இளைப் பாறுதலைப் பெற முடியுமென இயேசு கூறினார்: "என் நுகத்தை ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" என்றார். அதாவது, "என் விருப்பத்தை உங்கள் வாழ்க்கையில் பூர்த்தி செய்தால்.... உங்கள் ஆத்துமாவிற்கு நீங்கள் இளைப்பாறுதலை காண்பீர்கள்" என்றே இயேசு தெளிவுப்படுத்தினார் (மத்தேயு 11:29). 'ஆக்கா' இனத்தினருக்கு மிஷனெரியாக ஊழியம் செய்த....*

***ஜிம் எலியட் கூறும்போது "தேவனு டைய சித்தத்தில் அமைதியாய் நித்திரை செய்திட" நாம் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும்! என தெளிவுபட கூறினார். இவ்வாறாகவே நாம் இருந்து விட்டால், அவரது சரியான வேளையில், சரியான நபரிடம் தேவன் நம்மை நடத்துவார் என்பது அதிக நிச்சயமாகும்!***

*நாம் ஏற்கனவே, நம் ஜீவியத்தின் பல்வேறு பகுதிகளில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் செயல்பட்டவர்களாய் இருந்தால், "இந்த திருமண விஷயத்தில்" தேவனுடைய சித்தத்தை இழந்து விடுவோமா என்ற அச்சம் நமக்கு ஏற்படத் தேவையே இல்லை!*

*நமக்குத் தேவையாய் இருப்பதெல்லாம், தேவனை முழு இருதயத் தோடு விசுவாசிப்பதுதான்! "விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம். அவரிடத்தில் ஜெபம் செய்ய நெருங்கி வருபவன்.... அவரை கிட்டிச் சேர்பவர்களுக்கு நிச்சயமாய் பலன் அளிக்கிறார் என உறுதியாய் விசுவாசிக்க வேண்டும்" (எபி.11:6). உங்கள் வாழ்வைக் குறித்த அனைத்தையும் தேவசித்தத்தின்படி செய்திட மனதுள்ளவர்களாய் இருந்தால், கண்டிப்பாய் தேவன் உங்களுக்கென தெரிந்து கொண்ட நபரை உங்கள் முன் நிறுத்துவார்! அது ஒருவேளை, உங்கள் பெற்றோர் மூலமாகவோ, நண்பர்கள் மூலமாகவோ அல்லது தேவனே நேரடியாகவோகூட செய்து முடிப்பார்! ஆனால், எந்த முறையை தெரிந்து கொள்ள வேண்டுமோ, அதை தேவனிடமே விட்டு விடுங்கள்! எப்படியாகிலும், "உங்கள் மனவிருப்பத்தின்படி, தனது குறிப்பிட்ட காலத்தில்" ஏற்ற துணையை உங்களுக்குத் தந்தருளுவார்! (சங்.37:4).*

*இவ்வாறு தேவன், உங்களுக்கென தெரிந்து கொண்ட நபர், உங்கள் சொந்த ஸ்தல சபையில் இருக்கலாம்! அல்லது உங்கள் சபையின் மற்ற பகுதியில் உள்ளவர்களாய் இருக்கலாம்! அல்லது உங்கள் சபையின் கருத்துக்கு இசைந்த வேறொரு சபையில் இருந்தும் இருக்கலாம்! ஆகவே, உங்கள் சபை கூட்டங்களில் நீங்கள் சந்திக்கும் ஒருவரிடம் நீங்கள் கவரப்படுவதாக உணர்ந்தால், அதில் பிழையேதும் இல்லை. அது, தேவனே தனது தீர்மானத்தின்படி, நீங்கள் சந்திப்பதற்கு ஏற்படுத்திய சூழ்நிலையில் இருந்திருக்கக் கூடும்! இன்று அனேகர் பாலியத்திற்குரிய உணர்வுகளைக் குறித்து மாறுபாடான கருத்து கொண்டிருக்கிறபடியால் "ஒரு பரிசுத்தமான கூட்டத்தில், தனது*

*வாழ்க்கைத் துணையைக் கண்டு கொள்வதை" ஏதோ பரிசுத்த குலைச் சலாகவே காண்கிறார்கள்! ஆனால், உங்கள் வாழ்க்கைத் துணையை கண்டு கொள்ள, தேவன் நடத்தும் சூழ்நிலைகள் எதையும் பரிசுத்த குலைச்சலாக காணாதீர்கள்! தேவனுக்கு முன்பாக, இவ்வாறு நடைபெற்ற சந்திப்புகள் பரிசுத்தமானதே ஆகும். இருப்பினும், உங்கள் இருதயம் தூய்மையுள்ளதாய் இருக்க வேண்டும். உங்கள் நடத்தை உத்தம கிறிஸ்தவனுக்குரிய நடத்தையாகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால், மற்ற யாதொன்றைக் குறித்தும் நீங்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.*

*இவைகளை இங்கு குறிப்பிடுவதற்கு காரணம் என்னவெனில், சில விசுவாசிகள், தங்கள் கிறிஸ்தவ ஐக்கிய குழுவிலிருந்து தங்களுக்கு ஏற்ற துணை இருக்கக் கூடும் என்பதை காண்பதற்கு.... மற்ற விசுவாசிகள் என்ன சொல்லுவார்களோ என்ற அச்சத்தில், தடைபட்டு நின்று விடுகிறார்கள்! முடிவில், தங்களின் சடங்காச்சார கிறிஸ்தவ பெற்றோர்கள் நியமனம் செய்த* **"அவிசுவாசியை திருமணம் செய்யும்"** *துயரத்திற்கு ஆளாகிறார்கள். இவ்வாறாக, மனுஷர்களுக்கு இவர்கள் கொண்ட பயமானது.... முடிவில், சாத்தான் மறைவாய் விரித்து வைத்த வலைக்குள் வீழ்ந்திடும் கதிக்கு ஆளாகிறார்கள் (நீதி.29:25). இதன் விளைவாய், தேவனும் தேவனுடைய சபையும்* **"தரமுள்ள நல்ல குடும்பங்களை"** *ஏற்கனவே இழந்து விட்டார்கள்!!*

*சில விசுவாசிகளுக்கு, தங்கள் சபை சிறிதாய் இருப்பதினிமித்தமோ அல்லது மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களைக் கொண்ட வேறு சபைகளுக்குச் செல்ல வாய்ப்பு இல்லாததினிமித்தமோ.... தங்களுக்குரி யவர்களைக் கண்டு தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே இருக்கிறது. இன்னும் சிலருக்கு, சில வியாதியின் காரணங்கள், குடும்ப சூழ்நிலைகள், குடும்பத்தில் விளைந்த துரதிருஷ்டவசமான சம்பவங்கள் அல்லது கலாச்சார வேறுபாடுகள் ஆகியவைகளாலும் தடைகள் ஏற்பட்டு விடுகின்றன! இவ்வித சூழலுக்குள் சிக்கியவர்கள் "தங்களுக்கு ஏற்ற துணையை இனியும் கண்டு கொள்வது சாத்தியம்தானா?" என்றே திகைக்கிறார்கள்! இதுபோன்ற திகைப்பிற்கு வந்தவர்கள், வெகு சீக்கிரம் தரம் குறைந்து, பெற்றோர்கள் ஏற்படுத்தும் வாழ்க்கைத் துணைக்கு சம்மதித்து "அவிசுவாசிகளை திருமணம் செய்யும்" அபாக்கியத்திற்கு ஆளாகிறார்கள். ஆனால், கேளுங்கள்: இதுபோன்ற நிலையிலிருந்து கொண்டு, மேற்கண்டவாறு சிந்திக்கும் ஒரு விசுவாசியிடம் 'விசுவாசம்' அற்றுப்போனது என்றே கூற வேண்டும்.*

***சொல்லுங்கள்! தேவனால் கூடாத காரியம் ஏதுமுண்டோ? தேவன் நம் ஒவ்வொருவர் மீதும் விசேஷித்த அக்கறை வைத்திருக்கவில்லையா?***

*உங்கள் சூழ்நிலைகள் அனைத்தும் "இனி யாதொரு மனுஷனாலும்*

*கூடாது" என்ற நிலைக்கு உங்களை நடத்தியிருந்தால், அதுவே தேவன் கையாளும் விசேஷித்த சூழ்நிலையாகும்! "இங்குதான் நீங்கள் தேவனை முழுவதுமாய் சார்ந்து கொள்ள வேண்டும்.... அப்போது, உன் விசுவாசத்தின்படியே உனக்கு அருளப்படும்!" என்ற வசனம் உங்களுக்கு நிறைவேறுவதைக் கண்டு பூரிப்பீர்கள்! (மத்.9:29) நீங்கள் மாத்திரம், உங்கள் இருதயத்தை தேவனுக்கு முன்பாய் செவ்வையாய் வைத்திருங்கள்! தேவனுடைய வார்த்தையில் அடிகோளப்பட்ட சத்தியத்திற்கு உறுதியாய் நில்லுங்கள்.... அப்படி நீங்கள் இருந்து விட்டால் "தேவனுடைய கண்கள் இந்த முழு உலகத்தையும் தேடிப் பார்த்து" உங்களுக்குரிய துணையை கொண்டுவந்து நிறுத்துவார்! (2நாளா. 16:9).*

*ஆம், கலாச்சார தடைகளோ, பெற்றோர்களின் எதிர்ப்போ, கஷ்டமான சூழ்நிலைகளோ.... இன்னும் பல ஆயிரம் தடைகள் இருந்தால் என்ன? அற்புத கிரியை செய்யும் தேவனுக்கு முன்பாக இவைகள் யாதொன்றும் ஒரு பொருட்டல்ல! இரட்சிக்கப்பட்ட ஒரு இந்து சகோதரியை, அவருடைய குடும்பத்தார் 'உறவை முறித்து' தள்ளி வைத்து விட்டார்கள். அந்த காலக்கட்டத்தில், அவளுடைய திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய ஒருவர் கூட இல்லை! ஆனால், ஆச்சரியப்படும் வகையில், தேவன் ஒரு நல்ல விசுவாசியான சகோதரனை அவளுக்குத் தந்தார். இந்தப் பெண்ணின் வாழ்க்கைப் பின்னணியை அறிந்தும்கூட, அந்தப் பையனுடைய பெற்றோர்கள் எவ்வித தயக்கமும் இல்லாமல் அந்தப் பெண்ணை தங்கள் குடும்பத்தில் ஏற்றுக்கொண்டார்கள்!*

*அனைத்து சூழ்நிலைகளையும் ஆளுகை செய்பவர் கர்த்தர் ஒருவரே ஆவார்! ஆகவே, இந்த கர்த்தர் நமது தகப்பனாயிருந்தால்... அப்பம் கேட்டு வந்த நமக்கு ஒருபோதும் கல்லை கொடுக்கமாட்டார். இவ்வுலகின், பொல்லாத தகப்பன்மார்கள் கூட தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, "***நம்முடைய பரம தகப்பன்***" தன்னிடம் கேட்பவர்களுக்கு நல்ல ஈவுகளைத் தருவது அதிக நிச்சயம் அல்லவா! (மத்.7:11). "உங்களுக்கு வரவேண்டிய வாழ்க்கைத் துணையும்" அந்த நல்ல ஈவுகளில் அடங்கியதே ஆகும்! (நீதி.18:22).*

*தன்னுடைய சொந்தப் பிள்ளைகளே "தேவன் உண்மையுள்ளவர்!" என நிரூபித்திட வேண்டும் என தேவன் ஆர்வமுடன் காத்திருக்கிறார்! ஆகவே, திடமான பொறுமையுடன் இருங்கள்! உங்களது பொறுமையின்மை, பதட்டத்தின் மூலமாய், தேவன் தரவிரும்பிய "சிறப்பான தேர்வை" இழந்து விடாதீர்கள்!*

**பரிதாபம் யாதெனில், அனேகர் பொறுமையற்ற பதட்டத்திற்கே பலியானார்கள்! நீங்களோ, உங்கள் முழு இருதயத்தோடு கர்த்தரை நம்பிடுங்கள்! முழுவதுமாய் அவரை நம்பியவர்கள் மாத்திரமே, தேவனது உத்தமத்தை முழுவதுமாய் கண்டிருக்கிறார்கள்!**

*'ஏதோ ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில்' கர்த்தரை நம்பிட முடியாது! என இவ்வுலகில் ஒருவரும் சொல்லிவிட இயலாது. ஏனெனில், தேவனது ஆளுகையில் 'சகலமும்' அடங்கியிருக்கிறது.*

*இத்தருணத்தில் "தேவசித்தம் அறிவது" மிகவும் முக்கியமாகும். அது குறித்து விரிவாக "தேவசித்தம் அறியணுமே?" என்ற நான் எழுதிய புத்தகத்தில் நீங்கள் வாசித்து அறியுங்கள். தேவன் நம்முடைய "மனதை புதிதாக்கியபிறகே" நம்மை அப்பியாசப்படுத்தி நடத்துகிறார். புதிதாக்கப்பட்ட மனதோடு, நாம் வாழ்க்கைத் துணையை தேடும் போது, ஒரு நபரிடம் நாம் காண வேண்டிய முக்கியமான சில பகுதி களை வைத்து "அந்த நபர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவரா?" என காண்பது, எளிதாய் இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை!*

**ஒருமைப்பாட்டை கவனியுங்கள்**

*ஆதாமுக்கு ஏற்ற துணையாகவே ஏவாளை, தேவன் படைத்தார்! ஆகவே, அவள் ஆதாமிற்கு பல விஷயங்களில் ஒருமித்தவளாய் இருந்திருப்பாள். அதுபோலவே, நீங்கள் திருமணம் செய்யப்போகும் நபரும், பல விஷயங்களில் உங்களுக்கு ஒருமித்தவராகவே இருக்க வேண்டும்.* **திருமணத்தில், இருவர் ஒருவராக வேண்டும்.** *அவ்வித உடன்பாடு இல்லையென்றால், அந்த இருவர் இணைந்து நடக்க இயலாது என்றே ஆமோஸ் 3:3 கூறுகின்றது. ஆகவே, உங்கள் திருமண வாழ்க்கை சிறப்புள்ளதாய் அமையவேண்டுமென்றால், ஒருமைப் பாடும், ஒரேவிதத் தன்மையும், ஒருவருக்கொருவர் சம்மதிக்கும் விருப்பமும்.... அதிகபட்சமாய் இருக்கவேண்டும்! ஒருவராக மாற இருக்கும் இந்த இருவருமே தனித்தனியாக ஆவி, ஆத்துமா, சரீரம் என்றே சிருஷ்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த மூன்று பகுதிகளிலும் 'ஒருமைப்பாடு' அதிக அளவில் காணப்படுவது அவசியமாயிருக்கிறது. எங்கெல்லாம், ஒரு புருஷன் - ஒரு ஸ்திரீயின் இணைப்பு.... 1)ஆவியிலும் 2)ஆத்துமாவிலும் 3)சரீரத்திலும் ஏற்படும் இணைப்பாய் இருக்குமோ, அந்த திருமணமே, தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமான திருமணமாய் இருக்கும்.* **அந்த இணைப்பு "முப்புரி நூலாக" அறுந்து போகாமல்** *இருக்குமென பிரசங்கி 4:12-ல் வாசிக்கிறோம். "அறுந்து போகுதல்" விவாகரத்தை மாத்திரம் அல்ல, கணவன் மனைவிக்கு உள்ளாக காணப்படும் ஐக்கிய குறைவுமாகும்! ஆகவே, திருமணத்திற்கு தேவசித்தத்தை தேடும் நீங்கள், குறிப்பிட்ட இந்த மூன்று பகுதிகளை வைத்தே தீர்மானிக்க வேண்டும். கீழே தரப்படும் இந்த மூன்று பகுதி விளக்கங்களும், ஆண்களுக்கு மாத்திரமல்ல, அது பெண்களுக்கும் சமமானதே ஆகும்!*

**1.ஆவியில் விளங்கும் ஒருமைப்பாடு**

*ஆவியே, மனிதனின் மூன்று நிலைகளில் பிரதானமாய் இருப்ப*

தால், அதுவே நாம் காண வேண்டிய முதல் பகுதியாகும். ஆவிக்குரிய பகுதிகளில் ஒருமைப்பாடு இல்லையென்றால், மற்ற பகுதிகளில் ஒருமைப்பாட்டை காண விளைவது பயனற்றதாகும்! மனுஷனுடைய ஆவிதான்.... தேவனோடு வைத்துக் கொள்ளும் உறவிற்கு ஆற்றல் கொண்டதாகும். தன் ஜீவியத்தில் மனந்திரும்பி, கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதால் ஏற்படும் "**மறுபிறப்பை**" **அடையாத, யாராய் இருந்தாலும், அவருடைய ஆவி மரித்ததே ஆகும்!** அவன் கிறிஸ்தவ குடும்பத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் அவனும் ஒரு அவிசுவாசிதான்! ஒரு கிறிஸ்தவ சபையில் சுறுசுறுப்பான ஊழியங்கள் செய்தாலும், அவனும் கூட ஆவியில் மரணம் அடைந்த அவிசுவாசியே ஆவான்!

**உயிருள்ளவனையும் மரித்தவனையும் சேர்த்து வைத்திட இயலாதது போல, ஒரு விசுவாசி மற்றொரு அவிசுவாசியை திருமணம் செய்வது குறித்த பேச்சுக்கே இடமில்லை!**

நீங்கள் கர்த்தரோடு இணைந்திருந்தால், உங்கள் ஆவி கர்த்தருடைய ஆவியோடு ஒன்றாகவே இருக்கும்! (1கொரி.6:16). இவ்வாறு, கர்த்தருடைய ஆவியோடு ஒன்றாய் இணைந்தவர்களை மாத்திரமே உங்கள் திருமணத்திற்கு ஆலோசிக்க முடியும்.

**ஆம், ஒரு மெய்யான கிறிஸ்தவ திருமணத்திற்கு ஒரு மனுஷன், ஒரு மனுஷி, கர்த்தர்.... ஆகிய மூவரும் இணைந்திருக்கும் இணைப்பு சம்பவிக்கிறது! இந்த தரத்திற்கு உட்படாத யாதொன்றையும், கிறிஸ்தவ திருமணமாக அழைத்திட இயலாது!**

வேதம் இவ்வாறாகவே நமக்கு "அந்நிய நுகத்தோடு பூட்டப்படாதிருங்கள்! அவிசுவாசிகளோடு இணையாதிருங்கள்!" என கட்டளை கொடுக்கின்றது (2கொரி.6:14). "நுகத்தையே" திருமணத்திற்கு சிறந்த அடையாளமாய் கூறுகின்றது. இணைந்து பூட்டப்பட்டு உழுது கொண்டிருக்கும் இரண்டு எருதுகள்.... ஒரு கணவனும் ஒரு மனைவியும் இணைந்து, கர்த்தருக்காக பணி செய்வதை சுட்டிக் காட்டும் அடை யாளமாய் இருக்கிறது. பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு **எருதையும் ஒரு கழுதையும் சேர்த்து வைத்து உழக்கூடாது** என தடைவிதிக்கப்பட்டிருக்கிறார்கள் (உபா.22:10). ஏனெனில் இந்த இரண்டு விலங்குகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான சுபாவங்கள் கொண்டதாகும். இவ்வாறாக, ஒரு விசுவாசி, அவிசுவாசியின் சுபாவத் திற்கு முற்றிலும் வித்தியாசமாய் இருக்கிறார். ஆகவேதான் "ஒளியும் இருளும்" எவ்வாறு 'ஜீவனை' பகிர்ந்து கொள்ள முடியும்? கிறிஸ்து வுக்கும் பிசாசுக்கும் எவ்வாறு இணக்கம் ஏற்படும்? ஒரு விசுவாசி எங்ஙனம் ஒரு அவிசுவாசியோடு சமநிலை காண முடியும்?" என 2 கொரி.6:14,15 வசனங்கள் (JB மொழி பெயர்ப்பு) கேள்வி கேட்கிறது.

*தேவனுடைய பிள்ளையாகிய நீங்கள் ஒரு அவிசுவாசியை திருமணம் செய்வது, யோவான் 8:44, 1யோவான் 3:10 கூறுகிறபடி 'பிசாசுக்கு பிள்ளையாய் இருக்கும்' ஒருவனையே திருமணம் செய்கிறான். இந்த திருமணத்திற்குப் பிறகு, அவனது மாமனார் 'பிசாசு தான்' என்பது மிகத் தெளிவாய் இருக்கிறது. இந்த மாமனாரோடு வாழ்வது, உங்கள் ஜீவகாலமெல்லாம் முடிவற்ற தொல்லையே தொடர்ந்து வரும் என்பது உறுதி!*

*சில விசுவாசிகள், தாங்கள் ஒரு அவிசுவாசியை திருமணம் செய்து கொண்டால்.... அதன்மூலம், ஒரு ஆத்துமாவை நரகத்திலிருந்து மீட்டுக் கொள்ள வாய்ப்பு கிடைக்குமே என தர்க்கிக்கிறார்கள். இவர்களின் தர்க்கம் சரியானதாய் இருந்தால்.... "எல்லா விசுவாசிகளும், அவிசுவாசி களை திருமணம் செய்யலாமென" சர்வ ஞானமுள்ள தேவன் மகிழ்ச்சி யுடன் கட்டளை கொடுத்திருப்பார்! ஆனால் அவர் தம்முடைய வார்த் தையில் ஏன் அவ்வித கட்டளையைத் தரவில்லை? ஏனெனில் "ஆத்து மாக்களை இரட்சிப்பதற்காக வேண்டி" திருமணத்தை ஒரு வழியாக அமைத்திட தேவன் ஒருபோதும் நோக்கம் கொண்டிருக்கவில்லை! ஆகவே 'வேத பூர்வமாய் இல்லாத' ஆத்தும ஆதாயத் திட்டத்தை கை கொள்ளும் ஒருவனை, தேவன் ஆதரிப்பார் என ஒரு மனுஷனும் எண்ணாதிருக்கக்கடவான்!*

**ஆகவே, உங்கள் வாழ்க்கை துணையாய் வரப்போகிறவர், திருமணத்திற்கு முன்பு இரட்சிக்கப்படாதவராய் இருந்தால்.... திருமணத்திற்குப் பிறகு இரட்சிக்கப்படுவார் என நீங்கள் எதிர்பார்ப்பது சுத்த அபத்தமாகும்!**

*ஆகவே, எக்காரணத்தைக் கொண்டும், ஒரு விசுவாசி மற்றொரு அவிசுவாசியை திருமணம் செய்து கொண்டால், அவர் 1) வேதவாக்கின் கட்டளையை மீறியுள்ளார். 2) கர்த்தருக்கு கீழ்ப்படிய மறுத்துவிட்டார், அவ்வளவுதான்! ஆகவே,* **தன்னுடைய திருமணத்தை கர்த்தர் வருகை தந்து ஆசீர்வதிக்க வேண்டும்** *என அவர் விண்ணப்பிப்பது துணிகரமான வஞ்சனையே ஆகும்.*

*தேவனும், தன்னுடைய பிள்ளைகளில் ஒருவராகிலும் "அவிசுவாசியைத் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கவே மாட்டார்!" இங்கு நாம் மீண்டும் வலியுறுத்தி நினைவுறுத்த வேண்டியது என்னவென்றால், ஒரு நாத்திகன் எப்படியோ அல்லது ஒரு புற மதஸ்தன் எப்படியோ, அதற்கு ஒப்பாகவே பெயரளவிற்கு கிறிஸ்தவனாய் வாழும் ஒரு அவிசுவாசியும் இருக்கிறான் என்பதை, ஒருபோதும் மறந்து விடாதீர்கள்! ஆகவே, யாரோ ஒரு விசுவாசி மணந்து கொண்ட, அவிசுவாசியான நபர் "அவிசுவாசியான ஒரு பெண்ணைத் திருமணம் செய்தபிறகு.... இப்போது, அவள் இரட்சிக்கப்பட்டு விட்டாள்!" என்றெல்லாம் சில மாதிரிகளை கூறுவது,*

*வேதத்தை மறுக்கும் வாதம் ஆகும்! ஏனெனில், நீங்கள் தேவனுடைய வார்த்தையினால் ஆளுகை செய்யப்பட்டிருக்க வேண்டுமேயல்லாமல், யாரோ சிலருடைய மாதிரியை ஒருபோதும் முன்வைத்திட துணியாதீர்கள். தேவனுடைய கரத்திலிருந்து சிறந்ததையே வாங்குவதற்கு நாட்டம் கொண்ட ஒருவன் "***ஒரு அவிசுவாசியை திருமணம் செய்வதை விட, திருமணமே செய்யாமல் தனித்திருப்பதே எனக்கு மேலானது!*** *" என்றே தீர்மானம் எடுத்துக் கொள்ள வேண்டும்.*

*எக்காரணத்தை கொண்டும், பெற்றோர்களுடைய நிர்ப்பந்தத்திற்காகவோ அல்லது வேறு யாதொருவருடைய நிர்ப்பந்தத்திற்காகவோ கீழ்படிய வேண்டிய கட்டாயம் யாதொருவருக்கும் இல்லை! உங்கள் திருமணத்திற்கு பார்த்த நபர், "மறுபடியும் பிறவாதவராய் இருந்தால்" நிர்ப்பந்தம் ஏதுமின்றி நிச்சயமாய் மறுத்துவிட வேண்டும். உங்கள் மன சாட்சிக்கு எதிராகவோ அல்லது தேவனுடைய வார்த்தைக்கு எதிராகவோ நீங்கள் இருக்கவில்லை என்ற நிலையில் உறுதியாய் நின்று உங்கள் பெற்றோருக்கு கீழ்படியுங்கள்! (எபே.6:1). ஒரு விசுவாசியின் உத்தமம், அவனுடைய ஆண்டவருக்கே பிரதானமாய் இருக்க வேண்டும்! இதனிமித்தம், சில சமயங்களில், தன்னுடைய சொந்த பெற்றோர்களின் விருப்பங்களுக்கு எதிராக நிற்க வேண்டிய நிலை அவ்வப்போது ஏற்படலாம்! ஆண்டவரே இதைக் குறிப்பிட்டு மத்தேயு10:32-39 வசனங்களில் ".... என்னை விட தன் தாய் மீதோ அல்லது தந்தை மீதோ ஒருவன் அதிக அன்பு செலுத்துவானானால், அவன் என்னுடையவனாய் இருப்பதற்கு தகுதி அற்றவன்" எனக் கூறியுள்ளார். மேலும், நீதி.19:14-வசனத்தில் "ஒரு தந்தை தன் மகனுக்கு வீடுகளையோ, ஆஸ்திகளையோ கொடுத்திட முடியும்!" ஆனால்* **புத்தியுள்ள ஸ்திரீயை கர்த்தர் மாத்திரமே** *அந்த மகனுக்கு கொடுத்திட முடியும்!*

*சில சமயங்களில், ஒரு பெண்ணிடம் நீங்கள் ஈர்க்கப்பட்டு... அதன்பிறகு, 'அவள் மனந்திரும்பவில்லை' என நீங்கள் கண்டு கொள்கிறீர்கள். அல்லது, நீங்கள் இரட்சிப்படைந்த அந்த காலக் கட்டத்தில் ஒரு பெண்ணை நீங்கள் விரும்பி, அவளோ இரட்சிக்கப் படாத பெண்மணியாய் இருந்திருக்கக்கூடும். இதுபோன்ற சூழ்நிலையில், நீங்கள் மற்றவர்களிடம் "இந்தப் பெண் இரட்சிக்கப் பட்டவள்தான்" என சாதிப்பதற்கு வலிமையாய் சோதிக்கப்பட முடியும்! உங்கள் கூற்றுக்கு எதிராக, அந்தப் பெண் இரட்சிக்கப்பட வில்லை என்பது தெளிவாய் தெரிந்தாலுமே கூட ..... நீங்கள் சாதித்த பகுதிகளில்தான் இன்னமும் நின்று கொண்டிருப்பீர்கள்!*

*இந்நிலையில், நேர்மைக்கும் சத்தியத்திற்கும் நீங்கள் ஆர்வம் கொண்டவராய் இருந்தால் "உங்களை நீங்களே வஞ்சிப்பதிலிருந்து நீங்கலாகி" அந்தப்பெண் இரட்சிக்கப்பட வேண்டிய அவசியத்தை*

உணர்ந்தவர்களாய், சுவிசேஷத்தை அவளிடம் கூறுவீர்கள். ஆகிலும், அந்தப்பெண் சுவிசேஷத்திற்கு இப்போது இணங்குவது மெய்யானது தானா? என்பதை நிச்சயித்துக்கொள்ளவும் கவனமாய் இருங்கள். ஏனெனில் ஒருவருக்கொருவர் உள்ள ஈர்ப்பின் வலிமையில், அந்தப் பெண் "தானும் மனந்திரும்புவதாக" பொய்கூறிட வாய்ப்பு உண்டு. ஆம், இதுபோன்ற மனந்திரும்புதல் "பாவத்தை உணர்ந்து" ஏற்படாத பட்சத்தில்.... அது வெறும் மேலோட்டமானதாகவே இருக்கும்! அதே சமயம், அந்தப் பெண்ணிற்கு நீங்கள் சுவிசேஷம் கூறுவதில் பிரயோஜனம் இல்லை என்றும் நான் இங்கு குறிப்பிடவில்லை! நான் இங்கு குறிப்பிடுவது என்னவென்றால், திருமண காரணத்திற்காய், அந்தப் பெண், தானும் மனந்திரும்பி விட்டதாக 'மேலோட்டமாய்' கூறும் அபாயம் இருக்கிறது என்றே குறிப்பிடுகிறேன்!

கர்த்தருடைய பணியில் மிக ஆர்வம் கொண்ட ஒரு வாலிபனை நான் அறிவேன்! அவனுடைய பெற்றோர்கள் அவனுடைய திருமணத் திற்கு ஒழுங்கு செய்தார்கள். அந்தப் பெண்ணோ இரட்சிக்கப்படாத பெயர் கிறிஸ்தவளாய் இருந்தாள். ஆனால் இந்த வாலிபன் அவளுக்கு சுவிசேஷத்தை கூறியபோது "திருமணம் ஆகாத அந்த நிலையில்" தான் இரட்சிக்கப்பட்டு விட்டதாக கூறினாள். திருமணமும் நடந்து விட்டது! சில மாதங்களுக்குப் பிறகு, அந்தப் பெண்ணின் உண்மையான சுபாவம் வெளிப்படத்துவங்கியது. வெகு சீக்கிரத்தில் மற்ற எல்லாருக்கும் மாத்திரமல்ல, திருமணம் செய்த அவளுடைய கணவருக்கும் "இவளு டைய இரட்சிப்பின் அனுபவம் உண்மையானது அல்ல" என்பது தெரிய வந்தது. இந்தப் பெண், தன் கணவரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பெரும் முட்டுக்கட்டையாய் நின்றாள்! வெகுசீக்கிரத்தில், இந்த வாலிபன் தன் சாட்சியையும், தேவ வைராக்கியத்தையும் இழந்தான்!

**இவ்வித "போலி மனமாற்றத்திற்கு" ஜாக்கிரதையாய் இருங்கள்!**

மெய்யாகவே, குணப்படாத ஒரு நபரிடம் "பல நற்குணங்கள்" இருப்பதாகவே சாத்தான் உங்களிடம் காண்பிக்கத் துணிவான். பல விதத்தில் "அவள் விரும்பப்படத்தக்கவள்" என்றும் காட்டுவான். அவ்வப்போது நிகழ்ச்சிகளில் "பார், அவள் எத்தனை மென்மை யானவள், சாந்தமும் பொறுமையும் நிறைந்தவள்" என்றும் உங்கள் காது குளிர கிசுகிசுப்பான். ஆனால், இதுபோன்ற பசப்புகளுக்கு செவிகொடுக் காதீர்கள்! அவன் பொய்களுக்கே பிதாவானவன். இப்படித்தான் நம்முடைய ஆதி பெற்றோரையே வஞ்சனை செய்தான். "நல்லது என்றும்.... அழகுள்ளது என்றும்...." தோற்றத்தை வைத்து சோதித்தான் (ஆதி.3:6). ஆனால் 'தேவன் தடை செய்தவைகளை' சோதனைக்கு உட் படுத்தினான்! அதுபோலவே, 'ஒரு சமமில்லாத நுகத்தையும்' தேவன் தடை செய்திருக்கிறார் (2கொரி.6:14). தேவன் தடை செய்த ஒன்றில்

அடியெடுத்து வைப்பது.... நமக்கு எத்தனைதான் நல்லதாய் நமக்குத் தோன்றினாலும், அது பேரழிவையே நமக்கு கொண்டு வந்து தரும்!

இவ்வாறு தேவனுடைய போதகத்தைப் புறக்கணித்து விட்டு, அதினிமித்தம் முடிவில்லா பிரச்சனைகளுக்குள் சிக்கி "மகிழ்ச்சி இழந்த" கணவன் மனைவியரை நான் அறிவேன். திருமணத்திற்குப் பிறகு.... தன் கணவரை மாற்றி, கர்த்தருக்கு வலிமையான சாட்சியாய் வாழலாம்! என கற்பனை செய்த ஒரு சகோதரியின் வாழ்க்கை சீரழிந்து.... இப்போது தன்னுடைய வீட்டை கர்த்தருடைய ஊழியத்திற்கு திறந்தளிக்கும் வாய்ப்புகூட இல்லாது தவிக்கிறாள்! மற்றொரு வாலிபன் "ஆஹா, இவள் என்னை எத்தனை அதிகம் நேசிக்கிறாள்! திருமணத்திற்கு பிறகு, இவளை கர்த்தரிடத்தில் கொண்டு வருவதில் யாதொரு பிரச்சனையும் இருக்காது!" என எண்ணியிருந்த அவனுக்கு, இவளோ காலமெல்லாம் முட்டுக்கட்டையாய் மாறிவிட்டாள்.

**இதற்கெல்லாம் பாதுகாப்பைத் தேடுவதற்கு ஒரே வழி: மனந்திரும்பாத எந்த நபரிடமும், எக்காலத்திலும்.... உங்களுக்குள் கிலுகிலுப் பான ஓர் எழுச்சி ஏற்பட உறுதியாய் மறுத்து விடுங்கள்! என்பதே ஆகும்.**

இவ்வாறு பாதைக்கு வெளியே நீங்கள் ஈர்க்கப்படுவதை உணர்ந் தால், துரிதமாய் உங்களை சரிப்படுத்தி உறுதியுடன் நில்லுங்கள். அந்தப் பெண் மெய்யாகவே மனந்திரும்பிய பிறகுதான், அவளை திருமணம் செய்வது தேவ சித்தமா? என்பதை சிந்திக்கத் துவங்குங்கள்.

உங்கள் இரட்சிப்பிற்கு முன்பாக நீங்கள் ஒரு பெண்ணை விரும்பியிருந்தால் "இப்போது" உங்களின் ஆவிக்குரிய நிலையை அந்தப் பெண்ணிடம் தெளிவுபடுத்துங்கள். நீங்கள் இயேசுவை முதலிடம் வைத்து நேசிப்பதை அவள் உணர்ந்து கொள்ளச் செய்யுங்கள்! மேலும், அந்தப் பெண்ணும் உங்களைப் போன்ற ஒரு மாற்றத்தை மெய்யாகவே அனுபவிக்கும் வரை "திருமணத்தைக் குறித்த பேச்சுக்கே இடமில்லை!" என கூறிவிடுங்கள்.

**ஆம், கிறிஸ்து உங்கள் இருவர் வாழ்க்கையிலும் "முதல் பங்காய்" இருக்கவில்லையென்றால், உங்கள் வீடு உத்தம கிறிஸ்தவ இல்லறமாய் விளங்கிட இயலாது!**

இவ்வாறு, தேவனை முதன்மைப்படுத்தி கனம் செய்கிறவர்கள் மாத்திரமே.... தேவனுடைய கனத்தைப் பெறுவார்கள்! (1சாமு. 2:30). தேவனை கனம் செய்து வாழ்பவன், ஒரு பெண்ணோடு தான் பெற்றிருந்த சினேகத்தை "**கர்த்தருடைய பலிபீடத்தில் வைத்து**" அவருக்குப் பிரியமானதைச் செயல்படுத்த வேண்டி நிற்பான். மெய்யாகவே அந்தப் பெண், உங்களுக்காக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவளாய் இருந்தால், அந்தப் பெண்ணை கிறிஸ்துவுக்கே முழுவதும் அர்ப்பணித்திடும் ஸ்தானத்தில் சமர்ப்பித்துவிடவேண்டும்! அன்று,

'அர்ப்பணிக்கப்பட்ட ஈசாக்கை, ஆபிராகமுக்கு திரும்ப கொடுத்தது போலவே' **அந்தப் பெண்ணை உங்களுக்குத் தருவார்!** (ஆதி.22). மாறாக, அவள் தேவனால் தெரிந்து கொள்ளப்படாதவளாய் இருந்தால்.... ஆபிரகாமின் ஜீவியத்திலிருந்து இஸ்மவேலைப் பிரித்து விட்டது போல்.... அந்தப் பெண்ணையும் உங்களிடமிருந்து லாவகமாய் **பிரித்து விடுவார்!** (ஆதி.21). நீங்களோ, **தேவனுடைய இந்த இரண்டு செயலுக்கும் ஆயத்தம் உள்ளவர்களாய் பலிபீடத்திற்கு வர வேண்டும்!** இவ்வாறாக, உங்கள் ஜீவியத்தில் தேவனையே முதலாவது வைத்து ஜீவித்தவராய் இருந்தால், "உங்களுக்கென தேவன் வைத்திருக்கும் சிறந்ததை" ஒருபோதும் இழந்து விடமாட்டீர்கள்! ஏன் தெரியுமா, **தனக்கு முதலிடம் வைத்து வாழ்ந்த** யாதொரு மனிதனுக்கும் அவர் கடனாளி அல்லவே அல்ல!

திருமண தம்பதியர்கள் இருவருமே மெய்யான இரட்சிப்பின் அனுபவம் கொண்டவர்களாய் இருந்தால்.... தேவனுடைய மன்னிப்பின் மாட்சிமையை நடைமுறையில் மகிழ்வுடன் அனுபவித் திருப்பார்கள். ஒருவருக்கொருவர் பழகும் விஷயத்தில் 'இந்த மன்னிப்பின் மாட்சிமை' வெளியரங்கமாய் தென்படும்! ஒருவரை யொருவர் மன்னிப்பதற்கு விருப்பமும், ஒருவருக்கொருவர் மன்னிப்பு கேட்க ஆயத்தமாயிருப்பதும்.... பலமுறை அவர்கள் ஜீவியத்தில் சம்பவித்துவிடும்! ஆனால், இந்த மெய்யான 'மன்னிப்பின் மாட்சிமை' தம்பதியர்கள் இருவரிடமோ அல்லது ஒருவரிடமோ இல்லாதிருந்தால், அது துயரம் மாத்திரம் அல்ல ........அதுபோன்ற திருமண வாழ்க்கையில் பெரும் சேதங்கள் சம்பவித்து விடும் என்பது வேதம் கூறும் தெளிவான சத்தியமாகும்!

**வெறும் மனமாற்றமே, ஒருவருக்கொருவர் போதுமானதல்ல. 'ஒரு மன ஆவி' என்ற நிலையில், ஆவிக்குரிய விஷயங்களில் ஒருமித்து இருப்பதும் அடங்கியுள்ளது. இன்றுள்ள விசுவாசிகளிடம், கர்த்தருக்குரிய வைராக்கியம் மற்றும் அர்ப்பணிப்பில், ஏற்றத்தாழ்வுகள் ஏராளமாய் உள்ளன!**

ஒரு அனல் கொண்ட கிறிஸ்தவன், வெதுவெதுப்பான நபரை திருமணம் செய்யும்போது, அவர்கள் இருவருமே வெதுவெதுப்பான கிறிஸ்தவர்களாய் முற்றுப் பெறுகிறார்கள். ஆம் அனல் கொண்ட கிறிஸ்தவனின் வெப்பநிலை, இந்த வெதுவெதுப்பான கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையின் தாழ்வு நிலைக்கு வெகுசீக்கிரத்தில் குறைந்து விடுகிறான்! ஆகவே, திருமணத்திற்கு ஆலோசிக்கும் ஒரு நபர் மறுபடியும் பிறந்தவராய் இருந்தால் மாத்திரம் போதாது.... இன்னும் அதிகமாய், உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அந்தப் பெண் தடையாய் இருப்பாளா? அல்லது ஊக்கம் தருகிறவளாய் இருப்பாளா? எனக் காண வேண்டியதும் அவசியமாயிருக்கிறது. ஆகவே, அந்தப் பெண்,

உங்களைப் போலவே **ஆவிக்குரிய ஆழமும்,** உங்களுக்கு இருப்பது போலவே **தேவனைப் பற்றிய தாகமும்** உடையவர்களாய் இருக்க வேண்டும். ஓர் தொடர்ச்சியான, ஆவிக்குரிய சவால் நிறைந்த வாழ்க்கைக்கே உங்களுக்கு அவள் அமைய வேண்டும்! அந்தப் பெண்ணின் ஆவிக்குரிய தன்மை, அவள் மீது நீங்கள் கொண்ட மதிப்பை இன்னமும் அதிகரிப்பதாய் இருக்க வேண்டும்! அந்த மதிப்பு, ஒருவர் மற்றொருவரைக் காட்டிலும் ஆவிக்குரிய ஜீவியத்தில் மேலானவர்களாய் கண்டு மதித்திடவும் பழக வேண்டும்! *(பிலி.2:3).*

இதுபோன்ற வாழ்க்கைத்துணை உங்களுக்கு அமைந்தால், நீங்கள் ஆவிக்குரிய மந்தம் அடையும் நேரத்தில் தூக்கிவிட அவள் பெலன் கொண்டவளாய் இருப்பாள்! அதேபோலவே, நீங்களும் அவளைத் தூக்கி விடுகிறவராய் இருப்பீர்கள்.

**அதுபோன்ற பக்தியுள்ள பெண்மணி, உங்கள் ஆவிக்குரிய உணர்வு மழுங்கிய நேரத்தில், துரிதமாய் வந்து கூர்மைப்படுத்துகிறவளாய் இருப்பாள்!**

அதேபோல நீங்களும் அவ்வாறே அவளுக்குச் செய்யக் கூடியவராய் இருப்பீர்கள் *(பிரசங்கி.4:10).* இதுபோன்ற வாழ்க்கை துணையை **"விலையேறப் பெற்றவள்!"** என்றே கூற வேண்டும்.

ஒரு பெண்ணின் ஆவிக்குரிய நிலையை எங்ஙனம் மதிப்பிடக் கூடும்? அவளுடைய வேதபாட கூட்டங்கள் நடத்தும் திறமையை வைத்தா? அல்லது சுவிசேஷத்தை வீடுகள்தோறும் சென்று அறிவிக்கும் அவளது வைராக்கியத்தை வைத்தா? இதுவும், அவளுடைய ஆவிக்குரிய தன்மைக்கு அடையாளமாய் இருந்தாலும்.... சில சமயங்களில், **ஒரு சிறந்த மனைவியாகவும் தாயாகவும் விளங்குவதற்கு** இதுவே போதுமானதாய் இருப்பதில்லை. ஆகவே கர்த்தருடைய பணியில் சுறுசுறுப்பாய் இருக்கும் ஒரு பெண்மணி, ஆவிக்குரிய ஆழமும் கொண்டிருப்பாள் என நாம் எண்ணிவிடக் கூடாது. ஏனெனில் ஆவிக்குரிய தன்மையும், மார்க்க செயல்திறனும் எப்போதுமே சமநிலையாய் இருக்குமென நாம் கூறிட இயலாது! உங்கள் திருமண வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்தில் தொடர்ச்சியான வேதபாட ஊழியத்திலும், ஜெபக்கூட்டம் போன்ற ஊழியத்திலும் நீங்கள் தொடர்ந்து நிற்பதற்கு வாய்ப்பு குறைவாகவே இருக்கும் என்பதை நினைவுகூருங்கள்! ஏனெனில், உங்கள் மனைவியின் பெரும்பாலான பகல் நேரத்தைப் பிள்ளைகளின் அலுவலும், பிள்ளைகளின் தேவையும் அவளை ஆட்கொண்டு விடும்! இரவு நேரத்திலோ, உங்களின் இருவரையுமே பிள்ளைகள் தொல்லை செய்வார்கள்! வேதபாடம் எடுப்பதையும், மற்ற கிறிஸ்தவ ஊழியத்தையுமே ஆவிக்குரிய தன்மையாகக் கொண்ட ஒரு பெண், பிள்ளைகளின் தொந்தரவிற்கு 'முறுமுறுக்கத்' தொடங்குவாள். இந்த தொல்லை பிடித்த பிள்ளைகள் "கர்த்தருடைய ஐக்கியத்திற்கு"

*தடையாய் இருப்பதாகக் கூட எண்ணுவாள்!*

**ஒருவரின் ஆவிக்குரிய தன்மையை மதிப்பிடுவதும் அல்லது ஒருவன் மெய்யாகவே மறுபிறப்பு அடைந்தானா என கண்டு கொள்வதும் அவ்வளவு எளிதான காரியமல்ல!**

*இன்றைய உலகில் மாய்மால வேஷம் அதிகம் உலாவுகிற படியால்.... மெய்யான ஆவிக்குரிய தன்மையை காண்பது இன்னமும் அதிக கடினமாகவே இருக்கிறது. முற்றிலும் வஞ்சனை இல்லாத ஜனங்களைக் காண்பது வெகு ஆபூர்வமாகவே இருக்கிறது. இன்றைய அதிகபட்சமான விசுவாசிகள், தங்களின் ஆவிக்குரிய உண்மையான நிலையைவிட, அதிக அளவு ஆவிக்குரிய தன்மை தங்களுக்குள் இருப்பதாகவே காட்டிக் கொள்ள முயற்சிக்கிறார்கள். இவ்விதநிலை, வாலிபர்களிடம் அதிக அளவில் காணப்பட்ட போதிலும், சபை கூட்டங்களுக்கு தொடர்ந்து வருபவர்களிடம் இதுபோன்ற மாய்மாலம் இன்னும் அதிகமாகவே இருக்கிறது.* **ஆகவே ஒரு நபரின் தோற்றத்தை வைத்து ஏமாந்து விடாதிருக்க நாம் கவனம் கொண்டிருக்க வேண்டும்.** *மிகத் தெளிவான மதிப்பீடு செய்வது கடினமேயானாலும், திருமணம் என்று வரும்போது இவ்வித மதிப்பீடு செய்ய வேண்டியது நமக்கு மிகுந்த அவசியமாயிருக்கிறது! எனவே, ஒருவரின் இரட்சிப்பின் அனுபவத்தை அவர்களின் வாய்மொழியால் கேட்டதினிமித்தம் நாம் திருப்தி அடைந்துவிடக் கூடாது. நாம் முன்பு குறிப்பிட்டதுபோல, மெய்யான மறுபிறப்பை அனுபவிக்காமலே "மறுபிறப்பை குறித்து" சாட்சியாக விவரித்துக் கூறிட முடியும். இதை மனதில் கொண்டே "நாம் ஜனங் களை* **அவர்களது கனிகளை வைத்து** *அறிந்திட வேண்டும்" என ஆண்டவர் கூறியுள்ளார் (மத்.7:16). நாம் அனுதினமும் கர்த்தரோடு இசைந்து நடப்பவர்களாய் இருந்தால், ஏற்ற சமயம் வரும்போது, சரியாக மதிப்பீடு செய்ய நமக்கு அவர் உதவுவார்!*

*ஒரு பெண்ணிடம் நாம் காண வேண்டிய ஆவிக்குரிய கனியானது 1) அன்பு, சந்தோஷம் - ஆகிய நிறைந்த மகிழ்ச்சி 2) சமாதானம், நீடிய பொறுமை - ஆகிய நிதானம், சகிப்புத்தன்மை 3) தயவு, நற்குணம் - ஆகிய நன்மை செய்யும் பண்பு 4) விசுவாசம், சாந்தம் - ஆகிய மெல்லிய குணத்துடன் கூடிய மனத்தாழ்மை 5) இச்சையடக்கம் - ஒழுங்கு நிறைந்த கட்டுப்பாடான வாழ்க்கை.... போன்ற இவைகளையே நாம் பிரதானமாய் காணவேண்டும் (கலா.5:22,23). இவ்வித நிலையில் இருக்கும் அந்தப் பெண், கிறிஸ்தவ விசுவாசிகளோடு கொண்ட ஐக்கியத்திற்கும், கர்த்தருடைய பணிக்கும் மிகுந்த ஆர்வம் காட்டுகிற வளாயும் இருக்க வேண்டும்!*

*பக்தியான பெண், வாடாத அழகுள்ள சாந்தமும் அமைதியும் உள்ள ஆவியை பெற்றிருப்பாள் (1பேதுரு.3:4 JB மொழிபெயர்ப்பு).*

இன்றைய 21- ம் நூற்றாண்டு பெண்களைப்போல் 'அதட்டலும் அதிகாரமும்' உடையவளாய் இருக்கக் கூடாது. இவர்கள் நடந்து கொள்ளும் பாங்கு, "கடவுள்தான் ஆணாய் இருக்க வேண்டிய வர்களைத் தவறுதலாய் பெண்ணாய் படைத்து விட்டாரோ".... என்பது போன்ற, இழிவான தோற்றத்தை இவர்கள் தந்து விடுகிறார்கள்!

ஒரு குணசாலியான ஸ்திரீயைக் குறித்த பண்புகளை நீதி.31:10-31 வசனங்கள் நேர்த்தியாய் கூறுகின்றது. இவ்வித குணாதிசயங்களை திருமணத்திற்காக காத்திருக்கும் ஒருவன், தான் விரும்பும் பெண்ணிடம் இருப்பதைக் காண முற்பட வேண்டும். சரீர அழகும் அவளது மென் மையான நளினமும் "வெறுமையும், வஞ்சனையும் கொண்டது" என்றே வேதம் கூறுகிறது. மேலும் "கர்த்தருக்குப் பயந்தவளையே" பிரதானமாய் வலியுறுத்துகிறது (வசனம் 30).

**கர்த்தருடைய பார்வையில், ஒரு பெண் எவ்வளவு பரிசுத்தமாய் இருக்கிறாளோ, அந்த அளவின்படியே, அவளை அழகுள்ளவளாய் தேவன் காண்கிறார்!**

தேவனுக்குப் பிரியமானதை அறிந்து கொள்ள நாம் வாஞ்சை கொண்டவர்களாய் இருந்தால் "தேவன் காணும் விதமாய் ஜனங்களைக் காண்பதற்கும்" நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே "மனம் புதிதாவதற்குரிய" அர்த்தமாகும். நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்கு 'இந்த மனம் புதிதாகும் நிலை' மிகுந்த அவசிய மென ரோமர் 12:2 கூறுகிறது. "மனுஷன் வெளியரங்கத்தைப் பார்க்கிறான் தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார்" (1சாமுவேல்.16:7) என நன்றாய் அறிந்தும்கூட, நாம் இன்னமும், சரீர அழகினால் ஈர்க்கப்படு கிறவர்களாய் இருந்தால் "தேவனால் நடத்தப்படுவதை" நாம் ஒருக்காலும் எதிர்பார்த்திட இயலாது! இவ்வித நிலையில்.... நம்மை வஞ்சிக்கவும், நம்மை வழி தப்பி நடத்தவும், காத்திருக்கும் சாத்தானுக்கே கதவைத் திறந்து வைத்தவர்களாய் இருப்போம்!

குணசாலியான ஸ்திரீயைக் குறித்து நீதிமொழிகள்.31:10-31 வசனங்கள் கூறும் குணாதிசயங்கள் அனைத்தும் அவளுடைய உள்ளான சுபாவங்கள் ஆகும். 1) அவள் யாதொரு சந்தேகத்திற்கும் இடம் தராத நம்பிக்கைக்குரியவள். 2)தன் நலனைவிட தன் கணவனின் நலனையே அதிகமாய் தேடுகிறவள். 3) தன் வேலை கடினமாய் இருந்தாலும், மனப் பூர்வமாய் செய்பவள். 4)தன் குடும்பத்தின் தேவைகளை முன் கூட்டியே சிந்திப்பவள். 5)தன் சொந்த கைகளால் வேலை செய்வது குறித்து வெட்கமடையாது.... எவ்வித இழிவான வேலைகளையும் செய்திட துணிபவள். 6)சிக்கனமாய் சேர்த்து வைப்பவள்.... ஆகிலும், கருமி குணம் கொண்டவள் அல்ல! ஏனெனில், பிறருடைய தேவைக்கு, தான் சேமித்தவைகளை தாராள மனம்கொண்டு அன்புடன் வழங்குபவள். 7)தன் நாவை அடக்குவது எங்ஙனம் என அறிந்தவள்.... ஆகிலும்,

*எப்போது பேச வேண்டும்? என்ன பேச வேண்டும்? எப்போது பேசாதிருக்க வேண்டும்? ஆகிய பண்புகளும் கொண்டவள். 8) தன் நேரத்தை சோம்பலுக்கு கொடுத்து விடாமல், காலத்தை ஏற்ற விதமாய் செலவழிப்பவள்!* **இத்தனை குணவதியான அவளை, ....** *அவளுடைய கணவனும்! அவளுடைய பிள்ளைகளும்! தேவனும்கூட புகழ்ந் துரைப்பதில், எந்த ஆச்சரியமும் இல்லை.*

*உத்தம ஸ்திரீக்குரிய இத்தனை குணாதிசயங்களும், நாம் தேடும் பெண்ணிடம் இருக்கிறதா? என்பதை முழுவதும் கணித்திட இயலாது. ஆகிலும், தேவனுடைய சித்தத்தை நாம் அறிய வாஞ்சிக்கிறபடியால், இந்த குணாதிசயங்கள் அனைத்தையும் நம் மனதில் கொண்டு, இதன் அடிப்படையிலேயே, நாம் மதிப்பீடு செய்ய வேண்டும்!*

*இருப்பினும், அந்தப்பெண் நல்ல ஆவிக்குரிய நிலையில் இல்லாததைப் போல் தோன்றும் நேரத்தில், சாத்தான் கூறும் அறிவுரைக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்! அவன் கூறுவான்: "இப்போது சரியில்லைதான், திருமணத்திற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் சரியாகிவிடுவாள்" என்றே நம் உள்ளத்தில் பசப்புவான். ஆனால், அப்படியெல்லாம் சம்பவிப்பது கடினமேயாகும்!*

**இப்போது அந்தப் பெண் கர்த்தருக்கு அர்ப்பணித்து வாழவில்லை யென்றால், பிற்காலத்தில் அர்ப்பணித்து விடுவாள் எனக்கூறிட எந்த உத்தரவாதமும் இல்லை!**

*ஒரு மேஜை மேல் நின்று கொண்டு, தரையில் நின்று கொண்டி ருக்கும் மற்றொருவரை மேஜைக்கு இழுத்துச் சேர்ப்பது மகா கடினம்! ஆனால், கீழே நின்று கொண்டிருக்கும் அந்த நபர் மேஜையில் நிற்பவரை கீழே இழுப்பது மிகவும் எளிது! 'சமமான நுகம்' இல்லாத திருமண வாழ்விலும், மேற்கண்டவாறே ஆவிக்குரிய ரீதியாய் சம்பவிக்கும்.*

*ஒரு உத்தமமான கிறிஸ்தவ திருமணத்தில் ஒருவருக்கொருவர் உள்ள ஈர்ப்பானது,* **அந்த நபரின் ஆவிக்குரிய தன்மையை "முதன்மையாக வைத்து" நீங்கள் தேடினால்,** *மற்ற அனைத்து முக்கியமான தேவைகளும், தேவன் தெரிந்தெடுத்த அந்தப் பெண்ணிடம் அமைந்திருப்பதை நீங்கள் காண்பீர்கள்! ஆகவே மத்.6:33-ம் வசனம் திருமண வாழ்க்கையிலும் செயல்பட்டு "தேவனுடைய ராஜ்யத்தையும் அதற்குரிய நற்குணத் தையுமே நாடுங்கள்.... மற்ற அனைத்தும் காலாவட்டத்தில் உங்களுக்கு வந்து சேரும்" (JB மொழிபெயர்ப்பு). ஆனால் ஆவிக்குரிய நன்மைகளை அலட்சியம் செய்யவோ அல்லது அதை இரண்டாவது இடத்தில் வைப்பதற்கோ தீர்மானித்தால், .... முடிவில், தேவனுடைய நன்மையை இழக்கும் இடத்திற்கே ஒருவனைக் கொண்டு செல்லும்!*

## 2. ஆத்துமத்தில் விளங்கும் ஒருமைப்பாடு

ஒரு நபரின் ஆத்துமாவில் "அவனது மனம், எழுச்சியான உணர்வுகள் மற்றும் சித்தம்" ஆகியன அடங்கும். திருமணத்திற்குரிய பொருத்தத்தில், இந்த ஆத்தும பகுதியின் பொருத்தமும் ஓரளவு சமநிலை கொண்டிருக்க வேண்டும். ஆவிக்குரிய ஒருமைப்பாட்டில் உறுதியாக இருக்க வேண்டிய அளவிற்கு, ஆத்தும பகுதியில் இருந்திட இயலாது. ஏனெனில், இந்தப் பகுதியில் ஒருமைப்பாடு இல்லா விட்டாலும், தேவன் ஒருவரை திருமணத்திற்கு நடத்த முடியும்!

ஆவிக்குரிய ஒருமைப்பாட்டிற்கு இரண்டாம் தரமாய் இருந் தாலும் "ஆத்துமம் நம் சரீரத்தை விட முக்கியமானதே" ஆகும். ஆகவே ஆவிக்குரிய தன்மையை கண்டறிந்த பின்பு, அந்த வாலிபன் அடுத்து கேட்க வேண்டிய கேள்வி "அவள் பார்ப்பதற்கு எப்படி இருப்பாள்?" என்பதாய் இராமல் "அறிவுத்திறனிலும், உணர்வுபூர்வமான எழுச்சி யிலும் எனக்கு ஏற்றவள்தானா?" என்றே கேட்டுப் பார்க்க வேண்டும். பொதுவாக, தேவன் தெரிந்தெடுத்த வாழ்க்கைத் துணை, அந்த வாலிபனுக்குச் சமமான "மன-வயது" உடையவராய் இருப்பார். **சரீர வளர்ச்சி வயது வேறு! மன வளர்ச்சி வயது வேறு!**

சிலருக்கு வயது 25-ஆக இருந்தாலும், அவர்களது நடவடிக்கை பழக்கம் 15-வயது கொண்டவர்களுக்குரியதாயிருக்கும். அதாவது, அவர்களது சரீர வளர்ச்சிக்கு சமமாக அவர்கள் புத்தி, மன எழுச்சியின் வளர்ச்சி சமமாய் இருப்பதில்லை!

அந்தப் பெண் தன் பெற்றோரையே அதிக அளவு சார்ந்து வாழ்ந்திருக்கலாம்.... அல்லது, அவளுடைய வாழ்வின் சூழ்நிலை, அவனது ஆத்துமாவின் பாதிப்பாய் இருக்கலாம்!

ஒருவரின் "மன-வயதை" காண வேண்டிய அவசியத்திற்கு பல காரணங்கள் உண்டு. ஒருவருக்கொருவர் உரையாடுவது, திருமண வாழ்வில் முக்கிய பங்காகும். இருவரும் கலந்து பேசிக்கொள்ள பொது வான விஷயங்கள் குறைவாய் இருந்தாலோ அல்லது அவ்வாறு கலந்து ரையாடும் ஆர்வம் இல்லாதிருந்தாலோ.... அது அதிகமான மன அழுத்தத்தையும் சலிப்பையும் ஏற்படுத்தும்.

ஆகவே, பேசுவதற்கென பொதுவான காரியங்கள் கொண்டிருப்பது, திருமணமான சில மாதங்களுக்கு அல்ல, அவர்களின் காலமெல்லாம் இருக்க வேண்டும்.

அதுபோலவே, **ஒருவருடைய அறிவுத்திறன்** மற்றொருவரைவிட குறை வாய் இருந்தால், அதுவும் சுபாவமான திருமண வாழ்வாய் இருக்காது. ஒரு மனைவி அறிவுமேதையாய் இருந்தால், அதற்கு குறைவாய் இருக்கும் கணவனின் நிலை பரிதாபம்தான்! அவளுடைய

கையில், அவன் 'ஒரு கை பாவையைப்' போல்தான் இருப்பான். அதே போல, ஒரு கணவன் கற்றறிந்த மேல் படிப்பை கொண்டிருந்தால், அதை விட குறைவான மனைவி ஒரு 'தூசியைப் போலவே' குறுகி நிற்பாள். கிட்டத்தட்ட, அந்த வீட்டில் ஒரு வேலைக்காரியைப் போல்தான் இருப்பாள்!

'இப்படித்தான் எதிர்பார்ப்பு இருக்க வேண்டும்' என நான் வரையறை வைத்திடவில்லை அல்லது இருவரின் கல்வித் திறனும் ஒரே அளவில்தான் இருக்க வேண்டுமெனவும் வற்புறுத்தவில்லை. ஏனெனில் இதற்கு அப்பாற்பட்ட நிலையிலும், **நல்ல குடும்பங்களைத்** தேவன் அமைத்திருக்கிறார். நான் கூற விரும்பியதெல்லாம், ஒரு முதுகலை தத்துவ அறிஞர் ஒருவர்.... ஒரு படிக்காத கிராமத்துப் பெண்ணை திருமணம் செய்ய தேவன் நடத்துவது சாத்தியமல்ல! என்றுதான் கூறுகிறேன். அந்த கிராமத்துப் பெண் எவ்வளவு ஆவிக்குரியவளாய் இருந்தாலும், தேவன் நடத்த மாட்டார்! அவனுக்கு வரக்கூடிய மனைவி, தன் கணவனின் பணியில் சகஜமாய் உதவி செய்கிறவளாய் இருக்க வேண்டும். ஆகவே, அவள் ஒரு குறைந்த பட்சம் 'இளங்கலை' பட்டமாவது பெற்றிருந்தால் மாத்திரமே, தன் கணவனுக்கு அவனுடைய பணியில் உதவியாளராய் இருந்திட முடியும்!

A.S. ட்ரைடோன் எழுதிய "யாருடைய உலகம்?" என்ற புத்தகத்தில் ஒரு நிகழ்ச்சியை நேர்த்தியாக குறிப்பிடுகிறார்: "தனது 20-வயதில் இரட்சிக்கப்பட்டு.... உயர்கல்விகற்ற ஒரு சகோதரன், தன் திருமண வயதில் **இரட்சிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவ பெண்ணை திருமணம் செய்ய வேண்டும்** என்ற ஒரே ஆர்வத்தையே பிரதானமாய் கொண்டிருந்தார். ஆரம்ப கல்வியை மாத்திரம் கற்ற ஒரு கிறிஸ்தவ விசுவாச பெண்ணிடம் " என்னை திருமணம் செய்து கொள்வாயா?" எனக் கேட்டார். கல்வி தரத்தில் உயர்ந்த அந்த கிறிஸ்தவ வாலிபனின் கேள்விக்கு மறுப்பு கூற, அந்தப் பெண்ணால் முடியவில்லை! திருமணத்திற்குப் பின்பு, கொஞ்ச காலத்தில் மன அழுத்தங்களும் விரக்தியும் அவர்கள் நடுவில் தோன்றியது. அவளோ ஒரு புத்தகமும் படிப்பதில்லை! அவனோ புத்தக வாசிப்பில் ஆர்வம் கொண்டவன்! கல்வி ஆற்றலும் ஆராய்ச்சியுமே அவனது பங்காய் இருந்தது.... அவளோ எளிமையும் கிராமத்து நடைமுறையுமே கொண்டிருந்தாள்! அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கத்தான் செய்தார்கள். இருவருமே உண்மையான கிறிஸ்தவர்கள் தான்! ஆனால், **இருவருக்கும் கலந்துரையாட வேண்டிய பொதுவான காரியங்களோ வெகு குறைவாகவே இருந்தது.** இதன் முடிவாய் மனசஞ்சலமும் ஏற்பட்டது! 'இதுபோன்ற நிலையில்' எண்ணற்ற கிறிஸ்தவரல்லாதோர் திருமண வாழ்க்கை சிதறுண்டு போயிருக்கிறது! இந்த சகோதரன், தன் பிரச்சனைக்காக பலமுறை ஜெபித்தும், விடை காணாது, அதிக கவலையடைந்தார்! ஜெபம் என்பது, நம் கஷ்டங்களை

யெல்லாம் தீர்த்துக் கொள்ள வகை செய்யப்பட்டது அல்ல.... அதுவும் குறிப்பாய், நாமே உருவாக்கிக் கொண்ட கஷ்டங்களுக்கு ஜெபத்தின் உதவி அரிதே! முடிவில் ஒரு அனுபவம் உள்ள ஊழியர் அவர்களது பிரச்சனைக்கு நல்ல தீர்வு தந்தார். கணவனாய் இருக்கும் இந்த சகோதரன்தான், பிரச்சனைக்கு முழு பொறுப்பு என்று கூறிய அவர்.... இருவரின் உறவுக்கு ஏற்பட்ட விரிசலுக்கு, 'ஒரு பாலமாக' சில வருட திட்டங்களைக் கூறினார். அந்த திட்டத்திற்கு அதிக ஜெபமும், ஆவிக்குரிய கிருபையும் தேவையாய் இருந்தாலும், **ஒருவருக்கொருவர் உள்ள சுபாவமான வரங்களையும் திறமைகளையும், பயன்பாட்டுக்களையும்** ஊக்கவித்துக் கொள்ள முனைந்திடும் நடவடிக்கையும் அதிகமாய் தேவை! எனக் கூறினார். அதன் விளைவாய், அவனது மனைவி கொஞ்சம் கொஞ்சமாய் படித்து, புத்தக வாசிப்பில் ரசனை பெற்றார்கள்! அந்த கல்விமான் கணவனும், அவளுக்குப் பிரியமான ஆர்வங்களைக் கண்டறிந்து, அவனும் அவளோடு சேர்ந்து ஈடுபாடு கொண்டான்! ஆனால், துரதிருஷ்டவசமாய் வெகு குறைவான கிறிஸ்தவ திருமணங்களே, கஷ்டமான சூழலில் இவ்வாறு வழியை கண்டறிந்திருக்கிறார்கள்! இதற்குப் பொதுவான காரணம் என்னவென்றால், தேவனுடைய திட்டத்தில் திருமணம் எங்ஙனம் இருக்க வேண்டும்? என்பதை சிறிதுகூட விளங்கி கொள்ளவில்லை அல்லது சிந்திக்கக்கூட எத்தனிக்கவில்லை என்பதுதான்...." இவ்வாறாக A.S.ட்ரைடோன் விளக்கியுள்ளார்.

மேற்கண்ட நிகழ்ச்சியிலிருந்து, **அறிவுப்பூர்வமான நிலையிலும் ஓர் பொருத்தத்தை கண்டிட** அசட்டை செய்வது, தேவையற்ற துன்பத்தையே வாழ்க்கைத் துணையின் இருவருக்கும் கொண்டுவரும், என்பது தெளிவாகிறது. இதுபோன்ற நடைமுறை உண்மைகளைப் பொருட்படுத்தாமல் இருப்பது, ஆவிக்குரிய தன்மையாகாது! ஏனெனில், வாழ்க்கைத் துணையாக வரும் ஒருநபர் "ஒரு சிறந்த உண்மையான நண்பராய் இருக்க வேண்டும்" என்பதே தேவனுடைய நோக்கமாய் இருக்கிறது.

ஆகவே, தான் தேடும் ஒரு பெண்ணைக் குறித்து அந்த இளைஞன் தனக்குள் கேட்டுப் பார்க்க வேண்டிய ஞானமுள்ள கேள்வி என்னவெனில் "நான் பார்க்கும் இந்தப் பெண், என் எதிர்கால குழந்தைகளுக்குப் பொறுப்புள்ள தாயாய் இருப்பாளா? வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளைக் கலந்துரையாடி, அவளோடு நான் ஜெபித்திடவும் கூடுமா?" என்றே கேட்டுப் பார்க்க வேண்டும்.

**மன எழுச்சியின் உணர்வுகளுக்கும்** நாம் மதிப்புத் தர வேண்டும். இந்த நிலையிலும் ஓரளவு பொருத்தம் இருக்க வேண்டும். அப்போதுதான், இருவரும் கூட்டு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ முடியும்! உதாரணமாய், அமரிக்கையும் அமைதியுமான ஒரு வாலிப

சகோதரன், எப்போதும் **சிடுசிடுப்பான எழுச்சி பொங்கும் பெண்ணோடு** வாழ்வது கடினம்! ஆவிக்குரிய நிலையில் அவர்கள் சமமாய் இருந்தாலும், அவர்களது மன எழுச்சியின் சுபாவத்தில் கொண்ட வித்தியாசங்கள், திருமணத்திற்குப் பின்பு அதிக பிரச்சனைகளைக் கொண்டுவந்து தரும்.

இதனிமித்தமாய், 'சிடுசிடுப்பான மன எழுச்சி' சுபாவம் கொண்டவன் அதே போன்று சிடுசிடுப்பான மன எழுச்சி கொண்டவரை திருமணம் செய்ய வேண்டுமென நாம் பொருள் படுத்தவில்லை! அப்படியிருந்தால், அவர்களது வாழ்க்கையும் சுமுகமாய் இருக்காது. அது போலவே, **சோக அமைதியில் வாழ்பவர்,** தன்னைப் போலவே மற்றொரு சோக அமைதியில் வாழ்பவரைத் திருமணம் செய்தால், அந்தக் குடும்பம், குடும்பமாய் அல்ல.... கல்லறைத் தோட்டமாகவே இருக்கும்! இருப்பினும் "அதிகபட்சமான சுபாவ வித்தியாசங்களை" நாம் பாராமுகமாயும் இருந்துவிடக் கூடாது.

மேலும், நீங்கள் பார்க்கும் பெண் "**நகைச்சுவை உணர்வு**" கொண்டவளாய் இருக்கிறாளா? என்பதையும் பாருங்கள். இதனிமித்தம் திருமணத்திற்குரிய இளைஞன் ஒரு கோமாளியாய் இருந்துவிடவும் கூடாது! ஆகிலும், அவ்வப்போது வாய்விட்டுச் சிரிப்பவனாய் இருக்க வேண்டும்! குறைந்தது இரண்டு காரணங்களுக்கு, திருமண வாழ்வில் நகைச்சுவை உணர்வு ஊக்கமளிக்கும் தேவையாய் இருக்கிறது. முதலாவது, நகைச்சுவை "**அழுத்தத்தை போக்கும்** பாதுகாப்பின் திறப்பாய்" (Safty - valve) இருக்கிறது. கோபமான தர்க்கங்களை தடுப்பதற்கு இது பெரும் உதவியாய் இருக்கிறது. இரண்டாவது, நகைச்சுவை வாழ்க்கைக்கு நறுமணம் ஊட்டுவதாய் இருக்கிறது! திருமண வாழ்வில் 'கேலியான நகைச்சுவை அறியாதவர்கள்' அல்லது அவ்வித நகைச்சுவையைத் தாங்கி கொள்ளாதவர்களின் ஜீவியம், நல்ல சுவராசியத்தை இழந்த, சலிப்பான வாழ்க்கையாகவே இருக்கும்!

ஆன்மாவின் மூன்றாவது பகுதியே "**சித்தம்**" ஆகும்! நீங்கள் தேடும் ஒரு பெண், நீங்கள் சொல்வதற்கெல்லாம் 'ஆமாம்' எனக் கூறுவதே தன் கடமையாகக் கொண்டிருக்கக் கூடாது. அதுபோன்ற ஸ்திரீ, ஸ்திரீ அல்ல... ஒரு இயந்திர மனுஷியாகவே இருப்பாள்! அதேசமயம் தன்னைவிட மேலோங்கிய கையினால் அடக்கி ஆளும் சுபாவம் உள்ள பெண்ணைத் திருமணம் செய்வதும், அபாயமே ஆகும். இதற்குப் பதிலாய், ஒருபெண் தனக்கென **வலிமையான கருத்துக்களை** உடையவளாய் இருந்தால், அவளே தன் கணவனுக்கு ஓர் பெரிய ஆஸ்தியைப் போல் இருப்பாள்! நீங்கள் தேடும் பெண், உங்களுக்கு மனப்பூர்வமாய் அடங்கியிருக்க விருப்பம் கொண்டவளாயும் இருக்க வேண்டும்.

அதே சமயம், நீங்கள் எதைச் சொன்னாலும், அதற்கு வெறும் 'ஆமாம்'

**போடுகிறவளாய் இருந்து விடக்கூடாது. ஏனெனில், அனேக புருஷர்கள், உண்மையும் நேர்மையுமாய் மாற்று கருத்துக்களைக் கூறும் மனைவியர் மூலமாய் கௌரவமான புருஷர்களாய் பிரகாசித்திருக்கிறார்கள்!**

*வால்ட்டர் ட்ரோபீச் எழுதிய 'ஒரு இளைஞனை நேசித்தேன்' என்ற புத்தகத்தில், அவருடைய நண்பர்களில் ஒருவர், தன் எதிர்கால மனைவியிடம் அவர் விரும்பும் எதிர்பார்ப்புகளைக் கூறினார்:*

*1) என்னுடைய குறைகளை நேர்மையாய் சுட்டிக்காட்டி, என்னை உயர கொண்டு வந்து நிறுத்த சவால் பெற்றவளாய் இருக்க வேண்டும்.*

*2) யாதொரு விதத்தில் என்னிடம் ஏமாற்றம் அடைந்தாலும், என்னைக் குறித்த நம்பிக்கையிலோ சற்றும் பின் வாங்காதவளாய் இருக்க வேண்டும்.*

*3) என்னுடைய பலவீனமான பகுதிகளை நான் மேற்கொள்ள, எனக்கு அயராது உதவுகிறவளாய் இருக்க வேண்டும்.*

*4) நான் அவளுக்கு ஏதாவது சேதம் விளைவித்தால், பாதிக்கப் படாதது போல் பாசாங்கு செய்யாமல், நேர்மையுடன் அதை எனக்கு சுட்டிக் காட்டுகிறவளாய் இருக்க வேண்டும்.*

*இவையனைத்தும் சாதகமாய் நிகழவேண்டுமென்றால், வாழ்க்கைத் துணையாக வரும் பெண் "தனக்கென சித்தம் கொண்டவளாயும்" அதை, அப்பியாசப்படுத்துகிறவளாயும் இருக்க வேண்டும்! ஒரு மனிதனுக்குத் தேவையாய் இருப்பது, ஓர் அருமையான பெண் அல்ல! 'அவனுக்குச் சமமான நல்லதொரு வாழ்க்கைத் துணையே' ஆகும்!*

3.**சரீரத்தில் விளங்கும் ஒருமைப்பாடு**

*தேவனுடைய சிருஷ்டிப்பில், சரீரத்திற்கும் ஒரு பங்கு இருக்கிறது. மனுஷனுடைய சரீர சம்பந்தமான காரியத்தில், பல விஷயங்கள் இருக் கிறது.... அவைகளையும், திருமணசமயத்தில் கவனம்கொண்டு பார்ப்பது நல்லது. இதனிமித்தம், நாம் ஒரு கோடியின் திசைக்குச் சென்று* **"இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்கே திருமணம்!" என்ற நிலையை அடைந்து விடக் கூடாது.** *இதுபோன்றவர்கள் செய்து கொள்ளும் திருமணம் "சட்ட பூர்வமான விபச்சாரம்" என்றே கூறவேண்டும்! அதே சமயம், மற்றொரு கோடி திசைக்குச்சென்று "ஆவிக்குரிய விஷயங்கள் மாத்திரமே மேலானது...." எனக்கூறி,* **சரீரத்திற்குரிய ஆர்வத்தை புறக்கணிக்கவும் கூடாது!** *இந்த இருகோடி திசையையும் மறுத்து, வேதாகமம் வகுத்து தரும் "நடுநிலையை" நாம் தெரிந்து கொள்ளவே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.*

**நாம் 'உடல் இல்லாத' ஆவியில் இல்லை.... நாம் மானிடர்கள்! ஆகவே திருமணம் செய்யப்போகும் இருவருக்கும், ஓரளவிற்காவது ஒருவருக் கொருவர் சரீர கவர்ச்சி தோன்றவேண்டும்!**

**முதலாவது** *ஆவியும்,* **இரண்டாவது** *ஆன்மாவும்,* **கடைசி** *மூன்றாவதாக சரீரத்தையும் வைத்திருக்கும் நிலையில், ஒருவருக் கொருவர் சரீர அழகினால் கவரப்படுவதில் தவறு ஏதுமில்லை. இதற்கு மாறாக, ஒருவர் சரீர அழகின் கவர்ச்சிக்கும் அல்லது தோலின் நிறத்திற்கும்* **அதிக முக்கியத்துவம் கொடுப்பவராய் இருந்தால்** *அவ்வித திருமண வாழ்வு படிப்படியாய் மிகுந்த ஏமாற்றத்தையே தரும்!*

*முதல் ஆரம்பத்திலேயே ஒரு பெண்ணின் ஆவிக்குரிய தன்மையை கண்டு ஈர்க்கப்படாமல், அவளின் சரீர அழகினால் ஈர்க்கப்பட்டு திருமணம் செய்தால்.... அந்தப் பெண் ஒரு விசுவாசியாய் இருந்தாலுமே கூட, திருமணத்திற்குப் பிறகு ஏராளமான பிரச்சனைகள் உங்களுக்கு காத்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஒரு அழகுள்ள பெண், தன் அழகைக் குறித்து நன்கு அறிந்திருப்பாள். தன் அழகை வைத்து அனேக வாலிபர்களின் கவனத்தை தன் அண்டையில் ஈர்த்துக் கொண்டு பழகியிருப்பாள். ஆகவே திருமணத்திற்குப் பிறகு, தன் கணவனும் அவ்வாறே* **தன் மீது ஈர்ப்புள்ளவனாய்** *இருக்க விரும்புவாள். இதனிமித்தமாய் "உங்கள் அழகுள்ள மனைவி" உங்கள் நேரத்தையும், கவனத்தையும் 'தேவையில்லாமல்' தனக்கே தந்திட எதிர்பார்ப்பாள்!*

*திருமணத்தில்* **'வயதிற்கும்' முக்கியமான பங்கு உண்டு.** *கணவன் மனைவி உறவானது, கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவுக்கு ஒப்பாய் இருக்கிறது! அதன்படி, புருஷனே மனைவிக்குத் தலையாய் இருக்கிறான்! ஆகவே கணவன் வயதுள்ளவனாகவும், அதிக முதிர்ச்சி கொண்டவனாகவும் இருக்க வேண்டியது, அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தகுதியாகும். ஸ்திரீகள் புருஷர்களைவிட முதிர்ச்சி நிலைக்குப் பின்தங்கியே வருவார்கள்!*

**ஆகவே புருஷன் வயது குறைந்தவனாய் இருந்தால், தன் மனைவியைக் காட்டிலும் முதிர்ச்சி தன்மையிலும் குறைவாகவே இருப்பான்!**

*இது ஒரு ஆரோக்கியமற்ற நிலை! ஏனெனில், ஒரு ஸ்திரீ தன் கணவனின் முதிர்ச்சி நிலையை ஏறிட்டுப் பார்க்கிறவளாகவே இருக்க வேண்டும்! புருஷன் வயதுடையவனாய் இருந்தால், இந்த உலக பாங்கில் அதிக நடைமுறை அனுபவம் கொண்டு இருப்பான். பெண்ணின் வயதைவிட ஆணின் வயது கூடுதலாய் இருக்க வேண்டியதற்கு மற்றொரு காரணம், ஆணைவிட பெண்ணின் வயது சீக்கிரத்தில் முதுமை அடைந்து விடும்! குறிப்பாக, அவள் பிள்ளைகளைப் பெறத் துவங்கிவிட்டால், கண்டிப்பாய் அவ்வித முதுமை சீக்கிரத்தில் அவளிடம் வந்து சேரும்! எனவே, அவள் திருமணத்தில் ஏற்கனவே வயதுள்ளவளாய் இருந்தால், நடுத்தர வயதிலேயே "வித்தியாசங்கள்" அதிகம் தோன்றத்தொடங்கும். இவ்வித சாத்தியக்கூறுகளை வைத்துப் பார்க்கும் போது, ஓர் ஆண்மகன்*

*தன்னைவிட வயது அதிகம் கொண்டவளை திருமணம் செய்யாதிருப்பது நல்லது என்றே புத்தி சொல்லப்படுகிறான்!*

*ஆகிலும், இதுபோன்ற வயது வித்தியாசம், சிலரை அதிகம் பாதிக்கிறது.... சிலரையோ அவ்வளவாய் பாதிப்பதில்லை! ஆகவே, இங்கும் ஒரு சட்டத்திட்ட வரையறையை வைத்திட நாம் இயலாது.*

**இருப்பினும், தன்னைவிட வயது கூடிய ஒரு பெண்ணை திருமணம் செய்ய கருதும் ஒரு இளைஞன், அந்தப் பெண்ணின் வயது 2 அல்லது 3-வயது மிகாமல் இருப்பதற்கு கவனம் கொள்வது நல்லது!**

*இந்த வரையறையைத் தாண்டி வயது சென்றுவிட்டால், அந்தப் பெண் தன் கணவனுக்கு மனைவியாய் இருப்பதை விட, தன் கணவனுக்கு தாயாக இருந்து விடும் அபாயம் உண்டு! ஆகவேதான் ஒரு பெண், தன்னைவிட முதிர்ச்சியில்லாதவரை அல்லது வயது குறைந்தவரை திருமணம் செய்யாதிருக்க வேண்டும்! அதேபோல், ஒரு பெண்ணும், ஒரு புருஷனின் வயது தன்னைவிட 10-வருடத்திற்கு மேல் உள்ளவரை திருமணம் செய்வது புத்தியுள்ள செயல் அல்ல! ஏனெனில், அதுபோன்ற புருஷன் அவளுக்கு கணவனாய் இருப்பதைவிட ஒரு தந்தையைப்போல்தான் இருப்பார்!*

*இருப்பினும், வயது வரம்பைக் குறித்து ஒரு குறிப்பிட்ட சட்டம் வகுத்திட இயலாது. இருப்பினும்,* **ஒரு ஆணின் வயது 25–முதல் 32–வரை** *இருக்கலாம். ஆனால் 25-வயதிற்கு முன்பாக முதிர்ச்சியற்ற நிலையில் தான் இருப்பார்!*

**இடையூறு இல்லாத இந்த நாட்களில், கர்த்தருடைய பணிக்கே தன்னை அவன் அதிகம் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்!**

*ஒரு வாலிபன் 32-வயதை தாண்டிய பிறகு, மற்றொருவரோடு சேர்ந்து விட்டுக்கொடுத்து வாழ்வது கடினம். ஏனெனில், தன் ஜீவிய பழக்கத்தில், தனக்கென்று ஒரு பகுதியில் அவரது மனம் தங்கிவிடும். இதே காரணத்திற்காக,* **ஒரு பெண் 20–வயது முதல் 27–வயதிற்குள்** *திருமணம் செய்வது நல்லது. இவையனைத்தும் ஒரு கட்டாயமான வரையறை அல்ல. சூழ்நிலை காரணமாகவோ அல்லது சில நடைமுறை காரணமாகவோ, ஒரு நபர் தன் பிந்திய வயதில் திருமணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கக்கூடும்.* **தெரிந்து கொள்ளும் சுதந்திரம் உங்கள் கையில்தான் இருக்கிறது!** *ஆகிலும், 'வரையறைக்குட்பட்டிருப்பதே' மிகவும் நல்லது!*

*சரீர நலனுக்குரிய, உடல் அமைப்புகளையும், வம்சாவழி குறைபாடுகளையும் திருமணத்திற்கு முன் சிந்திப்பது நல்லது. இல்லையெனில், அது குழந்தைகளைப் பாதித்திட முடியும். தனித்தனியாக ஒவ்வொரு நபரும் இது விஷயத்தில் நேர்மையுள்ளவர்களாய் இருக்க*

*வேண்டும். வம்சாவழி சரீர பாதிப்போ, நோய்களோ அல்லது மன அளவில் சேதங்களோ.... ஆகிய இவைகள், அவர்களிடமிருந்தாலோ அல்லது அவர்களது நெருங்கிய உறவினரிடத்தில் இருந்தாலோ, அவைகளை திறந்த மனதோடு சொல்லி விட வேண்டும். ஏனெனில் இது போன்ற குறைபாடுகள் அடுத்த சந்ததியைப் பாதித்திட முடியும். இது விஷயங்களில் ஏதேனும் சந்தேகமிருந்தால், ஒரு மருத்துவரை அணுகி தெளிவுபடுத்திக் கொள்வதுகூட நல்லது. இருப்பினும் திருமணம் செய்து கொள்ளப்போகும் நபர், "இதுபோன்ற குறைபாடுகள் திருமணத்தை தடை செய்ய வேண்டாம்! இந்த திருமணம் தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டது! ஆகவே தேவனையும் அவரது ஆளுகையையும் விசுவாசிக்கிறேன்! சரீரத்தில் உள்ள எல்லா குறைபாடு களையும் தேவன் சுகமாக்கிட முடியும்!" என* **விசுவாசமாய் முடிவெடுத் திடவும் முடியும்!** *ஆனால், இதுபோன்ற சரீர நலனுக்குரிய விஷயங்களை மறைப்பதுதான் தவறு.... அதுவும், பாவமே ஆகும்! திருமணத்திற்கு முன்பு மறைக்கப்பட்ட பகுதிகள் பின்பு தெரிய வந்ததினிமித்தம், அனேக திருமணங்கள் முறிவடைந்து போயிருக்கிறது. எப்படி யிருந்தாலும், ஒரு விசுவாசி மறைத்து வைக்கும் வஞ்சனைக்குள் ஈடுபடக் கூடாது! இவ்வாறு நேர்மையாய் இருப்பதினிமித்தம், உங்களுக்கு வர இருக்கும் வாழ்க்கைத் துணையை இழக்க நேரிடுமோ என்ற அச்சம் உங்களுக்குத் தேவை இல்லை! இதற்கு மாறாக, வாழ்க்கை துணையாய் வருபவர் உங்கள் நேர்மைக்கு அதிக மதிப்பு தந்து மகிழ்ச்சியும் அடையக்கூடும். உங்கள் நேர்மையினிமித்தம் அந்த நபர் திருமணத் திற்கு மறுத்துவிட்டால், நீங்கள் தேவனை கனப்படுத்தியதி னிமித்தம் தேவன் உங்களை கைவிட மாட்டார் என்பதை நிச்சயித்துக் கொள்ளலாம்.*

**எப்போதெல்லாம் தேவன், ஒரு திருமண ஒழுங்கு சிதைவதற்கு அனுமதிக் கிறாரோ.... அப்போதெல்லாம் "தான் விரும்பிய சிறந்ததை" உங்களுக்குத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு செய்திருப்பார் என அறியுங்கள்.**

*'நெருங்கிய இரத்த சம்மந்தம்' கொண்டவர்களை திருமணம் செய்வது அபாயகரமானது. அது ஏனென்றால், ஒருவருக்குள் மறைந் திருக்கும் சரீர குறைபாடுகள், சொந்த இரத்த சம்மந்தம் கொண்ட வர்களைத் திருமணம் செய்யும்போது, அந்தக் குறைபாடுகள் பிள்ளை களிடத்தில் வெளிப்படும்! நெருங்கிய உறவினர்கள் திருமணம் செய்வதை தடைசெய்யும்படிக்கே, தேவன் இவ்வித குறைபாடுகளை அனுமதித்திருக்கிறார். வேத வாக்கியங்களும் இதுபோன்ற திருமணத் திற்கு தடை விதிக்கிறது (லேவி.18:6).*

*தன் சொந்த மூத்த சகோதரியின் மகளை ஒருவர் திருமணம் செய்வது, இந்திய தேசத்தின் பல பகுதிகளில் வழக்கமாயிருக்கிறது. புற ஜாதிகளிடம் காணப்படும் இந்தப் பழக்கம், ஒரு விசுவாசியின் மனதை*

*ஒருபோதும் ஆட்கொள்ளக்கூடாது. இதுபோன்ற திருமண உறவு, இயற்கைக்கும் வேதவாக்கியத்திற்கும் முரணானதாகும். இவ்வாறு திருமணம் செய்தவர்களின் பிள்ளைகள், ஏதாகிலும் ஒரு சரீரக் குறையோடுதான் பிறந்திருக்கிறார்கள். ஆகவே, தேவனே ஒன்றை தடை செய்திருந்தால், அவ்வாறு அவர் செய்ததற்கு 'நல்ல காரணங்கள்' கண்டிப்பாய் இருக்கும்!*

**ஒருவரையொருவர் நேசிக்கும் அன்பு**

*ஒரு பெண்ணை திருமணம் செய்யும்படி தேவன் நடத்தியிருந்தால், அவளை நேசிப்பதற்குரிய அன்பையும் அவர் தருவார். அந்த அன்பு எத்தகையதாய் இருக்க வேண்டுமென நாம் 3-அதிகாரத்தில் ஏற்கனவே கண்டோம். திருமணத்திற்கு முன்பு அன்பு வளர்ந்திருக்கலாம் அல்லது வளராமல் இருக்கலாம்.... ஆனால், திருமணத்திற்குப் பின்பு, அன்பு நமக்குள் கண்டிப்பாய் தங்கியிருக்க வேண்டும்!*

**தான் முன்பு கண்டிராத ரெபெக்காளை, தேவன் தந்த மனைவியாக ஈசாக்கு ஏற்றுக்கொண்ட போது, "அவன் அவளை நேசித்தான்!" என்றே வேதம் கூறுகிறது (ஆதி.24:67).**

*அவளை முழுவதும் அறியாவிட்டாலும், திருமணத்தில் தேவ சித்தம் உறுதியாக இருந்ததினிமித்தம்.... அவளுக்கென, அவனுடைய இருதயத்தில் அன்பு துளிர்த்தது!*

*ஈசாக்கை தேவன் நடத்தியது போல், முன் பின் தெரியாத ஒரு பெண்ணிடம் தேவன் பொதுவாய் நடத்த மாட்டார் என நாம் அறிவோம். ஆனால் அதே சமயம், ஈசாக்கிற்கு அருளியதுபோல் "வெளித்தோற்றமான வெளிப்பாடுகளையும்" நமக்கு இப்போது தரமாட்டார் என்பதையும் அறிவோம். இங்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரே ஒரு பாடம் என்னவெனில், நீங்கள் திருமணம் செய்யப் போகிற நபர்* **தேவன் உங்களுக்காக தெரிந்து கொண்ட நபர்!** *என்பதை மாத்திரம் அறிந்துகொள்ள வேண்டியது மிக முக்கியமாகும். அவ்வாறு, அந்தப் பெண் தேவன் உங்களுக்காக தெரிந்து கொண்ட பெண் என்பதை நீங்கள் அறிந்து கொண்டால்.... இப்போது நீங்கள் அவரிடம் உங்கள் பெற்றோர் மூலம் நடத்தப்பட்டாலும் அல்லது நீங்களே நேரடையாக நடத்தப்பட்டாலும்.... ஈசாக்கிற்கு செய்ததைப் போலவே உங்கள் இருதயத்திலும் "அவளை நேசிப்பதற்குரிய அன்பை" தேவன் வைத்திடுவார். அதேபோல, அந்தப் பெண்ணும் அன்புகூருவாள்!*

*அன்பை கட்டாயப்படுத்தி உருவாக்கிட முடியாது. அது தானாகவே இருதயத்திலிருந்து பிறக்காமல், கட்டாயப்படுத்தப்பட்டதாய் இருந்தால்.... அது உண்மையான அன்பாய் இருக்காது!* **உண்மையான அன்பு, ஒருவர் மீது கொண்ட மதிப்பை வைத்து வளருகிறது!** *ஒரு நபரை*

*மதித்து புகழ்ந்திட உங்களால் முடியவில்லையென்றால், அவரை மெய்யான அன்பினால் நேசிப்பது கடினம்!*

*'ஒருவர் மீது தோன்றும் அனுதாபத்தை' அன்பு என தவறாய் புரிந்து கொள்ளக் கூடாது. துரதிருஷ்டவசமான சூழ்நிலைக்குள் ஒரு பெண்ணை நீங்கள் கண்டதினிமித்தம்* **உங்களுக்குள் தூண்டப்பட்ட அனுதாபத்தைக் கொண்டு,** *அவளை நீங்கள் திருமணம் செய்வது புத்தியீனமான செயலே ஆகும். வேண்டுமானால் அதை ஒரு வீரச் செயல் அல்லது தியாகச் செயல் எனக் கூறிக்கொள்ளுங்கள். ஏனென்றால், அந்தப் பெண்ணிடம் 'உண்மையான அன்பு' உங்கள் இருதயத்தில் இல்லாவிட்டால், அந்த திருமணம் முடிவில் சீர்கேட்டை அடையும்!*

**ஓர் உத்தம கிறிஸ்தவ திருமணத்திற்கு அன்பே பிரதான முக்கியத் தேவையாய் இருக்கிறது. அனுதாபமும், இரக்கமும் மாத்திரமே போதுமானது அல்ல!**

*ஒரு பெண்ணின் ஆவிக்குரிய நிலை குறித்த மதிப்பு உங்களிடம் இல்லையென்றால், அவளது துணிவான மனமாற்றமும், அறிவுத் திறனும் உங்களை கவரவில்லையென்றால், அவளை புகழ்வதற்கென யாதொரு எண்ணமும் உங்களில் தோன்றவில்லையென்றால்.... அந்தப் பெண்ணை திருமணம் செய்வதற்கு நீங்கள் செய்கின்ற ஏற்பாடுகள் 'ஞானமில்லாத செயல்' என்றே கூற வேண்டும்.*

*இந்த உலகத்தில் "அன்பே பிரதானம்!" என்றே வேதம் கூறுகிறது! (1கொரி.3:13). ஆகவே இந்த மேலான அன்பை, பாராமுகமாய் புறக்கணித்திடக் கூடாது.*

**இனம், கலாச்சாரம், ஜாதி, மற்றும் பொருளாதார நிலை குறித்த உண்மைகள்**

*வாழ்க்கைத் துணையை தேடும் சமயத்தில் இன்னும் சில நடைமுறை பகுதிகளை நாம் கண்டிப்பாய் சிந்திக்க வேண்டும்.*

*வேறொரு ஜாதி நபரை திருமணம் செய்வது சரியா? இதுபோன்ற ஜாதி வித்தியாசங்கள் குறித்து வேதாகமம் போதிப்பது என்ன?*

*கொலோசெயர்.3:11* Living *மொழிபெயர்ப்பு கூறுகிறபடி "கிறிஸ்துவுக்குள்ளான புதுவாழ்வில், ஒருவருடைய நாடு அல்லது இனம் அல்லது கல்வி வேறுபாடு, மற்றும் சமுதாயத்தில் உள்ள மதிப்பு ஆகிய யாதொன்றும் முக்கியமானது அல்ல!* **ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறானா? என்பதே முக்கியமானதாகும்"** *எனக்கூறுகிறது. கலா.3:28 கூறும்போது "நீங்கள் யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை! அடிமையென்றும் சுயாதீனன் என்றும் இல்லை! அல்லது கிறிஸ்துவுக்குள் ஆணென்றும் பெண்ணென்றும் கூட இல்லை! கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் யாவரும் ஒன்றாகவே இருக்கிறோம்!" என்றே வாசிக்கிறோம்* (Living Bible *மொழிபெயர்ப்பு).*

மேற்கண்ட வசனங்கள், நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு 'ஜாதி வித்தியாசங்கள்' தேவனுக்கு ஒரு பொருட்டல்ல! என்பதையே மிகத் தெளிவாக காட்டுகிறது. கிறிஸ்தவ சபை ஐக்கியங் களில் நாம் ஒருவரோடொருவர் கொண்டிடும் எந்த உறவிற்கும் 'ஜாதி வேறுபாடு' காண்பது முற்றிலும் நியாயமற்றதாகும். அதே சமயம், ஜாதிகளில் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. நாம் வாசித்த கலாத்தியர் 3:28 கூறுவதெல்லாம், "ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரும் போது மாத்திரமே" ஜாதி நமக்கு ஒரு பொருட்டல்ல. அல்லது ஆணா? பெண்ணா? என்பதும் ஒரு பொருட்டல்ல. அதனிமித்தம், 'பாலியல்' என்ற வேறுபாடு இல்லை என்ற பொருளாகாது! ஏனெனில் கலாத்தியர் 3:28-யை சுட்டிக்காட்டி ஒரு ஆண் மற்றொரு ஆணை திருமணம் செய்யலாகாது!? இதைப்போலவே ஜாதிகளிலும் பல்வேறு வித்தியாசங்கள் இருப்பதை புரிந்து வைத்திருப்பதில் தவறு ஏதுமில்லை!

வேதபூர்வமாய் வெவ்வேறு இனத்தினர் **கலப்பு – திருமணம் செய்து கொள்வதில் எந்த தவறும் இல்லை.** ஆகிலும், இந்த விஷயத்தில் குறைந்தபட்ச இரண்டு முக்கிய காரணங்களை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். முதலாவது காரணம், வெவ்வேறு இனத்தினர் கலந்து பிறக்கும் பிள்ளைகள், குறிப்பாக நம் இந்திய தேசத்தில் ஏராளமான பிரச்சனைகளை சந்திக்க வேண்டியதாயிருக்கிறது. இரண்டாவதாக, தன் பெற்றோர்களில் ஒருவர் அயல்நாட்டவராய் இருந்தால், அந்த நபருடைய ஊழியம் 'குறிப்பாக இந்திய தேசத்தில்' வெகுவாய் பாதிக்கப்படும்! ஆனால் சிலர் தங்கள் முதிர்ச்சி இல்லாத செயலால்.... அதுவும் குறிப்பாக "சுயநலம்-ஆட்கொண்ட நிலையில்" இந்த நடை முறை உண்மைகளைத் தள்ளி விட்டு அவசரமாய் திருமணம் செய்கின் றார்கள்.... சில வருடங்கள் கழித்து, மனவேதனையும் அடைகிறார்கள்!

மற்றொரு பகுதியாய் நாம் காண வேண்டியது 'கலாச்சாரம்' ஆகும். ஒரு இந்தியன் அயல்நாட்டவரை திருமணம் செய்யும்போது கலாச்சார வித்தியாசங்கள் ஏராளமாய் ஏற்படும்! ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து சமாளிப்பது அதிக கடினமாய் இருக்கும்.

இந்தியாவில் அவர்களின் குடும்பத்தை அமைத்தால், அது இன்னமும் அதிக கடினமாய் இருக்கும். இருப்பினும் இந்தியன், இந்தியாவின் மற்றொரு மாநிலத்தில் உள்ளவரை திருமணம் செய்தால், அவர்களின் கலாச்சார பின்னணியில் வரும் வேறுபாட்டை சமாளிக்கும் அழுத்தங்கள் இருந்தாலும், அது அவ்வளவாய் இருக்காது! அவர்கள் இந்தியாவின் வேறு வேறு பாஷைகளை உடையவர்களாய் இருந்தாலும், **இருவருக்கும் ஒரு பாஷை பொதுவானதாய் இருக்க வேண்டும்.** அப்படி யிருக்குமென்றால், எந்த அழுத்தங்களும் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆனால் தன் வாழ்க்கைத் துணை அறியாத இந்திய பாஷையில் அவர்

அதிகமாய் பேசிக் கொண்டி ருந்தால், அது மற்றவருக்கு கடினமாய் மாறமுடியும். மேலும் **எங்கு தங்களுடைய நிரந்தர முகவரியை வைத்துக் கொள்ள வேண்டும்** என்பதிலும் பிரச்சனை ஏற்பட முடியும்! இதுபோன்ற திருமணத்தில், ஒருவரின் கலாச்சாரம், மற்றொருவரின் கலாச்சாரத்தை ஆளுகை செய்திட முடியும் என்பதையும் ஆரம்பத்திலேயே அறிந்திருக்க வேண்டும்.

இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில், திருமணத்தை முடிவு செய்ய **'ஜாதி' ஆக்ரோஷம் ஆட்டிப்படைக்கிறது!** இதுபோன்ற ஜாதிக் கட்டுப்பாடு, சமுதாய தீமை நிறைந்ததாகும்! செம்மையாய் மனம் திரும்பாத அனேக கிறிஸ்தவர்களால், இந்த தீமை கிறிஸ்தவ உலகத்திற் குள்ளும் புகுந்து விட்டது. கிறிஸ்துவோ இதுபோன்ற ஜாதி வேறு பாடுகள் அனைத்தையும் தகர்த்து விட்டார்! ஒரு விசுவாசி, ஜாதி வித்தியாசத்தை முன்னிட்டு தன் திருமண தீர்மானத்தை, ஒருபோதும் தள்ளிவிடக்கூடாது! திருமணத்தில் ஜாதி துவேஷத்தால் ஆட் கொள்ளப்பட்ட ஒருநபர் 'தான் தேவனுடைய பிள்ளை இல்லை!' என்பதையே நிரூபிக்கிறார்.

என்னதான் இருந்தாலும், உத்தம கிறிஸ்தவன்.... இனவித்தியாசத் தாலோ, கலாச்சார வித்தியாசத்தாலோ, மொழி வித்தியாசத்தாலோ, அல்லது ஜாதி கட்டுப்பாட்டினாலோ ஆட்கொள்ளப்படவே கூடாது! இதன் மூலமாய் "கிறிஸ்தவர்கள் இதுபோன்ற பிரிவினைச் சுவருக்கு அப்பாற்பட்டவர்கள்!" என்பதையே நிரூபித்து காட்ட வேண்டும்.

பொருளாதார அல்லது சமுதாய ஏற்றத்தாழ்வுகள் ஒரு திருமண ஒழுங்கை தடை செய்ய அனுமதிக்கக் கூடாது! இருப்பினும் ஒருவர் வாழ்ந்து வரும் **'வாழ்க்கைத் தரத்தை'** மனதில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்! சமுதாயத்தின் உயர்ந்த தரத்தில் வளர்ந்தவர்கள், மிகுந்த தாழ்ந்த தரத்தில் வாழ்ந்தவர்களோடு குடும்பம் அமைப்பது அதிக சிரமமாய் இருக்கும். இதுபோன்ற விஷயங்களில் நீங்கள் 'நடைமுறை கிறிஸ்தவனாய்' இருக்க வேண்டுமேயல்லாமல், ஏதோ.... கொள்கை வீரர்களாய் இருந்து விடக்கூடாது!

**வரதட்சணை கொடுமை**

நம் தேசத்தின் சாபக்கேடான பழக்கத்தில் ஒன்றுதான் "வரதட்சணை வேண்டும்" என கேட்கும் பழக்கம்! இந்தியாவில் புழங்கும் வரதட்சணை தீமை, திருமணத்தில் ஒருவருக்கொருவர் உள்ள உறவை வெகுவாய் குறைத்து.... வெறும் **வியாபார களமாய்** ஆக்கி விட்டது. அவிசுவாசிகள் என நாம் கூறுபவர்களில், பெயர் கிறிஸ்த வர்களும் அடங்கியே இருக்கிறார்கள்! இந்த பெயர் கிறிஸ்தவர்கள், இந்த வரதட்சனை கொடுமையை கையாண்டால், நமக்கு அது ஒரு பொருட்டல்ல! ஏனெனில் ஆவிக்குரிய குருடர்களாகிய இவர்கள்,

தங்கள் ஜீவியத்தை பொருளாசை ஆட்டிப்படைத்திட தாராளமாய் அனுமதிக்கிறார்கள்! அது போகட்டும் .... ஆனால் விசுவாசிகள் என சொல்லிக் கொள்பவர்களும் “இந்த வரதட்சனை முறைகேட்டிற்கு” கைகொடுப்பதை நாம் என்னவென்று சொல்வது? மெய்யாகவே, பிசாசு இவர்களுடைய இரு கண்களையும் குருடாக்கி விட்டான் என கூறுவதே சாலச் சிறந்தது! திருமணத்திற்கு முன் குறிக்கப்பட்ட மாப்பிள்ளையின் பெற்றோர்கள், வரிசைப்படுத்தி கேட்ட வரதட்சணையை, கொடுக்க முடியாமல் தவித்த பெண்ணின் பெற்றோர்கள் அனேகர், திருமண முடிவை முறித்திட வேண்டிய நிலையாகி இருக்கிறது! இந்த வரதட்சணை கொடுமையால், நம் தேசத்தில் மன உளைச்சலுக்கு ஆளான பெண்களின் எண்ணிக்கை சொல்லி மாளாது!

**திருமணத்தை ஒழுங்கு செய்ய வருகிறவர்கள் “வரதட்சணையை முன் வைத்து” பேரம் பேசுகிறவர்களாய் இருந்தால், தேவன் அவர்களை கடுமையாய் நியாயம் தீர்ப்பார்!**

அதுவும், தங்களை மறுபடியும் பிறந்தவர்கள் என கூறிக் கொண்ட “தேவனுடைய வீட்டிலேதான்” முதலாவது தொடங்கும்! இந்த உண்மைகளை எல்லாம் அறிந்த எண்ணற்ற விசுவாசிகள் “இந்த புறஜாதியாரின் கொடிய பழக்கத்தை மறுத்து நிற்க தவறியபடியாலே” இந்தப் பழக்கம் இன்றும் சபைகளில் உலாவிக் கொண்டிருக்கிறது! மாறுபாடு கொண்ட இந்த சந்ததியில், உறுதிபட நிற்க வேண்டிய வர்களே, தங்களுக்குத் தாங்களே கோணலும் மாறுபாடுமாய் மாறி விட்டது பெரும் துயரமாகும்!

**தேவனை பிரியப்படுத்த வேண்டுமென விருப்பம் கொண்ட எந்த கிறிஸ்தவனும் ஒருபோதும் வரதட்சணை கேட்கவும் மாட்டான் அல்லது வாங்கவும் மாட்டான்!**

இன்னும் சில விசுவாசிகள் “நான் வரதட்சணை கேட்கவில்லை, என் பெற்றோர்கள்தான் கேட்கிறார்கள்” எனக் கூறி ஒளிந்திட விரும்பும் கோழைகளாக இருக்கிறார்கள்! இதுவே சத்தியம் என அறிந்த உறுதி இவர்களுக்கு இருந்திருக்குமானால், “என் திருமணத்திற்கு வரதட்சணை வேண்டாம்!” என ஏன் தன் பெற்றோர்களிடத்தில் தைரியமாய் கூற வில்லை? இங்குதான் ஒன்று புரிகிறது.... வரதட்சணையை இவர்கள் இரகசியமாய் தங்கள் இருதயத்தில் இச்சித்திருக்கிறார்கள்! மெய்யாகவே இந்த வரதட்சணை தீமையை கொடிய தவறு என அறிந்தவர்கள், அந்த உண்மையை, மனதார பேசியிருக்கவும் வேண்டும்! எத்தனையோ விஷயங்களில் வலிமையாக நின்ற அனேகர், வரதட்சணை கொடுமையை எதிர்த்து நிற்பதற்கு, முதுகெலும்பில்லாத ‘ஜெல்லி மீனைப் போல்’ இருந்து விட்டார்கள்! ஆ, இது கொடுமை!!

“என் படிப்பிற்காக பல லட்சங்கள் செலவழித்த” என்

பெற்றோர்கள், பெண்ணின் பெற்றோர்களிடமிருந்து கொஞ்சம் பணத்தை வரதட்சணையாக வாங்குவதில் தவறு ஏதுமில்லை! என சிலர் வாதம் செய்கிறார்கள். இன்னும் சிலர், என் பெற்றோர்களுக்கு இந்த வரதட்சணை பணம் அவசியமாய் இருக்கிறது.... ஏனெனில், என் சகோதரிகளின் பிற்கால திருமணத்திற்கு, இந்தப் பணம் வரதட்சணையாக கொடுக்கப்பட தேவையாய் இருக்கிறது! என்றும் வாதம் செய்கிறார்கள். “வரதட்சணை கொடுப்பது என்பதே, தேவனுக்கு பிரியமில்லாதது!” என அறிந்தவர்களுக்கு, இதுபோன்ற வாதங்கள் வீணானதே ஆகும். நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்களாய் இருந்தால், தேவன் உங்களை ஒருபோதும் கைவிடமாட்டார் என்பதை நீங்கள் நிச்சயித்திருப்பீர்கள்! ஆம், நீங்கள் தேவனை கனம் செய்தால் “உங்கள் குடும்ப தேவைகள் அனைத்தையும் சந்தித்து” உங்களையும் கனம் செய்வார்! (1சாமு.2:30).

சிலர் “பெண்ணின் தகப்பனார், மகிழ்ச்சியுடன் மனமுவந்த பரிசாய் தந்திடும் பணத்தை ஏற்றுக் கொள்வதில் என்ன தவறு?” என கேட்கிறார்கள். அவர்களாக மனமுவந்து கொடுப்பதை ஏற்றுக் கொள்வதில் எந்த தவறுமே இல்லை! ஆனால் இந்தக் கேள்வியையும், தன் பொருளாசைக்கு சாக்கு-போக்காக ஒரு இளைஞன் பயன் படுத்தாமல் இருப்பதற்கு, கீழ்காணும் மூன்று கேள்விகளை அவன் தனக்குத்தானே கேட்டுப் பார்க்க வேண்டும்:

1) சிறிதேனும்கூட திருமணத்தை ஒழுங்கு செய்வதற்கு ‘பணம்’ ஒரு பொருட்டாக கருதப்பட்டதா?

2) திருமணம் ஒழுங்கு செய்யப்பட்ட பிறகு, நீங்களோ உங்கள் தகப்பனாரோ அல்லது உங்கள் உறவினரோ பணத்தை கேட்டிருந்தார்களா?

3) எப்படியாகிலும் பணம் கொடுப்பார்கள்.... பெண்ணிற்காவது கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை ‘உங்கள் அந்தரங்கத்தில்’ இருந்ததா?

இந்த மூன்று கேள்விகளில், ஏதாகிலும் ஒரு கேள்விக்கு உங்கள் பதில் ‘ஆம்’ என இருந்தால், நீங்கள் பொருளாசையின் வலையில் விழுந்து விட்டீர்கள் என்பது உறுதி! பல்வேறு சாக்கு-போக்குகளை நேர்த்தியாக சொல்லி மறைக்க முயன்றாலும், நீங்கள் பொருளாசைக் காரர்தான்!

இதுபோன்ற சூழ்நிலைகளில்தான் ஒரு விசுவாசியின் பிரசங்கத் திற்கு.... ‘அவரது நடைமுறை ஜீவியம்’ பொருத்தமானதாய் இல்லை! என்ற அலங்கோலம் வெளியரங்கமாகிறது. இதுபோன்ற சந்தர்ப்பங் களில்தான், கிறிஸ்தவர்களை குறைசொல்வதற்கு வாய்ப்பை எதிர் பார்ப்பவர்கள் “இந்த கிறிஸ்தவர்கள் என்னத்தைப் பிரசங்கித்தாலும், பணம் என்று வரும்போது.... பிணம் போல் வாய் திறக்கும் இவர்கள்,

எல்லா மதத்தினரைப் போலவேதான் இருக்கிறார்கள்!" எனக் கூறுவதில், வியப்பு ஏதுமில்லை!

**தங்கள் கேடான நடத்தையின் மூலமாய் "உத்தம கிறிஸ்தவர்களுக்கு" பொல்லாப்பு தேடித் தர வாய்ப்பளித்த இந்த விசுவாசிகளுக்கு 'ஐயோ' எனக்கூறாமல் என்ன செய்வது?**

"வரதட்சணை - கேட்கும் பழக்கத்தை" இவ்வளவு ஆக்ரோஷமாய் கடிந்து கொள்வதா? என சிலர் கோபப்படலாம்! ஆனால், இந்த கேடு கெட்ட வரதட்சணைமுறை, மனுஷனுடைய பொருளாசையில் விளைந்த **விக்கிரக ஆராதனை** என வேதம் சுட்டிக் காட்டுவதை இவர்கள் மனதில் கொள்ளக்கடவர்கள் (கொலே.3:5). பழைய ஏற்பாட்டில் "விக்கிரக ஆராதனையை" தேவன் எவ்வளவு ஆக்ரோஷமாய் கண்டித்திருக்கிறார் என்பதை வாசித்து அறிந்தவர்கள், இதை உணர்ந்து கொள்வார்கள்! பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், இவ்வித விக்கிரக ஆராதனையை தீவிர அனலோடுதான் கண்டித்திருக்கிறார்கள்! தேவன் வெறுப்பதைப் பேசுவதற்கு, தங்கள் வார்த்தைகளை 'வாய்க்குள்ளாகவே வைத்துக்கொண்டு' இவர்கள் ஒருபோதும் அசைபோட்டதில்லை!!

**வேறுசில நடைமுறை காரியங்கள்**

நீங்கள் வகிக்கும் ஸ்தாபன ரீதியாகவும், உபதேச ரீதியாகவும் உள்ள வித்தியாசங்களை, திருமணத்திற்கு முன்பே தீர்மானிக்க வேண்டியது மிக முக்கியமாகும்.

**அடிப்படை ரீதியான, சபையின் ஐக்கியம் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய உபதேசங்களில் இருதரத்தாருக்கும் உடன்பாடு இருக்க வேண்டும். அப்படியில்லையென்றால், பிற்காலங்களில் பிரச்சனைகள் எழும்பும் வாய்ப்பு உண்டு!**

உதாரணமாய் உங்கள் பிள்ளை குழந்தையாய் இருக்கும்போது உங்களில் ஒருவர் **'குழந்தை ஞானஸ்நானம்'** கொடுக்க விரும்புவார்! ஆனால், மற்றொருவர் அப்படி விரும்ப மாட்டார். திருமணமாகி குழந்தை பிறந்த பின்பு இவ்வாறு சண்டை போடுவதற்குப் பதிலாக, முன்கூட்டியே இது விஷயங்களைப் பேசி தீர்மானித்திருக்க வேண்டும். **முழுக்குடும்பமும் "ஒரே சபையில்" கூடி ஆராதிப்பது மிகவும் அவசியமாகும்.** ஒரு குடும்பத்தில், தகப்பனும் சில பிள்ளைகளும் சேர்ந்து ஒரு சபைக்கும்.... தாயும் மற்ற பிள்ளைகளும் வேறொரு சபைக்கும் சென்றால், ஒரு இசைவான குடும்பத்திற்குரிய சமாதானத்தை குடும்பத்தில் நிலை நாட்ட முடியாமலும், வேத பூர்வமான அடிப்படையை சீர்குலைத்தவர்களாயும் இருப்போம்.... இதுபோன்ற நிலை, குடும்பத்தில் பெரும் பிளவை ஏற்படுத்திட முடியும். **ஒரு**

**கிறிஸ்தவக் குடும்பம், பொதுவாய் – கூடி ஆராதிக்கும் பகுதியில் ஒற்றுமையாய் இருக்க வேண்டும்.**

சத்தியத்தின் அடிப்படையிலான வேறு சில உறுதியான கோட்பாடுகள் திருமணத்திற்கு முன்பே வெளியரங்கமாய் ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஒருவரின் "**ஊழிய அழைப்பை**" **குறித்த மன இசைவும்** காண வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தில், ஒரு விசேஷித்த ஊழியத்தை செய்யும்படி நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டிருந்தால், அந்த இடத்திற்கு இசைந்து வர, மனைவியும் ஆயத்தமாய் இருக்க வேண்டும்! வெறும் ஆயத்தம் மாத்திரமல்லாமல், உங்கள் அழைப்பில் தானும் பங்குபெறுகிறவர்களாய் இருக்கவேண்டும். நம் இந்திய தேசத்தில், தன் கணவன் எங்கு சென்றாலும், மனைவியானவள் யாதொன்றும் பேசாமல் பின் செல்லும் பாரம்பரியம் உண்டு! ஆகிலும், "உங்கள் தரிசனத்தை" உங்கள் மனைவி பெற்றிருக்காவிட்டால், உங்களைப் பின்னுக்கு தள்ளுகிறவளாய் இருந்து, முடிவில் தேவன் உங்களை அழைத்த ஊழிய ஸ்தலத்திலிருந்தே பின்மாறச் செய்துவிடுவாள்! எனவே, திருமணம் நடப்பதற்கு முன்பே இதுபோன்ற விஷயங்களைத் தெளிவுபட அறிவது நல்லது. பொருளாதார வருமானத்தையும், திருமணத்தில் ஒருவன் கவனிக்க வேண்டும்.

**ஒரு குடும்பத்தை நடத்துவதற்குப் போதுமான வருமானம் வரும்வரைக்கும், எந்த ஒரு இளைஞனும் திருமணத்தைப் பற்றி யோசித்தல் கூடாது!**

"கர்த்தர் போஷிப்பார்!" என வேத வாக்கியத்தை தவறாய் கையாள கூடாது. கர்த்தர் ஏற்கனவே "பொது அறிவை" நம் யாவருக்கும் தந்து விட்டார். அதை வைத்து சிந்தித்து தீர்மானிக்க வேண்டியது நம்முடைய பொறுப்பாகும். தெளிந்த மனதுடன் செயல்படாமல், நீங்கள் திருமணம் ஆனவுடன் "கர்த்தர் அற்புதமாய் என் தேவைகளை சந்திப்பார்!" என நீங்கள் கூறுவது ஏற்புடையதல்ல! ஒரு விசுவாசி பொருளாதார ஸ்திரத் தன்மை இல்லாதபடி, ஒரு பெண்ணை திருமணம் செய்து, அவளை கஷ்டத்திற்கு உள்ளாக்குவது பெரும் தவறாகும்!

நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு காரியம் என்னவென்றால், நீங்கள் திருமணத்திற்கு எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்? என்ற கேள்வியாகும். சூழ்நிலைகளும் மற்றும் சில நடைமுறை விஷயங்களும், நீங்கள் திருமணம் செய்யமுடியாதபடி 'கொஞ்சகாலம்' தடைபட்டிருக்க முடியும். திருமணத்திற்குத் தேதி குறித்த நாளுக்குப் பிறகு, ஒரு வருடத்தைத் தாண்டி காத்திருத்தல் கூடாது! இந்த வரையறையைத் தாண்டி திருமணத்திற்கு நாள் நீடிக்குமென்றால்.... எந்தப் பெண்ணையும் அவ்வாறு திருமணம் செய்ய யோசிப்பது ஞானமற்ற செயல்!

**உங்களுக்கு சமமாக வாழ்க்கைத் துணையை மதிப்பீடு செய்யுங்கள்**

*இந்த உலகில் மிகச் சிறந்த ஆவிக்குரிய நபரும், குறைவுள்ளவர்கள் தான். ஏனெனில், அந்த நபரும் ஒரு மானிடன் என்பதை மறவாதிருங்கள். ஆகவே "பூரண வாழ்க்கைத் துணையை" நீங்கள் தேர்ந்தெடுக்க முயன்றால், அந்த முயற்சி நிச்சயமாய் வீணாகும். ஏனெனில் அதுபோன்ற ஒரு பெண்ணை இந்த உலகில் கண்டுபிடிக்க இயலாது! ஒருவேளை அப்படியொரு நபர் இருந்தால்.... அவள் உங்களை திருமணம் செய்ய மாட்டேன் என கூற வாய்ப்பு உண்டு! ஏனெனில், இப்போது அவளும் ஒரு பூரண வாழ்க்கைத் துணையைத்தான் தேடி அழைந்து கொண்டிருக்கிறாள்! இவைகளைச் சொல்லுவதற்கு காரணம்,* **ஒரு பூரண நபரை நீங்கள் தேடுவதை ஊக்குவிக்காமல்.... அதற்கு மாறாக, உங்களைப் போன்ற சமநிலை கொண்ட ஒருவரை தேடும்படி** *உங்களை ஊக்குவித்து, அதன்மூலம் தேவனுடைய சித்தத்தை நீங்கள் உங்கள் வாழ்வில் நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கமே ஆகும்!*

தேவன் உங்களை நடத்தி, அவர் தெரிந்து கொண்ட வாழ்க்கைத் துணையை நீங்கள் கண்டடைந்தாலும்.... திருமணத்திற்கு பின்பு, நீங்கள் ஒருவருக்கொருவர் ஏராளமான காரியங்களுக்கு விட்டுக்கொடுத்து போக வேண்டியிருக்கும் என்பதை மறவாதிருங்கள்!

*நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொண்டு வாழும்போது, நீங்கள் இருவருமே 'எவ்வளவு பூரணமற்றவர்கள்' என்பதை கண்டு கொள்வீர்கள்! நீங்கள் நேர்மையுள்ளவராய் இருந்தால், உங்கள் வாழ்க்கைத் துணையைவிட உங்களிடமே அதிக பூரணமற்ற தன்மை இருப்பதை அறிந்து கொள்வீர்கள்!*

**இந்த உலகத்தில் உள்ள வேறு எந்த வழிமுறையை விட, திருமணமே ஒரு நபரிடம் இருக்கும் "குறைபாடுகளை வெளிப்படுத்தும்" ஏதுகரமாயிருக்கிறது!**

*ஒருவன் தனியாக வாழ்ந்த காலத்தில், தன்னைக் குறித்த ஆவிக்குரிய தன்மையில் கொண்டிருந்த பெருமையான அபிப்பிராயங்கள் அனைத்தும் திருமண வாழ்வில் சிதறுண்டு போய்விடும்! D.H.ஸ்மைல் என்ற பரிசுத்தவான் "பூரணமற்ற இருவர், பூரணமற்ற உறவு கொண்டு வாழ்வதையே, திருமணத்தின் சிறப்பு!" எனக் கூறினார்.*

*நாம் பூரணமற்றவர்களாய் இருந்தாலும், ஒருவருக்கொருவர்* **தேவனால் நடத்தப்படுவது** *மிக அவசியமாகும்! ஒரு உத்தமமான கிறிஸ்தவ குடும்பத்திற்கு 'இதுவே' கற்பாறையின் திட அஸ்திபார மாகும். ஏனெனில் தேவன்தான் உங்கள் இருவரையும் திருமண வாழ்விற்கு நடத்தினார் என, திட்டமாய் அறியாதவர்கள், ஒருவருக்கொருவர் குறைகளையும் பிழைகளையும், ஒத்துப்போகாத தன்மையையும் காணும்போது, நிச்சயமாய் தோல்வியும் சந்தேகமும் அவர்களின்*

உள்ளத்தில் குடிபுகுந்துவிடும்! ஆகவேதான், திருமணத்திற்கு முன்பாகவே இந்த இருவரும் **தேவனுடைய நிச்சயமான சித்தத்தை** அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஆம், கன்மலையின் மேல் வீடுகட்டுகிற மனுஷனுக்குதான் அதிக பிரயாசமும் உழைப்பும் தேவையாய் இருக்கும்! இதுபோன்ற அதிகமான உழைப்பும், நேரம் செலவழித்து பிரயாசப்படுவதும்.... மணலின் மீது தன் வீட்டை கட்டுகிறவனுக்கு இருப்பதில்லை! ஒரு புயல் வீசட்டும்.... அப்போது தான், திருமணத்திற்காக தான்எடுத்துக்கொண்ட பிரயாசங்கள் தகுமென்பதை.... தன் வீடு நிலைத்து நிற்பதையும்! மற்றொருவன் வீடு இடிந்துபோனதையும்! காணும்போது அவன் விளங்கிகொள்வான் (மத்.7:24-27). **தேவ சித்தத்தின்படி அஸ்திபாரமிட்ட திருமணம்,** வாழ்வின் எந்த புயலிலும் நிலைத்து நிற்கும்! தேவனிடத்தில் அதிகமாய் காத்திருந்து, அவருடைய திட்டமான தேவசித்தத்தை திருமணத்திற்கு முன்பு அறிந்து கொள்வதற்காக அடைந்த அனைத்து பிரயாசங்களும் 'தகும்' என, நீங்கள் அன்று அறிந்து கொள்வீர்கள்!

இதனிமித்தமே, ஒருவருக்கொருவர் சமநிலையான மதிப்பீடு செய்ய வேண்டியது முக்கியமாய் இருக்கிறது. இந்த புத்தகத்தின் ஒவ்வொரு அதிகாரத்தில் கூறப்பட்ட சரத்துக்களுக்கு தயவாய் கவனம் செலுத்துங்கள். சில விசுவாசிகள், சில சரத்துக்களை அதிக கவனமாய் வலியுறுத்திவிட்டு, வேறுசில சரத்துக்களை அசட்டை செய்வதால்.... ஓர் சமநிலையற்ற மதிப்பீட்டையே அளந்து, திருமண வாழ்வில் சஞ்சலம் அடைகிறார்கள்!

> **இன்னும் சிலர், தங்கள் 'மனதை' அப்பியாசித்து, சிறந்ததைக் காண்பதற்கு முன்பாகவே.... தங்கள் 'இருதயத்தை' மற்றொரு நபருக்கு பறிக்கொடுத்துவிடுகிறார்கள்!**

இதன் விளைவாய், அவர்களின் **ஆக்கப்பூர்வமான மனநிலை மழுங்கிப்போய்** தன் வாழ்க்கைத் துணையைக் குறித்த சரியான மதிப்பீட்டிற்கு வர முடியாமல் போகிறார்கள். உலகில் உள்ள அவிசுவாசிகள் கூட சரியான மதிப்பீடு செய்கிறபடியால்,ஓர் சமமான மதிப்பீட்டை காணத் தவறிய கிறிஸ்தவர்களின் திருமண வாழ்க்கையைக் காட்டிலும், அவிசுவாசிகளின் வாழ்க்கையில் அதிக மகிழ்ச்சி இருப்பதைப் போலவே தோன்றுகிறது!

## திருமண உறுதியை எட்டுதல்

திருமண உறுதிக்கு, உங்கள் நண்பர்களோ, உறவினர்களோ, நலம் நாடுபவர்களோ, போதகரோ அல்லது தேவபக்தியான மனிதர்கள்கூட உங்களை ஆக்ரமித்து "திருமண உறுதிக்கு" உங்களைத் தள்ளிவிட ஒருபோதும் அனுமதிக்காதீர்கள்!

**தேவசித்தம் குறித்து நீங்களே திட்டமாய் அறியாத பட்சத்தில், நீங்கள் காத்திருப்பதுதான் மிகவும் நல்லது. உங்களுக்குள் ஏதோ தடை ஏற்படுமென்றால், அந்த திருமண விஷயத்தை தொடராதிருங்கள்! நின்று... கவனியுங்கள்! உங்களை நிறுத்தி வைக்கும் பரிசுத்தாவியானவருக்கு நீங்கள் செவிகொடுத்தால், பின்பு வருந்தும் நிலை ஏற்படாது!**

*ஒரு சிலர், தன் எதிர்பாலரைக் குறித்து எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்? அவர்களோடு பழகி, அவர்களோடு பேசுவதற்கு கூட இந்திய கலாச்சாரம் அனுமதிப்பதில்லையே! என கேட்கிறார்கள். உண்மை என்னவெனில், இவ்வாறு சம்பாஷித்து, இன்னும் அதிகமாய் ஒரு பெண்ணிடம் நெருங்கி பழகுவதால், அந்தப் பெண்ணைக் குறித்த அனைத்தையும் அறிந்து கொள்ளலாம் என ஒருவன் எண்ணுவது பரிதாபத்திற்குரிய தீர்வாகும்! மேற்கத்திய நாடுகளைப் பாருங்கள்! இளம் பிராயத்திலேயே நெருங்கிப் பழகுவதற்கும், தங்கள் வாழ்க்கைத் துணையை தாங்களே தெரிந்து கொள்வதற்கும் தாராளமான வாய்ப்பு கொண்ட இந்த நாடுகளில் தான், அதிகமான விவாகரத்துக்கள் நடை பெறுகிறது! இதன் மூலமாய், வாழ்க்கைத் துணையை அறிந்து கொள்ள* "**நெருங்கிப் பழகுவதை**" *ஒரு தீர்வாக எண்ணுவது தவறாகும். ஒரு பெண்ணின் அல்லது ஒரு பையனின் உண்மையான குணாதிசயத்தை "தேவன் காட்டும்படி ஜெபிப்பதில்தான்" மெய்யான தீர்வு அடங்கி யிருக்கிறது!*

*அந்தப் பெண்ணைக் குறித்து, அந்தப் பெண்ணை அறிந்த விசுவாசி களிடம் கேட்டறிந்து, தெரிந்து கொள்ள எல்லா முயற்சிகளையும் நீங்கள் எடுக்க வேண்டும். எல்லோரும் இருக்கக்கூடிய ஒரு பொது இடத்தில், அந்தப் பெண்ணிடம் முகமுகமாய் பேசுவதற்குரிய வாய்ப் பையும் நாடுங்கள். அவ்வாறு பேசிய பிறகுதான், அந்த நபரைக் குறித்து நீங்கள் ஆக்கபூர்வமாய் ஜெபித்திட முடியும்! உங்களைக் காட்டிலும், ஏற்றத் துணையைப் பெறுவதற்கு தேவனே அதிக அக்கறை காட்டுகிற படியால், அந்த பெண்ணைக் குறித்த தேவையான தகவல்களைப் பெற நிச்சயமாய் உங்களுக்கு உதவி செய்வார்! அந்தப் பெண்ணைக் குறித்த கலாச்சார வேறுபாடு இருந்தாலும்....கலாச்சாரம், உங்களுக்குத் தடை யாய் இராதபடி ஆண்டவர் பார்த்துக்கொள்வார். இவைகளை அனுகூலமாய் செய்வதற்கு தேவன் உதவி செய்வார் என்பதை நம்புங்கள். அவரால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை! உங்கள் அவிசுவாசத்தினால், அவரது கரத்தின் கிரியைகளை மட்டுப்படுத்தி விடாதீர்கள்!*

*இவ்விதமாய், தேவ சித்தத்தை நீங்கள் அறிந்தவுடன் "உங்கள் விருப்பத்தை" உங்கள் பெற்றோர்கள் மூலமாகவோ அல்லது முதிர்ச்சி பெற்ற நண்பர்கள் மூலமாகவோ, அந்தப்பெண்ணிற்கு தெரியப்*

படுத்துவது நல்லது. குறிப்பாக, நம் இந்திய கலாச்சாரத்திற்கு, இவ்வாறு செய்வது நல்லது.

**உங்கள் விருப்பத்தை அந்தப் பெண் மறுத்துவிட்டால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அதுபோன்ற நேரத்தில் தொடர்ந்து காத்திருந்து ஜெபிப்பதே நல்லது. அதற்கு பதிலாய், உங்கள் விருப்பத்திற்கு அவர்களின் சம்மதத்தை எந்தவிதத்திலும் கட்டாயப்படுத்த முயற்சிக்காதீர்கள்!**

நீங்கள் சிலகாலம் ஜெபித்த பின்பும், அந்தப் பெண் தொடர்ந்து உங்கள் விருப்பத்தை மறுத்தால் "இந்தப் பெண் எனக்கு தேவசித்தம் இல்லை!" என நீங்கள் நிச்சயித்துக் கொள்ளலாம். ஆனால், உண்மை யானபடி தேவசித்தமாய் இருந்தால், தேவனே அந்தப் பெண்ணின் இருதயத்தில் கிரியை செய்து சம்மதிக்கச் செய்வார். நீங்கள் மாத்திரமே அந்தப் பெண்ணிடம் வழி நடத்தப்பட்டதாயிருந்தால், அது தேவனிடத்திலிருந்து வந்ததாக கருத முடியாது! நீங்கள் தேவனுடைய நேரத்திற்காக காத்திருக்கும்போது, அவர் தெரிந்து கொண்ட ஏற்ற வாழ்க்கைத் துணையை உங்கள் முன் கொண்டுவந்து நிறுத்துவார்! இவ்வாறு நிகழும்போது, ரெபெக்காள் எப்படி சம்மதித்தாளோ, அதுபோலவே தேவனால் உங்களுக்கென தெரிந்து கொள்ளப்பட்ட அந்தப் பெண்ணும் கண்டிப்பாய் சம்மதிப்பாள்! (ஆதி.24:58).

**பெற்றோர்களின் சம்மதம்**

நீங்கள் தேவசித்தமென அறிந்த ஒரு பெண்ணிற்கு உங்கள் பெற்றோர்கள் மறுப்பு சொல்லிவிட்டால் என்ன செய்ய வேண்டும்? இதுபோன்ற நிகழ்ச்சிகளில் முதற்படி "உங்கள் பெற்றோரை தேவன் உணர்த்தும்படி ஜெபிப்பதுதான்". உங்கள் பெற்றோரிடம், இந்தப் பெண்ணைக் குறித்த உறுதி உங்கள் உள்ளத்தில் எவ்வாறு ஏற்பட்டது என்பதை விளக்கிக் கூறுங்கள். எதையும் மறைக்காமல் வெளிப்படை யாய் பேசுங்கள்! உங்கள் பெற்றோருக்கு ஒன்றும் தெரியாதது போல் எடை போடாதிருங்கள்! உங்கள் பெற்றோர்களின் அனுபவ பூர்வமான ஆலோசனையில் பல நன்மைகளை நீங்கள் பெற முடியும்! ஒருவேளை, உங்கள் பெற்றோர்கள் பின்தங்கிய நாகரீகத்தில், உங்களின் அணுகு முறைக்கு, தெளிவான அக்கறை காட்ட அறியாதவர்கள் என நீங்கள் துரதிருஷ்டவசமாய் நீங்கள் எண்ணிக்கொண்டால், அவர்களிடம் அபிப்பிராயம் கேட்டு தெரிந்து கொள்ளும் வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கும்! எப்படியாகிலும், உங்களது உண்மையான நன்றியையும் அன்பையும் அவர்களிடத்தில் காட்டுங்கள்! திருமண காலத்தில் தோன்றும் பல அபாயகுழிகளில் வீழ்ந்து விடாதிருக்க, இவர்களின் நல்ல அனுபவமுள்ள ஆலோசனைகளைக் கொண்டு, உங்களைக் காத்திட தேவன் பயன்படுத்த முடியும்!

வேதாகமத்தின் Living மொழிபெயர்ப்பு கூறும் வசனங்களைக்

கேளுங்கள்: "**உன் தகப்பன் புத்திமதியைக் கவனித்து கேள்,** அதை அசட்டை செய்யாதிருங்கள்! வயது சென்ற உங்கள் தாயின் அனுபவங் களை புறக்கணிக்காதீர்கள்! ஒரு மதியீனமான மகன் மாத்திரமே தன் தகப்பனின் போதகத்தை அசட்டை பண்ணுவான்! ஞானமுள்ள மகனோ ஒவ்வொரு ஆலோசனையையும் கவனித்துப் பார்த்து, அவை களை தன் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளுவான். அவர்களின் ஆலோசனை, உன்னை செம்மையான பாதையில் நடத்தி, தீங்கிலிருந்து உன்னை விலக்கிக் காத்துக் கொள்ளும். அவர்களின் ஆலோசனை, இருட்டான உங்கள் மனதின் மூலை முடுக்குகளிலெல்லாம் பிரகாசிக்கும் சுடர் ஒளியாய்..... இருக்கும்" (நீதி.23:22;15:5;6:21-23) எனக்கூறுகிறது. இவ்வசனத் தில் குறிப்பிட்ட நன்மைகள் அனைத்தும், மறுபடியும் பிறந்து, தேவனோடு இசைந்து நடக்கும் பக்தியுள்ள பெற்றோர்களுக்கே முற்றிலுமாய் பொருந்தும்! இருப்பினும், இரட்சிக்கப்படாத பெற்றோர்களின் ஆலோசனையும் உங்களுக்கு உதவி அளிப்பதாகவே இருக்கும்!

**பெற்றோர்களின் சம்மதம், ஒரு பெரிய ஆசீர்வாதமாய் இருக்கிறபடியால், முடிந்த அளவு அவர்களின் சம்மதத்தைப் பெற்றுவிட நாடுங்கள். குறிப்பாக, உங்கள் பெற்றோர்கள் விசுவாசிகளாய் இருந்தால் அவர்கள் சம்மதம் தெரிவிக்கும் வரை காத்திருங்கள்... சில வருடங்களே ஆனாலும் காத்திருங்கள்!**

அவர்களின் சம்மதம் கிடைக்கவில்லையென்றால் இதுவரை தேவன் உங்களை நடத்தியதை மீண்டும் மறு ஆலோசனை செய்து பாருங்கள்! அவ்விதம் நீங்கள் செய்வதைக் காணும் தேவன், நிச்சயம் உங்களை கனப்படுத்துவார். சகலத்தையும் செம்மையாய் ஆளும் தேவன், இந்த சமயத்தில் உங்கள் பெற்றோர்களின் யோசனைகளை தன் காலை அட்டவணைப்படி மாற்றிவிட முடியும்! (நீதி.21:1). இவ்விதமாய் சில சகோதர்களுக்கு சம்பவித்ததை நான் அறிந்திருக் கிறேன். ஆனால், அனேகர் பொறுமையிழந்து முன் சென்றதால், இதுபோன்ற அருமையான அனுவங்களை ருசிப்பார்த்திட தவறி விடுகிறார்கள். இவ்விதமாய் மிஷனரி ஹட்சன் டெய்லர் கூறும்போது "கர்த்தர் மூலமாகவே ஜெயம் பெறுதல், எந்தக் கதவையும் அவரால் திறந்திட முடியும்! இத்தருணங்களில் பெற்றோர்களுக்கே அதிக பொறுப்பு இருப்பது உண்மைதான். இச்சூழ்லையில், ஒரு மகன் அல்லது ஒரு மகளாய் இருப்பவள், **தன் இருதயத்தில் உத்தமத்தை வைத்து** 'ஆண்டவரே நீரே எனக்கு ஒரு வழியை திறக்கும்படி, உம்மையே நம்பி காத்திருக்கிறேன்!' என ஜெபித்தால், இப்போது இந்த காரியம் கர்த்தருடைய கரத்திற்கு சென்றுவிடும்.... அவர் துரிதமாய் நடவடிக்கை மேற்கொள்வார்!" என தனது புத்தகம் "ஹட்சன் டெய்லரின் ஆவிக்குரிய வாழ்வின் இரகசியம்" புத்தகத்தில் கூறியுள்ளார்.

**இருப்பினும், பெற்றோர்கள் அவிசுவாசிகளாய் இருந்து.... சில இடங்களில் விசுவாசியான பெற்றோர்களுமேகூட.... 'உலக மேன்மை களில் மனதுவைத்து' தடை செய்தால்....அவர்களின் அங்கீகாரத்திற்காக 'வரையறையின்றி' காத்திருக்கத் தேவையில்லை.**

இதுபோன்ற பெற்றோர்களிடமும், அவர்களின் சம்மதத்தை விரும்பி குறைந்தது ஒரு வருடமாவது காத்திருக்க வேண்டும்! இதையெல்லாம் தாண்டி, உங்களுடைய திருமண விஷயத்தை நீங்களே துணிந்து நடந்திட தேவன் விரும்புகிறார் என்பதை நீங்கள் அறிந்து கொண்டால்.... மிகுந்த தாழ்மையோடும் அன்போடும் உங்கள் முடிவை உங்கள் பெற்றோருக்கு அறிவியுங்கள்! நீங்கள் அகந்தையோடு இருப்பதைப் போலவும் அல்லது முரட்டாட்டம் செய்வதைப் போலவும் கொண்ட தோற்றத்தை உங்கள் பெற்றோருக்கு காண்பித்திடாது இருக்க கவனம் கொள்ளுங்கள்!

**காத்திருக்கும் வேளையில் கர்த்தர் எதிர்பார்க்கும் நமது மனநிலை**

இச்சமயத்தில் திருமணத்தைக் குறித்து யோசிக்க இன்னும் சில வருடங்கள் காத்திருக்க வேண்டிய ஸ்தானத்தில் உள்ள வாலிபர்களுக்கு சில அறிவுரைகள் கண்டிப்பாய் தேவை:

**திருமணம்! குடும்ப வாழ்க்கை! ஆகிய இவைகளின் மீது கொண்ட உங்கள் விருப்பத்தை, ஆபிரகாம், ஈசாக்கை பலியாக தந்தது போல், நீங்களும் தேவனுக்கு முன்பாக உங்கள் விருப்பத்தை பலிபீடத்தில் வைத்துவிட வேண்டும்! (ஆதி.22).**

மிகுந்த உத்தமத்தோடு கூற வேண்டுமென்றால் உங்கள் ஜீவகால மெல்லாம் திருமணம் செய்யாமல் இருப்பது தேவனை மகிமைப் படுத்தும் செயலாய் இருந்தால் "**அவ்வாறே திருமணம் செய்யாது இருப்பதற்கும்**" நீங்கள் மனமுடையவர்களாய் இருக்க வேண்டும்! இந்த மனநிலையை நீங்கள் பேணி வைத்துக் கொண்டால் "கவர்ச்சியான பெண்களைப் பார்க்கும் நேரத்திலெல்லாம், இவள் எனது வாழ்க்கைத் துணையாய் இருந்தால் நலமாய் இருக்குமோ?" என்ற இச்சையான பார்வைக்கு உங்களை விலக்கி காத்துக்கொள்ள முடியும். உங்களுக்கு கிடைக்கும் உபரியான நேரங்கள் அனைத்தையும், கர்த்தருடைய பணிக்கே ஏதாகில் ஒருவகையில் செலவிடுங்கள். இவ்வாறு நீங்கள் இருந்துவிட்டால், அதுவே **தேவனுடைய சித்தத்தில் நித்திரை அடைந்த இளைப்பாறுதலுக்கு** சமமாகும்! (ஆதி.2:21). உங்கள் திருமணத்திற்கு **தேவ திட்டத்தின்படியான நேரம்** வரும்போது, அபிரகாமுக்கு ஈசாக்கை திருப்பி கொடுத்தது போலவே, ....பலிபீடத்தில் வைத்த உங்கள் விருப்பத்தை உங்களுக்கும் திருப்பிக் கொடுத்து ஆசீர்வதிப்பார்! மேற்கண்ட மனநிலையை காத்துக் கொண்டவர்கள், தாங்கள் எவ்வாறு பல்வேறு சாத்தானின் கண்ணியிலிருந்து காக்கப்பட்டோம் என்பதையும், முடிவில்

திருமணத்திற்காக தேவனுடைய நேரம் வந்தபோது “தங்களுக்கு மிகச் சிறந்ததை தந்தார்!” என சாட்சி கொடுத்திருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு வரை உலக மிஷனெரி ஐக்கியத்திற்கு தலைமை இயக்குனராய் பொறுப்பு வகித்த J.ஆஸ்வால்ட் சாண்டர்ஸ் என்ற பக்தன் கீழ்க்கண்டவாறு கூறினார் : “நான் ஒரு வாலிபனாய் இருந்த போது என் முழு வாழ்க்கையையும் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தேன். மேலும், அவரிடம் இவ்வாறு வாக்குக் கொடுத்தேன்.... 1) நான் என்னவாய் இருக்க தேவன் விரும்புகிறார்? 2) தேவன் எனக்கு தேர்ந்தெடுத்த பெண் யார்? 3) திருமணத்திற்காக ஒரு பெண்ணிடம் கேட்பதற்கு கர்த்தருடைய நேரம் வந்துவிட்டதா? அல்லது நான் திருமணம் ஆகாமல் தனித்திருக்க வேண்டுமா?..... **ஆகிய இந்த கேள்விகளுக்கு பதில் கிடைக்காமல், ஒரு பெண்ணையும் நான் அணுக மாட்டேன் என்றே தேவனிடம் வாக்கு கொடுத்தேன்!** வருடங்கள் உருண்டோடி, தேவன் என்னை ஒரு மிஷனரியாக விரும்பியிருக்கிறார் என அறிந்த ஆறு வாரங்களுக்குப் பிறகுதான், நான் ஒரு பெண்ணை சந்தித்தேன், அவளே எனக்கு மனைவியும் ஆனாள்! இங்கு ஒரு உண்மையைச் சொல்ல வேண்டும்.... அந்தப் பெண்ணிடம் ஆறரை வருடங்களுக்கு முன்பாகவே நான் கவரப்பட்டிருந்தேன்! அந்த நீண்ட ஆறரை வருடங்களுக்குப் பிறகுதான், எனக்கு மனைவியாக வரப் போகும் அந்தப் பெண்ணை முதன் முறையாக சந்தித்தேன்!” என உணர்வுபூர்வமான அந்த சாட்சியை கூறியிருக்கிறார். இப்படியெல்லாம் தேவனை கனம் செய்பவர்களுக்கு மிகச் சிறந்த துணையையே தேவன் நிச்சயமாய் தருவார்! இந்த பாதையைத்தான், அனைத்து உத்தம இளைஞர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்!

## கவனம், மிகுந்த கவனம்!

இறுதியாக இரண்டு எச்சரிப்புகளுக்கு நீங்கள் செவிகொடுக்க வேண்டும்:

முதலாவதாக, திருமண ஒழுங்கு முடிவு செய்யும் தருணத்தில் அதற்கு “முறிவு ஏற்பட்டால்” அல்லது நீங்கள் மிகவும் விரும்பிய ஒருவர் வேறொருவரை திருமணம் செய்துகொண்டால்.... அதுபோன்ற தவிக்கும் நேரத்தில் ‘ஒரு புதுநபரை’ உடனடியாக திருமணம் செய்து கொள்ள ஒருபோதும் தீர்மானிக்காதீர்கள். ஏனெனில், உங்கள் உணர்வுகள் பாதிக்கப்பட்ட இந்த சமயத்தில் ‘வெற்றிடமான உங்கள் இருதயத்தை’ வேறொருவரை வைத்து நிறைத்துக்கொள்ள உங்களுக்கு கடும் சோதனை உண்டாகும். இவ்வாறு “இழந்த இடத்தை நிரப்புவதற்காக எடுக்கப்பட்ட எந்த தீர்மானமும்” முடிவில் துயரத்தையே தரும்! உங்களுக்கு ஏற்பட்ட இந்த ஏமாற்ற சூழ்நிலையில், யாதொரு திருமண ஏற்பாட்டிற்கும் குறைந்தது 6-மாதங்களாவது தவிர்த்து விடுங்கள்!

*அப்படிச் செய்தால், ஆத்திரமடைந்த உங்கள் உணர்வுகள் இந்த ஆறுமாத காலத்தில் மீண்டும் தெளிந்த மனநிலைக்கு வந்து விடும்.* நான் *அறிய, சில திருமணங்கள் இவ்வித ஆத்திரமான ஏமாற்ற நேரத்தில் முடிவெடுத்து.... பெரும் துயரத்தை தழுவியதையே கண்டிருக்கிறேன்!*

*இரண்டாவதாக, ஒருவன் அல்லது ஒரு வாலிபபெண் "நீங்கள் என்னை திருமணம் செய்யவில்லையென்றால், நான் தற்கொலை செய்து கொள்வேன்! அல்லது, வேறொரு பாதிப்பை தேடிக் கொள்வேன்!" என பயமுறுத்தினால்....* **அந்த பயத்தின் அடிப்படையில்,** *அவனையோ அல்லது அவளையோ திருமணம் செய்ய ஒருபோதும் முடிவெடுக்கா தீர்கள்! இந்த அடிப்படையில் நீங்கள் திருமணம் செய்து கொண்டால், நிச்சயமாய் உங்கள் திருமண வாழ்கை சோகத்தில் முடிவடையும்!*

**உங்கள் மங்களகரமான திருமண நாளில்:** *1) நான் தேவனால் இணைக்கப்பட்டிருக்கிறேன்! 2) அவரது முன்குறித்த தீர்மானத்தின்படி இந்த மணவாழ்வு நிறைவேறியது! 3) தேவன் தெரிந்துகொண்ட நபரை நான் கண்டடைந்தேன்! 4) அவரால் குறிக்கப்பட்ட நேரத்தில் இந்த வைபவம் நடந்தேறியுள்ளது! என்றெல்லாம்.... உங்கள் திருமண நாளில் நீங்கள் மனதார எண்ணி மகிழ்வது எத்தனை அற்புதம், ஆச்சரியம்! இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிச்சயத்தைக் கண்டடைந்த தம்பதிகள், மெய்யாகவே பாக்கியவான்கள்!*

*இவர்களுக்கே "சொல்லொண்ணா மகிழ்ச்சி!" சொந்தமானதாகும்!*

## வாலிப பெண்களுக்கு மட்டும்!

(சகோதரி ஆனிபூணன் அவர்களின் அறிவுரை)

குணசாலியான ஸ்திரீயினுடைய விலை, முத்துக்களைப் பார்க்கிலும் விலை உயர்ந்தது, என வேதம் குறிப்பிடும் மதிப்பை ஸ்திரீகள் அறிந்திருக்க வேண்டும் (நீதி.31:10).

ஆணைவிட ஒரு தாழ்வுநிலையில் படைக்கப்பட்டவளாகவே 'பெண்ணை' புறஜாதியாரின் கலாச்சாரம் காண்கிறது. ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் போதகத்தின் மூலமாகவும், பல மாதிரிகள் மூலமாகவும் "ஒரு பெண்ணின் ஸ்தானம்" தேவனால் நியமனம் செய்யப்பட்ட ஸ்தானமுமாய்.... அது, மனுஷனுடைய கால் பகுதியில் அல்ல, அவனது விலாபகுதியில் வைக்கப்பட்ட ஸ்தானமாகவும் ஆண்டவர் போதித்துள்ளார்.

6

ஒரு ஆண் நிறைவேற்ற முடியாத 'ஒரு பிரத்தியேகமான செயலை' நிறைவேற்றும்படியே, தேவன் ஸ்திரீயை படைத்துள்ளார். இதை நாம், ஆணைவிட வித்தியாசமான அவளது சரீர அமைப்பிலும், மனநிலையிலும், அவளது உணர்ச்சி பெருக்கத்திலும் தெளிவாகக் காணலாம். **தாய்மைக்குரிய பொறுப்பில்** அவள் இருக்கிறபடியால், ஒரு ஆணைவிட அவளது அமைப்பில் மென்மையான உணர்வு உடையவளும், அதிகமான பணிவிடை போங்கும், அதிகமான மனஎழுச்சியும், கொண்டவளாய் இருக்கிறாள்! ஆகவேதான், ஒரு பெண்ணிற்கு, அவளின் நேசத்தைக் காட்டும் திறனும், அதேசமயம் நேசிக்கிக்கப்பட வேண்டுமென்ற விருப்பமும் கொண்டவளாய் இருக்கிறாள்! இவை இரண்டிற்கும் வாய்ப்பில்லாத பட்சத்தில், சோர்வடைகிறாள். ஒரு ஆணைக்காட்டிலும் இவ்வித மென்மையான கடமைகளை நிறைவேற்ற வேண்டிய இவள், சுபாவமாகவே ஒரு **ஆணைவிட அதிக பொறுப்புள்ளவளாய்** இருக்கிறாள். இதனிமித்தமே ஒரு



கூர்மையான மதிநுட்பம் 'ஓர் வரமாய்' அவளுக்கு அருளப்பட்டுள்ளது. அவளது இந்த ஒப்பற்ற நிலையை ஆண்களால் மனப்பூர்வமாய் ஒத்துக்கொள்ள ஏனோ தயங்குகிறனர். பெண்மைக்கே உரிய மிகப்பெரிய பொறுப்புகளை G.கேம்பல் மார்கன் கீழ்கண்டவாறு நேர்த்தியாக குறிப்பிடுகிறார்:

"அண்ட சராசரத்திலும், தேவனுடைய சாயலுக்கும் அவரது ரூபத்திற்கும் உரிய பூரணத்தை ஒரு பெண் பெற்றிருக்கிறாள் என்பதை அவள் அறிய வேண்டும். "**நமது** சாயலாகவும் **நமது** ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோம்" என தேவன் கூறியிருப்பதும், பின்பு அவர் "**தம்முடைய** சாயலாகவும் **தம்முடைய** ரூபத்திலேயும் அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்" எனவும் கூறியிருப்பதை, விளங்கிக் கொள்ள சற்று கடினமாய் இருந்தாலும், வேதாகம சத்தியத்தில் மிக முக்கியமான ஒரு பகுதியாகவே இந்த சத்தியம் காணப்படுகிறது. நாம் தேவனையும், மனுவர்க்கத்தையும் தெளிவாக அறிய வேண்டுமென்றால் **ஒரு ஆணில் மாத்திரமே பிரதிபலிக்காத தேவ சாயலின் நிறைவேற்றம் பெண்மையில் வெளிப்படுவதை காண வேண்டியது அவசியம்!** ஆகவே அவளுக்கென தனிசிறப்பான, புனிதமான பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கிறது. அவள் மூலமாய் நிறைவு பெற வேண்டிய அந்தப்பகுதி, தேவனுக்குரிய சாயலின் உயர்ந்த சத்தியமாகும். அவள் பெற்ற சீரிய பொறுப்புகளை ஒரு ஆண்மகன் ஒருக்காலும் நிறைவேற்ற இயலாது" எனக் கூறியுள்ளார்.

இதை வேறு விதமாய் விளக்க வேண்டுமென்றால், தேவன் ஒரு **தந்தையாக** இருப்பது மாத்திரம் உண்மையாக இராமல், ஒரு **தாயாகவும்** அவர் இருக்கிறார் எனக் கூறி விளங்கிட முடியுமோ என வியக்கிறேன்! வேதாகமத்தில் போதிக்கப்படும் உயர்ந்த உபதேசமான "தேவனுடைய, தந்தையின் - பண்பு" போலவே .... மிகத் தெளிவாக "தேவனுடைய தாயின் - பண்பும்" தெளிவாக போதிக்கப்பட்டுள்ளது (ஏசா.66:13; மத்.23:37). நித்தியத்திற்கே வலிமையாய் விளங்கும் "**இளம் மென்மையான சுபாவங்கள்**" அடங்கிய தேவனைப் பற்றிய அந்த ஆழ்ந்த இரகசியம் ஒரு ஸ்திரீயின் பண்பிலேயே வெளிப்பட்டு மலர்ந்திருக்கிறது. இவ்வாறு தாய்மையின் வலிமையை, அந்தப் புனிதமான இரகசியத்தை, மானிடராகிய நாம் தெளிவாகக் கண்டு விளங்கிக் கொள்ள வேண்டும்.

'தாயாக' மாறினாள்தான், 'அவள்' **தாய்மை** என்று இல்லை! எத்தனையோ பெண்கள், தாய்மை அடையாமல் இருந்தாலும், அந்த தாய்மைக்குரிய மென்மைக்கும் கரிசனைக்கும் மூலகாரணமாகிய 1)அணைத்துக் கொள்வது 2) பாதுகாப்பது 3)சுகமளிப்பது 4) பணிவிடை செய்வது.... ஆகிய சீரிய பண்புள்ளம்கொண்டு திகழ்கிறாள்! இதுபோன்ற **மென்மையைக் கொண்டே, தேவத்துவத்தின் வலிமையில்,**

**இளகிய சுபாவமாகிய, அழகின் பூரணம் நிறைந்து, பெண்மையின் மகிமையை விளங்கிடச் செய்கிறாள்!** இத்தனை மகத்துவமான மேன்மையையும், இளகிய தெய்வ சுபாவத்தையும் ஒரே நாளில் அழித்துப்போட வல்ல, யாதொரு முரட்டு சுபாவத்திற்கும், பெண்களாகிய நம்மை தேவன் விலக்கி காப்பாராக! இத்தனை சீரிய பண்புகளோடு விளங்கும் இவள், தேவனையே வெளிப்படுத்துகிறாள்.

**மானிடர்களால் விளக்கிக் கூற முடியாத தேவனுடைய சுபாவத்தை 'தாய்மையில்' நாம் விளங்கிட முடியும்! உண்மைதான், பெண்மையின் தன்மையில் தேவனுடைய பிரதிபலிப்பு காணப்பட வேண்டும்!**

**ஒரு பெண்ணாய் அழைக்கப்படுவது எத்தனை சிலாக்கியம்.** அவள் மாத்திரம் தேவனுக்கே தன்னை முழுமையாய் அர்ப்பணித்தவளாய் இருக்க வேண்டும்! அப்படி அவள் இருந்தால், தேவன் அவள் மீது பொழிந்த அபூர்வ குணாதிசயங்களைக் கொண்டு, தேவனுடைய மகிமைக்காகவும், அனைவருடைய நன்மைக்காகவும், தேவன் அவளை பயன்படுத்திட முடியும். ஆனால், அவள் தன் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் தேவ பக்தியை நாடாதவளாக இருந்தால், **அவளுக்குத் தரப்பட்ட அபூர்வ குணாதிசயங்களை தீய வழிக்கு பயன்படுத்தி பாழாக்கிடவும் முடியும்.** பெண்களுக்கென்றே தேவன் அருளிய விசேஷித்த மென்மை குணத்தையும், சௌந்தரயத்தையும் கொண்டு, பொது வாழ்க்கையில் தன்னைச் சுற்றியுள்ள அனேகருக்கு ஆசீர்வாதத்தின் மெருகூட்ட தன்னை அழைத்திருக்கிறார் என்பதை அவள் அறிந்து கொள்ள, தேவன் கிருபை செய்வாராக!

பாலிய ஈர்ப்புகள் ஒரு ஸ்திரீக்கும் உண்டு. ஆனால், ஒரு ஆணிடம் இருப்பதைப்போல் அல்லாமல், அந்த உணர்வுகள் ஒரு கட்டுப்படுத்தக் கூடிய மெல்லிய உணர்வாகவே இருக்கிறது! சுபாவமாய் இருக்க வேண்டிய **இந்த உணர்வுகூட அவளிடம் இல்லையென்றால்,** ஒரு நூதன பெண்ணாகவே கருதப்படுவாள். தனக்கென்று கவனத்தையும், தனக்கென்று அன்பையும் ஒரு பெண் ஏங்கி நிற்கிறாள். எந்த ஒரு ஆணைக் காட்டிலும் தனக்கென்று **ஒரு குடும்ப இல்லறத்தை** ஒருபெண்தான் அதிகம் நாடுவாள். இதுபோன்ற வாஞ்சையே, 'தாய்மையின்' உன்னத இடத்திற்கு அவளை ஆயத்தப்படுத்துகிறது. இவ்வாறு இருக்கும்படியே அவளை தேவன் சிருஷ்டித்திருக்கிற படியால், இவையனைத்தும் சிறந்த ஆரோக்கியமான நன்மையாகும்.

**ஒரு பெண்ணிடம் இயற்கையாக இருக்கும் அந்த ஆர்வத்தில் "திருமணம் என்ற நோக்கோடுதான்" ஒரு ஆணிடம் அவள் ஈர்க்கப்படுகிறாள். ஆனால் புருஷர்களோ பெண்களிடம் கொண்ட ஈர்ப்பில் "உடலுறவு ஆர்வம் மாத்திரமே" நிலை கொண்டிருக்கும். ஆனால், பெண்களோ தன் எதிர்பாலரோடு கொண்ட ஈர்ப்பில் "திருமணம் ஒன்றையே" நாடுவாள்!**

அபூர்வமாய், சில பெண்கள் மாத்திரமே, ஆண்களோடு கூடி - குலாவுவதற்கு நட்பு நாடுவார்கள். இதற்கு நேர்மாறாக, சில பெண்கள், ஆண்களிடம் யாதொரு விதத்திலும் ஈர்க்கப்படாதவர்களாய் இருக்கிறார்கள். அதேசமயம் 'தங்கள் சொந்த பாலினத்தோடு' நெருங்கி உறவாட நாடுவார்கள். இது ஒரு ஆரோக்கியமற்ற அசாதாரண நிலையாகவே கருத வேண்டும். மேலும், இதுவே "பெண்களோடு பெண்கள்" ஒரு பால் உறவுக்குரிய அடையாளமாகும்!

**அடக்கமான உடையே அணிய வேண்டும்**

வேதப் புத்தகம் இளம் பெண்களை எச்சரித்துக் கூறும்போது, "**வெளிப்புற அழகை** சார்ந்ததான நகை அலங்காரம் அல்லது ஒரு அழகு வஸ்திரம் அல்லது கூந்தல் அலங்காரம்.... போன்றவைகளைக் குறித்து கவனம் செலுத்தாதீர்கள்! மாறாக, **இருதயத்தின் உள்ளான அழகு** நிறைந்த, நிலைத்திருக்கும் வசீகரமாகிய **சாந்தமும், அமைதலும்** உள்ள ஆவியே தேவனுக்கு விலையேறப்பெற்றதாய் இருக்கிறபடியால், அதையே நாடுங்கள்! இதுபோன்ற ஆழமான **தெய்வ அழகே** முற்காலத்தில் வாழ்ந்த பரிசுத்தவாட்டிகளிடத்தில் நிறைந்து காணப்பட்டது!" என நேர்த்தியாய் கூறுகிறது (1 பேதுரு.3 :3-5 Living Bible மொழி பெயர்ப்பு).

ஆண்களைக் கவரும்படியான ஒரு ஆற்றல் சக்தியை, பெண் தனக்குள் பெற்றிருக்கிறாள். அத்தகைய ஆற்றலான சக்தி, தேவன் அவளுக்கு வரமாய் தந்ததுதான்! ஆனால், இதை அனேக பெண்கள் மோசம் போகும் வகையில், **தகாத விதமாய் கையாளுகிறார்கள்.** இவ்வித உள்ளான சக்தி பரிசுத்தாவியின் ஆளுகைக்குள் கொண்டு வரப்படா விட்டால், ஒரு பெண் அபாயமான பாதைக்கு திசை திரும்புவாள். தங்களுக்குள் இருக்கும் இவ்வித ஆற்றல் சக்தியை இவர்கள் அறிந்திருக் கிறபடியால், அதை எவ்விதத்திலாவது பெருக்கிக் கொள்வதற்கு சோதிக்கப்படுகிறாள். இதன் விளைவாய் 1) தன்னை அதிக அழகுபடுத்த நாடுவாள் 2) இன்று வெளிவந்த நாகரீக ஆடையின் மூலமாய் தன் சரீர அழகை அதிகமாய் வெளிப்படுத்தவும் நாடுவாள்! 3) தன் கூந்தலை வடிவமைப்பதற்கு அதிக நேரம் செலவழிப்பாள்! ஆனால், வேதமோ "பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவப் பெண்மணியை, அவளது தயை நிறைந்த கனிவான நற்குணத்தை வைத்தே அறியப்பட வேண்டும். அவளது கூந்தல் அழகை வைத்தோ அல்லது நகையை வைத்தோ அல்லது நகையின் கவர்ச்சியை வைத்தோ அல்லது ஆடம்பர உடையை வைத்தோ அறிந்திடக் கூடாது!" எனக் கூறுகிறது (1தீமோ.2:9,10 Living மொழி பெயர்ப்பு). மேற்கண்ட வசனங்கள் அனைத்திலிருந்தும், **ஒரு ஸ்திரீக்குரிய உண்மையான அழகு** என்ன என்பது தெளிவுபட சித்தரிக்கப்பட்டுள்ளது.

நம் சரீரத்தை தேவன் "பரிசுத்தத்திற்கே" **நம்மை நம்பி** ஒப்புக் கொடுத்திருக்கிறார்! அவ்வாறிருக்க, நம் சரீரத்தை தகாத விதமாய் பயன்படுத்தலாகுமா? மாறாக, நம் சரீரத்தாலும் தேவனை மகிமைப் படுத்த வேண்டுமென்றே கட்டளையிடப்பட்டிருக்கிறோம். இதன் பொருள், நமது சரீர ஆசாபாசங்களை மாத்திரமல்லாமல், நம் **சரீரத்திற்கு எவ்வித உடை உடுத்துகிறோம்?** என்பதையும் உள்ளடக்கியிருக்கிறது. எதிர்பாலரை ஈர்க்கும் தங்களின் ஆற்றல் சக்தியை வைத்து, பல்வேறு வகையில் **தகாதவிதமான செயலுக்குத் துணிந்த** சீயோன் குமாரத்திகளை தேவன் கடுமையாய் கண்டித்ததை பழைய ஏற்பாட்டில் வாசிக்கிறோம் (ஏசாயா.3:16-24).

"உண்மையில் நான் யார்?" என்ற நமது ஆள்தன்மையை, நாம் அணியும் ஆடைகள் 'வெளியரங்கப்படுத்தும் விளம்பரம் போல்' இருக்கிறது. பொதுவாய், நம் ஆடை அலங்காரத்தை ஜனங்கள் கண்டவுடன், ஓர் முதல் அபிப்பிராயத்தை தங்கள் மனதில் பதித்துக் கொள்வார்கள்!

**இவ்வாறு ஆடைகளில் இந்த உலகம் வழங்கும் 'புதிய மாடல் உடுப்புகளை' நீங்கள் தேடி வாழ்ந்து கொண்டு, 'கிறிஸ்துவையும் சாட்சியாக' அறிவித்தால், அந்த சாட்சியில் உயிரோட்டம் இருக்காது!**

ஏனெனில், அவர்கள்தான் நீங்கள் உடுத்தும் உடைகளை கண்ணார காண்கிறார்களே! உங்கள் ஆடை அலங்காரங்களைப்பற்றி கொண்ட அபிப்பிராயத்தை அவர்கள் உங்களிடம் சொல்லாமல் இருக்கலாம்.... ஆனால் "இந்த மாயையான உலகத்திலிருந்து கிறிஸ்து என்னை இரட்சித்தார்!" என நீங்கள் கூறுவதைக் கேட்டு விட்டு உள்ளூர சிரித்துக் கொள்வார்கள்! ஆகவேதான், நாம் உடுத்தும் உடைகளைக் குறித்து கவனமாய் இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

இதனிமித்தம், நம் உடைகள் அழுக்கான கந்தலாய் இருக்க வேண்டுமென நான் கூறவில்லை. ஓர் நல்ல தூய்மையான அழகில் எப்போதும் உடுத்தியிருக்க நாம் கண்டிப்பாய் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் தோற்றத்தில் அழுக்காகவோ அல்லது பார்ப்பதற்கு இனிமையற்றவர்களாகவோ இருந்திட தேவன் விரும்புவதில்லை. ஒரு விசுவாசி உடுத்தும் உடையின் குணாதிசயம், எளிமையாயும், நேர்த்தியாயும் இருந்திட வேண்டும் என்றும், அந்த உடையில் நூதனமான யாதொன்றையும் எதிர்பாலர் காணாதிருக்கவும், அதை உடுத்தியிருக்கும் பெண் **தன் உடுப்பைக் குறித்த நினைவு அற்றவளாயும்** இருக்கும்படியாய்.... உடை உடுத்த வேண்டுமென A.P.சிம்சோன் என்ற பக்தன் கூறியுள்ளார். இது, நாம் யாவருமே பின்பற்ற வேண்டிய சிறந்த ஒரு அறிவுரையாகும்.

நாம் உடுத்தும் உடுப்பு, ஆண்களின் இச்சையைத் தூண்டுவதாக ஒருபோதும் இருந்துவிடக் கூடாது! 'இச்சிக்கும் இளைஞர்களை' தேவன் நியாயம் தீர்க்கும் அதே வேளையில்.... 'இச்சையை தூண்டும்படி உடுப்பு அணிந்த பெண்களையும்' நியாயம் தீர்ப்பார் எனக் கூறுவதே நேர்மையாய் இருக்கும்!

பெண்களிடம் நிலவும் மற்றொரு காரியம், தங்கள் **நெற்றியில் திலகம் அல்லது பொட்டு வைத்தல்** ஆகும்! கிறிஸ்தவரல்லாத புற மதஸ்தரின் இந்த பழக்கத்தை, கிறிஸ்தவ பெண்களும் அதே விதமாய் கடை பிடிப்பதை காண்பது துயரமேயாகும். இதை அணியும் பெண்களுக்கே தெரியாவிட்டாலும், திலகமிடுவதினால் அவர்கள் கூறும் சாட்சி என்னவெனில் "நான் ஒரு கிறிஸ்தவள் அல்ல!" என்ற சாட்சியே ஆகும். நம்மில் சிலர் எண்ணுவது போல் 'திலகமிடுதல்' நாகரீகத்திற்குரியது என எளிதாய் கூறிட இயலாது. மாறாக, அது புறமதஸ்தரின் அடையாளமே ஆகும்.

**நமது உத்தம கிறிஸ்தவ சாட்சியை சீர்குலைக்கும் எவ்வித உலக ஒத்தவேஷத்திற்கும், மாறிவரும் நாகரீகங்களுக்கும் எதிராய், தைரியம் கொண்டு நின்றிட தேவன் நமக்கு கிருபை செய்வாராக!**

வாக்குதத்தங்களை சுதந்தரிக்கும்படி அழைக்கப்பட்ட ஆபிரகாமின் ஏக புத்திரன் ஈசாக்கின் மனைவியாகும் பாக்கியத்தை அடைந்திட **ரெபெக்காளை** தேவன் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? அல்லது ஆண்டவராகிய இயேசுவின் தாயாக இருக்கும்படி, **மரியாளை** தேவன் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? ஏனெனில், அவர்கள் இருதயத்தின் அந்தரங்கத்தில் மிளிர்ந்த வசீகரத்தில் தேவன் பிரியமாய் இருந்திருக்கிறார்! என்ற ஒரே காரணமாகும்!

**வெளிப்புறமான அழகு அல்ல... உள்ளத்தில் வாசம் செய்யும் மெய்யான அழகை எந்த ஒரு 'அழகு - சாசன கடையிலும்' நீங்கள் வாங்கிட முடியாது. பக்தியற்ற ஸ்திரீயின் சரீர அழகானது 'ஒரு பன்றியின் மூக்கில் போட்ட பொன்மூக்குத்திக்கு சமம்' என வேதம் இடித்துரைப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை! (நீதி.11:22).**

கர்த்தருடைய இந்த வார்த்தையில், எவ்வளவு கண்டிப்பு அடங்கி யிருக்கிறது என்பதைப் பாருங்கள்! ஆனால் மெய்யான ஆவிக்குரிய மதிப்பீடுகளை நாம் அறிந்து கொள்ளவே இவ்வாறு கூறியிருக்கிறது! இன்றைய உலகின் கவர்ச்சி நாகரீகங்களை நாடும் எந்த ஒரு பெண்ணாய் இருந்தாலும், அவள் தேவனுடைய உயர்ந்த பங்கை தன் வாழ்வில் நிச்சயமாய் இழந்து விடுவாள்!

**ஆண்களோடு கொண்ட சகஜ உறவுகள்**

நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், வெகு சீக்கிரத்தில்,

பையன்கள் உங்களிடம் ஆர்வம் காட்டத் தொடங்குவதை நீங்கள் காண முடியும்! அவர்கள், கல்லூரியில் உங்களோடு பயிலும் ஒரு மாணவராய் இருக்கலாம்! அல்லது, உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள ஒருவராய் இருக்கலாம்! இதுபோன்ற நிலையை உங்களால் தவிர்க்க இயலாது. ஆகிலும், **இந்த நபர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்** என நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது!

நாம் ஏற்கனவே முந்திய அதிகாரங்களில், பாலிய எதிர்பாலர் களோடு பழக வேண்டிய விதத்தைக் குறித்து குறிப்பிட்டிருக்கிறோம். ஆகிலும் இந்த இடத்தில் பெண்கள் கவனமாய் இருக்க வேண்டிய சில குறிப்புகளை கருத்தில் கொள்வது நல்லது. முற்காலங்களில், பெண்கள் தங்களின் குறைந்த வயதிலேயே திருமணம் ஆகிவிடுவார்கள். ஆனால் இன்றுள்ள பெண்களோ தங்கள் திருமணத்தை தாமதமாகவே செய்கிறார்கள். அது ஏனெனில், பெண்களும் உயர்கல்லூரி படிப்பிற்கு சென்றிட துவங்கியதே காரணமாகும். ஒரு பட்டம் பெறுவதற்கு அல்லது ஒரு பயிற்சி அடைவதற்குச் செல்லும் வேளையில் சக - ஆண்களோடு பழகும் கட்டாயத்திற்கு உள்ளாகுகிறார்கள். இதுபோன்ற பெண்களுக்கே பல சோதனைகள் காத்திருக்கின்றன! இவ்வித சூழ்நிலையில் உள்ள பெண்களே, தங்கள் கவர்ச்சியின் ஆற்றலைப் பயன்படுத்தி, திருமணம் செய்ய வேண்டுமென்ற நோக்கம் சிறிதேனும் இல்லாமலே, **தங்களோடு பழகும் ஆண்களைக் கவரும்படி** சோதிக்கப் படுகிறார்கள்! இவ்வித சோதனைக்கு கைகொடுக்கும் பெண்கள்.... முடிவில் சோகமான விபத்துக்களையே சந்திக்க நேரிடும்!

ஒரு ஆணைவிட, பெண்ணிடம்தான் ஆர்த்தெழும்பும் உணர்ச்சிகள் நீடித்து தங்கியிருக்கும் என்பதை பெண்களாகிய நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

> **ஒரு பெண்ணிடம் காதல் கொள்வது ஒரு ஆணிற்கு மிக எளிதே ஆகும். அதேபோல, அவளை மறந்து விடுவதும் அவனுக்கு மிக எளிதாகும். இப்போது திரும்பவும் அவன் வேறொரு பெண்ணிடம் தன் காதலை மாற்றிக் கொள்வான்.**

தன் உணர்ச்சி பூர்வமான வாழ்க்கைக்கு முன்பு ஏற்பட்ட சோகமான சேதத்தை உணராதவனாயும் இருந்திட முடியும்! இது ஏனென்றால், **பெரும்பாலான வாலிபர்களின் நோக்கமெல்லாம் "இழிவான உடலுறவு சம்பந்தமே" ஆகும்.** எந்தளவிற்கு ஒரு பெண் இடம் தருகிறாளோ, அந்தளவிற்கு அவன் தீவிரமாய் ஈடுபடுவான். 'அவன் காதலில்' எந்தவித அர்ப்பணமும் இல்லாதிருக்க முடியும்! ஆனால் இதுபோன்ற உணர்வுபூர்வ தொடர்புகளில், ஒரு பெண்ணின் உணர்வில், அது நிஜமான சம்பவமாய் அவள் உள்ளத்தில் பதிந்துவிடும்! ஆகவேதான், தான் ஒரு சமயத்தில் காதல் கொண்ட வாலிபனின்

*"உணர்வு பிடியிலிருந்து" தன்னை விடுவித்துக்கொள்ள அவளுக்கு கஷ்டமாயிருக்கிறது! இன்னும் சில பெண்கள், திருமணம் ஆனபிறகும் கூட "தான் முன்பு காதலித்தவனை மறப்பதற்கு கஷ்டப்படும் நிலையினால்" அவர்களுடைய திருமண வாழ்வில் மகிழ்ச்சி இல்லாது போய்விடுகிறது! ஆகவேதான் பெண்களாகிய நீங்கள் மெய்யாகவே மிகுந்த எச்சரிக்கையுடன் வாழ வேண்டியது அவசியமாய் இருக்கிறது!*

*பெண்களைக் குறித்த "உணர்வு எழுச்சியைப் பற்றிய உண்மைகள்" இவ்வாறாக இருப்பதால், உணர்ச்சிப்பெருக்கால் ஏற்படும் அனைத்து சோதனைகளும் அவர்களுக்கு மிக வலிமைகொண்டதாகவே இருக்கும்!*

**...இதனிமித்தமே, ஒரு பையன் உங்கள் கையை தொடுவதற்கு நீங்கள் ஒரு போதும் அனுமதித்துவிடக் கூடாது! அதுவும், "முத்தம் கொடுப்பது" மகா கொடுமையாகும்!**

*இவைகளுக்கு நீங்கள் ஒருமுறை அனுமதித்து விட்டால், உங்கள் மனதில் எழும்பும் வீணான தீய கற்பனைகளை நிறுத்துவது மிக கடினம்! முதலடி எடுத்து வைக்கும் இந்த தீமை, படிப்படியாய் அடுத்தடுத்த தீமைகளுக்கு உங்களை மிக எளிதில் நடத்திச்சென்று விடும்! ஆகவே, கவனம்!*

*மேலும், ஒரு பையனோடு நீங்கள் கொண்டிருந்த நட்பு முறிவடைந்தால், அந்தப் பையனைவிட உங்களுக்குத்தான் அதிக துன்பமும் துயரமும் எஞ்சி நிற்கும். அந்தப் பையன், உங்களை விட்டு விட்டு வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொள்வது அவனுக்கு மிக எளிதாகவே இருக்கும். ஆனால், அதுபோன்று நீங்கள் இருப்பதற்கு உங்களுக்கு மிகக் கடினமாய் இருக்கும்.*

**இந்த நிகழ்ச்சியினால் ஏற்பட்ட நிந்தையை, அந்தப் பையன் அல்ல... நீங்கள் தான் வாழ்நாளெல்லாம் சுமக்க வேண்டியிருக்கும்!**

*இதனிமித்தமாய், வேறொரு துணை கிடைப்பது உங்களுக்கு மிகக் கடினமாகியிருப்பதை பார்ப்பீர்கள். குறிப்பாய், நம் இந்திய தேச கலாச்சாரத்தில், நிஜமாகவே இவ்வாறு நடந்தேறும்! இந்த இடத்தில், இச்சையோடு தொட்டுப் பழகும் பெண்களை நான் குறிப்பிடவில்லை. ஆனால், 'ஒரு பையனோடு தூய்மையான சினேக உறவைக் கொண்ட' பெண்கள் மாத்திரமே, இவ்விதமாய் துன்பம் அடைவார்கள். உங்கள் தூய்மையான உறவு வெறும் கடிதப்போக்கில் இருந்தாலுமேகூட "உங்கள் உறவு முறிந்து, அது பிறருக்கு தெரிந்துவிட்டதால்" நீங்கள் தான் வெகுவாய் துன்பம் அடைவீர்கள்! பெண்ணானவள் தன்னைக் காத்து நடந்து கொள்ள வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை மறந்து விடக்கூடாது!*

**ஆரம்பத்திலேயே மிகுந்த எச்சரிக்கையுடன் வாழத்தவறி, தங்கள்**

கௌரவத்தை இழந்து தத்தளித்த பெண்கள் கொஞ்சநஞ்சமல்ல!

*கவனமற்ற இவர்களின் செயலினால், அவர்களின் சாட்சி கெட்டுப் போனது மாத்திரமல்லாமல், நடந்துவிட்ட சம்பவங்கள் கர்த்தருடைய நாமத்திற்கே பேரிழப்பான நிந்தையைக் கொண்டுவந்துவிடும்! பெண் களாகிய நம்மை 'பாலிய உணர்ச்சியின் அடிப்படையில்' பெலஹீன பாண்டம் என வேதம் காரணமின்றி குறிப்பிடவில்லை! ஆம், ஆண் களைவிட பெண்களே வஞ்சனைக்கு ஆளாகும் அதிக அபாயத்தில் இருக்கிறார்கள் (1பேதுரு.3:7; 1 தீமோ.2:14).*

**உங்களின் திருமண பேச்சு ஆரம்பிப்பதற்கு முன்பாக, நீங்கள் எந்த ஆண் பிள்ளைகளோடும் நட்பாய் பழகவே கூடாது.** *அதற்கு ஒரு முக்கிய காரணம் என்னவென்றால், திருமணம் ஆகாதிருக்கும் இந்த வாலிப காலமே, நீங்கள் கர்த்தருக்கு தடையேதுமின்றி சுதந்திரமாய் ஊழியம் செய்திடும் காலமாகும். நீங்கள் திருமணம் ஆனபிறகு, நேரம் உங்கள் கையில் இருப்பதில்லை! திருமண வருடங்களுக்கு முன்பாக, நீங்கள் ஒரு ஆண் மகனோடு சினேகம் வைத்து பொழுதைப் போக்கியிருந்தால், உங்கள் ஜீவியத்தின் மிக பிரயோஜனமான, வலிமையான காலங்களை வீணாக்கி விட்டீர்கள் என்பதை அறியுங்கள்! அந்த நல்ல காலங்களை தேவனுக்கென பயன்படுத்தியிருக்கலாமே! ஆகவே, வாலிபப் பெண் களே.... சாத்தான் உங்களை வழிதவறிச் சென்று அலைக்கழிக்க இடம் கொடுக்காதீர்கள்!*

*இச்சமயத்தில், இன்னமும்* **இரண்டு புத்திமதிகளை** *நான் கூற விரும்பு கிறேன்.*

> **முதலாவதாக, எந்த ஆவிக்குரிய விஷயங்களுக்கும்கூட, திருமணம் ஆகாத ஒரு வாலிபனிடம் சென்று கேட்காதீர்கள்! அது போன்ற ஆலோசனைக்கு வேறொரு சகோதரியிடமோ அல்லது உங்களைவிட அதிக வயதுகொண்ட சகோதரனிடமோ நீங்கள் கேட்கலாம்.**

*இரண்டவதாக, திருமணமான எந்த ஆணிடமும், நட்பான நெருக்கமும் கொள்ளாதிருங்கள்! ஒருவேளை, அவருடைய மனைவி யோடு நெருங்கிய நட்பு இருந்தால் மாத்திரமே.... அவருடைய கணவரோடு நீங்கள் பேசலாம்!*

## திருமணம் நிறைவேறுதல்

*திருமணம் ஆகும்போதும், தாய்மை அடையும்போதும், நீங்கள் இதுவரை அடையாத மனநிறைவு அடைவீர்கள் என்ற உண்மையை எல்லா தாய்மார்களும் ஒத்துக்கொள்வார்கள்! இவ்வாறு சொல்வதினி மித்தம் "தனித்திருக்கும்படி தேவனால் அழைக்கப்பட்ட ஸ்திரீகள்" இவ்வித மனநிறைவை அடையமுடியாதென நான் கூறிடவில்லை. கிறிஸ்தவ பெண்மணியிடம், "தனக்கு திருமணம் ஆக வேண்டுமா?*

அல்லது திருமணம் ஆகாமல் இருக்க வேண்டுமா?" என்ற இரு கேள்வி களுக்கு.... அவரவர் பெற்றிடும் விடையில்தான் பூரண திருப்தி உள்ளது! ஏனெனில், இந்த இரு கேள்விக்கும் பதிலைப்பெற்ற இவர்கள் "தேவசித்தம் செய்தவர்களாய்" மனநிறைவு அடைகிறார்கள்! எனவே, 'தனிமையாய் இருக்கும்படி' தேவனுக்கு கீழ்ப்படிந்த எந்தப் பெண்ணும் நிச்சயமாய் மனநிறைவு பெற்றிடமுடியும்! ஆனால், திருமணம் ஆகாமல் 'தனிமையாய் இருப்பதற்குரிய அழைப்பை' ஒரு சில ஸ்திரீகள் மாத்திரமே பெற்றிருக்கிறார்கள். ஆம், தேவன் பிரதானமாய் ஒரு ஸ்திரீயை படைத்ததன் நோக்கம், ஒரு மனைவியாகவும்! ஒரு தாயாகவும்! இருப்பதற்கே ஆகும்.

> **"திருமணம் தன்னுடைய கிறிஸ்தவ ஊழியத்தை மட்டுப்படுத்தும்!" என எந்த ஒரு பெண்ணும் எண்ணாதிருக்கக்கடவள். ஒரு வேளை, அவளுடைய ஊழிய நடவடிக்கைகளில் ஓரளவு கட்டுப்பாடு ஏற்படலாம்... ஆனால், அவளுடைய ஆவிக்குரிய ஊழியத்தின் யாதொரு பகுதிகளிலும் பாதிப்பு ஏற்பட அவசியமேயில்லை.**

அங்குமிங்கும் ஓடியாடி கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்த ஒருபெண், திருமணத்திற்குப் பின்பு அதே அளவின்படி ஊழியம் செய்யமுடியாமல் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வருகிறாள்! ஒரு ஆணிற்கோ, இவ்வித கட்டுப்பாடு திருமணத்திற்குப் பின்பு வருவதில்லை. ஆனால் ஒரு பெண்ணிற்கு இந்நிலை ஏற்படும்! ஆகவே, திருமணத்திற்குப் பின்பு வேறொரு விதமான ஊழியத்தை தேவன் தனக்கு வைத்திருக்கிறார் என்பதை அவள் உணர வேண்டும்! இதை ஏற்றுக்கொண்டு, ஏமாற்றத்திலிருந்தும் மனசஞ்சலத்திலிருந்தும் அவள் எப்போதும் விடுதலை பெற்றிருக்க வேண்டும். **திருமணத்திற்குப் பிறகு "ஒரு இல்லறத்தை அமைப்பதே" அவளுடைய பிரதான அழைப்பாகும்.** அவள் தன் வீட்டை, வாழ்வின் புயலில் சேதமடைந்த இளைய சகோதரிகளுக்கும், சில சமயம் வயது சென்ற சகோதரிகளுக்குமே கூட "ஓர் அடைக்கல பேழையாய்" அவள் உருவாக வேண்டும்! மேலும், தான் பெற்றெடுக்கும் பிள்ளைகளை தெய்வபயத்தில் வளர்க்கும் பொறுப்புடையவளாய் இருக்க வேண்டும்! இவ்வாறாக, திருமணத்திற்கு முன்பான ஊழியங்களுக்கு சமமாகவே **முக்கியமான ஊழியத்தை இல்லற வாழ்க்கையில் பெறுகிறாள்.**

இது குறித்து ஒரு பக்தன் கூறும்போது "திருமண வாழ்வின் தன் பொறுப்பை முழு மனதோடு ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியாயிருக்கும் ஒரு பெண், அதற்கென.... தன் நேரத்தை கொடுப்பாள்! தன் சக்தியை கொடுப்பாள்! தன் சுதந்திரத்திற்கு ஏற்பட்ட கட்டுப்பாட்டையும் ஏற்றுக்கொள்வாள்! இதுபோன்ற பெண், மற்றவர்களை ஆசீர்வதிக்கும் படியான பெரும் பாக்கியத்தை கண்டடைவாள்!" மேலும், தன் குடும்ப

அனுபவத்தின் மூலமாயும், திருமண உணர்வில் ஒருவருக்கொருவர் பெருகும் அன்பின் உணர்வுகள் மூலமாகவும் "ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி" அந்த சூழலில் எப்போதும் **சிநேக உறவு வளரும்** வாய்ப்பை ஏற்படுத்தி விடுவாள்!

சூசன்னா வெஸ்லி அவர்கள், ஒரு பிரசங்கி அல்ல! ஆனால், ஒரு தேவ பக்தியுள்ள தாயாக இருந்து, தன்னுடைய அனேகம் பிள்ளைகளை தெய்வபயத்திற்குள் நடத்தினாள். இங்கிலாந்து தேசத்தில், மாபெரும் எழுப்புதல் ஏற்படுவதற்கு, தேவனுடைய கரத்தில் வல்லமையான ஆயுதங்களாய் இருக்கும்படி அவரது இரு மகன்களாகிய ஜான் வெஸ்லியும், சார்லஸ் வெஸ்லியும் திகழ்ந்தார்கள்! திருமணம் செய்யாமல் நின்று சாதிக்கும் ஒரு ஸ்திரீயைவிட, **பயபக்தியான இந்த தாய்** தன் தேசத்திற்கு அதிகமானதைச் செய்தாள் என்றே கூற வேண்டும். உண்மைதான், தீமோத்தேயுவின் தாய் ஐனிக்கேயாள், ஒரு பிரசங்கியாய் இருந்து செய்திருக்கும் ஊழியத்தைவிட, ஒரு தாயாய் இருந்து செய்திட்ட ஊழியமே மேலோங்கியதாய் இருந்தது (2தீமோ.1:3).

திருமணத்திற்கு ஆயத்தப்படுத்தும் எந்த ஒரு பெண்ணும் நீதிமொழிகள் 31:10-31 வசனங்களை திரும்பத் திரும்ப வாசித்து தியானிக்க வேண்டும்! ஒரு குணசாலியான மனைவிக்குரிய பண்புகள் இவ்வசனங்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

> **இந்த குணசாலியான ஸ்திரீயின் முழு வாழ்க்கையின் இரகசியமும் "அவள் கர்த்தருக்கு பயந்ததில்" அடங்கியிருக்கிறது (வச.30). ஆம், "மனைவியின் பண்பிற்குரிய" இந்த அஸ்திபாரங்களை இந்த குணசாலியான ஸ்திரீ தன் திருமணத்திற்கு முன்பே போட்டிருந்தாள்!**

ஆகவே, இந்த வசனங்கள் ஒவ்வொரு கிறிஸ்தவ பெண்மணிக்கும் ஒரு சவாலாய் அமைய வேண்டும். இவ்வசனங்களில் விவரிக்கப்பட்ட அனைத்து குணாதிசயங்களுக்கும், எந்த ஒரு மறுவிளக்கம் தேவையில்லாதபடி, பகிரங்க வெளிப்படையாகவே கூறப்பட்டுள்ளது. அவளைக் குறித்து கூறப்பட்ட முக்கிய குணாதிசயங்களில் "சிக்கனம்" மிகச் சிறந்த குணாதிசயம் ஆகும். ஒரு குணவதியான மனைவி, தன் பணத்தை செலவழிக்கும் விதத்தில் மிகுந்த கவனம் கொண்டிருப்பாள். இந்த நல்ல குணாதிசயத்தை ஒவ்வொரு பெண்ணும் திருமண வாழ்க்கையில் கற்றுக்கொள்ள வேண்டும். கல்லூரி செல்லும் பெண்களில் அனேகர், பணத்தை வீண் விரயமாய் செலவு செய்கிறார்கள்! இந்த கல்லூரி வாழ்வில் "**சிக்கனத்தை**" ஒரு பெண் கடைபிடிக்கத் துவங்கினால், திருமணம் ஆனபின்பு, அது அவளுக்கு அதிக உதவியாய் இருக்கும். **இன்றுள்ள உங்கள் அனுபவமே, பிற்காலத்திற்கு கைகொடுக்கும்.**

திருமணத்திற்கு ஆயத்தமாய் "தியாகம் செய்யும்" பகுதியை எல்லாப் பெண்களும் கற்றுக் கொள்ள வேண்டும். **தியாகமில்லாத திருமண வாழ்வில் மகிழ்ச்சி ஒருபோதும் இருக்காது.** அதுவும் குறிப்பாய், பெண்களுக்கு இது முக்கியமானதாகும். திருமணத்திற்குப் பிறகு, ஒரு புருஷனைவிட ஒரு ஸ்திரீயே அதிகமான தியாக வாழ்விற்கு அழைக்கப் பட்டிருக்கிறாள்! தனி ஒரு பெண்ணாய் இருந்தபோது, அவள் பெற்றிருந்த எண்ணற்ற சுயாதீனமான உரிமைகளையும், இப்போது அவள் இழக்க நேரிடும்! தியாகத்தின் உணர்வுபூர்வமான வாழ்க்கையை திருமணத்திற்கு முன்பே நீங்கள் கற்றுக்கொள்ளத் தொடங்கவில்லை யென்றால், திருமணத்திற்கு பின்பு இந்த தியாக வாழ்க்கை உங்களுக்கு கடினமாய் இருக்கும்! ஆகவே இந்தப் பகுதியை உங்களுக்கு கற்றுத் தரும்படி நீங்கள் தேவனிடம் கேட்க வேண்டும்.

திருமணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் ஒரு பெண் "**ஜெப வாழ்க்கையை**" பழகி வைத்திருப்பது மிக முக்கியமாகும். திருமண நடப் பதற்கு இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு முன்பே ஒவ்வொரு கிறிஸ்தவ பெண்ணும் "தன் வாழ்க்கைத் துணைக்காக" வாஞ்சையுடன், ஒவ்வொரு நாளும் தவறாமல் ஜெபிக்கவேண்டும். "தேவன் தெரிந்து கொண்ட துணையிடம்" தன்னை அவர் நடத்தும்படியே அவள் ஜெபம் செய்யவேண்டும். தேவன் தெரிந்து கொள்ளாத எந்த திருமண முயற்சி யையும் "**தேவனே தடைசெய்யும்படி**" ஜெபத்தில் கேட்க வேண்டும். நம் இந்திய தேசத்தில், பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளின் திருமணத்தில் ... அதுவும் குறிப்பாக, தங்கள் குமாரத்திகளின் திருமணத்தில் முடிவெடுக்கிறவர்களாய் இருக்கிறபடியால், பெண்களாகிய நீங்கள், **ஜெபத்தை அதிகம் சார்ந்தவர்களாய் இருக்க வேண்டும்!** தன் பெற்றோர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாய் இருந்தால், "தேவன் தன் பெற்றோர்களை, தன் திருமண விஷயத்தில் ஞானமாய் நடத்த வேண்டுமென்றே" ஒருபெண் ஜெபம் செய்ய வேண்டும். இவ்வாறு தேவனிடம் விசுவாசத்தோடு தொடர்ச்சியாய் ஜெபிக்கும் யாராய் இருந்தாலும், தங்கள் ஜெபங்களுக்கு கண்டிப்பாய் ஆச்சரியமான பதிலை அடைவார்கள்!

நடைமுறையான மற்றொரு ஆலோசனை என்னவென்றால், எப்போதெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ, அப்போதெல்லாம் "**சமையல் செய்ய**" **கற்றுக் கொள்ளுங்கள்!** இவ்வாறு கற்றுக் கொண்ட நீங்கள், திருமணம் ஆனபின்பு "சமையல் செய்வதற்கான திகைப்பிற்கும் கஷ்டத்திற்கும்" நீங்கலாகியிருப்பீர்கள்!

## வரப்போகும் கணவனிடத்தில் நீங்கள் எதிர்நோக்க வேண்டியவைகள்

தனக்கு வரப்போகும் கணவன் எப்படிப்பட்டவராய் இருக்க வேண்டுமென்ற முக்கியமான குறிப்புகள் ஏற்கனவே 5- வது

அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகிலும், ஒரு சில புதிய ஆலோசனைகளை உங்கள் மனதில் சேர்த்துக் கொள்ளும்படி விரும்புகிறேன்:

ஒரு பெண்ணிற்கு தேவையான வாழ்க்கைத்துணை: 1)அவளுக்கு பாதுகாப்பையும், துணையாக நிற்கும் உணர்வையும் தருகிறவராய் இருக்க வேண்டும். 2) உதவி செய்கிறவராயும், ஆறுதல் செய்கிறவராயும் 3) தன்னைப் புரிந்து கொள்கிறவராயும் 4) தான் சார்ந்து கொள்வதற்குரிய பெலனும் முதிர்ச்சியும் கொண்டவராயும்.... அதே சமயத்தில், தன்னிடம் 'தாழ்வு மனப்பான்மையை' புகுத்தாதவராயும் இருக்க வேண்டும். புருஷனை சார்ந்து கொள்ளும்படிக்கே ஒரு ஸ்திரீயை தேவன் படைத்திருக்கிறார். ஆகவே "உங்களுக்கு நம்பிக்கை யூட்டும் நபராயும், நீங்களும் அவரை நம்பி சார்ந்து கொள்ளக் கூடிய வராகவும்" இருக்க வேண்டும்!

"மனைவியானவள் தன் கணவனை மிகுந்த மரியாதையுடன் நடத்தி, அவருக்கு கீழ்ப்படிந்து, அவரையே மெச்சிக் கொண்டு, கனம் செய்கிறவளாய் இருக்க வேண்டுமென" வேதம் கூறுகிறது (எபே.5:33 Living Bible). **மரியாதை செலுத்துமிடம் எங்கு உண்டோ, அங்குதான் அன்பு வளர்ந்திட முடியும்.** தன் கணவனுக்கு மரியாதை கொடுக்காத ஒரு மனைவி, அவனை ஒருபோதும் அன்புகூரவும் மாட்டாள். அப்படியே அன்புகூர்ந்தாலும், 'ஐயோ பாவமே...' என்றுதான் அன்புகூருவாள். அதேபோலவே, தன்னைவிட தன் கணவர் அதிக முதிர்ச்சி உள்ளவர் என மதிப்பு தராத ஒரு மனைவி, அவனைத் தன் தலையாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டாள்! ஆகவே, ஒரு நபரை நீங்கள் முடிவு செய்வதற்கு முன்பாக, அவரை நீங்கள் மதித்து, மெச்சிக் கொண்டு.... உங்கள் ஜீவ காலமெல்லாம் அவரையே எதிர்நோக்கிப் பார்த்து வாழ்ந்திட முடியுமா? என்ற கேள்வியை நீங்கள் கேட்டுப் பார்க்க வேண்டும். இதுபோன்று, உங்கள் **வாழ்க்கைத் துணையை மெச்சிக்கொள்ளுதல்,** உங்கள் திருமண வாழ்வில் ஏற்படும் எண்ணற்ற பிரச்சனைகளை தீர்த்து வைத்திடும்!

ஒரு நபருடைய குணாதிசயத்தின் முழுமையையும் அறிந்து கொள்ள முடியாது என நான் உணருகிறேன். ஆனால் 5-வது அதிகாரத் தில் கூறப்பட்ட சில ஆலோசனைகள், தேவன் உங்களுக்குத் தெரிந்து கொண்ட நபரை நீங்கள் கண்டுகொள்ள மெய்யாகவே கைகொடுக்கும்!

**எப்படியிருந்தாலும், ஒரு நபரைக் குறித்து ஒன்றுமே தெரியாமல் அல்லது ஏதோ கொஞ்ச மாத்திரமே தெரிந்துகொண்டு திருமணம் செய்து விடாதீர்கள்!**

துரதிருஷ்டவசமாய், நம் தேசத்தில் உள்ள அனேக பெண்களுக்கு இந்த கதிதான் ஏற்படுகிறது. ஜீவகாலமெல்லாம் நிலைத்திருப்பதுதான்

திருமணம்! அதை, மாற்றிக்கொள்ள இயலாது! ஆகவே திருமண விஷயத்தை வெகு சாதரணமாய் நம்மில் ஒருவரும் எடுத்துக் கொள்ளக் கூடாது!

"ஒருவேளை என்னுடைய பெற்றோர்கள் அவிசுவாசியான ஒரு நபரையோ அல்லது ஏதோ ஒருவகையில் பொருத்தமில்லாத ஒரு நபரையோ திருமணம் செய்ய வற்புறுத்தினால், நாங்கள் என்ன செய்வது?" என நீங்கள் கேட்கலாம். இதுபோன்ற சூழ்நிலைகளில், தன் பெற்றோர்களிடம் "இல்லை!" என மறுப்பு கூறுவது, ஒரு பையனை விட ஒரு பெண் பிள்ளைக்குத்தான் அதிக கஷ்டமான காரியமாகும். இருப்பினும், **உங்கள் நிலைப்பாட்டில் அன்போடுகூட நீங்கள் உறுதியுடன் நிற்க வேண்டியது உங்கள்மேல் விழுந்த கடமையாகும்.** இவ்வாறு நீங்கள் தேவனை கனப்படுத்தி நின்றுவிட்டால், தேவன் உங்களை நிச்சயம் கனப் படுத்துவார். "பெற்றோர் கூறியபடி சம்மதிக்கா விட்டால் பிற்காலத்தில் ஏதும் ஏற்படுமோ....?" போன்ற பாதுகாப்பிற்கு - விரோதமான சிந்தை களை வைத்து **சாத்தான் உங்களை சோதித்து, ஆவிக்குரியவர் அல்லாத ஒருவருக்கு சம்மதம் தெரிவிக்கும்படியும் தூண்டுவான்!** இதுபோன்ற, தேவனுக்கு புறம்பான பிசாசின் குரலுக்கு ஒருபோதும் செவிகொடுக்கா தீர்கள். இந்த உலக சரித்திரத்தில், தேவனுக்கு கீழ்ப்படிந்ததின் நிமித்தம் இழப்பு அடைந்தவர்கள் ஒருவர் கூட இல்லை! ஆகவே சற்றேனும்கூட நீங்கள் அஞ்சிடத் தேவையில்லை. நீங்கள் தேவனை கனம் செய்து அவரையே முற்றிலும் சார்ந்து கொண்டால்.... அவர் உங்களை ஒருபோதும் கைவிடார்! தன்னுடைய ஏற்ற சமயத்தில், உங்களுக்கு உகந்த சிறந்த துணையை கண்டிப்பாய் உங்களுக்குத் தருவார். அவர் தர இருக்கும் சிறந்ததை நீங்கள் இழந்து போகலாமா?

'வரதட்சணை' குறித்து ஏற்கனவே கூறப்பட்டிருந்தாலும் மீண்டும் ஒரு அறிவுரையை வலியுறுத்த விரும்புகிறேன். வரதட்சணை கேட்கும் ஒரு நபரை, திருமணம் செய்வதற்கு முன்பாக ஒரு கிறிஸ்தவ பெண்மணி ஒரு முறைக்கு இரண்டு முறை யோசித்து செயல்பட வேண்டியது அவசியம். **அனேகமாக,அந்த நபர் உங்களைவிட உங்கள் பணத்தில்தான் அதிக ஆர்வம் கொண்டிருப்பார்!** அதே சமயத்தில், ஒரு நபருடைய ஐசுவரியத்தையும் அல்லது அவருடைய உயர்ந்த பதவியையும் வைத்து ஈர்க்கப்படாமல் இருந்திடவும் எச்சரிக்கையாய் இருங்கள். வேதம் நமக்கு நினைவூட்டுகிறபடி, 'அன்பிற்கு பதிலாய் பணம்' எக்காலத்தும் ஒரு மாற்று அல்லவே அல்ல! (உன்னதப்பாட்டு.8:7).

**தனித்திருக்க தீர்மானிக்கும் பெண்கள்**

திருமணம் செய்து கொள்ளாமல், தனித்து வாழ தீர்மானித்த பெண் பிள்ளைகளுக்குரிய அறிவுரை கூறவில்லையென்றால், இந்த அத்தியாயத்தின் நோக்கம் நிறைவானது அல்ல:

*நம் இந்திய சமுதாயத்தில், ஒரு பெண் திருமணம் செய்யாமல் தனித்திருக்கும்படி தானாகவே தெரிந்து கொள்வது அபூர்வமே ஆகும்!* **தனித்திருக்கும் வாழ்விற்கு, தேவனுடைய திட்டமான நடத்துதல் இருந்திருக்க வேண்டும்!** *அவருடைய அழைப்பைக் குறித்த அவ்வித உறுதி மாத்திரமே கொடிய சோதனை காலங்களில் நீங்கள் நிலைத்து நிற்க கை கொடுக்கும்! இன்னும் சிலர், தற்காலிகமாக இவ்வித அழைப்பை தேவனிடமிருந்து பெற்று, எவ்வித குடும்ப பிரச்சனையும் இல்லாமல், தேவன் தந்த விசேஷித்த ஊழியங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதன்பின்பு, தேவன் அவர்களைத் திருமணத்திற்கு நடத்தியிருக்கிறார்!*

*இந்த பகுதியை வாசித்துக் கொண்டிருக்கும் சிலர் மீது, அவர்களின் விருப்பத்திற்கு மாறாக 'தனிமையாக இருக்கும் நிலைக்கு' தள்ளப்பட்டு இருக்கக்கூடும்! இவ்வித நிலைக்கு ஆளாக்கிய உங்கள் குடும்பத்தின் மீதோ, அல்லது ஒரு நபரின் மீதோ அல்லது சில சூழ்நிலைகள் மீதோ ஆத்திரம் அடையாதிருக்க, உங்களுக்கு கஷ்டமாய்தான் இருக்கும். உங்களுக்கென்று ஒருவர் சொந்தமாகி, அவரை அன்புகூர்வதும் அவரால் அன்புகூரப்படுவதும்.... பெண்மைக்கே உரிய சுபாவமான ஏக்கமாகும்! இருப்பினும், நீங்கள் எவ்வளவுதான் அநீதியாய் நடத்தப் பட்டிருந்தாலும்.... அதினிமித்தம் கோபமும் சுய-பரிதாபமும் அடைந்து கொள்வது பெரும் தவறு! உடல் நலத்திற்கு கேடு! உங்களையே நொந்து கொள்வதும் பாதிப்பிற்குரியது!*

*இவ்வித உங்கள் செயல்களை ஆண்டவரிடம் அறிக்கை செய்து விட்டுவிடுங்கள்! இதுபோன்ற 'அருவருப்பான காரிருள் சிந்தைகள்' உங்களிடமிருந்து கழுவப்பட்டு, தேவனோடு நீங்கள் வைத்திருந்த ஐக்கியம் மீண்டும் கிடைத்து விட்டால்.... அவரையே நீங்கள் தாழ்மை உள்ளத்தோடு நம்பி, கடந்துபோன காலத்திற்கும், நிகழ்காலத்திற்கும் இனி வரப்போகும் காலத்திற்கும் "அவரது சர்வ வல்ல ஆளுகையை" நீங்கள் சார்ந்து கொள்ள முடியும். இப்போது நீங்கள் உங்கள் சூழ்நிலையின் உக்கிரத்தை அவர் அற்புதமாய் மாற்ற வல்லவர் என்பதை காணத் துவங்குவீர்கள்! ஒருவேளை நீங்கள் எதிர்பார்த்ததுபோல் தேவன் செயல்படாதிருந்தால், அவர் உங்களை வைத்திருக்கும் ஸ்தானத்தி லிருந்து* **வேறொரு மேலான "உயர்வுக்குரிய ஸ்தானத்தை" உங்களுக்கென வைத்திருக்கிறார்** *என நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். ஆம், அவரது கிருபையின் சம்பூரணம் உங்களது மாறாத பங்காய் இருந்து, உங்களின் ஒவ்வொரு குறைவுகளையும் நீக்கி, நீங்கள் நினைத்தற்கு மேலாய் உங்கள் மீது ஆசீர்வாதம் பொழிவதைக் காண்பீர்கள் (2கொரி.7:10).*

மேலும் முன்கூட்டியே திருமணமான உங்கள் சகோதரியைக் கண்டு 'பொறாமை' கொண்டு நீங்கள் ஒருபோதும் வாழ்ந்திட வேண்டாம்.

**உங்களுக்கு அருளப்படாத சிலாக்கியங்கள் உங்கள் சகோதரியிடம் இருப்பது உண்மையாய் இருக்கலாம்! ஆகிலும், உங்கள் சகோதரிக்கு அளிக்கப்படாத 'சில சிலாக்கியங்கள்' உங்களுக்கு இருப்பதை நீங்கள் ஏன் மறந்திட வேண்டும்?**

*1 கொரிந்தியர் 7:34 வசனம் கூறுகிறபடி, உங்கள் சகோதரியைக் காட்டிலும், நீங்கள் மாத்திரமே கர்த்தருக்கு* **'இடையூறு ஏதும் இல்லாது' ஊழியம் செய்திடும்** *பாக்கியத்தைப் பாருங்கள். எத்தனையோ பகுதிகளில்,* **உங்களை வைத்து கனி நிறைந்த ஊழியங்கள்** *பூர்த்தி செய்யப்படுவதை பாருங்கள். அது ஒருவேளை பிள்ளைகள் மத்தியில் செய்யும் ஊழியமோ அல்லது வாலிபர்கள் மத்தியில் செய்திடும் ஊழியமோகூட இருக்கலாம்! மேலும், உங்கள் சொந்த வாழ்வின் அனுபவங்களைக் கொண்டு, "மிகுந்த ஆறுதலான சினேகத்தை" வாழ்வின் பல்வேறு போரட்டங்களில் களைத்துப் போனவர்களுக்கு, வழங்குபவர்களாயும் இருக்கலாம்!*

*எப்படியிருந்தாலும், எல்லோரையும்போல உங்களுக்கும் ஏதாகிலும் சோதனை ஒரு விதத்தில் உங்களை தாக்கத்தான் செய்யும்! ஒரு பெண்ணின் மென்மையான உணர்ச்சிகளையும், அவளது மன எழுச்சியையும் பயன்படுத்தி சாத்தான் தந்திரமாய் உங்களைத் தாக்கு வான்! ஆனால், தேவன் தம்முடைய வார்த்தைக்கும் அவரது சுபாவமான மன உருக்கத்திற்கும், உண்மையுள்ளவர்! உங்களால் தாங்கிக் கொள்ள முடியாதபடி நீங்கள் சோதிக்கப்பட ஒருபோதும் இடங்கொடார், என நீங்கள் அவரை நம்பியிருக்கலாம்! சோதனையை தாங்கி கொள்ளக் கூடிய வல்லமையையும் தருவார்! மேலும், ஒவ்வொரு சோதனையி லிருந்தும் நீங்கள் விடுதலை பெறுவதற்குரிய வழியையும் நிச்சயம் காட்டுவார்! (1கொரி.10:13). இவ்வாறு, தேவனுடைய அன்பிலும் அவரது சர்வவல்ல ஆளுகையிலும், மாறாத உண்மையிலும்* **நீங்கள் வைத்திருக்கும் அசைக்கப்பட முடியாத விசுவாசமே,** *உங்களுக்கு கேடகமாய் மாறும்! அந்த கேடகம், சாத்தான் எய்திட்ட அனைத்து அக்கினி யாஸ்திரங்களையும் கண்டிப்பாய் அழித்து விடும்! (எபே.6:16).*

*யாதொரு கசப்பிற்கும் அல்லது உங்களையே நொந்து கொள் வதற்கும், நீங்கள் இடம் தரக் கூடாது. 'ஆரம்பத்தில் தோன்றாமல்' ஒரு நடுவயதை எட்டும்போது.... திருமணம் ஆகாத அனேக பெண்கள் இவ்வித எண்ணங்களுக்கு பலியாகிறார்கள். ஆனால் நீங்களோ, தேவன் மீது கொண்ட தியானத்திலும், அவருடைய அனைத்து வழிகளையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வதிலும், தேவனிடமிருந்தோ அல்லது மனுஷரிடமிருந்தோ பெற்ற அற்ப இரக்கங்களுக்குக்கூட நன்றி செலுத்தும் சுபாவத்தை வளர்ப்பதிலும், அப்பியாசப்படுத்தி வந்தால்.... உங்கள் ஜீவியத்தில்,* **கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கும் பங்கு நிறைந்து**

**போய்.... அது, ஆசீர்வாதத்தின் ஊற்றாய் அனேகரை ஆசீர்வதித்திட முடியும்!**

*சபை சரித்திரத்தில், விசேஷித்த ஊழியங்களை தனித்திருந்து நிறைவேற்றிய பெண்களை காண்கிறோம். மத்திய பிரதேசத்தில் உள்ள கெட்கவான் என்ற ஸ்தலத்தில் "முக்தி மிஷன் ஏற்படுத்தி ஊழியம் செய்த விதவை பண்டிட் ரமாபாய்" மிகச் சிறந்த மாதிரியாய் திகழ்கிறார். இந்தியாவிற்கு வந்த பக்தியுள்ள மிஷனெரிகளில் ஒருவரான திருநெல்வேலி, டோனாவூர் ஏமிகார்மைக்கேல் அம்மையாரும் திருமணம் செய்யாமல் ஊழியம் செய்த தலைசிறந்த மாதிரியாக திகழ்கிறார்கள். அன்று அவர்களுடைய ஜீவியத்தின் மூலம் பாய்ந்து சென்ற ஆசீர்வாதங்கள்.... அவர்கள் மரித்து நீண்ட காலம் ஆன பின்புகூட, இன்றும் அது பாய்ந்து அனேகரை ஆசீர்வதிக்கிறது. இரண்டு பேர்கள்தான் குறிப்பிடப்பட்டாலும், இன்னும் அனேக மாதிரிகள் இருக்கிறார்கள்!*

**காரியத்தின் முக்கியமான கடைத்தொகை என்னவென்றால், உங்களது ஜீவியத்தில் தேவனுடைய அழைப்பு என்ன என்பதை அறியுங்கள்! அது, எதுவாய் இருந்தாலும், மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுங்கள்!**

*அங்குதான், சொல்லொண்ணா சமாதானம் கொட்டிக் கிடக்கிறது!*

**நமது பெலவீனத்தில் அவரது பெலன் விளங்கட்டும்**

*கடைசியாக, நாம் பெலவீனமான - பாலிய இனத்தவர் என்பதை நன்கு உணர்ந்தவர்களாய், தேவனிடம் கிட்டிச் சேரக்கடவோம்! அவர்தான், "பெலஹீனமான ஜனங்களுக்கே, என் வல்லமையை நான் அதிகமாய் காட்டுகிறேன்!" என கூறியுள்ளாரே! (2கொரி.12:9* Living Bible*). கிறிஸ்துவின் சரீரத்தில், ஓர் விசேஷித்த பணியை நீங்கள் நிறை வேற்றும்படியே, தேவன் உங்களை சிருஷ்டித்துள்ளார் என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்! அந்த, அவரது நோக்கம், உங்கள் ஜீவியத்தில் முற்றிலும் நிறைவேறுவதாக!*

## நெருங்கிவரும் திருமணம்...!

7

விண்கலம் செலுத்தும் மையத்திலிருந்து புறப்பட ஆயத்தமான, நிலவுக்குச் செல்லும் அந்த விண்கலத்தில் வீரர்கள் அமர்ந்தவுடன், யாவரும் பரவசத்துடன் கண்டு கொண்டிருக்க 10.... 9... 8... 7.... என எண்ணிக்கை குறைவது தொடங்கி விடும்! எண்ணிக்கை குறைந்து, பூஜ்யத்திற்கு வரும் தறுவாயில்.... அந்த உச்சக்கட்டமான வேளையில், விண்கலம் பிரமாண்டமாய் புறப்பட்டுச் செல்லும்! இந்த நாளுக்காக, இந்த கடைசி மணித் துளிக்காக அனேக மாதங்கள் தீவிர ஆயத்தம் அங்கே நடந்து கொண்டிருந்தது. கடைசி வினாடித்துளிகளில் கூட சில சோதனைகள் திரும்பத் திரும்ப பரிசீலிக்கப் பட்டது! இவ்வித கவனம் கொள்ளாமல் செய்திடும் ‘சாதாரண ஏற்பாடு’ பெருத்த அபாயமானதாகும்! ஏனெனில் “மனித உயிர்கள்” அந்த விண்கலத்தில் பிணைக்கப்பட்டிருந்ததே, அதற்கு காரணமாகும்!

விண்கல பயணத்தைவிட, திருமண வாழ்வின் பயணம்.... அதிக தீரம் கொண்ட பயணமும், அதிக ஆபத்தும் நிறைந்ததாகும்!



திருமணம் நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பே, ஒரு நாளை முன்குறித்து, ஆயத்தப் பணியில் ஈடுபடுவது நல்லது. ‘விண்கலம் புறப்படுவதற்கு முன்பாக, எண்ணிக்கை குறைந்து வருவதுபோல்.... இந்த நாளையும் குறிப்பிடலாம்!’ நீங்கள் விரும்பினால், அந்த நாளை **நிச்சயதார்த்தம்** என்று அழைப்பதில் தவறில்லை! அதன் பின்பு, “இந்தப் பையனும், இந்தப் பெண்ணும் திருமணம் செய்யப் போகிறார்கள்” என எல்லோருக்கும் பொதுவாய் அறிவித்திட வேண்டும். அந்த நாள் தொடங்கி, திருமண நாளுக்கு எண்ணிக்கை குறைந்து குறைந்துவர,

திருமணத்திற்குரியவர்களின் பரவசம் மிகைப்படுவது இயற்கையே ஆகும்! ஆனால், இவ்வித பரவசம், திருமணத்திற்கு ஆயத்தம் செய்யும் சுறுசுறுப்பை அவர்களிடம் குறைத்துவிடக் கூடாது.

"நிச்சயதார்த்தத்தின்" பிரதானமான பயன் என்னவென்றால், திருமணத்திற்கு முன்பு 'இடைப்பட்ட நாட்களில்' ஒருவரையொருவர் அறிந்துகொள்ள கைகொடுக்கும்!

**யாதொரு புறங்கூறுதலும் இல்லாமல், ஒருவருக்கொருவர் தாராளமாய் கடிதங்கள் எழுதவும், பொது இடங்களில் சந்திக்கவும் கூடும்!**

இந்நாட்களில் அவர்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்வது மாத்திரமல்லாமல், அவர்களின் குடும்பங் களைஅறிந்துகொள்ளவும், குடும்ப நிலவரங்களை விசாரித்துக் கொள்ளவும் 'நிச்சயதார்த்தம்' உதவும்! இந்த நிச்சயதார்த்த ஏற்பாடு, நம் இந்திய தேசத்திற்கு அவசியமானதே ஆகும்.

ஏனெனில், நம் தேசத்தில், மாப்பிள்ளை வீட்டார் - பெண் வீட்டார் உறவு, திருமணத்தின் முக்கிய பங்காகவே கருதப்படுகிறது!

## பெற்றோர்களிடம் கொண்ட பிணைப்பு

இந்த நிச்சயதார்த்த காலத்தை, வாழ்க்கைத் துணையாகப் போகிறவர்கள் பயன்படுத்தி, தங்கள் பெற்றோர்களிடம் கொண்ட மிக நெருக்கமான இணைப்பை துண்டித்துக் கொள்ள துவங்க வேண்டும்! திருமணத்திற்குப் பிறகும்கூட பெற்றோர்களை நேசிப்பதும், அவர்கள் மீது கரிசனை கொள்வதும் சரியான செயலே ஆகும்! அதே சமயம், வாழ்க்கைத் துணையாய் இணைய இருக்கும் இருவருமோ அல்லது அவர்களில் ஒருவரோ.... கணவன் - மனைவியரை விட தங்கள் பெற்றோரிடம் அதிக பிணைப்பு கொண்டதினிமித்தம், அவர்களது திருமண வாழ்க்கை சீரழிந்து போயிருக்கிறது.

தங்கள் ஜீவியத்தின்பெரும் பகுதியை வீட்டிலேயே வாழ்ந்துவிட்டு, தன் 'பெற்றோர்களை விட்டுவிட்டு வேறு இடத்திற்கு செல்லாதவர் களுக்கு' "இவ்வித ஈடுபாடான பிணைப்பு" அதிகமாகவே இருக்கும். ஆனால் வேதமோ இதைக் குறித்து மிகத் தெளிவாய் "இதனிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடு இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" என நமக்குப் போதிக்கிறது. இதேவிதமாய் ஸ்திரீகளும், பெற்றோர்களின் பிணைப்பை விட்டுவிடுவதற்கு புத்தி சொல்லப்படுகிறார்கள் (சங்.45:10).

## நிச்சயதார்த்தத்திற்கு பின்பு, சேர்ந்து வெளியே போகலாமா?

நிச்சயதார்த்தம் முடிந்த பிறகு, அவர்கள் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு இருக்கும் பட்சத்தில், சேர்ந்து வெளியே போவதும் அல்லது

தொட்டு உறவாடுவதும் சரியா? இதற்குரிய அடிப்படையான காரியங்களை ஏற்கனவே 2-வது அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

நம் இந்திய தேசத்தில், இவர்கள் இருவரும் சேர்ந்து வெளியே போவது.... இவர்கள் பட்டணத்தில் வாழ்கிறார்களா? அல்லது கிராமத்தில் வாழ்கிறார்களா? என்பதைச் சார்ந்தே இருக்கிறது. நீங்கள் இருவரும், தனியாக சந்தித்துப் பேச விரும்புவது இயற்கையான நல்ல விருப்பமே ஆகும்! ஆனால், அதை ஞானமாய் செய்ய வேண்டும். உங்களைச் சுற்றியுள்ளோரின் கலாச்சாரத்திற்கு நீங்கள் கண்டிப்பாய் மதிப்பு தரவேண்டும்..... அதை மறுத்து, மதியீனமாய் செய்யும் யாதொன்றும் உங்கள் கிறிஸ்தவ சாட்சியை குலைத்து விடக் கூடாது. நீங்களாக ஒரு தனி இடத்திற்குச் சென்று பேசுவது, வீண் பேச்சின் புறங்கூறுதலுக்கே இடம் தரும். மேலும், பாலிய சோதனைகளுக்கு உங்களை விட்டுக் கொடாதிருக்கவும் மிகுந்த கவனம் கொண்டிருக்க வேண்டும்!

எப்படியிருந்தாலும், தொட்டு உறவாடுவது நிச்சயமாய் தவறு! ஒரு நிச்சயதார்த்தம், பாலிய - காமத்திற்கு வழங்கப்படும் அனுமதி அல்ல. ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு. "தழுவ ஒரு காலமுண்டு, தழுவாமல் இருப்பதற்கு ஒரு காலமுண்டு!" (பிரசங்கி.3:5). திருமணத்திற்குப் பிறகு தான், வாழ்க்கை அதிக மகிழ்ச்சி கொண்டதாய் இருக்கவேண்டும்! பிழை செய்ததாக யாதொரு வருத்தமும் அன்று இருக்கக்கூடாது. திருமணத்திற்கு முன்பே தொட்டு நெருங்கிப் பழகியவர்கள், சுய - புணர்ச்சியின் நாசத்திற்கும், அதிகமான மன எழுச்சியின் அழுத்தத்திற்கும், ஜெப வாழ்க்கையை இழப்பதற்கும் (தொட்டு பழகியவர்களின் வாழ்வில் ஜெப வாழ்க்கை நிச்சயமாய் அழியும்), இதன் உச்ச கட்டமாய் 'திருமணத்திற்கு முன்பான' உடலுறவின் அபாயத்திற்கும்கூட கொண்டு சென்று விடும்!

நிச்சயதார்த்தத்திற்குப் பின்பு கூட ' திருமணம் நின்றுவிட முடியும்' என்ற சாத்தியத்தை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். தொட்டு உறவாடுவது சம்பவித்து, **பின்பு நிச்சயதார்த்தம் முறிவடைந்து விட்டால்...** அந்தப் பையன், தன் சரீரத்தை தொடுவதற்கு அனுமதித்து விட்டதைக் குறித்து, அந்தப் பெண் மிகவும் வருத்தமடைவாள்!

**ஆகவேதான், அந்தப் பையன் வரையறை மீறி, தனக்கு முன் குறித்த பெண்ணை நெருங்கும் போது... உடனடியாக தடை - கோட்டை வரைய வேண்டியது அந்தப் பெண்ணின் பொறுப்பாகும்.ஏனெனில், அந்தப் பையனைவிட அவளுக்கே இவ்வித சம்பவங்கள் பெரும் நஷ்டத்தைக் கொண்டுவரும்.**

அவன் உங்களிடம் நெருங்கிப் பழக வருவதை நீங்கள் மறுப்பதால்,

உங்களை திருமணம் செய்துகொள்ள மறுத்துவிடுவானோ? என்ற அச்சம், ஒரு பெண்ணிற்குத் தேவையேயில்லை. அந்தப் பையன் உங்கள் திருமணத்திற்கு தகுதியுள்ளவனாய் இருந்தால், நீங்கள் மறுத்த தடையினிமித்தம் கோபமடையாமல்... **இன்னும் அதிக மதிப்பையே** உங்கள் மீது வைத்திருப்பான்! இதற்கெல்லாம் மாறாக, கோபப்படுகிற வனாய் இருந்தால் "நான் உனக்கு தகுதியுள்ளவன் அல்ல!" என்பதையே நிரூபிக்கிறான்!

**வேறுபாடுகளும் இடையூறுகளும்**

நிச்சயிக்கப்பட்டவர்களில் சிலர், சிறு சிறு வேறுபாடுகளை முன் வைத்து நிச்சயத்தை நிறுத்தி விடலாமா? என்றெல்லாம் எண்ணத் துவங்குகிறார்கள். ஆனால் திருமண வாழ்விற்குள் பிரவேசிக்கும் ஒருவர், தன் வாழ்க்கைத் துணையோடு யாதொரு வேறுபாடும் நிகழாது என எண்ணிக்கொண்டவராய் இருந்தால், அவர் ஒரு கனவு - உலக மாந்தாரே அல்லாமல், நடைமுறைக்கு உகந்தவர் அல்ல! மிகப் பூரண மான திருமணங்களில், சிறந்த ஆவிக்குரிய தம்பதிகளிடம்கூட சிறு சிறு வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். ஆனால், அதுவே அவர்களின் திருமணம் தேவ சித்தத்திற்குரியது அல்ல எனக் காட்டும் அடையாள மாய் வைத்துக் கொள்ளக்கூடாது. அப்படியெல்லாம் இருந்தால் "தேவன் நியமனம் செய்த - திருமணம்" என கூறிக் கொள்ள இந்த உலகில் எந்த திருமணமும் இருக்காது! யாதொரு வேறுபாடும், யாதொரு மாற்று கருத்தும், தங்கள் வாழ்க்கைத்துணையோடு ஒரு சிறு காரியத்தில்கூட ஏற்படாதிருக்கும் ஒரே திருமணம்.... வாழ்க்கைத் துணையாய் இருப்பவர்களில் ஒருவர் எந்திர 'ரோபாட்டாய்' இருந்திட வேண்டும்! அதாவது, 'தங்களுக்கென தெரிந்துகொள்ள' யாதொரு சுய - விருப்பு வெறுப்பு அற்ற 'எந்திரமாய்' இருக்க வேண்டும்!

> **ஆகவே சிறு சிறு வேறுபாடுகள், உங்கள் நிச்சயதார்த்தத்தை உடைப்பதற்கு நீங்கள் அனுமதிக்க கூடாது. இதற்கு மாறாக, ஒரு ஆரோக்கியமான ஜீவியத்திற்கு, இந்த வேறுபாடு ஏற்படுவது நல்லதென்றே கூறவேண்டும்! அதைக்கொண்டு, ஒருவரையொருவர் தாழ்த்த வாய்ப்பும், ஒருவருக்கொருவர் மன்னிக்கும் வாய்ப்பும் கிட்டுகிறது!**

ஒரு பெண் மன்னிப்பு கேட்க விரும்புவதைப் போலவே, ஒரு ஆணும் மன்னிப்பு கேட்க முன் வரவேண்டும்! 'மன்னிப்பு கேட்பது' நம் இந்திய தேசத்தில் ஒரு ஆணுக்கு ஏற்பட்ட அபகீர்த்தியாய் கருதப்படுகிறது! ஆனால், இவ்வித நிலைப்பாடு ஒரு கிறிஸ்தவனுக்கு இல்லை! தன் **மனைவியிடம் மன்னிப்பு கேட்க விரும்பாத ஒரு புருஷன்,** எக்காலத்தும் திருமணம் செய்யக் கூடாது!

இன்னும் வேறு சில இடையூறுகள் இந்த நிச்சயதார்த்த நாட்களில்

ஏற்பட்டு உங்கள் திருமணம் தாமதமாகக் கூடும்! இதனிமித்தம் திருமணத்திற்காக காத்திருக்கும் உங்களுக்கு மன வேதனை ஏற்பட வாய்ப்பு உண்டு. உதாரணமாய், பெற்றோர் ஒத்துக்கொள்ளாத சில காரியங்கள் அல்லது பொருளாதார சம்பந்தப்பட்ட சில பிரச்சனைகள் ஏற்படலாம்! எதுவாய் இருந்தாலும், யாதொன்றும் உங்களுக்கு அதைரியத்தையும் மனச்சோர்வையும் கொண்டு வர அனுமதிக்காதீர்கள். அதற்கு மாறாக, இச்சூழ்நிலையில் ஓர் ஆழமான அஸ்திபாரமாய் அவைகள் அமையட்டும்! பிரச்சனை எவ்வளவாய் இருந்தாலும் "நீங்கள் எவ்வளவு தாங்கி கொள்ள முடியுமோ, அவ்வளவு மாத்திரமே தேவன் அனுமதிப்பார்! உங்கள் திராணிக்கு மேலாக சோதிக்கப்பட அவர் ஒரு போதும் இடங்கொடார்!" என்பதையே நிச்சயமாய் நம்பியிருங்கள் (1கொரி.10:13). செங்கடல் பிரவாகித்தாலும், அவருடைய நேரம் வரும் போது, அந்த சமுத்திரத்தின் நடுவிலும் ஒரு பாதையை உண்டு பண்ணி, உங்கள் இருவரையும் ஜெயாளியாய் கடக்கச் செய்து.... உங்களுக்கென அவர் ஆயத்தம் செய்த உன்னத ஸ்தலத்திற்கு நடத்திச் செல்வார்! (யாத்.14). ஆகவே, முழுமனதாய் அவரை நம்பியிருங்கள்! "உங்கள் இருதயத்தில் சோர்வுக்கு இடம் தராதிருங்கள்".

**நிச்சயதார்த்தம் எவ்வளவு காலம் நீடிக்கலாம்?**

நிச்சயதார்த்தம் எவ்வளவு காலம்? என வரையறை செய்வதற்கு யாதொரு பிரமாணமும் இல்லை. ஆனால் நிச்சயிக்கப்பட்ட தம்பதியர் மிக அருகாமையில், அடிக்கடி சந்திக்க கூடியவராய் இருந்தால் அந்த நிச்சயம் ஆறு மாதத்தை தாண்டாமல் இருப்பது நல்லது. ஒருவேளை நிச்சயிக்கப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் தூரமாய் இருப்பவர்களாய் இருந்தால், அந்த நிச்சயத்தின் காலம் பண்ணிரெண்டு மாதங்களைத் தாண்டாதிருக்க வேண்டும். அது ஏனென்றால், வாழ்க்கைத் துணையாக விருக்கும் இருவருடைய உள்ளத்திலும், திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில், அவர்களின் உணர்வு எழுச்சிகள் அதிக அளவில் இருக்கும்! ஆகவே இவ்வித நிலையில், அவர்களின் திருமணத்தை அதிக அளவு தமாதிப்பது மன அழுத்தத்தையும் வேதனையையும் அவர்களுக்கு கொண்டு வந்து தரும்!

திருமண நிச்சயத்தின் காலத்தை, ஒரு குழந்தை தாயின் கருப்பையில் இருக்கும் காலத்திற்கே வால்ட்டர் ட்ரோபீச் தன்னுடைய "ஒரு வாலிபனை நேசித்தேன்" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். திருமண நாளை, ஒரு குழந்தை உலகத்தில் பிறந்து, அந்த குழந்தையை எல்லோரும் காணும்படியான நாளுக்கே இவர் ஒப்பிட்டுள்ளார். ஆனால் பிறப்பு நடப்பதற்கு முன்பாக, அந்த குழந்தை கருப்பையில் வளர்ந்து ஆயத்தமாக வேண்டியிருக்கிறது. உங்களின் நிச்சயதார்த்தம், இவ்வாறாகவே "கருப்பையில்.... அழகுள்ளதாய்" அடங்கியிருக்க வேண்டும்!

## நிச்சயதார்த்தம் ஒரு உத்தம உடன்படிக்கையாய் இருக்க வேண்டும்

ஒரு விழாவை நடத்தியோ அல்லது பொதுவாக அறிவிக்கப் பட்டோ நிகழும் நிச்சயதார்த்தம், திருமணத்திற்குரிய ஒரு உத்தம உடன் படிக்கையாகவே கருதப்பட வேண்டும்! அதை சாதாரணமய் எடுத்துக் கொள்ளக் கூடாது! கர்த்தருடைய சமூகத்தில் தங்கி வாழ்பவன், "தன் வாக்கினிமித்தம் தனக்கு அழிவே ஏற்பட்டாலும், அந்த வாக்கை கைக் கொள்வான்!" என வாசிக்கிறோம் (சங்.15:4 Living Bible). மேலும் "தங்கள் உடன்படிக்கையை காத்துக் கொள்பவர்களை தேவன் நேசிக்கிறார்!" உடன்படிக்கையை மீறுகிறவர்களையோ தேவன் வெறுக்கிறார்! என நீதிமொழிகள்.12:22 Living Bible கூறுகிறது. ஒரு கிறிஸ்தவன் "ஆம்" எனக் கூறுவது "ஆம்" என்றே இருக்க வேண்டும்! அவன் "இல்லை" எனக் கூறுவது "இல்லை" என்றே இருக்க வேண்டும்! (மத்.5:37; யாக்.5:12).

இந்த நிச்சயித்த நாட்களில், புதிதாக சில குறைகளும் சந்தேகங் களும் தென்பட்டு, திருமணமாகாமல் நிச்சயம் முறிவடையக் கூடுமா?

**வாழ்க்கைத் துணையாக வரக்கூடியவர்களில் ஒருவர் "மறுபடியும் பிறவாதவர்" என தெரியவந்தால், அந்த நிச்சயத்தை கண்டிப்பாய் முறித்திட வேண்டும்! இதனிமித்தமே, நாம் நிச்சயிப்பதற்கு முன்பே ஒருவரின் மறுபிறப்பை நன்கு விசாரித்து அறிய வேண்டும்!**

இவ்விதம் ஏற்படும் வாக்கு முறிவு, மேலே குறிப்பிட்ட வசனங் களுக்கு ஒப்பான " வாக்குத் தவறிவிட்டான்!" எனக் கூறும் குற்றமாய் இருக்காது. ஏனெனில், இவ்வித திருமணம் "உங்களுக்கே" பெரும் தடைக்கல்லாய் இருப்பது மாத்திரமல்லாமல், நாம் வாழும் இந்தப் பூமியில், கர்த்தருடைய காரியத்திற்கும் பெரும் தடையாய் நிற்கும்! இந்த சமயத்தில் 2 கொரிந்தியர் 6:14-ம் வசனமாகிய "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக" என்ற கட்ட ளையே உங்களுக்குப் பிரதானமாய் இருக்க வேண்டும்.

இதைத் தவிர, உங்கள் எதிர்பாலர் கற்பு ஒழுக்கத்தில் உண்மை யற்றவராய் இருப்பது தெரியவந்தால் அல்லது முன்பு கூறப்படாத ஒன்று புதிதாய் கண்டுபிடிக்கப்பட்டால், விசுவாசத்தை பாதிக்கும் படியான உபதேச தாறுமாறு இருப்பதை கண்டறிந்தால்.... அதினிமித்தம் அவர் மறுபடியும் பிறந்தவராய் இருந்தாலும்கூட, அந்த நிச்சயத்திற்கு நீங்கள் மறுப்பு தெரிவிக்க முடியும்!

வாக்கு கொடுத்து விட்டு, பின்பு "தேவ சித்தம் தெளிவாய் தெரிய வில்லை" என கூறி அவ்வப்போது மாறிவிடும் விசுவாசிகளை தேவன் ஒருக்காலும் கனப்படுத்த மாட்டார். எனக்குத் தெரிந்த ஒரு வாலிபன் "வெளிநாடு செல்ல வேண்டுமென்ற மறைவான தன் விருப்பத்திற்காக"

தன் நிச்சயத்தை முறித்துப் போட்டான்! இதனால் பாதிக்கப்பட்ட அந்த பெண்ணிற்கு, வேறொரு துணையை திருமணத்திற்கு ஏற்பாடு செய்திட, அவளது பெற்றோர்கள் வெகுவாய் கஷ்டப்பட்டனர். இதுபோன்ற இழிசெயலுக்கு பெண்களை விட ஆண்களே அதிக குற்றத்திற்குரிய வர்களாய் இருக்கிறார்கள்! "**நிலையற்ற இவ்வித வாலிபர்கள்**" நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேலான நாமத்திற்கு அவமானத்தையே கொண்டு வருகிறார்கள்! உறுதி செய்வதற்கு முன்பாக, ஒருவன் நூறு சதவீதம் அதைக் குறித்த நிச்சயம் கொண்ட வனாய் இருக்க வேண்டும்! அப்படிப்பட்ட நிச்சயம் உங்களிடத்தில் இல்லையென்றால், இன்னமும் காத்திருப்பதே உத்தமம்! மாறிப்போகும் இவ்வித மனதுடையவர்கள், மற்றவர்களுடைய வாழ்க்கையை சீரழித்திட ஒருபோதும் துணியக் கூடாது! "நான் செய்வேன்! எனக் கூறிவிட்டு அதைச் செய்யாமல் இருப்பதை விட .... நான் செய்வேன் என முதலில் கூறாமல் இருப்பதே சிறந்தது" என பிரசங்கி. 5:5 Living Bible வாசிக்கிறோம்.

## அறிவுரைக்கு செவிகொடுங்கள்

திருமணம் செய்யப்போகிறவர்கள், தன் சொந்த பாலினத்தைச் சேர்ந்த, நம்பிக்கைக்கு பாத்திரமான, திருமணமான ஒரு விசுவாசியிட மாவது "திருமண வாழ்க்கையைக் குறித்து" அறிவுரை கேட்பது நல்லது. அவ்வித அறிவுரை மிகுந்த மதிப்புடையதாய் இருக்கும்.

மேலும் திருமணம் ஆக இருக்கிறவர்கள், பொதுவான பாலிய உறுப்புகள் தன்மையைப் பற்றியும், இனவிருத்தி அடிப்படையிலான நடைமுறை விதிகளைப்பற்றியும், சரீர - ஈடுபாட்டைப் பற்றியும் பொது வாய் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். தங்கள் சொந்த பாலினத்தைச் சேர்ந்த மருத்துவரை.... குறிப்பாக, விசுவாசியாகிய ஒரு மருத்துவரை சந்தித்து ஆலோசிப்பது நல்லது. ஏனெனில், அறியாமை யினிமித்தமோ, திருமணமான தம்பதிகளிடம் தென்பட்ட பாலியல் குறைபாடுகள் நிமித்தமோ, அனேக தம்பதிகள்.... மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். பாலியல் உடற்கூறு சம்பந்தமாயும், அதன் பயன்பாடு சம்பந்தமாயும் விளக்கம் தரும் புத்தகங்கள், நல்ல கிறிஸ்தவ புத்தக நிலையங்களில் கிடைக்கின்றது! அதை வாங்கி வாசியுங்கள்.

## திருமணத்திற்குரிய திட்டங்கள் வகுத்தல்

வாழ்க்கைத் துணையாக இணைய இருக்கும் இருவருமே, தங்கள் திருமணம் நடப்பதற்குரிய விவரங்களை கலந்து ஆலோசித்து தீர்மானிக்க வேண்டும். எவ்விதம் திருமணம் நடைபெற வேண்டுமோ, அதை தாங்கள் கலந்து ஆலோசித்தபடியே தங்கள் பெற்றோர்களுக்கும், தங்கள் பாஸ்டருக்கும் தெரியப்படுத்த வேண்டும். **ஒவ்வொரு**

**விசுவாசியும் கிறிஸ்துவைக் கனம் செய்யும் எளிய திருமணத்தையே வலியுறுத்த வேண்டும்.** *அந்த வைபோவத்தில், புறஜாதிகளின் சடங்கு சாஸ்திரங்கள் யாதொன்றும் இருந்திடக் கூடாது! கிறிஸ்தவரல்லாத மார்க்கங்களிலிருந்து கற்றுக் கொண்டு கடைப்பிடிக்கும் சடங்கு சாஸ்திரங்களால், நம் இந்திய தேசத்தில் நடைபெறும் "கிறிஸ்தவ திருமணம்" தேவ மகிமையை இழந்திருக்கிறது. நல்ல விசுவாசிகள்கூட, இவ்வித சடங்கு சாஸ்திரங்களுக்குத் தலை வணங்குவது வெட்கத்திற்குரிய செயலாகும். "எங்கள் பெற்றோர்களையோ எங்கள் உறவினர்களையோ நாங்கள் மனம் புண்படுத்த விரும்பவில்லை!" என்றே இவர்கள் கூறிக் கொள்கிறார்கள். இவர்கள் கூற்றில், "தேவன் துக்கப்பட்டு, அவரது நாமம் கனவீனப்படுத்தப்படுவதைக் குறித்து எங்களுக்கு அக்கறை இல்லை" என்றே வெளிப்படையாய் தெரிவிக்கிறார்கள்! தேவனுக்குப் பயந்து வாழ்வதை விட தங்கள் உறவினர்களுக்கே அதிகம் பயப்படுகிறபடியால் "படைத்தவரை தொழுது சேவிக்காமல் படைப்புகளை தொழுது சேவிக்கும்" குழுவிற்கு வந்து நிற்கிறார்கள் (ரோமர் 1:25).*

> **இங்ஙனம், புறஜாதியாரின் சடங்கு சாஸ்திரங்கள், திருமண வைபவத்தை ஆட்கொள்வதற்கு கதவை தாராளமாய் திறந்து கொடுத்த நீங்கள்.... தேவன் அந்த திருமண வைபவத்தை தமது கிருபை நிறைவினால் ஆசீர்வதிக்க வேண்டும் என நீங்கள் எதிர்பார்த்த 'தேவ சமூகம்' உங்களுக்கு ஒருபோதும் கிட்டாது!**

*தேவனுடைய வார்த்தையை மாத்திரமே இறுக பிடித்துக் கொண்டு, என்ன கிரயமானாலும் 'யாதொரு ஒத்த வேஷத்திற்கும்' உறுதியுடன் மறுத்து விடுங்கள்! அப்போது, உங்களை நிச்சயமாய் தேவன் கனம் பண்ணுவார்!*

*உங்களின் திருமண வைபவத்தில், மணமகன் - மணமகளாக இருக்கும் நீங்கள் இருவரும், உங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றிய ஒரு சுருக்கமான* **வலிமை நிறைந்த சாட்சியை கூறுவதற்கு வாய்ப்பு** *கிடைத்த நல்ல தருணம் ஆகும். இந்த வாய்ப்பை கண்டிப்பாய் பயன் படுத்துங்கள்.... தவற விட்டுவிடாதீர்கள்! ஆகவேதான், எவ்விதம் திருமணம் நடைபெற வேண்டும் என்ற விருப்பத்தை, முன்கூட்டியே உங்கள் பெற்றோரிடமும் உங்கள் போதகரிடமும் கலந்து ஆலோசித்து, திட்டம் வகுத்திடுங்கள்!*

**திருமணம் நடந்து முடிந்த பின்பு?**

*திருமண வைபவம் கர்த்தருக்கு ஏற்றபடி நடந்து முடிந்த பிறகு, தம்பதிகளாகிய நீங்கள் குறைந்த பட்சம் 'ஒருவாரமாவது ஒரு நல்ல தனி இடத்திற்குச் செல்வது நல்லது!' அந்த நாளில், நீங்கள் இருவரும் தனித்தனியே ஆண்டவரோடு ஜெபத்தில் தனித்திருப்பதும் நல்லது.*

*இந்த நாட்களை நீங்கள் "தேனிலவு" என அழைத்துக் கொண்டாலும் நல்லதுதான்! எப்படியிருந்தாலும், இந்த ஆரம்ப நாட்களில்* **இவ்வாறு நீங்கள் ஐக்கியப்படுவது** *மிகவும் சிறந்ததே ஆகும்!*

**திருமணத்திற்குப் பிறகு, ஒரு குடிசையே ஆனாலும், 'அந்த வீட்டில்' தனித்து குடித்தனம் செய்வதே மிகவும் நல்லது. இந்த நாட்களில், உறவினர்கள் வீட்டில் தங்குவதுகூட பிரச்சனைக்கும் மன அழுத்தத்திற்குமே வழி வகுக்கும்!**

*பொருளாதார காரணத்தினிமித்தம், உடனே தனித்திருக்க இயலாமல், பெற்றோர்களோடு தங்கும் நிலை ஏற்படலாம்! அது போன்ற தருணங்களில், தம்பதிகள் இருவரும் ஊக்கமாய் ஜெபித்திட வேண்டும். ஏனெனில், ஒவ்வொரு குடும்பமும் தனித்து வளரும் குடும்ப மாகவே இருக்க வேண்டும்! ஆகவே, ஜெபத்தில் அவர்கள் தேவனை முழு இருதயமாய் தேடி,* **தங்களின் சொந்த குடும்பத்தை அமைப்பதற்கு** *தேவன் எப்படியும் வழி திறப்பார் என நம்பியிருக்க வேண்டும்.*

*இதுவரை நாம் ஆலோசித்த அனைத்தும் திருமணத்திற்கு ஆயத்தம் செய்ய வேண்டிய முக்கிய விஷயங்கள் ஆகும். இந்த ஆலோசனைகளில் ஒன்றையாகிலும் இலகுவாய் எடுத்துக் கொள்ள வேண்டாம்! அந்த 'பூஜ்ய வினாடியில்' விண்கலம் வெற்றிகரமாக விண்வெளியில் சென் றிடுமா? இல்லையா? என்பது எல்லாம்.... அதன் ஆயத்தத்தில்தான் அடங்கியிருக்கிறது. இவ்வாறாக, திருமணத்தின் பல நாட்களுக்கு முன்பாகவே, ஒரு மகிழ்ச்சியான திருமணத்திற்கு 'அஸ்திபாரங்கள்' போடப்பட வேண்டும்!*

8

உண்மைதான், தெய்வீகமான பாலிய உறவிற்கும் திருமண வாழ்விற்கும் கைகோர்த்து, தம்பதியர் 'பேரானந்தமான பயணம் சென்றிடவே' தேவன் விரும்புகிறார்! ஆனால் துரதிருஷ்டவசமாய், இன்று அனேகர் சோகமான வாழ்க்கை பயணமே செய்கின்றனர்!

உங்கள் திருமண வாழ்விற்குரிய அனைத்து சத்தியங்களும் மிகத் தெளிவாகவே உங்கள் முன் வைக்கப்பட்டுள்ளது! இனி, தெரிந்துகொள்ள வேண்டிய பகுதி உங்களையே சார்ந்ததாகும். நாம் ஒவ்வொருவரும் **நம் அந்தரங்கமான இருதயத்தில், தேவனுக்கு முன்பாக** தனித்தே நிற்கிறோம். அந்த அந்தரங்கத்தில் தேவனோடு முடிவெடுக்கும் தீர்மானம், உங்களுக்கு மாத்திரமே தெரியும்! பேரானந்த வாழ்க்கையா? துயரத்தின் வாழ்க்கையா? என்பதெல்லாம், நீங்கள் எடுக்கும் தீர்மானத்தைப் பொறுத்தே இருக்கிறது. **தேவன் அமைத்த, பேரானந்தமான நெடுஞ்சாலை பயணத்திற்கு ஒரு விலைக் கிரயம் உண்டு!** அந்த விலைக்கிரயம், நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும், **தேவனுக்கு கீழ்படியும்** செயலாகவே இருக்கிறது! ஆகவேதான், பேரானந்தமான இந்தப் பயணத்தை.... பரிசுத்தத்தின் பயணமாகவும் நாம் காண வேண்டியது அவசியமாயிருக்கிறது! ஏசாயா 35:8,10 வசனங்களை ஒப்பிட்டுப் பாருங்கள்.



தேவன் அமைத்த பேரானந்த பயணத்தின், இருமருங்கும் தேவன் வேலியையும் அமைத்துள்ளார். அவர் அமைத்த வேலியைப் பிடுங்குகிறவனை, நிச்சயமாய் பாம்பு கொத்தும் என வாசிக்கிறோம் (பிரசங்கி.10:8). ஏதேன் தோட்டத்திலும் கூட, விலக்கப்பட்ட ஒரு மரத்தை தேவன் வேலிஅடைத்து

*வைத்திருந்தார். ஆனால் சாத்தானோ, அந்த மரத்திலிருந்த கனியின் வசீகரத்தையும், அதை புசிப்பதால் அடையும் நன்மைகளையும் எடுத்துக்கூறி.... அதை புசிப்பதால் யாதொரு பின் விளைவும் ஏற்படாது எனவும் உறுதிபட கூறினான். சாத்தானின் தந்திரத்தில் கவரப்பட்ட ஏவாள், வேலியை உடைத்து தாண்டிச் சென்றாள்! அந்த தக்க தருணத்தில் பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் அவளை மரணத்திற்கு ஏதுவாய் தீண்டியது!*

*பாலிய உறவிற்கும், திருமணத்திற்கும், தேவனால் வேலி அமைக்கப்பட்டு தடை செய்யப்பட்ட பகுதிகள் வேதாகமத்தில் தெளிவாய் காண்பிக்கப்பட்டிருப்பது போலவே, இந்த புத்தகத்திலும் தெளிவாய் காண்பிக்கப்பட்டுள்ளது! ஆனால் பிசாசானவன் பல்லாயிரக் கணக்கான வாலிப உள்ளங்களை.... 'வயது சென்றவர்களையும் கூட!' தன் பக்கம் கவர்ந்து இழுத்துக் கொண்டான். இவர்கள், தேவன் அமைத்த பேரானந்த பயணவழியை விட்டு விட்டு, வேலியை உடைத்துச் சென்று, தேவன் எவைகளை தடை செய்தாரோ, அவைகளைப் புசிக்கும்படி செய்துவிட்டான்! தங்களின் ஆதிப் பெற்றோருக்கு சாத்தான் செலுத்திய விஷம், மரணத்திற்கு ஏதுவாய் இருந்ததைப் போலவே.... இப்பவும் மரணத்திற்கு ஏதுவாகவேதான் இருக்கிறது என்பதை, அவனால் தீண்டப்பட்டு, பல வருடங்கள் கழித்து தாமதமாக உணருகிறார்கள்!*

**தேவன் அமைத்துவைத்த வேலியை மதித்து, தேவனுடைய வார்த்தையில் நாம் உறுதியுடன் நிலைநிற்பதில்தான் நம்முடைய பாதுகாப்பு அடங்கி யிருக்கிறது!**

*ஆம், வேலியை உடைத்து வெளியே சென்றுவிடாதிருக்க எச்சரிக்கையாயிருங்கள்! அப்படியில்லையென்றால், துக்கமும் வெட்கமும் பிற்காலத்தில் உங்களை ஆட்கொண்டு "ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே! கடிந்து கொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேட்டிருந்தால்... அவரது உபதேசத்தை தள்ளி, என் சொந்த வழியில் நான் செல்லாதிருந்திருந்தால், நலமாயிருந்திருக்குமே? இப்போது நான் சபையின் சங்கத்திற்கு முன்பாக தலைகுனிய நேரிட்டதே!" (நீதி.5:11-14* Living Bible*) என்றெல்லாம் புலம்ப வேண்டிய நிலை வரும்.*

*கவனமாய் இருங்கள்! நாம் தேவனை அலட்சியம் செய்துவிட்டு, "பின்விளைவு ஏதும் சம்பவிக்காது!" என ஒருபோதும் அலட்சியமாய் இருந்து விடக்கூடாது (கலா.6:7-* Living Bible*).*

**உங்கள் திருமண வாழ்வின் பாத்திரம் நிரம்பி வழிவதாக**

*கானவூரில் நடந்த திருமணம், தேவனை கனம் செய்ததால் கிட்டிய*

*ஆசீர்வாத பெருக்கை நாம் காண்பதற்கு கிடைத்த ஒரு காட்சியாய் விளங்குகிறது (யோவான் 2:1-11). முதலாவது, ஒரு திருமணத்தில்தான்* **இயேசு தம்முடைய மகிமையை வெளிப்படுத்த** *தீர்மானித்தார் என நாம் அறிவது மிக முக்கியமாகும். இன்றும்கூட, இயேசு தம் மகிமையை ஒவ்வொரு திருமண வைபவத்திலும், திருமணத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், இயேசு தன்னுடைய மகிமையை வெளிப்படுத்தவே விரும்புகிறார்! "பாலிய ஈர்ப்பும்.... அதற்குரிய அன்பும், திருமணமும்" தேவன் நமக்கு அருளிய விலையேறப்பெற்ற பரிசே ஆகும்! ஆம், இவைகளைக் கொண்டே, தமது மகிமையை தேவன்* **நமக்கு மாத்திரம்** *வெளிப்படுத்தாமல்....* **நம் மூலமாய்,** *அனேகருக்கு வெளிப்படும்படி செய்கிறார். காரியம் யாதெனில், அப்படியெல்லாம் செய்வதற்கு நாம் நம்மை தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பதுதான்!*

*கானாவூர் திருமணத்தில் திராட்ச ரசம் குறைவுபட்டது! திருமண வாழ்வில் பிரவேசிக்கும் யாராய் இருந்தாலும், அவர்களுக்கு பிரச்சனைகளும் தேவைகளும் கண்டிப்பாய் எழும்பும் என்பதையே 'இந்த குறைவு' காண்பிக்கிறது. இவ்வாறு எழுகின்ற பிரச்சனைகள், கணவனுக்கும் மனைவிக்கும் சஞ்சலத்தையே கொண்டு வருகிறது.*

**எந்த ஒரு திருமண வாழ்விலும் இவ்வாறு நடைபெறுகிறபடியால்.... இயேசுவுக்கே பிரதான தலைமைத்துவத்தை நம் திருமண வாழ்வில் அளிக்க வேண்டும்! அப்படி நீங்கள் செய்தால், கானவூரில் அவர் செய்தது போலவே, உங்கள் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளுக்கும் அனைத்து தேவைகளுக்கும் மகிமையான தீர்வு தருவார்!**

*உங்கள் இல்லத்திற்கு கிறிஸ்துவை "விருந்தினராக" அழைப்பது போதாது! "ஆண்டவர் இயேசுவே, எங்கள் இல்லத்தை ஆண்டு நடத்தும்" என்றே அவரை அழைத்திட வேண்டும்.* **"கிறிஸ்துவே இந்த வீட்டின் தலைவர்"** *என்ற வாசக பலகையை உங்கள் வீட்டில் தொங்க வைத்து விட்டு, நீங்களோ தொடர்ந்து உங்கள் வீட்டின் தலைவராக.... இன்னும் சில வீடுகளில் மனைவி அந்த வீட்டின் தலைவராக இருந்தால், நீங்கள் தொங்கவிட்டிற்கும் வாசகம் கேலிக்குரியதாகவே இருக்கும். ஆனால் மெய்யாகவே, கிறிஸ்துவை தங்கள் தலைவராகவும் ஆண்டவராகவும் தங்கள் இல்லத்திற்கு வைத்தவர்கள் எவர்களோ.... அவர்களுக்கு, அன்று 2000-வருடங்களுக்கு முன்பாக கானவூர் திருமணத்தில் தமது மகிமையை வெளிப்படுத்திய இயேசு, உங்கள் சொந்த ஜீவியத்தில் 'அதே மகிமையை' வெளிப்படுத்துவார்! (வசனம் 11).*

**"அவர் உங்களுக்குச் சொல்லுகிறபடியே செய்யுங்கள்!"** *என்ற அறிவுரையைத்தான், மரியாள் அங்கிருந்த வேலைக்காரர்களுக்கு கூறினாள் (வசனம் 5). மரியாளின் ஆலோசனைக்கு செவிகொடுத்து,*

*இயேசு கட்டளையிட்ட அனைத்திற்கும் முழுமையாகவும் உடனடியாகவும் அந்த வேலைக்காரர்கள் கீழ்ப்படிந்தபடியால், பிரச்சனை முழுவதும் தீர்ந்துவிட்டது. திருமணத்திற்காக காத்திருக்கும் இளைஞர்கள், அன்று போலவே இன்றும் இயேசுவின் கட்டளைகளை முழுமையாகவும், உடனடியாகவும், கீழ்ப்படிந்து வாழ்ந்தால்... அனைத்து பிரச்சனைகளுக்கும் இயேசு "மகிமையான விடை" தருவதை காண்பார்கள்!*

*கானாவூர் திருமணத்தில், வெறும் தண்ணீர் திராட்ச ரசமாய் மாறிவிட்டது! எதுவெல்லாம் ருசியில்லாததும், நிறம் இல்லாததும், அற்பமானதாய் தோன்றியதோ.... அவைகள் கணப்பொழுதில் மதுரமும் மின்னிடும் விலையேறப் பெற்றதாயும் மாறிவிட்டது! ஆம் உங்கள் இல்லத்தை ஆண்டவருடைய ஆளுகைக்கே முற்றிலும் நீங்கள் ஒப்புக் கொடுத்து விட்டால், சலிப்பான உங்கள் திருமண வாழ்க்கை, புத்தொளியுடன் மிளிரும் என்பதையே இந்த நிகழ்ச்சி சித்தரிக்கிறது.* **ருசியற்றது ருசியாகவும்! புறக்கணிக்கப்பட்டது விலையேறப்பெற்றதாகவும் மாறிடும், அற்புதம் விளையும்!**

*இந்த ஒரு அற்புதத்தின் மூலமாய், அங்கு கூடியிருந்த எண்ணற்ற ஜனங்களின் தேவை பூர்த்தி செய்யப்பட்டதைப் பாருங்கள்! கிறிஸ்தவ திருமணத்தின் மெய்யான வாழ்க்கை, தங்களுக்குரிய மகிழ்ச்சியை மாத்திரம் பூர்த்தி செய்வதில்லை! தம்பதியரின் வாழ்க்கையைக் குறித்து தேவன் கொண்டுள்ள நோக்கம் என்னவெனில், அவர்களின் பாத்திரம் தொடர்ச்சியாக நிரம்பி வழிந்து கொண்டே இருக்க வேண்டும் (சங்.23:5).*

**அவர்களின் திருமண வாழ்க்கை, அனேகருக்கு ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்பது மாத்திரமல்ல... அவர்கள் சந்திக்கிற ஒவ்வொரு நபருக்கும், ஆசீர்வாதமாய் இருந்திட வேண்டும்!**

*தான் இடுகின்ற கட்டளைகளுக்கு எல்லாம் கீழ்ப்படிந்த தன்னுடைய தாசனிடம் தேவன் பேசும்போது "நான் உன்னை ஆசீர்வதிப்பேன்.... நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்!... பூமியில் உள்ள வம்சங்கள் எல்லாம் (குடும்பங்கள் எல்லாம்) உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்றார்! (ஆதி.12:2,3).*

*விந்தை யாதெனில், கலா.3:14 தெரிவிக்கிறபடி "ஆபிரகாமுக்கு உண்டான இந்த ஆசீர்வாதம், நமக்கும் உண்டாகும்" என வாசிக்கிறோம். திருமண வாழ்க்கையில், இதைவிட மேலான இலக்கு வேறு எது வேண்டும்? இந்த ஆசீர்வாதத்திற்குரிய பிரதான நிபந்தனை என்னவென்றால் "நாம் எந்தளவிற்கு நம் அன்றாட ஜீவியத்தில் தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்கின்றோமோ, அந்த அளவிற்கு மற்றவர்களுக்கு நாம் ஆசீர்வாதமாய் மாறிட முடியும்!" என்பதேயாகும்.*

*ஆபிராகமிற்கு தேவன் அவ்வாறே "நீ என் சொல்லுக்கு கீழ்ப்படிந்த படியினால், உன் சந்ததிக்குள் பூமியில் உள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்! என்று தன் பேரில் ஆணையிட்டு கூறினார்" (ஆதி.22:18).*

*கானவூர் திருமண அற்புதத்தில்.... தங்கள் பாலிய, திருமண விஷயத்தில் பெரும் தோல்வி அடைந்தவர்களுக்கு "ஒரு நம்பிக்கையின் செய்தி" காத்திருக்கிறது. அந்த திருமணம் வைபவத்தில், திராட்ச ரசத்தின்* **'ருசி' தோல்வி அடைந்த சமயம், அவர்கள் கர்த்தரிடம் திரும்பி வந்தார்கள்!** *கர்த்தரோ, அவர்களின் தோல்வியினிமித்தம் அவர்களைத் துரத்திவிடவில்லை! அப்படியிருக்க, உங்களுடைய தோல்வி எத்தனை அதிகமாய் இருந்தாலும், அது அவருக்கு ஒரு பொருட்டல்ல.... ஆகவே அவரிடம் திரும்பி வந்த உங்களையும் அவர் துரத்தி விடமாட்டார்! உங்களிடம் அவர் எதிர்பார்ப்பதெல்லாம், அந்த கானவூர் திருமண நிகழ்ச்சியில் நடந்தது போல், அவரிடம் வந்து "உங்கள் தோல்வியை நேர்மையாய் அறிக்கை செய்ய வேண்டும்!" என்பது மாத்திரமே ஆகும். உங்கள் மதியீனத்தினால், அந்தப் பெண்ணிடம் அல்லது அந்தப் பையனிடம் 'வரையறை தாண்டி' சென்று விட்டீர்களோ? அல்லது உங்கள் அறியாமையினிமித்தம் 'காதல் விஷயத்தில் விழுந்து' தவறு செய்து வீட்டீர்களோ? இப்போது, இப்படியெல்லாம் ஏற்பட்டதின் நிமித்தம் மனவிசாரமும் சஞ்சலமும் கொண்டிருக்கிறீர்களோ? பிறர் உங்களை பழிதூற்றி நிந்தனை செய்யும் அளவிற்கு வந்து விட்டதோ? இனி நீங்கள், ஒரு கணம்கூட தாமதிக்காமல், கர்த்தரிடம் திரும்பி வாருங்கள்! இந்த நல்ல ஆண்டவர், பாவிகளுக்கு நண்பன்! உங்கள் பாவங்களை மன்னிப்பதற்காகவே காத்திருக்கிறார்! அதுவும் அல்லாமல், உங்கள் ஜீவியத்தில் சாத்தான் சீர்குலைத்த அனைத்தையும் சுத்திகரிக்கவும் விரும்புகிறார்! மெய்யாகவே, 1) உங்கள் பாவங்களை மன்னித்து 2) சாத்தான் உங்களுக்கு போட்ட அனைத்து முடிச்சு களையும் அவிழ்த்துவிடவே இயேசு இந்த உலகத்திற்கு வந்தார் (1யோவான்.3:5,8). இழிநிலையில் இருக்கும் உங்களுக்கும்கூட நம்பிக்கை வைக்கப்பட்டிருக்கிறது!*

**ஆகவே, மனமடிவிற்கு நீங்கள் கண்டிப்பாய் இடம் தந்துவிடக் கூடாது! அன்று கானான் திருமணத்தில், தேவை ஏற்பட்ட இடத்தில், தேவைக்கு அதிகமாகவே ஆண்டவர் செய்தார்!**

*அதுபோலவே, இன்று உங்கள் ஜீவியத்தில் காணும் 'ஒவ்வொரு தேவைக்கும்' மேலாகவே அவர் செய்து முடிப்பார்! கானவூர் திருமணத்தில் தமது மகிமையை வெளிப்படுத்திய ஆண்டவர், உங்கள் ஜீவியத்திலும் அதே போன்று அற்புதத்தை செய்வார் என்பது திண்ணம்!*

*திருமண வாழ்வின் யாதொரு பகுதியில் 'ஏமாற்றத்தை' நீங்கள்*

*அடைந்திருந்தாலும்.... மெய்யான கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆசீர்வாதம் "இழப்பிலிருந்துதான்" துவங்குகின்றது அல்லாமல், "பெற்றுக் கொண்டவைகளிலிருந்து" துவங்குவதில்லை என்ற உண்மையை இன்று அறிந்து கொள்ளுங்கள்! திடன் கொள்ளுங்கள்! (அப்.20:35).*

**மகிமையின் மேல் மகிமை அடைந்திடுங்கள்**

*உங்கள் பாலியமும், அதன் ஈர்ப்பும், திருமணமும் ஆகிய இந்த பகுதியில், "தேவனை மகிமைப்படுத்துவது" ஒன்றே உங்கள் நோக்கமாய் இருந்தால், "திருமண வாழ்வில் தேவனுடைய பரிபூரண சித்தத்தை இழந்து விடுவேனோ" என்ற அச்சம், நீங்கள் அடைந்திடத் தேவையே இல்லை! இப்போது அவர், விசாலமான, பேரானந்த பயணத்திற்குள் நடத்துவார்! வாழ்க்கையின் அந்த சாலையில், பயமுறுத்தும் சிங்கமோ அல்லது தீமையான கொடிய விலங்கோ காணப்படாமல்,* **தேவனுடைய மகிமையே அதிக அதிகமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும்!** *உங்கள் ஜீவிய பயணத்தின் இறுதி மட்டும் 'தேவ மகிமையின் பிரகாசம்' வலிமையாய் பிரகாசிக்கும்! இந்த அற்புத பேரானந்த பயணத்திற்குள் அடியெடுத்து வைக்கும் நீங்கள், ஜீவகாலமெல்லாம் இந்தப் பயணத்தில் நிலைத்து கடந்துவர, தேவன் அருள்புரிவராக! ஆமென்.*

## திருமணநாளில், அர்ப்பண ஜெபம்!

**(தங்கள் திருமணநாளில் , சகரியா பூணன் & ஆனி பூணன் எழுதிய பாடல் )**

முழுமையும் உமக்கே இயேசுநாதா, என் ஆண்டவா,
கல்வாரி கிரயத்தால் எம்மை வாங்கிநீரல்லோ!
நாங்கள் உமக்கே, உமக்கே என்றும் என்றுமே,
நித்தியமும் எமது பங்கும் பாத்திரமும் நீரன்றோ!

எம் வாழ்வில் பொழிந்த உம் ஆசீர்வாதம்
கேட்டதற்கும் நினைத்ததற்கும் பன்மடங்காய் தந்தீரே!
நித்திய அன்பின் கயிற்றால் எம்மை இணைத்தீர்,
ஸ்தோத்திரம், துதி, நன்றியால் நெஞ்சம் பொங்குதே!

உம்மை சேவித்திட நாடி தாழ்பணிந்தோம்,
ஏழை எந்தன் பெலவீனம் அறிவோம்!
ஆகிலும் சர்வ வல்லமை தேவா, உம் நிறைவால்
பெலன் பெற்று சேவிப்போம். . . பின்வாங்கோம்!

உம் பாடுகளில் ஐக்கியம் வாஞ்சிக்கிறோம்,
உம் சிலுவையின்றி, வேறல்ல எந்தன் மேன்மை!
உம்மை மகிழ்விக்கும் ஆசையின்றி, வேறொரு ஆசை இல்லை,
தரணியில் அனைத்தும் நஷ்டமும் குப்பையுமே!

நிந்தை, அவமானம், இவ்வுலகம் எம்மில் குவித்திடட்டும்,
துன்பமும் பாடுகளும் எம் பாதைதனில் இருந்திடட்டும்,
ஆகிலும் இயேசுவே, உம்மைச் சார்ந்தே நடந்திடுவோம்!
முன்னிலும் அதிகமாய் நேசித்து நடப்போம்!

பிறரின் சஞ்சலம், பாரம், கண்ணீரில், நாங்களும்
பங்கேற்று, தினம்தினம் உதவிடும் மகிழ்ச்சி தாரும்!
சஞ்சலம் நீங்கிய கண்கள் கல்வாரி திரும்பணும்
பாவம் ஒழித்து, உம்மிடம் வரணும் … தயை செய்யும்!

ஆவியின் வல்லமை எம் குடும்பத்தில் வழிந்தோடட்டும்!
சந்திக்கும் அனைத்து குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படட்டும்!
உம் ஜீவ நதி எங்களில் அருவியாய் ஓடட்டும்,
இப் பாரெங்கும் பாயட்டும்! உம் மதுர வாழ்வு மலரட்டும்!

உமது சித்தம் செய்து முடிப்பதே எங்களது ஏக்கம்,
உமக்காக மாத்திரமே ஜீவிப்பது பாக்கியம்!
உமது மாட்சிமையில் உம்மோடு ஆண்டிட
உமது மகிமையில் நித்தியமும் தங்கிட அருள்புரிவீர்!